கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு – 17

உ

சிவமயம்

# பூம்பாவை

திருமயிலாப்பூர்ப் "பூம்பாவையார்" வரலாறும்

திருஞானசம்பந்த நாயனர் அருளிய

திருப்பதிகமும், விளக்கமும்

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும்

அட்ங்கியுள்ளன

விளக்கவுரை ஆசிரியர்

கோவை, வழக்கறிஞர் - சிவக்கவிமணி

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

கோவைத் தமிழ்ச் சங்கம்

கோயமுத்தூர்

15—2—1950

உரிமை ஆசிரியர்க்கே]

[விலை ரூ. 1—0—0

கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு - 17

உ
சிவமயம்

# "பூம்பாவை"

## திருமயிலாப்பூர்ப் "பூம்பாவையார்" வரலாறும்

திருஞானசம்பந்த நாயனர் அருளிய

## திருப்பதிகமும், விளக்கமும்,

சரித ஆராய்ச்சிக் குறிப்புக்களும்

அடங்கியுள்ளன

விளக்கவுரை ஆசிரியர்

கோவை, வழக்கறிஞர் - சிவக்கவிமணி

திரு. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.

சாது அச்சுக்கூடம்

இராயப்பேட்டை, சென்னை

கோவைத் ~~தமிழ்~~ சங்கம்

கோயமுத்தூர்

15—2—1950

உரிமை ஆசிரியர்க்கே] [விலை ரூ. 1—0—0

உ

சிவமயம்

# முன்னுரை

ஆளுடைய பிள்ளையார் புராணத்துள்ளே திருமயிலைப் பூம்பாவையார்—எலும்பு பெண்ணாக்கிய பகுதி தனிச் சிறப்புடையதொரு வரலாறாகும். அவ்வரலாற்றின் சான்று கல்வெட்டுக்களிலும் காணப் படுவதாம். “மயிலாப்பூர் அறுபத்து மூவர்” (பங்குனிப் பெருவிழாவில் 8-ம் திருநாள்) என்று விளக்கமாய் அறியப்படும் திருநாளில் இவ் வரலாறு கொண்டாடப்படுகின்றது. இது இந்நாளில் பலபடச் சிதைவு படுத்தப்பட்டும் வழங்கத் தொடங்கிவிட்டது. இதனைச் சேக்கிழார் பெருமான் அருளியபடி அறிவது யாவர்க்கும் எளிதாகும் பொருட்டுத் தனியாக எடுத்து, “பூம்பாவை” என்ற பெயருடன் வெளியிடப்பெறுகின்றது.

கோவைத் தமிழ்ச் சங்கம்,
சேக்கிழார் நிலையம்,
15—2—'50

C. K. சுப்பிரமணிய முதலியார்,
பதிப்பு உரை ஆசிரியர்

---

# கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெரியபுராணம்—உரையுடன் I பகுதி - திருமலை - தில்லைவாழ் அந்தணர் சருக்கங்கள் (சில பாகம் மறுபதிப்பு வெளிவந்துள்ளது) | ... | 12 | 8 |
| ஷை II பகுதி - இலைமலிந்த - மும்மையாலுலகாண்ட சருக்கங்கள் | ... | 12 | 8 |
| ஷை III பகுதி - திருநின்ற சருக்கம் - முதற் பாகம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் | ... | 8 | 8 |
| ஷை III பகுதி - திருநின்ற சருக்கம் - இரண்டாம் பாகம் | ... | 4 | 12 |
| ஷை III பகுதி 1, 2 பாகங்கள் சேர்த்துக் கட்டியது | ... | 12 | 8 |
| ஷை IV பகுதி - வம்பறா வரிவண்டுச் சருக்கம் - முதற் பாகம் - 630 பாட்டுக்கள் (6 சஞ்சிகைகள்) | ... | 12 | 8 |
| கண்ணப்ப நாயனார் புராணம்—உரையுடன் | ... | 2 | 0 |
| திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம்—உரையுடன் | ... | 1 | 0 |
| சண்டேச நாயனார் புராணம்—உரையுடன் | ... | 0 | 12 |
| காரைக்காலம்மையார் புராணமும் அருணூல்களும்—உரையுடன் | ... | 1 | 8 |
| அப்பூதி நாயனார் புராணம்—உரையுடன் | ... | 0 | 8 |
| கருவூர் தேவர்—ஆராய்ச்சி நூல் | ... | 0 | 8 |
| கண்ணப்ப நாயனார் சரிதம்—தலதேவாரங்களுடன் | ... | 0 | 6 |
| திருநாவுக்கரசர் சரிதம்—ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் | ... | 0 | 8 |
| திருப்பாசுர விளக்கம் | ... | 0 | 10 |
| பூம்பாவை | ... | 1 | 0 |

உ
சிவமயம்

# திருஞானசம்பந்த நாயனர் புராணம்

## (திருமயிலாப்பூர்ப் பூம்பாவை வரலாறும், திருப்பதிக விளக்கமும்)

# "பூம்பாவை"

"இன்றிச் சமயத்தி லல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரார்?—இன்றிங்கே
அங்க முயிர்பெறவே பாடு மடியவரார்?
எங்குமிலே கண்டா யிது" (65)

"ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்—ஏடெதிர்வெப்
பேன்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்" (70)

—திருக்களிற்றுப்படியார்

"... வெய்யவிட
மேவி யிறந்தவயில் வேற்கண் மடமகளை
வாவென் றழைப்பித்திம் மண்ணுலகில் வாழ்வித்த
சீர்நின்ற செம்மைச் செயலுடையான்..."

—ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை
11-ம் திருமுறை-நம்பியாண்டார் நம்பி

[சரித முன் தொடர்ச்சி :—

இந்நாட்டின் சைவசமய விளக்கமும் சிவ சாதனங்களும் 1300 ஆண்டுகளின்முன் குன்றியிருந்தன. சமணம் என்னும் புறச் சமயம் எங்கும் ஓங்கித் தழைத்திருந்தது. அதனைக் கண்ட சிவபாதவிருதயர் என்னும் மறையவர் மிக வருந்தினர். அவர் சீகாழியில் வாழ்ந்தனராதலின் அங்குக் கோயிலினுள் திருத்தோணியில் எழுந்தருளிய தோணியப்பரிடமும் பெரிய நாயகியாரிடமும் வரங் கிடந்தார். பரசமயங்களை நிராகரிக்கவும் திரு

நீற்றின் விளக்கத்தை மிக ஆக்கவும் வல்ல ஒரு பிள்ளையைத் தமக்குத் தரும்படி வேண்டினர். அம்மையப்ப ரருளால் அவ்வாறே ஆளுடைய பிள்ளையார் அவர் திருமகனாராக அவதரித்தனர். மூன்றுவது வயதில் தந்தையார் பிரமதீர்த்தக் கரையில் பிள்ளையாரை நிறுத்தி உள்ளே நீராடி யிருந்தனர். பிள்ளையார் திருத்தோணிச் சிகரம் பார்த்து " அம்மேயப்பா " என்றழுது அழைத்தருளினர். அம்மையப்பர் வெளிப்பட்டு வந்து பொற் கிண்ணத்தில் சிவஞானப் பாலினை அளிக்கவுண்டு, பிள்ளையார் சிவஞான சம்பந்தராய் விளங்கினர். தந்தையார் வந்து " யார் தந்த பால் உண்டாய்?" என்று வெகுண்டு கேட்க, மேலே ஆகாயத்தில் விளங்கி நின்ற இறைவரைச் சுட்டித் " தோடுடைய செவியன் " என்ற ஞானப்பாடல் பாடி " எம்மை இது செய்த பிரான் இவன் " என்று காட்டியருளினர். தந்தையாரும் உலகர் யாவரும் களித்து மகிழ்ந்தனர். அதன்பின் அவர் இறைவரைப் பாடி பொன்தாளம், முத்துச் சிவிகை, முத்துப் பந்தர், உலவாக்கிழி முதலியவை பெற்றும், கொல்லிமழவன் பெண்ணைப் பிடித்த முயலகன் நோயினை நீக்கியும், திருமருகலில் வணிகனை விடந்தீர்த்தும், கொங்கிற்பனி நோய் நீக்கியும், திருவீழிமிழலையிற் படிக்காசு பெற்று அடியார்க் கமுதீந்து பஞ்சந் தவிர்த்துமருளினர். பாண்டி நாட்டில் பாண்டியனைச் சுரந் தீர்த்துச் சமணரை வாதில் வென்றருளினர். சைவத்தினை விளங்கச் செய்து திரு நீற்றினைப் பெருக்கி யருளினர். திருக்கொள்ளம்பூதூரில் திருப்பதிகத் தால் ஆற்றில் ஓடஞ் செலச் செலுத்தியும், திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக ஆக்கியும், இவ்வாறு பல அற்புதங்களையும் செய்தருளித் தொண்டை நாட்டில் பல பதிகளையும் வணங்கிச் சென்று திருவொற்றி யூரை வணங்கி அங்கு எழுந்தருளி யிருந்தனர்.]

## நூல்

### [2931—3018 = 1033—1120]

2931. இன்ன தன்மையிற் பிள்ளையா ரிருந்தன; ரிப்பாற்
பன்னு தொல்புகழ்த் திருமயி லாபுரிப் பதியின்
மன்னு சீர்ப்பெரு வணிகர்தந் தோன்றலார் திறத்து
முன்ன மெய்திய தொன்றினை நிகழ்ந்தவா மொழிவாம். ௧௦௩௩

(இ - ள்) இன்ன...இருந்தனர் - இவ்வாருகிய தன்மையிலே பிள்ளையார் எழுந் தருளி யிருந்தனர்; இப்பால்...பதியின் - இவ்விடத்துப் புகழ்ந்து பேசப்பட்ட பழைமையாகிய புகழினையுடைய திருமயிலாபுரிப் பதியில்; மன்னுசீர்...திறத்து - நிலைபெற்ற சிறப்பினையுடைய பெருவணிகர் குடியில் வந்த பெருமையினையுடையவரது

திறத்திலே ; முன்னம்...மொழிவாம் - முன்னே பொருந்தியதொரு வரலாற்றினை நிகழ்ந்தபடி சொல்லப் புகுகின்றோம்.

(வி - ரை) இன்ன...இருந்தனர்-இதுவரை பிள்ளையார்பாலினமைந்து கூறிவந்த வரலாற்றினை முடித்துக் காட்டியபடி.

இப்பால் - இனி, இங்குநின்றும் சரிதம் கேட்போரது நினைவினைத் திருமயிலை வரலாறு தொடங்கும் வகையால் அங்குச் செலுத்தி உடன்கொண்டு போவார் ஆசிரியர் இப்பால் என்று பிரித்துக் கூறி எடுத்துக்கொண்டார் ; அதுவுந் தொண்டைநாட்டினைப் பற்றியதாதலானும், படிப்போரது நினைவு இங்கும் அகலாது செல்வதாலும் "இப்பால்" என அணிமைச் சுட்டினாற் கூறினார். " இங்கிலை யிவணிங் கெய்தி யிருந்தன னிப்பா னீடும் " (1755) ; " இவ்வகை யிவர்க ளங்க ணிருந்தன ராக விப்பால் " (2497) என்பன முதலியவை காண்க.

பன்னு தொல்புகழ் - அம்மை மயிலுருவுடன் பூசித்த பழஞ் சரிதப் புகழும், அன்ன பிறவும் ஆகும்.

பெரு வணிகர்தம் தோன்றலார் - வணிகர்மரபிற் பெரும்பிரிவு மூன்றனுள் பெரு வணிகர் என்னும் மரபில் வந்தவர் ; "குடிமுதல் வணிகர்" (405) ; "பெருவணிகர் குடிதுவன்றி" (1717) என்றவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க (I - ௪௯௮ ; III - பக். ௮௧௮). பெரிய வாணிகத்துறை நின்றவர் எனப் பொதுவகையா லுரைப்பாரு முண்டு. தோன்றலார் - அம் மரபில் வந்தவர் ; தோன்றியவர்.

வணிகர்தந் தோன்றலார் திறத்து முன்னம் எய்தியது - வணிகரது அன்பின் திறமே பின் விளையும் வரலாற்று நிகழ்ச்சிக்குக் காரணமாயினமையின் இவ்வாறு கூறினார் ; முன்னம் - பிள்ளையார் திருவொற்றியூர் சார்வதன் முன்.

ஒன்று - ஒரு வரலாறு ; பிள்ளையார் சார்பினாலே முன்னம் பல இடங்களிலும் பலப்பல வரலாறுகள் நிகழ்ந்தனவாக இங்கு மயிலையில் வணிகர் திறத்து நிகழ்ந்த ஒன்று.

நிகழ்ந்தவா - ஆறு என்பது ஈறுகெட்டு ஆ என நின்றது. நிகழ்ந்த ஆறே - படியாக - என்க.

மொழிவாம்-இனிச் சொல்லத் தொடங்கும் வரலாற்றின் பெருமையுட் கேட்போர் மனம் பதிய இவ்வாறு கூறுதல் ஆசிரியர் மரபு. "மொழிவே னுய்ந்தேன்" (173); " நிகழ்ந்ததனை மொழிகின்றேன் " (1952) முதலியவை காண்க.

திறத்து - சார்பு பற்றியதாக என்றலுமாம்.

சீர்ப்புகழ் வணிகர்—என்பதும் பாடம். 1033

2932. அருநி தித்திறம் பெருக்குதற் கருங்கலம் பலவும்
பொருக டற்செலப் போக்கியப் பொருட்குவை நிரம்ப
வருமு ரக்கல மனைப்படப் பணைக்கரை நிரைக்கும்
இருநி திப்பெருஞ் செல்வத்தி னெல்லையில் வளத்தார். ௧0௩௪

2933. தம்மை யுள்ளவா றறிந்தபின் சங்கரற் கடிமை
சிவநேசர் மெய்ம்மை யேசெயும் விருப்புடன் மிக்கதோ ரன்பாற்
பொய்ம்மை நீக்கிமெய்ப் பொருளிது வெனக்கொளு முள்ளச்
செம்மை யேபுரி மனத்தினர் சிவநேச ரென்பார். ௧0௩௫

2932. (இ-ள்) அருநிதித் திறம்...போக்கி - அரிய நிதிகளின் வகைகளைப் பெருகச் செய்தற்காக அரிய மரக்கலங்கள் பலவற்றையும் அலைபொரும் கடலின்மேற் சென்று நிகழும்படி வாணிபத்துறையினிற் செலுத்தி ; அப் பொருட்குவை...நிரைக்கும் - அவ் வாணிபத்தால் கொண்ட பொருட்கூட்டங்கள் நிரம்பத் தம் மனையின்கண் சேரும்படி கொணரும் மரக்கலங்களின் குவைகள் வரிசைபெறக் குவிக்கும் பெரிய நிதி முதலிய பெருஞ் செல்வங்களின் எல்லையற்ற வளங்களையுடையவராய் ; ௧௦௩௪

2933. (இ-ள்) தம்மை உள்ளவாறு அறிந்தபின் - தம்மை உள்ளபடியே அறிந்துகொண்டமையாலே அதன்பின் ; சங்கரற்கு...அன்பால் - சங்கராராகிய சிவபெருமானிடத்தில் அடிமைத்திறத்தை மெய்ந்நெறி பிறழாது செய்யும் விருப்பத்துடன் கூடிய அன்பினாலே ; பொய்ம்மை...மனத்தினார் - பொய்யினைக் கடிந்து மெய்ப்பொருளிதுவேயாம் என்று தெளிந்துகொண்ட உள்ளத்தின்கண்ணே செம்மைநெறியினையே இடைவிடாது எண்ணிக்கொண் டொழுகும் மனத்தினை உடையவர் ; சிவநேசர் என்பார் - சிவநேசர் என்று சொல்லப்படுபவர். ௧௦௩௫

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன. இவற்றுள்ளே முன்பாட்டினாலே உலகியற் சிறப்பினைக்கூறி, மேற்பாட்டினால் அன்பியற் சிறப்பினைக் கூறும் திறம் காண்க.

2932. (வி-ரை) **நிதித் திறம்** - நிதிகளும் வாணிபத்தில் நிதியாக்கும் பண்டங்களும் ; அயல்நாட்டின் பண்டங்கள் இங்கு வந்து வாணிபத்தின் மூலம் நிதியாக்கப்படுவனவும் நிதியேயாம். **நிதிகள்** - பொன்-வெள்ளி-மணிகள் முதலியன ; இங்குநின்று ஏற்றிச் செல்லும் நிதிகளும் ஆம் (1749).

**அருங்கலம்** - நீண்டதூரம் பெருங்கடலில் போய் வருதற்கேற்றவாறு அரிதின் அமைக்கப்பட்டவை.

**பொருகடல்** - பேரலைகளும் மற்றும் அபாயங்களும் நிறைந்ததாதலின் பொருகடல் எனப்பட்டது. அவற்றுடன் பொருது வெற்றிபெற்றாலன்றிக் கடல் கடந்து குறித்த நாட்டிற் சேறலும் மீளுதலும் இயலா. இந்நாளில் கடலே போர்க்களமாக நிற்பதும் குறிக்க.

**அப்பொருட் குவை - நிரம்ப வரும் மரக்கலம்** - அகரச்சுட்டு நினைந்த அந்த எனும் பொருட்டந்தது. **வரும்** - கொணரும் ; **அம்மரக்கலம்** - என அகரச்சுட்டு ஈண்டும் சேர்க்க ; பொருந்துவ பண்டங் கொண்டுசென்ற அவையே நிதித் திறங்களைக் கொண்டுவரும். நிதிகளையேயன்றி இங்கு வாணிபத்துக்குரிய அயல்நாட்டுப் பண்டங்களையும் கொண்டுவருதலின் **நிதித்திறம்** என்றும், **பொருட்குவை** என்றும் கூறினார்.

**பணைக்கரை மனைப்பட - நிரைக்கும்** - என்க. **பணை** - பெரிய ; **கரை** - கடற்கரையில். **நிரைத்தல்** - கடற்கரையில் வரிசைபெற அமைத்தல் ; இஃது சுங்கம் முதலிய அரசாங்க அமைதிகளினுட்பட்டுக் கண்காணிக்கப்படுதற் பொருட்டு வேண்டப்படும். இவ்வமைதிகளின் முன்னைநாள் நிலைகளைப் பட்டினப்பாலை முதலிய பழந்தமிழ் நூல்களுட் காண்க.

**மனைப்பட** - கரையினின்றும் மனையிற் கொண்டு சேர்த்தற்காக. மனையிற் சேர்க்கும் அளவும் கரையின் வரிசைபட வைத்தல் குறிப்பு. மரக்கலப் பண்டம் **மனைப்பட** என்றதனால் மனையும் அதற்கேற்றபடி மிகப்பெரிய அளவு கொண்டதென்பதும் குறிப்பித்தபடி. **எல்லையில் வளத்தார்** - என்றதுமிக் குறிப்பு.

**இருநிதிப் பெருஞ் செல்வம்** - **இருநிதி** - *முன்கூறிய எவ்வகை நிதித் திறங்களும்.* **பெருஞ் செல்வம்** - *அவற்றுடன் மனை - விளைநிலம் - முதலியனவும்.* "*தேடிய மாடு நீடு செல்வமும்*" (470).

**எல்லையில் வளத்தார்** - **வளம்** - *நிதி, செல்வம், நாணயம், பொறுப்பு முதலிய எல்லாவற்றாலும் வரும் உலக அனுபவ நிலைகளின் தொகுதி ;* **எல்லையில்** - *அளவில்லாத.* **வளத்தார்** - *வளத்தை உடையவராகி ; எச்சம் ;* **வளத்தார்** - **சிவநேசரென்பார்** - *என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.*

**மனைப்படப் படிக்கவ்ர் நிரப்பும்** —*என்பதும் பாடம்.* 1034

2933. (வி - ரை) **தம்மை...செயும்** - *உள்ளவாறு அறிதலாவது இறைவராகிய பதி முழுமுதல்வர் என்றும், உயிர்களாகிய பசுக்கள் எல்லாம் அவருக்கு அடிமைகள் என்றும், அடிமைசெய்து பாசங்களினீங்கி வீடுபேறடைவதே உயிர்கள் அடையும் உறுதிப் பொருளாவது என்றும், அதன்பொருட்டே மானிடப் பிறவியும் புவனபோகங்களும் தரப்பட்டன வென்றும் ஞானநூல்களுள் உரைக்கப்பட்ட உண்மைகளை ஆரவார நீர்மையிலன்றி உள்ளபடி உணர்ந்து அவ்வழியிலே ஒருகாலும் வழுவாது ஒழுகும் வகையால் அரனுக்கு அடிமை செய்கின்ற என்பதாம்.*

**சங்கரன்** - *இன்பஞ் செய்பவன் ; இப்பெயராற் கூறினார், உள்ளவாறறிந்தவர்கள் யாவரும் பிறவி துன்பமுடையதென் றுணர்வார்களாதலின் அதனை நீக்கி இன்பஞ்செய்வோனை அடைவது இயல்பாமென்ற குறிப்புத் தருவதற்கு. இவ்வாறே "அளவில் செல்வத்து வளமையி னமைந்தார்......அடிமைத் திறத்தின் மிக்கவ" ராகிய முதல் வணிகர்பெருமானார் இயற்பகையாரும் "முன்கொடுக்கு மியல்பி னின்றவர்" என்றது (405) காண்க.*

**விருப்புடன் மிக்கதோர் அன்பால்** - **அன்பு** - *அடிமைசெய்தற்கு வேண்டப் படும் இன்றியமையாத அடிப்படை ;* **விருப்பு** - *அது செய்தற்கண் சேறும் மன எழுச்சி.*

**பொய்ம்மை நீக்கி மெய்ப்பொருளிது எனக்கொளும் உள்ளச் செம்மையே புரி** - **பொய்ம்மை** - *உலகப் பற்றாகிய நிலைகளின் மயக்கம் ; "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருள்" (குறள்).*

**மெய்ப்பொருள் இது** - *இறைவன் பற்றாகிய நிலைகளின் சார்பு. "சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின்" (குறள்).*

**இது எனக்கொளும் உள்ளச் செம்மையே புரி** - *முன் கூறிய துணிபை உள்ளத்தில் முடிவாகத் துணிந்துகொண்டமையால் மேற்கொண்ட சைவ நன்னெறியின் ஒழுக்கத்திலே இடைவிடாது நினைந்து நின்ற.*

**சிவநேசர் என்பார்** - **"விருப்புடன்...மனத்தினார்"** *என்றது சிவநேசர் என்ற பெயர் அவருக்குக் காரண இடுகுறியாயமைந்த நிலையை விளக்கியவாறு.* **என்பார்** - *எனப்படுபவர் ; படு விகுதிதொக்கு வந்தது, "இல்வாழ்வா னென்பான்" (குறள்) என்புழிப்போல.*

**தம்மை......செய்யும்** - *என்றது காரணமும்,* "**விருப்புடன்......புரி**" *என்றது அதன் விளைவாகிய காரியமும் ஆம்.* **சிவநேசர்** - *பெருவணிகர் தோன்றலாரின் பெயர்.*

**விருப்பினின்—நீக்கிய**—*என்பனவும் பாடங்கள்.* 1035

2934. கற்றை வார்சடை முடியினா ரடியவர் கலப்பில்
உற்ற செய்கையி லொழிவின்றி யுருகிய மனமும்
பற்றி லாநெறிப் பரசம யங்களைப் பாற்றுஞ்
செற்ற மேவிய சீலமு முடையராய்த் திகழ்வார், ௧௦௩௬

2935. ஆன நாள்செல வருமறைக் கவுணியர் பெருமான்
ஞான போனக நுகர்ந்தது நானில முய்ய
ஏனை வெஞ்சமண் சாக்கிய மிழித்தழித் ததுவும்
ஊன மில்புக ழடியர்பாற் கேட்டுவந் துளராய், ௧௦௩௭

2936. செல்வ மல்கிய சிரபுரத் தலைவர்சே வடிக்கீழ்
எல்லை யில்லதோர் காதலி னிடையறா வுணர்வால்
அல்லு நண்பக லும்புரிந் தவரருட் டிறமே
சொல்ல வுஞ்செயல் கேட்கவுந் தொழிலின ராஞர். ௧௦௩௮

2934. (இ - ள்) கற்றை...மனமும் - கற்றையாகிய நீண்ட சடையினையுடைய முடியவரது அடியார்களுடன் கூடிய கூட்டத்துடன் பொருந்திய செய்கையில் இடைவிடாது உருகிய மனத்தினையும்; பற்றிலா...சீலமும் - சிவபெருமானிடத்தில் அன்பு இல்லாத நெறிகளையுடைய பரசமயங்களை நீக்கும் செற்றம் பொருந்திய நல்லொழுக்கத்தினையும்; உடையராய்த் திகழ்வார் - கொண்டுடையவராகி விளங்குவாராய், ௧௦௩௬

2935. (இ - ள்) ஆன நாள் செல - அவ்வாறாயின நாள்கள் பல கழிய; அருமறை...இழித்தழித்ததுவும் - அரியவேதியராய்க் கவுணியர் குலத் தலைவராகிய பிள்ளையார் சிவஞான அமுதுண்டருளியதனையும் உலகமுய்தற் பொருட்டுப் புறச் சமயங்களாகிய கொடிய சமண் சாக்கியச் சமயங்களின் கீழ்நிலையை விளக்கி இழித்து எடுத்துக் காட்டும் வகையாலே அவை அடைந்திருந்த முதன்மையை ஒழித்ததனையும்; ஊனமில்...உவந்துளராய் - குற்றமில்லாத புகழினையுடைய அடியார்கள் வந்து சொல்லக் கேட்டு மகிழ்ந்தனராகி; ௧௦௩௭

2936. (இ - ள்) செல்வ மல்கிய...உணர்வால் - அருண்ஞானச் செல்வம் நிறைந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது திருவடிகளில் அளவில்லாத ஒப்பற்ற பெருவிருப்புடன் இடையறாத அன்புபூண்ட வுணர்ச்சியினாலே; அல்லும்...ஆஞர் - இரவும் பகலும் இடைவிடாது நினைந்துகொண்டு அவரது அருளின் தன்மைகளையே தாம் வாக்கினாற் புகழ்ந்து பாராட்டுதலும் அருட்செயல்களை அன்பர்களிடம் கேட்பதுமாகிய இவையே தமது வாழ்க்கைக்குரிய தொழில்களாக மேற்கொண்டவராயினர். ௧௦௩௮

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன; முன் ஒரு பாட்டைத் தனிமுடிபாகக் கொண்டுரைத்து, ஏனை யிரண்டினையும் ஒருமுடிபாக்கி யுரைக்கினு மிழுக்கில்லை. பொருட்டொடர்பும் சொன்முடிபும் பற்றி இவ்வாறுரைக்கப்பட்டது.

2934. (வி - ரை) அடியவர் கலப்பில் உற்ற செய்கையில் - அடியார் கூட்டத்திற் பொருந்தும் தன்மையில். செய்கை - இங்குத் தன்மை என்ற பொருளில் நிகழ்ச்சி என்றலுமாம்.

**ஒழிவின்றி உருகிய மனம்** - அடியார் கூட்டத்தை விரும்பி மனமுருகும் தன்மை இடைவிடாது பெற்ற நிலை. "நல்லநெறி, யெய்துவதோர் காலந்தன் னன்பரைக்கண் டின்புறுதல், உய்யு நெறிசிறிதே உண்டாக்கி" (போற்றிப் பஃறொடை - 56). சிவநேச ருடைய திருமனம் அவர் பெயருக்கேற்ப இடையறாது அடியவர் கூட்டத்தையே நாடி உருகி நின்றது என்க. "ஒருப்படுசிந் தையினார்க ளுடனுறைவின் பயன்பெற்றார்" (1509) என்றும், "சால்பின்மிக் குயர்திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளியநாடிக், காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந் தருளினார் காழிநாடர்" (244) என்றும் போந்த உண்மைகளை இங்கு நினைவுகூர்க.

**பற்றிலா......சீலம்** - இது முன்கூறிய மனநிலை காரணமாய் விளையும் ஒழுக்கம். கற்புடைய நாயகிக்குத் தன் நாயகனிடம் அன்பில்லாதார்மாட்டும், நாயகனைப் பழித்து ஒழுகும் பகைவர்மாட்டும் தான் செற்றம் கொண்டு அவர்களை அணுகவிடாது வெறுத்து ஒதுக்குதலே கற்பொழுக்கமாவதுபோலச், சிவனிடத்தும் அடியாரிடத்தும் அன்புபூண் டொழுகும் அடியவர் சிவனிடத் தன்பில்லாதவர்களை வெறுத்தொதுக்கிக் கடிவதுவே அன்புடைமைக் கிலக்கணமாம்; "ஈசனுக் கன்பில்லார்......அறிவில்லாப் பிணங் களைநா மிணங்கிற் பிறப்பினினு மிறப்பினினும் பிணங்கிடுவர் விடுநீ" (சித்தி - 12-2) என்று இதன் உண்மை நிலையினை ஞானநூல் விதித்தமை காண்க. "மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை - யறப்பித்துப், பத்த ரினத்தாய்" (போதம் - 12-2) என்ற முதனூலுங் காண்க.

**பற்று இலா நெறி** - பற்று - இறையன்பும் அடியார் நேயமும்; நெறி - நெறி களைக் கூறுகின்ற; **பாற்றுதல்** - தீமையை அகற்றுதல் - அழித்தல்; **செற்றம்** - செறுதல் - அழித்தல்; பகுதி; பரசமயங்களால் விளையும் தீமைகளை ஒழிக்கும் குண மாதலின் **செற்றம்** என்றார்; தீமையைப் போக்குதல் நலஞ்செய்தலாதலின் **சீலம்** என்றார்; விலக்கத்தக்க செற்றம் ஈண்டு மேற்கொள்ளத்தக்க ஒழுக்கமாயினமை காண்க. அடியவர்பால் அன்பும், அல்லாதார்பால் வெறுப்பும் உடைமை சிவநேசரது உள்ளப் பண்பு என்று அவரது உயிரின் உயர்ந்த பக்குவநிலை கூறியவாறு.

**பரசமயங்களைப் பாற்றும் செற்றம்** - சமண சாக்கியப் பரசமயங்கள் அந்நாளில் இந்நாட்டிலும் தம்மளவில் நில்லாது மிகைபடப் பெருகி உண்மைச் சைவ நெறிக்குப் பலவாறும் ஊறு செய்தனவாதலின் அவற்றைஅவ்வவ் அளவில் நிறுத்துதற்கு அவற்றின் மிகைபட்ட நிலைகளைப் பாற்றுதல் வேண்டப்பட்டது. இது உலகநலம் பற்றியும், தற் காப்புப் பற்றியும் இன்றியமையாது வேண்டப்படுவதாம். சோழ பாண்டிய நடுநாடுகள் போல இந்நாட்டினும் பரசமயங்களின் மிகைகள் பின்னர்ப் பூம்பாவைத் திருப்பதிகத் தில் சமண்பாட்டிற் பிள்ளையார் குறிப்பதுவும் ஆசிரியர் அதன் கருத்தை விரிப்பதும் ஆகிய நிகழ்ச்சிகளால் அறியப்படுவன. சமய ஞானமும் சமயப் பற்றும் என்பன ஒருசிறிதுமின்றிச் சமயம் எப்படி அழிந்தாலும் எமக்காவதென்ன என்று உள்ள மனப்பான்மையுள்ள இந்நாள் மாக்கள் இதுபோன்ற மனநிலைகளை உணரவல்லரல்லர் என்க. சண்டீசர் புராணத்தின் உள்ளுறையுங் காண்க. 1036

2935. **(வி - ரை)** **ஆன நாள் சேல** - **ஆன** - முன்பாட்டிற் கூறியவாறு மன மும் சீலமும் ஆகி விளங்கலாயின நாள் பல கழிய. **ஆன** - இந்நாட்களே சிறந்தன வாயின என்பதும் குறிப்பு. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்றபடி கழியாது, பிறந்த சிறந்த நாட்களாயின; **நாள்** - காலம் என்ற பொதுமை குறித் தது.

நானிலமுய்ய......இழித்தழித்ததுவும் - பிள்ளையார் பரசமய நிராகரிப்புச் செய்தருளியது உலகமுய்யச் செய்ததேயன்றி இகல் முதலிய மாறுகோளால் அன்று; "இகலில ரெனினும்" (2752) என்று இதனை முன் குறித்தது காண்க; சைவத்திற் காணும் பரசமய நிராகரணத்தின் உள்ளுறை இஃது என்பதாம்.

இழித்து அழித்ததுவும் - இழித்தலினாலே அழித்தது. இழித்தலாவது அப் பரசமயங்களின் இழிவு நிலையினை வெளிப்படக் காட்டுதல்; இவை பிள்ளையாரது பதிகங்களில் 10-வது பாட்டாகிய சமண்பாட்டிற் றேற்றிய பொருள்கள்; இவையே அக்காலத்தில் சிவநேசர் கேட்ட செய்தி. சமணரை வாதில் வென்றழித்ததலும் புத்த வாத வெற்றியும் பின்னர்ப் பல ஆண்டுகளின் பின் அவை நிகழ்ந்தபோது கேட்கும் செய்தி மேல் (2948—2950) உரைப்பது காண்க. இங்குக் குறித்தவை "புத்த ரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறிநில்லா, வொத்த சொல்ல" (கட்டபாடை - பிரமபுரம் - 10) என்பன முதலிய பதிகப் பகுதிகள்.

ஊனமில் புகழ் அடியர்பாற் கேட்டு - அடியார்கள் கூடியபோது பேசுவன சிவன் பெருமைகளும் அடியார்களின் பெருமைகளுமேயன்றி, நம்போலியர் போன்று அழியுந் தன்மையான வெற்றுரைகளல்ல என்பதாம். ஊனமில் புகழ் - இதனாலே அவர் புகழ் ஊனமில்லாததாயிற்று.

கேட்டு உவந்துளராய் - அக்கேள்வியே சிவநேசருக்கு மிக மகிழ்ச்சி தருவன ஆயின.

ஊனமில் புகழ் - மேற்கூறியவாறன்றி, இதனை ஞானபோனக நுகர்ந்ததும், இழித்தழித்ததுமாகிய பிள்ளையாரது குற்றமற்ற புகழ்களை என்று கூட்டி உரைத்தலுமாம். புகழ் - கேட்டு என்க. 1037

2936. (வி - ரை) இப்பாட்டினுல் முன் கூறியபடி கேட்டு வந்துள்ளமை காரணமாகச் சிவநேசர் மேற்கொண்டொழுகிய ஒழுக்கநிலை கூறப்பட்டது.

காதலின் இடையறு உணர்வால் - இடையறுது கொண்ட பெருவிருப்பு மேற் கொண்ட வுணர்ச்சியினாலே; காதலின் - உணர்வு என்க.

உணர்வால் - சொல்லவும் - கேட்கவுமாகவுள்ள தொழிலினர் - உணர்வு காரணமாகச் சொல்லுதலும் கேட்டலுமாகிய தொழில்களே அவர்பானிகழ்ந்தன என்பது, பிள்ளையாரது அருட்டிறங்களைத் தாம் பன்னிப் பன்னிப் புகழ்ந்து சொல்லுதலும், அவரது அருட்செயல்களை அடியார்கள்பாற் கேட்டலுமே தமது தொழிலாக.

அல்லும் நண்பகலும் புரிந்து - இரவும் பகலும் இடைவிடாது நினைந்து.

செயல் கேட்கவும் - செயல்களையே அடியர்பால் கேட்க. 1038

2937. நிகழு மாங்கவர் நிதிப்பெருங் கிழவனின் மேலாய்த்
திகழு நீடிய திருவினிற் சிறந்துள ராகிப்
புகழு மேன்மையி லுலகினிற் போலிந்துளா ரேனினும்
மகவி லாமையின் மகிழ்மனை வாழ்க்கையின் மருண்டு; ௧௦௩௯

2938. அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தர னடியார்க்
குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தாற்
கரிய வாங்குழன் மனைவியார் வயிறெனுங் கமலத்
துரிய பூமக ளேனவோரு பெண்கோடி யுதித்தாள். ௧௦௪௦

2937. (இ - ள்) நிகழும்...சிறந்துளராகி - முன் கூறியவாறு நிகழ்கின்ற அச் சிவநேசர் பெரிய நிதிபதியாகிய குபேரனிலும் மேம்பட்டு விளங்கும் நீடிய செல்வத்தாற் சிறந்துள்ளவராகி; புகழும்...எனினும் - புகழ்ச்சி பொருந்திய மேன்மையோடும் உலகத்தில் விளங்கியிருந்தன ரென்றாலும்; மகவு...மருண்டு - மகிழ்ச்சியுடைய இல்வாழ்க்கைத் திறத்தில் மக்கட்பேறு பெறாமையினாலே மருட்சியடைந்து மயங்கி; ௩௦௩௯

2938. (இ - ள்) அரிய...புரிந்து - அருமையாகிய தன்மையோடு அருந்தவம் செய்து; அரன் அடியார்க்கு...நலத்தால் - சிவனடியார்களுக்குரிய அளவற்ற அருச்சனைகளைச் செய்துவந்த அந்த நன்மை காரணத்தால்; கரிய...கமலத்து - அவரது கரிய சிறந்த கூந்தலையுடைய மனைவியாரது வயிறு என்கின்ற தாமரையினிடமாக; உரிய...உதித்தாள் - உரிமை பொருந்திய பூமகள்போல ஒரு கொடிபோன்ற பெண் உதித்தனள். ௩௦௪௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2937. (வி - ரை) ஆங்கு நிகழும் அவர் என்க. ஆங்கு - முன்கூறிய அவ்வாறு; நிகழ்தல் - செல்லுதல்; ஒழுகுதல்.

நிதிப்பெருங் கிழவனின் மேலாய் - கிழவனின் - கிழவனைப் பார்க்கிலும். இன் - உறழ்வுப்பொருளில் வந்த ஐந்தனுருபு. பெருநிதிக் கிழவன் - குபேரன். கிழமை - உரிமை.

மேலாய்த் திகழும் நீடிய திரு - அவரது செல்வத்தின் சிறப்பினைக் குறித்தது. அச் சிறப்பாவது அடியார் பூசைக்கு ஆகும் தன்மையும், பின்னர்ச் சிவநேசர் அளிக்கும் பாங்கினால் (2947 - 2951) பிள்ளையாருக்குரியதாகும் தன்மையும். இச்சிறப்புக்கள் குபேரனது பெருநிதிக்கு இல்லை என்பது குறிப்பு. நீடிய - என்பது மக்குறிப்பு. நீடுதல் - ஏனைய பொருள்போல அழிதலின்றி அடியார்க்குதவும் பெருமையால் நிலைபெற்றிருத்தல்.

திருவினிற் சிறத்தல் - "இருநிதிப் பெருஞ் செல்வத்தின் - வளம்" (2932) என முன் உரைக்கப்பட்ட நிலை. புகழும் மேன்மை - யாவரும் புகழ வரும் மேம்பாடு.

எனினும் - மனைவாழ்க்கையின் மருண்டு - எனினும் - மனைவாழ்க்கை செல்வத்தின் வளத்தாற் சிறக்கும் என்றெண்ணுவர் உலகர்; ஆயினும் அவ்வாழ்க்கை மகப்பேறில்லாதபோது சிறவாது என்று மயங்கி. செல்வம் உலகியற் பொலிவு தரினும் மனைவாழ்க்கையிற் பொலிவு தருவது மகப்பேறே என்பார் எனினும் என்றார். "மங்கலமென்ப மனைமாட்சி மற்றத, னன்கல நன்மக்கட் பேறு" (குறள்) என்ற கருத்து ஈண்டு வைத்து நோக்கற்பாலது. "பிள்ளைப்பே றின்மையினால்" (875); "மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்" (1917) என்றவற்றில் உரைத்தவை பார்க்க.

மருண்டு - மருட்சியாவது மக்கட்பே றின்மையால் மனைவாழ்க்கை மகிழ்ச்சியின்றியும் மங்கலமின்றியும் நிகழ்வதால் வரும் மனச் சோர்வு.

மருண்டு - புரிந்து - செய்த - என வரும் பாட்டுடன் கூட்டி முடிவுகொள்க.

திகழ நீடிய—என்பதும் பாடம். 1039

2938. (வி - ரை) அருந்தவம் அரிய நீர்மையிற் புரிந்து - புரிந்த தவமும் அரியது; அதனைப் புரிந்த தன்மையும் அரியது என்க. இங்குத் தவம் என்பது சிவபெருமானை நோக்கி மகப்பேறு வேண்டி வரங்கிடந்து செய்யும் வழிபாடுகள்; "பாரய்க்கட னெறியி னிற்பார்......விழாவெடுத்த பின்றை" (659 - 660) என்றும்,

“ வருமகவு பெறற்பொருட்டு மனத்தருளால் வழுத்தினூர் ” (875) என்றும், “ காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார் ” (1917) என்றும் வந்தவை காண்க. இவை அரனை நோக்கிச் செய்யப்பட்டன. விட்டுணுவுக்கும் மகப்பேறு தந்தது சிவபெருமானை நோக்கிச் செய்த தவமே என்ற வரலாறும் கருதுக.

அரன்...செய்த - ஈண்டு அருச்சனையாவது அடியார்களை அமுதூட்டியும் அவர்களுக்கு வேண்டுவன குறிப்பறிந்து கொடுத்தும் வழிபடுதல்.

தவம் புரிந்து - செய்த - அந்நலத்தால் - அரன் பூசையும் அடியார் பணியும் என்றிரண்டுமே பெறத்தக்க உறுதியாவன என்பது வேத உள்ளுறையாம் ; அவையே மண்ணினிற் பிறந்தார் பெறும் பயனுவன. இம்மை மறுமை வீடு என்ற பயன்களையும் தரவல்லன ; இவையன்றி வேறில்லை எனச் சூளுறவு கூறி எடுத்துக்காட்டுவது மேல் வரும் இப் பாவையின் வரலாருகும் ; ஆதலின் அவ்விளைவுக் கேற்றவாறு வரும் இம் மகவு அவ்விரண்டன் காரணமாகவே வருதல் தகுதியாதல் காண்க.

அடியார்க்குரிய அருச்சனை - இவை இளையான்குடி மாறநாயனூர் - குங்குலியக்கலய நாயனூர் - அப்பூதி நாயனூர் முதலியோர் சரிதங்களுள் விரிக்கப்படுதல் காண்க.

உலப்பில - அளவுபடாதவற்றை ; அகரவீற்றுப் பலவறி சொல் ; இரண்டனுருபு விரிக்க.

அந்நலத்தால் - அகரம் - முன்னறிசுட்டு ; பண்டறிசுட்டு என்றலுமாம்.

வயிறெனும் கமலத்துப் - பூமகளெனக் - கோடி - மனைவியார் வயிறு கமலமாகவும், அதில் வரும் பெண்கொடி அப்பூவின் மகளாகவும் உருவகம் செய்தார். பூம்பாவை எனவரும் பெயர்த்தகுதியைக் காட்டுதல் கருத்து. 2942 பார்க்க.

உரிய - பூவினுக்கு உரிமையுடைய ; கோடி - கொடி போன்றவள். 1040

2939. நல்ல நாள்பெற வோரையி னலமிக வுதிப்பப்
பல்பெ ருங்கிளை யுடன்பெரு வணிகர்பார் முழுதும்
எல்லை யிற்றன முகந்துகொண் டியாவரு முவப்ப
மல்ல லாவண மறுகிடைப் பொழிந்துள மகிழ்ந்தார். கO௪௧

(இ - ள்) நல்ல...உதிப்ப - நல்லநாள் பெறவும், அந்நாளில் ஓரையின் நலமும் மிகப் பெறவும், அவ்வாறு பிறக்க ; பல்பெருங் கிளையுடன்...உவப்ப - பல பெரிய சுற்றத்தார்களோடும் பெருவணிகராகிய சிவநேசர் அளவற்ற செல்வங்களை முகந்தெடுத்துக்கொண்டு உலக முழுதும் எல்லாரும் மகிழும்படி ; மல்லல்...பொழிந்து - செழிப்புடைய கடைவீதியில் பொழிந்து ; உளம் மகிழ்ந்தார் - மனமகிழ்ந்தனர்.

(வி - ரை) நல்ல......உதிப்ப - முன் கூறியபடி உளதாகிய பெண்கொடி நல்ல நாளும் நல்ல ஓரையும் வாய்க்கப்பெற்றுப் பிறக்க ; உதிப்ப - முன் பாட்டில் உதித்தாள் என்றபடிவந்த பெண் இவ்வாருகிய நனைளில் நல்வேளையில் பிறக்க என்றபடி ; ஓரை - வேளை ; “ பேணியநல் ஓரை எழ ” (1920) என்றதன் உரை பார்க்க.

பெருங் கிளையுடன் - பெருவணிகர் - தனம் முகந்துகொண்டு - அப்பெருவணிகரேயன்றி அவரது பெருங் கிளைஞரும் மகிழ்ந்து தாமும் தனம் முகந்து பொழிந்தனர் என்க. பெருங் கிளைஞர் - பெரு வளமுடைய சுற்றத்தார். இவரே இவ்வாறு தாமும் தனம் பொழியவல்லார்.

பெருவணிகர் - வணிகருட் சிவநேசர் சார்ந்த உட்பிரிவாகிய மரபு. “ சீர்ப்பெரு வணிகர் ” (2931).

**தனம் முகந்துகோண்டு** - முகத்தலளவையாற் கூறியதுகொண்டு, பொழிந்த தனங்களினது அளவுமிகுதியும் தனத்தை எண்ணிக்கொள்வதுபோலன்றி எண்ணிக்கை யில்லாது முகந்து பொழிந்த நிலையும் குறிக்கப்பட்டன. **பார் முழுதும்** - **யாவரும் உவப்ப** - என்று கூட்டுக. கடல்வாணிபமாதலின் எல்லாத் திசையினரு முவப்பக் காரணமாயிற்று.

**ஆவண மறுகிடைத் தனம் யாவருமுவப்பப் போழிந்தார்** என்றது - இவர் கடல் மிசைக் கலம் பலவும் போக்கி அப்பொருட்குவை மனைப்பட மரக்கலம் கரைநிரைக்கும் வளத்தார் (2932) என்றதனால் கடற்றுறைமுகக் கரையில் ஆவணமறுகில் அமைந்த அகன்மனையினையுடையார் என்பது பெறப்படும். ஆதலின் இங்கு மீக்கூர்ந்த மகிழ்ச்சியி னால் தனங்களை முகந்துகொண்டு யாவரும் உவப்ப அந்த ஆவணமறுகில் மழைபோலப் பொழிந்தனர் என்க. **போழிந்து** - இன்னாருக்கு என்று குறியாமல் யாவரும் கொள் ளும்படி மழைபோலப் பொழிந்து ; "அனைவருக்கு நவமணிக ளுந்துகிலு மம்பொனுஞ் சிந்தி யள்ளியு முவந்துவீசி" (46) என்ற திருத்தொண்டர் புராண வரலாறு இங்குச் சிந்திக்கற்பாலது. மேல், "அடியவர்க்குச் - செய்து...மறையவர்க்கு - அளித்து" என்பவை இன்னார்க்கு இவை என்று குறித்துச் செய்வனவற்றைக் கூறுதல் காண்க. இந்நாளினும் பெரு மகிழ்வுகளில் வீதியிற் காசு இரைத்தல் நிகழ்வது காண்க.

ஒரைய நலமிக்—என்பதும் பாடம். 1041

2940\. ஆறு சூடிய முடியினு ரடியவர்க் கன்பால்
ஈறி லாதபூ சனைகளியா வையுமிகச் செய்து
மாறி லாமறை யவர்க்குவேண் டினவெலா மளித்துப்
பேறு மற்றிது வெனும்படி பெருங்களி சிறந்தார். க0சஉ

(இ - ள்) ஆறு...செய்து - கங்கையைத் தரித்த சடையினையுடைய சிவபெருமா னது அடியார்களுக்கு அன்பு மிகுதியினாலே எல்லையில்லாத பூசைகள் எல்லாவற்றையும் மிகவும் செய்தும் ; மாறிலா...அளித்து - ஒப்பற்ற வேதியர்களுக்கு அவர்கள் வேண்டி யவற்றை யெல்லாம் அளித்தும் ; பேறு...களிசிறந்தார் - இதுவே பெரும் பேருகும் என்று கூறும்படி பெருமகிழ்ச்சியினிற் சிறந்தனர்.

(வி - ரை) **அடியவர்க்குப் பூசனைகள் யாவையும் மிகச் செய்து** - அடியார்க்கு அருச்சனை புரிந்த அந்நலத்தாற் பெற்ற பேறுதலின் அந்நன்றிக்கு அவர்க்கு முதலிற் பூசனைகள் முற்றச் செய்தனர் என்க. பெருமகிழ்ச்சிக் குறியாகக் காசு பொழிந்த பின்னர், முதலில் குறித்து வழிபட நின்றார் அடியவர்களேயாம் என்ற தகுதியும் காண்க ; **பூசனை யாவையும்** - முன் (2938) கூறியவை பார்க்க. **மிக** - மேன்மேலும் மிகும்படி. அடியவரை முன்கூறியது சிறப்புப்பற்றி.

**மறையவர்க்கு - வேண்டின எல்லாம் அளித்தல்** - வேதியர்க்கு அவர் வேண்டும் பொருள்களை எல்லாம் தானம் செய்தல். மறையவர்க்கு வேண்டியன அளித்து என்றதனால் முன்கூறிய அடியவர்கள் வீடும் வேண்டா விறலினராதலும், அதுபற்றி அவர்கட்கு பூசை மாத்திரம் விதிப்படி செய்தாராதலும் குறிக்கப்பட்டன.

**பேறு மற்று இது** - பெண்மகப் பெற்றதே பெரும் பேறு என்னும் கருத்துப்படும் படி ; உண்மை இதுவே பெரும்பேறுகப் பின்னர் விளையும் வரலாறு குறிக்க. அடி யார் பூசை செய்தலும் மறையவர்க்களித்தலும் ஆகிய இவை செய்யப்பெற்றதே பெரும் பேறு என்று சொல்லும்படி என்றலுமாம்.

களிசிறத்தல் - மகிழ்ச்சியில் மீக்கூர்தல். இங்குக் கூறியவை முன்பாட்டிற் கூறிய கொடையினுஞ் சிறப்பும் பெரும் பயனுமுடையவை என்பார், முன் "மகிழ்ந்தார்" (2949) என்றவர் ஈண்டுப் "பெருங்களி சிறந்தார்" என்றார். அன்றியும் முன் குறித்தது அவரது உலகியல் தொடர்பு பற்றியது; ஈண்டுக் கூறியவை அவரது உயிரின் உயர்ந்த தொடர்பு பற்றியன.

மற்றிதுவே யெனும் பெருமகிழ்—என்பதும் பாடம். 1042

2941. சூத நல்வினை மங்கலத் தொழின்முறை தொடங்கி
வேத நீதியின் விதியுளி வழாவகை விரித்த
சாத கத்தோடு சடங்குகள் தசதினம் செல்லக்
காதன் மேவிய சிறப்பினிற் கடிவிழா வயர்ந்தார். க0சங

(இ - ள்) சூத நல்வினை...தொடங்கி - பிள்ளை பெற்றவுடன் செய்யப்படும் நற் சடங்குகளை முறையாகச் செய்யத் தொடங்கி; வேத...சடங்குகள் - வைதிக நியமப்படி விதித்தவற்றின்கண் வழுவாதபடி விரித்துக் கூறப்பட்ட சாதகன்ம முதலாக வரும் சடங்குகள்; தசதினம் செல்ல - மகவு பிறந்தபின் பத்து நாட்களிலும் செய்ய; காதல்...விழா அயர்ந்தார் - பெருவிருப்பம் பொருந்திய சிறப்பினாலே அழகிய மங்கல விழா நிகழ்த்தினர்.

(வி - ரை) சூத நல்வினை - பிரசவம் என்பது வடமொழி வழக்கு.

மங்கலத் தொழின்முறை - மகப் பிறந்த பின்னர்த் தொடங்கிப் பத்து நாட்களும் செய்யத்தக்கனவாய் விதித்த செயல்கள். "சூதநிகழ் மங்கல வினைத்துழனி" (1933) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

வேத நீதியின் விதியுளி - வேதங்களின் நியமித்த விதிகளின் முறைமை. இவை கற்ப சூத்திரங்களுட் காணப்படுவன. விதியுளி - வேள்வி என்றலுமாம். (1928)

சாதகம் - "சாதக முறைப்பல சடங்கு" (1933). பிறந்த நாளும் ஓரையும் பற்றிய கோள்களின் நிலைகளைக்கொண்டு சோதிட நூல்வழிச் செய்யும் குறிப்புச் சாதகம் என வழங்கப்படும்; பல பிறவியாகிய பயணத்தி னுட்பட்டுச் சென்று கொண்டிருக்கும் இவ்வுயிருக்கு இப்பிறவியுள் நிகழ்வனவற்றைக் காட்டுவது என்பது பொருள் போலும். சாதகம் செப தான வோமங்கள் பிறந்த உடன் செய்யப்படுவன.

தசதினம் - "மறை தொடர்ந்த நடைநூலின், மேயவிதி யையிரு தினத்தினும் வினைத்தார்" (1938); முதல் மூன்று வருணத்தாருக்கும் இவ்வினைகள் பத்து நாட்கள் விதிக்கப்படுவன. தினம் - தினத்தின்கண்ணும்; ஏழனுருபு விரிக்க.

சடங்குகள் - செல்ல - செல்லுதல் - செலுத்தப்படுதல்; செய்தல். ஆறுநாளில் விக்கின சாந்தி, ஒன்பதாநாளில் பலி, பசதாநாளில் அன்னதானம் முதலியன.

கடிவிழா - அயர்ந்தார் - கடி - மங்கலம். "அருங்கடி மணம்வந் தெய்த" (169); விழா அயர்தல் - விழாக் கொண்டாடுதல்.

சாதகத் தொழில்—என்பதும் பாடம். 1043

2942. யாவ ரும்பெரு மகிழ்ச்சியா லின்புறப் பயந்த
பாவை நல்லுறுப் பணிகிளர் பண்பெலா நோக்கி
பூம்பாவை பூவி ளுளென வருதலிற் பூம்பாவை யென்றே
மேவு நாமமும் விளம்பினர் புவியின்மேல் விளங்க. க0சச

(இ - ள்) யாவரும்...பயந்த் - எல்லாரும் முன்கூறியபடி மீக்கூர்ந்த பெரு மகிழ்ச்சியினாலே இன்பம் பொருந்தப் பெற்றெடுத்த; பாவை...நோக்கி - பாவை போன்ற அந்தப் பெண்ணினது அழகு விளங்கும் பண்புகளையெல்லாம் நோக்கி; பூவினாளென...விளங்க - அவை பூமகளின் பண்புகள்போல வருதலினாலே அப்பெண் ணுக்குப் பூம்பாவை என்றே பொருந்தும் பெயரினை உலகத்தில் மேலாக விளங்கும்படி கூறி இட்டனர்.

(வி - ரை) யாவரும்...இன்புற - முன் கூறியபடி யாவரும் மகிழ்ந்து இன்புறும் படி; அன்றேடமையாது இனி மேலும் இவ்வரலாற்றின் பயன் பெற்று ஒழுகி இன் புறும்படி என்ற குறிப்பும் காண்க. பயந்த - பெற்றெடுத்த.

பாவை - பாவை போன்றாரைப் பாவை என்றதுபசாரம்; "எழுது பாவை நல் லார்" (குறுங்). அழகிய கொல்லிப்பாவையும், சிவநேசரது கண்மணிப்பாவையும் போன்றார் என்றலுமாம்.

நல்உறுப்பு அணிகிளர் பண்பு எ(ல்)லாம் நோக்கி - நல்ல உறுப்புக்களில் அழகு விளங்கும் தன்மைகளை எல்லாம் உற்றுநோக்கி; நோக்கி - கூர்ந்து கருதி; அணி - பண்பு - அழகும் குணமும்; நல்லுறுப்பு - கண், முகம் முதலியன. இவற்றைச் சாமுத்திரிகா லட்சணம் என்பது வடமொழி வழக்கு.

பூவினள் என வருதலில் - பூவினள் - திருமகள் - இலக்குமி. என - போல; உவமஉருபு; என்று சொல்லும்படி. என வருதலில் - என்னும்படி தோன்றியத னாலே. வருதலில் - சொல்லும் நிலை பெறுதலினால் என்றலுமாம்.

மேவு நாமமும் விளம்பினர் - மகவுக்குப் பெயர் இடும் காரணம் பல வழங்கப் படுவன. அவற்றுள் இங்குக் கையாண்ட வழக்கு நல்உறுப்புக்களைப் பற்றித் திருமகள் போன்ற உடலமைப்புக் காரணமாக வந்தது. "கையி லேந்தற் கருமையா லுரிமைப் பேரும் திண்ணனென் றியம்பு மென்ன" (666) என்று கண்ணப்பருக்கு உடலின் திண்ணிய கனம்பற்றிப் பெயரிட்டமையும், பரவையாருக்கு "மதியணி புனித னன் னுள்" பற்றி அந்நாமம் மங்கல அணியாற் சாற்றியதும் (278) பிறவும் நினைவு கூர்க.

பூம்பாவை என்றே மேவு நாமமும் - ஏகாரம் தேற்றம். மேவும் - பொருத்த முடைய. பூம்பாவை - "பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்" என்ப திலக்கணமாதலானும் பூப்பாவை என்று வல்லொற்று வரின் இவளின் மெல்லிய பண் புக்கு மேவாதாதலானும் பூம்பாவை என்றார்; மேவும் என்ற கருத்துமிது; பின் னர்ப் பிள்ளையாரது அருட்டிருவாக்கில் மேவும் என்ற குறிப்புமாம்.

புவியின்மேல் விளங்க - மேல் - மேலாக. மேன்மை பெற்று - என்ற பின் வரலாற்றுக் குறிப்பும் காண்க. விளங்க - விளங்கும்படி. மேல் - மேலும் - பின்ன ரும் என்று கொண்டு, இப்போது பெயர் விளம்பியதன்றிப் பின் வரலாற்றில் இவ் வுடல் சாம்பராகி மீள உதிக்கின்றபோதும், மேலும் பிள்ளையாரது திருவாக்கில் இப் பெயரே விளம்பப்பெற்ற நிலைக்குறிப்பாக உரைப்பதுமாம்; ஏனையோர்க்கு இட்ட பெயர்கள் உடலுடன் உயிர் நிற்கும்வரை வழங்கி உயிர் பிரிந்தபின் நீக்கப்பட்டுப் பிணம் எனப்படும்; "பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு" (திருமந்திரம்); ஆயின் இவருக்கு அவ்வாறன்றி எலும்பும் சாம்பருமாகிக் குடத்தினுள் அமைந்தபோதும் அப் பெயரே மேவியது என்ற குறிப்புமாம். பின்னர் வரும் உயர்பண்புகளின் குறிப்புமாம்.

பூவினாளெனத் தகுதலில்—என்பதும் பாடம். 1044

2943\. திங்க டோறுமுன் செய்யுமத் திருவளர் சிறப்பின்
மங்க லம்புரி நல்வினை மாட்சியிற் பெருக
*ஓராண்டு-தளர்நடை* அங்கண் மாநக ரமைத்திட, வாண்டெதி ரணைந்து
தங்கு பேரொளிச் சீறடி தளர்நடை பயில; ௧௦௪௫

2944\. தளரு மின்னினங் குரமெனத், தமனியக் கோடியின்
வளரி ளந்தளிர்க் கிளையென, மணிகிள ரொளியின்
*ஏழு ஆண்டு* அளவி லஞ்சுடர்க் கொழுந்தென, வணைவுறும் பருவத்
திளவ னப்பிணை யனையவர்க் கேழியாண் டெய்த. ௧௦௪௬

2945\. அழகின் முன்னிளம் பதமென, வணிவிளக் கென்ன,
*கழல்-அம்மனை-பந்து* விழவு கொண்டெழும் பேதைய ருடன்விளை யாட்டிற்
கழலோ டம்மனை கந்துக மென்றுமற் றினைய
மழலை மென்கிளிக் குலமென மனையிடை யாடி, ௧௦௪௭

2946\. பொற்றொ டிச்சிறு மகளிரா யத்தோடும் புணர்ந்து
*சிற்றில்-சிறுசோறு-ஊசல்* சிற்றின் முற்றவு மிழைத்தட னடுந்தொழிற் சிறுசோ
றுற்ற வுண்டிகள் பயின்றொளி மணியூச லாடி
மற்று மின்புறு வண்டலாட் டயர்வுடன் வளர. ௧௦௪௮

2947\. தந்தை யாருமத் தளிரிளங் கொம்பனு டைமை
இந்த வையகத் தின்மையா லின்புறு களிப்பு
வந்த சிந்தையின் மகிழ்ந்து, "மற் றிவண்மணம் பேறுவான்
அந்த மில்லென தருநிதிக் குரிய" னென் றறைந்தார். ௧௦௪௯

2943\. (இ - ள்) திங்கள் தோறும்...அமைத்திட - மாதந்தோறும் முன் செய்யப்படும் அந்தச் செல்வம் வளரும் மங்கலங்களாகிய சடங்குகளும் ஏனை நல்வினைகளும் மாண்பு பொருந்தப் பெருகும்படி அங்குப் பெரிய நகரத்தினர்கள் அமைவுபடுத்தியிட; ஆண்டெதி ரணைந்து...பயில - ஓராண்டு நிறைந்து தங்கும் பேரொளியினையுடைய சிற்றடிகள் தளர்நடை பயில;
௧௦௪௫

2944\. (இ - ள்) தளரும்..அங்குரமென - துவள்கின்ற மின்னலின் முளை போலவும்; தமனியக் கொடியென...கிளையின் - பொன்னாலாகியதோர் கொடியினது வளர்கின்ற இளந் தளிரினது கிளைபோலவும்; மணிகிளர்...கொழுந்தென - இரத்தின மணிகளினின்றும் கிளர்கின்ற ஒளியினது அளவுட்படாத அழகிய சுடர்க்கொழுந்து போலவும்; அணைவுறும் பருவத்து - சார்கின்ற பருவங்களிலே; இள அ(ன்)னப் பிணை யனையவர்க்கு ஏழ்யாண்டு எய்த - இளவன்னப்பேடை போலும் அவருக்கு ஏழு ஆண்டுகளின் பருவம் பொருந்த,
௧௦௪௬

2945\. (இ - ள்) அழகின்...விளக்கென்ன - அழகு என்றதொரு பொருளின் முதலிற் பெறப்படும் இளம்பதமென்னவும், அணிவிளக்கு என்னவும் கூறும்படி வளர்ந்து; விழவு...பேதையருடன் - விழாக்கொண்டு கூடி எழுகின்ற சிறுமியருடனே கூடி; விளையாட்டில்...ஆடி - விளையாடல் பயில்வதில் கழல்-அம்மானை-பந்து என்று இன்னவற்றை மழலை ததும்பும் நிலை மெல்லிய கிளிக்கூட்டங்கள் போலப் பாடி எழ மனையினுள்ளே ஆடி,
௧௦௪௭

2946. (இ - ள்) பொற்றொடி...இழைத்து - பொன்னாலாகிய தொடிகளை யணிந்த சிறு பெண்களின் கூட்டத்துடன் சேர்ந்து சிற்றில்களை முற்றக் கட்டியும்; உடன்...பயின்று - அதனுடனே சமைக்கும் தொழிலிலே சிறுசோற்றுடன் பொருந்திய உண்டிகளமைத்தலும் உண்ணுதலுமாகிய செயல்களிற் பயின்றும்; ஒளி... ...ஆடி - ஒளியுடைய மணிகள் கட்டிய ஊசல் ஆடியும்; மற்றும்...அயர - இன்னும் இவ்வாறாகிய இன்பம் பொருந்தும் வண்டல் பயிலும் ஆடல்களைப் பயின்றும் வளர, கO௪அ

2947. (இ - ள்) தந்தையாரும் - தந்தையாகிய சிவநேசரும்; அத்தளிர்... ...இன்மையால்-அந்தத் தளிர்த்த இளங்கொம்பு போன்ற பெண்ணினுக்கு ஒத்த பண்பு இந்த உலகத்தில் வேறொருவருக்கும் இல்லையாதலாலே; இன்புறு...மகிழ்ந்து - இன்பத்துடன் கூடிய களிப்புப் பொங்கிய மனத்தினிலே மகிழ்ச்சியடைந்து; மற்று... ...என்று அறைந்தார் - பேறாகிய இவளை மணஞ் செய்யப்பெறும் மணமகனே எனது முடிவில்லாத அரிய செல்வங்களுக்கெல்லா முரிமையுடையோனாவான்" என்று அறைந்தனர். கO௪கூ

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2943. (வி - ரை) திங்கள்தோறும் செய்யும்...நல்வினை - ஆண்டு நிறைவின் முன் மாதந்தோறும் செய்யப்படும் சடங்குகள். இவை மாதந்தோறும் பிறந்த நாளிற் (இரட்சா பந்தனம்) காப்பிடுதல் - முதல் மாதத்திற் றொட்டிலேற்றுதல், (உபநிட்கரமணம்,) ஏழாமாதத்தில் அன்னப்பிராசனம் முதலாயின என்பர். திருவளர் - மங்கலம் புரி - நல்வினை - வேத விதிகளுள் விதித்த இச்சடங்குகள் செல்வம், ஆயுள், வீரியம் முதலிய நற்பண்புகளை வளர்க்கும் பயன் தருவன எனப்படுவன. நல்வினை - வேள்வி-அமுது அளித்தல் முதலிய சடங்குகள்; உற்றவர்களால் அப்போது அக்குழவியின் உலக நலங்களின் வளர்ச்சி கருதிச் செய்யப்பட்டனவாயினும், உண்மையில் இறுதியில் மங்கலங்களுக்கெல்லாம் மேலாகிய சிவ நன்மங்கலத்தைப் பிள்ளையாரது அருளினால் சாரச் செய்தன என்பது மங்கலம் புரி என்றதன் குறிப்பு. "தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள்" (3015) என்பது காண்க.

ஆண்டெதிர் அணைந்து - மாதந்தோறும் செய்யும் சடங்குகள் நிரம்பிப் பிறந்த ஆண்டினை அடுத்த ஆண்டு கூடி.

தளர்நடை பயில - இப்பருவம் ஓராண்டு நிறைவில் நிகழ்வது; 1948 பார்க்க. பிள்ளைத் தமிழ்நூல்களுட் சிறப்பித்துக் கூறும் பருவங்களுள் முதலேழு பருவங்களும் இங்குப் பெறவைத்து இவ்வொரு பாட்டிற் கூறியமைத்த கவிநலம் கண்டுகொள்க. இவற்றி னியல்பெல்லாம் இருபாலார்க்கும் பொதுவாதலானும் இவை முன்னர் விரிக்கப்பட்டமையானும் இவ்வாறு சுருங்கச் சுட்டிக் கூறியமைத்தார். மேல்விளையும் மூன்று பருவங்கள் பெண்பாற்குச் சிறப்பாயுரியன வாதலின் மேல் விரித்துக் கூறுதல் காண்க. இவை கூடிய பருவமுறை நிரம்பக் கூறுவன என்பார் ஒருமுடிபாக்கி உரைத்த நயமும் கண்டுகொள்க. 1045

2944. (வி - ரை) தளரும் - தளர்தல் ஈண்டு ஒசிந்து வளைந் தசைதல் என்னும் பொருளில் வந்தது.

அங்குரம் - முளை; மின்னின்-அங்குரம் - பின்னர் முழுமையாகும் மின்னற் கொடி; என - உவமஉருபு.

தமனியம் - பொன் ; தமனியக் கோடியின்...கிளையென - பொற்கொடியின் இளந்தளிர்க் கிளை என்றது முற்கூறிய மின்னின் அங்குரத்தினின்று தளிர்க்கும் கொடியின் கிளை எனத் தொடர்ந்துகொள்க.

மணி - செம்மணி. மணியின்......கொழுந்தென - முன்கூறிய பொற்கொடிக் கிளையின்மேல் விளங்கும் மணிக்கொழுந்து என மேலும் தொடர்ந்துகொள்க.

மின் - பொன் - மணி - மூன்றும் ஒளிப்பொருள்களாதலும், ஒன்றற்கொன்று தண்ணிய கதிர்களால் ஏற்றமாய் அனுபவிக்கலாந் தன்மையனவாதலும் கண்டு கொள்க.

அங்குரம் - இளந்தளிர் - கொழுந்து - மூன்றும் இளமையும் வளர்ச்சியும் குறிப்பனவாதலும் காண்க. தளிர் - என்றலே அமையுமாயினும் அதன் முன்பதமாகிய மிக்க இளமை குறிக்க இளந்தளிர் என்றார். இள அனம் - என மேற்கூறுவதும் இக் குறிப்பு. 280-ம் ஆண்டுரைத்த நலங்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன.

இள அ(ன்)னப் பிணை - இளமையுடைய பெட்டையன்னம் ; அன்னம் - என்றது செய்யுளோசையின்பங் கருதி அனம் என நின்றது. பிணை - பெட்டை ; "இளவன்னம் வீற்றிருக்கும்" (தேவா) ; இங்கு இவ்வாறன்றி வனம் - வனத்தில் வாழும், இளம் பிணை - இளைய பெண்மான் என்று கூட்டியுரைத்தனர் முன் உரைகாரர்கள்.

இள அனப்பிணை அனையவர்க்கு - முன்னர் அங்குரம் - கிளை - கொழுந்து என்பன அசைவுகள் சிறிதே காணும் பருவம்; ஈண்டு ஏழியாண்டு எய்தும்-பருவத்து அசைந்தாடி ஓடும் செயல்கள் மிகுமாதலின் இள அன்னம் என்றார் ; ஆங்கிலருள்ளும் சிறு பெண் மகவுகளைக் பறவைகட்குவமிப்பது மரபு. 1046

2945. (வி - ரை) அழகின் முன் இளம்பதமென - அழகு என்ற பொருளின் இளம்பதத்தின் முற்கோலம். "மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ" (178).

விழவு - சிறுமியர் விளையாட்டுக்களில் விழாக்கள் போலக் கொண்டாடும் ஆடல்கள்.

பேதையர் - வயதினால் ஒத்த சிறுமியர் ; பேதை - ஏழுவயதளவில் உள்ள பெண் பருவம்.

கழலோ டம்மனை கந்துகம் என்று - கழல் - அம்மனை - கந்துகம் (பந்து) இவை கொண்டு ஆடுதல் சிறுமியர் விளையாடல் வகைகள் ; "முத்தழலோர் மனைகடொறு மிறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயரும் கழுமலமே" (பிள் - மேகரா - கழுமலம்) என்ற பிள்ளையார் திருவாக்கு இவ்வாடல்களின் இயல்புகளை நன்கு தெரிக்கின்றது. இவற்றில் இறைவரைப் பாடும் பாடல்கள் பாடி ஆடுதல் ஒரு இன்றியமையாத கூறு ; கழல் - கழற்சிக்காய் ; இவை இக்காளில் முற்றும் மறந்து கைவிடப்பட் டொழிந்து வேறு பொருளற்ற புன்மைச் சிற்றுடல்கள் புகுந்துகொண்டமை வருந்தத் தக்கது. 281-ம் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மற்று இனைய - இவை தோணோக்கம், பூவல்லி, உந்தி முதலியவை போலும் ; இவைபற்றித் திருவாசகத்துட் காண்க.

மழலை மென்கிளிக் குலமென - முன்னர் இளவன்னத்தைப்போல என்றனர் ; ஈண்டுப் பேசுந் தன்மைபற்றிக் கிளியை உவமித்தமை குறிக்க மழலை என்ற அடைமொழியும், இளமை குறிக்க மென்(மை) என்ற அடைமொழியும் புணர்த்தி ஓதினர்.

ஈண்டுக் கூறும் விளையாடல்களுக்குப் பாடல் இன்றியமையாததென்பதும் குறிப்பு. துலம் - கூட்டம். கிளிகள் கூட்டமாய் வாழும் இயல்புடைமை காண்க.

மனையிடை - இங்குக் கூறும் ஆடல்கள் இப்பருவத்தே மனையினுள் நின்று ஆடுவன ; மனையின் புறத்துச் சென்றாடுவனவற்றை வரும் பாட்டிற் கூறுவது காண்க. 1047

2946. (வி - ரை) சிற்றில்......ஆடி - சிற்றிற் பருவமும், ஊசற் பருவமும் கூறியபடி.

அடுந்தொழிற் சிறுசோறு உற்ற வுண்டிகள் பயின்று - மணற்சிறுசோறடுதல் சிற்றிலிழைக்கும் ஆடலுடன் கூடி நிகழ்வதாம் ; உண்டிகள் - என்றதனால் சிறுசோறு ஒன்றுமட்டில் அமையாது உரிய உணவு வகைகளும் கொள்ளப்படும். இவை சிறுமியர் தாமிழைத்த சிற்றிலினுள் மணலால் சோறும் உண்டிகளும் அட்டதாகவும், அதனை ஆயமும் விருந்தும் உண்ண அளித்தூட்டுவதாகவும் பாவனை செய்யும் நிகழ்ச்சிகள். இவை பெண்பாலார்க்குரிய இல்வாழ்க்கைக் கடமைகள் இயல்பிலே சிறு பருவத்தி னின்றே சிறுமியரிடம் தோன்றி வளரும் தன்மைகளைக் குறிப்பன. முன் 66-ம் பாட்டும், பிறவும் நினைவுகூர்க. இவையும் அம்மானையும் நீராடலும் பெண்பாற் பிள்ளைத் தமிழுக்கே சிறப்பா யுரியவைகளாகக் கூறும் மரபும் கருதுக. வளர்ச்சி கூறு முகத்தானே இவை நிகழும் பருவத்தையும் ஆசிரியர் முன் (2944) குறித்தருளியதும் காண்க.

ஒளி மணி ஊசல் ஆடி - பெற்றோர் இவர்களுக்கு அமைக்கும் அழகிய மணிகள் பூண்ட ஊசல்.

மற்றும் இன்புறு வண்டல் ஆட்டு அயர்வு - இவை தெருவிற் புழுதிபடிய ஆடுதல் ஓடுதல் வகையாய ஆடல்களும், நீராடலும், பிறவுமாம். "வண்டல்பயில் வனவெல்லாம்" (1721) என்றதும், பிறவும் பார்க்க. ஆட்டயர்வு - ஆடுதல் ; ஆடும் செயல்.

இன்புற—என்பதும் பாடம். 1048

2947. (வி - ரை) கோம்பனுள் தகைமை - கொம்பு போன்ற தன்மை பண்புகளின் தொகுதியின் ஒப்பு.

இந்த வையகத்துத் தகைமை இன்மையால் - இத்தன்மை போன்றதொன்று-ஒப்பாகியதொன்று - இவ்வுலகத்தில் இல்லாமையாலே ; "கண்ணனப்ப னொப்பதோ ரன்பின்மை கண்டபின்" (திருவா - கோத்).

இன்புறு களிப்பு வந்த சிந்தையின் மகிழ்ந்து - மகவின் நற்பண்புகளின் மேம்பாடு காண இன்பமும், அதனாற் களிப்பும், அதனை மேலும் எண்ணித் துணிதலால் மகிழ்வும் வந்தன என்க. மகிழ்ந்து - மகிழ்ந்ததனால் ; பின்னர் அறைந்தார் என்றதற்குக் காரணங் காட்டியவாறு.

" மற்று இவள் மணம்...உரியன் " என்று - இணையில்லாத நற்பண்புகளுக்குத் துணையாக அதற்கேற்றபடி இணையில்லாத செல்வம் தருதலே தக்கதாம் என்பது கருத்து. அந்தமில் எனது அருநிதி என்ற குறிப்புமது. மகட்கொடையின் அளவில்லாத தனங் கொடுத்தல் வணிகருள் வழக்குமாம் என்பது " மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பிறனங் கொடுத்ததற்பின் " (1729) என்றவாற்றானு மறிக. எனது நிதிக்கு உரியன் - நிதிக்கு - நிதி முழுமைக்கும் என்று முற்றும்மை தொக்கது. சிவநேசருக்கு இப் பூம்பாவையார் ஒரே மகவாதலும் ஓர் குறிப்பு. " தங்கள்குடிக் கொருபுதல்வி

யாதலினால்" (1728) எனவரும் அம்மையார் புராண வரலாறு ஈண்டுச் சிந்திக்கற் பாலது. ஆண்டுத் தனதத்தனார் போலவே சிவநேசரும் பெருங்குடி வணிகராதலும் கருதுக.

மற்று இவள் - முன் கூறியபடி இந்த வையகத்தில் ஒப்புவே றில்லாத் தகைமை யுடைய இவள் என்க. மற்று - வேறாகிய என்பது. இனி, இவள் மணம்பெறுவான் உலகில் ஒருவனுமல்லனாம்; மற்று எல்லா உயிர்களுக்கு முயிர்நாயகனாகிய சிவனே யாம். "தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள்" (3015) என்றபடி பிற உயிர் களின் வேறாகிய சிவனே என்ற குறிப்புமாம்; இனி, இவள் இவ்வுடலத்தினுள் மணத்தால் நாயகனையடையும் நிலையின்றிப் பின்னர்ப் பிள்ளையார் சடையவர் கருணை காண்வர வுற்பவித்தபின், அந்நிலையில் சிவமணம் பெறுவாள் என்ற குறிப்புத்தாவும் நின்றது. அவரே எல்லாவற்றையும் உடைமையாக உடையவர் என்பது.

அறைந்தார் - யாவருமறியப் பறைசாற்றியதுபோல வெளிப்பட மொழிந்தனர் என்பது அறை - என்றதன் றொனி.

தளரிளங்—என்பதும் பாடம். 1049

2948. ஆய நாள்களி லமண்பயில் பாண்டிநா டதனைத்
தூய ஞானமுண் டருளிய தோன்றலா ரணைந்து
மாய வல்லமண் கையரை வாதில்வென் றதுவும்,
மேய வெப்பிடர் மீனவன் மேலொழித் ததுவும், ௧0௫0

2949. நெருப்பி லஞ்சினார் தங்களை நீரிலொட் டியபின்
மருப்பு நீள்கழுக் கோலின்மற் றவர்களே றியதும்
விருப்பி னாற்றிரு நீறுமீ னவற்களித் தருளிப்
பொருப்பு வில்லியார் சாதனம் போற்றுவித் ததுவும், ௧0௫௧

2950. இன்ன வாறெலா மறிந்துளா ரெய்தியங் கிசைப்பச்,
சொன்ன வர்க்கெலா மிருநிதி தூசுட னளித்து,
மன்னு பூந்தராய் வள்ளலார் தமைத்திசை நோக்கிச்,
சென்னி மேற்கரங் குவித்துவீழ்ந் தெழுந்துசெந் நின்று, ௧0௫௨

2951. சுற்ற நீடிய கிளையெலாஞ் சூழ்ந்துடன் கேட்பக்
"கற்ற மாந்தர்வாழ் காழிநா டுடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும் பிறங்கிய நிதியும்
முற்று மென்னையுங் கொடுத்தனன் யா" னென்று மொழிந்தார்.

2948. (இ - ள்) ஆய நாள்களில் - முன்கூறிய அவ்வாறாகிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தில்; அமண் பயில்...அணைந்து - சமணர்கள் மிக்கிருந்த பாண்டி நாட்டினைத் தூய ஞானபோனக முண்டருளிய பிள்ளையார் சென்றணைந்து; மாய... ...வென்றதுவும் - வஞ்சனையில் வல்ல அமணர்களாகிய கீழ்மக்களை வாதில் வென்றது வும்; மேய வெப்பு...ஒழித்ததுவும் - வந்து பொருந்திய வெப்பு நோயின் துன்பத்தி னைப் பாண்டியனது உடலினின்றும் நீக்கியதுவும்; ௧0௫0

2949. (இ - ள்) நெருப்பில்...ஒட்டியபின் - நெருப்பின் வாதத்திற் றோற்று அஞ்சிய அவ்வமணர்களை நீரின் வாதத்தினில் ஒட்டி வென்றதன் பின்; மருப்பு...

...ஏறியதும் - கூரிய கொம்பு போன்ற நீண்ட கழுமரங்களில் மற்று அவ்வமணர்கள் ஏறியதுவும்; விருப்பினால்...போற்றுவித்ததுவும் - விருப்பத்தினாலே திருநீற்றினைப் பாண்டியனுக்கு அளித்தருளி, அதன்மூலம் மலைவில்லையுடைய சிவபெருமானது திரு நீற்றுச் சாதனத்தைப் போற்றுவித்ததுவும்; கOருக

2950. (இ - ள்) இன்னவாறெலாம்...இசைப்ப - இவ்வாறாயினவற்றை எல்லாம் அவற்றை அறிந்தவர்கள் அங்குச் சேர்ந்து சொல்ல; சொன்னவர்க்கெலாம்... ...அளித்து - வந்து சொன்னவர்களுக்கெல்லாம் பெருநிதியங்களைத் துணிகளுடனே அளித்து; மன்னு பூந்தராய்...செந்நின்று - நிலைபெற்ற சீகாழியின் வள்ளலாராகிய பிள்ளையாரை அவரிருந்த திசையினைநோக்கித் தலையின்மேற் கைகளைக் கூப்பிக்கொண்டு நிலமுற விழுந்து வணங்கி எழுந்து நேர்நின்று; கOருஉ

2951. (இ - ள்) சுற்றம் நீடிய...கேட்ப - சுற்றத்தாரும் நீண்ட கிளைஞர்களும் கேட்கும்படி (உரத்த ஒலியிலே); "கற்ற...யான்" என்று மொழிந்தார் - கற்றவர்களாகிய மக்கள் வாழும் காழிநாடுடைய பிள்ளையாருக்கு அடியேன் பெற்றெடுத்த பூம்பாவையாரையும் விளக்கமுடைய எனது நிதிகளையும் முற்றவும் அடிமையாக என்னையும் யான் கொடுத்தனன்" என்று மொழிந்தார். கOருங

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2948. (வி - ரை) ஆய நாள்களில் - முன் கூறியவாறு சிவநேசர் தமது மகளாரது இன்னலங்களின் மகிழ்ந்து நிகழ்வனவாகிய நாள்களில். ஆய நாள்களில் - இசைப்ப - (2950) என்று கூட்டுக; ஆய நாள்களில் - அணைந்து - என்று பிள்ளையாரது நிகழ்ச்சிகளுடன் கூட்டி முடித்தலுமாம்.

அமண் பயில் பாண்டி நாடு - அமண் பயில் - அமணர் பயிலும்; அமணர்கள் மிக்கு விரவிய; அமண் பயில் - சமண சமயத்திறத்தினை மேற்கொண்டு நிகழ்ந்த - அமணிற் பயில் - என்றுரைத்தலுமாம்.

மாய......வென்றதுவும் - மாயம் - வஞ்சனை. "மாயை சால மிகவல்லார்" (1552); "அமண்கையர் வஞ்சனைக்கோ ரவதி யில்லை" (2514).

வாதில் வென்றதுவும் - ஈண்டு வென்றது என்றது அமணர் ஏவியும் கொளுவியும் செலுத்திய தீயினைத் தம்பாற்பற்றாது செய்ததனோடு அதனையே அரசன்பாற் பையச் சென்று ஆகும்படி செய்த செயல் குறித்தது; வாதத்தில் இறுதியாகக் கொண்ட வெற்றியளவும் மேல் தனித்தனி விரித்தல் காண்க; வென்றதுவும் என்பது பொதுமைப் பொருளிலும், ஏனையவை அதன் விவரணங்கள் என்ற பொருளிலும் கொள்ளினுமமையும்.

மேய - வள்ளலார் "பையவே சென்று பாண்டியற்கு ஆகவே" என்று அருளிய திருவாக்கின்படி வந்து பொருந்திய; பிள்ளையாருறை "மடத்தில், வெந்தழற்பட விஞ்சைமந் திரத்தொழில் விளைத்தால்" (2587) என்று கூறிய அமணரது வஞ்சனைக்கு அதனையே விரைந்துசெய்யப் போவது" (2588) என்று இசைவுதந்த தீவினையின் பயனாகவும், அமணொடு பயின்ற தீவினைப் பயனாகவும் வந்து மேவிய என்ற குறிப்புமாம்.

வெப்பு இடர் - இடர் - துன்பம்; வெப்பாகிய இடர்; வெப்பினால் வந்த இடர் என்றலுமாம்; வெப்பும் அஃதிறுதியாக முன்னர்ப் போந்த இடர்களும் என்றுரைக்கவும் நின்றது; "வழுதியு முழுதும் உய்ந்தான்" (2669).

மீனவன் மேல் ஒழித்ததுவும் - மேல் - மேனின்றும்; ஐந்தனுருபு விரிக்க. வென்றதுவும் - ஒழித்ததுவும் - ஏறியதும் (2950) - போற்றுவித்ததுவும் - இன்னவாறெலாம் அறிந்துளார் (2951) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் முடிக்க. 1050

2949. (வி - ரை) நெருப்பில் அஞ்சினார் தங்களை - நெருப்பில் - நெருப்பினை இடமாகக்கொண்டு செய்த வாதத்தில். நெருப்பு - அதில் செய்த வாதத்துக்கு வந்தது ஆகுபெயர். பின்னர் நீரில் என்றது மிவ்வாறே.

அஞ்சினார் - அஞ்சிப் புகுந்து தோற்ற சமணரை. "நையு நெஞ்சின ராகியே நடுங்கிநின் றிட்டார்" (2686); "நடுக்குற நின்றநள் ளாறுடைய நம்பெருமான்" (தேவா - நட்டபாடை - 10).

அஞ்சினார் - என்றதனால் அஞ்சிப் புகுந்து பின் தோற்றமையால் மேலும் அஞ்சியவர்களாகிய என்பதும் பெறவைத்த நயமும் காண்க.

நீரில் ஓட்டியபின் - புனல் வாதத்தை ஓட்டியபெற்றி அவர்களை வெற்றிகொண்ட பின். ஓட்டிய வரலாறு முன்னர்ப் பார்க்க (2693 - 2698); ஓட்டியபின் - என்றதனால் அவர்களை வெற்றிகொண்ட செயலைக் குறிப்பாற் பெறவைத்தார்.

விருப்பினால் - தமது மகிழ்ச்சியினாலே; பாண்டியனுக்குத் திருப்பாசுரப் பதிகத்தினால் ஞானோபதேசஞ் செய்து திருநீறு தந்தமை இங்குக் கூறப்பட்ட செயல். அளித்தருளி என்ற குறிப்புமது; 2756 பார்க்க.

மருப்பு நீள் - மருப்பு - கொம்பு; கொம்புபோலக் கூர்ந்து நீண்ட. "மருப்புடைக் கழுக்கோல்" (2705).

அவர்களேற்றியதும் - "எண்பெருங் குன்றத் தெண்ணா யிரவரு மேறி னார்கள்" (2754); ஆண்டுரைத்தவை பார்க்க. "மற்றவரை யேற்றியதும்" என்று கொள்ளும் பாடம் பிழை. ஏற்றி - என்று பிள்ளையார்பாற் சார்த்திக் கூறும் வாக்குக்கள் உபசாரம் என்று கொள்க.

சாதனம் - திருநீறும், (உருத்திராக்கமும்), திருவைந்தெழுத்தும்.

போற்றுவித்தலாவது யாவரும் கையேற்று ஆளும்படி செய்தல்; போற்றுதல் காத்தொழுகுதல். 1051

2950. (வி - ரை) இன்னவாறெலாம் - முன்னர் வென்றதுவும் என்பது முதலாக நிகழ்ந்தவா றெல்லாவற்றையும்.

அறிந்துளார் - நேரில் அறிந்தார்களும் கேட்டறிந்தார்களும். நம்பத்தக்கமுறையிற் செய்தி சொல்வோர். கேட்கும் செய்தியை நம்பும் முறையினை அறிவித்தவாறு.

எய்தி அங்கு இசைப்ப - பிள்ளையார்பால் வைத்த இவாத அன்பு (2937) காரணமாகக் காணவும், அன்றி யாத்திரையாகவும் வரும் அடியார்கள்; அந்நாளில் அடியார்கள் கூடியபோது பேசுவன இத்தகைய நல்வார்த்தைகளேயாம் என்னு முண்மைவழக்குக் குறிக்க. அங்கு - திருமயிலையின் கண்.

சொன்னவர்க்கெலாம்...அளித்து - நல்வார்த்தை கொண்டு வருவோருக்கு இவ்வாறு துணியும் மணியும் அளித்தல் உண்மை மகிழ்ச்சிபெற்ற உள்ளநிலை காட்டுவதாம். புராண வரலாறு (46) பார்க்க. இவ்வழக்கு இந்நாளினும் ஏற்றபெற்றி அருகி வழங்கக் காணலாம்.

திசை நோக்கி - கரங் குவித்து வீழ்ந்து - அவரிருந்த திசையினை நோக்கி அவரை மனத்துட்கொண்டு அவரை நேர் கண்டதுபோலவே வணங்கி; இத்திசை திருமயிலையினின்றும் தென்றிசையில் சீகாழிப்பதி யிருக்கும் திசையாம். எனவே சிவநேசர் தெற்குத் திசை நோக்கி வணங்கினார் என்பதாம். கிழக்கும் வடக்கும் நோக்கி வணங்குதல் வேண்டுமென்பது பொது விதி. இஃது அதனின் வேறாகிய சிறப்பு விதியானமைந்தது. இதற்குக் காரணமுங் காட்டியவாறு.

சேர்நின்று - நேரே நிமிர்ந்து நின்ற; வழிபாட்டில் உடல் நிற்கவேண்டிய நேர் நிலை; செம்மையுள் நின்ற என்ற குறிப்புமாம். 1052

2951. (வி - ரை) சுற்றம் நீடிய கிளை எலாம் கேட்ப - சுற்றத்தாரும் நீடிய கிளைஞரும் ஆகிய எல்லாரும் கேட்கும்படி உறுதிகூறும் பேரொலியினாலே; இன்பத் துன்பங்களுள் விடாது சுற்றிச் சூழ்தலால் சுற்றம் எனவும், ஒரு மரத்தினின்றும் வெவ் வேறாகக் கிளைக்கும் பல கிளைகள்போல வருதலிற் கிளை எனவும்படும்; வமிச விருட் சம் (Geneological tree) என்ற வழக்கும் காண்க. எலாம் - பலதிறப்பட்ட எல்லாரும் என்க.

சுற்ற நீடிய கிளை எலாங் கேட்ப - மொழிந்தது என்னையோ? எனின், இவர்பாற் பெண்ணை மணம்கொள்ள உரிமையுடையவர்கள் சுற்றத்தார்; ஆண்மகவு இன்றி இவர் "குடிக்கு ஒருபுதல்வி யாதலினால்" பெண்ணோடு நிதியும் பெற எதிர்பார்க்கும் நிலை யினரும் அவருள் இருத்தல் கூடும்; ஆண்மக வில்லாமையால் இவரது அருநிதிக்குப் பின் உரிமைத் தாயத்தார்களாகிய கிளைஞர்களும் பலர்; ஆதலின் இவர்கள் கேட்ப "இவர் எனது உண்மைச் சுற்றமும் கிளையுமல்லர்; இவை பாசக்கூட்டமே; 'உற வாவா ருருத்திரபல் கணத்தினோர்கள்' (தேவா); 'சுற்றம் மாசிலா வீச னன்பர்' (திருவிளை. புரா) என்றபடி காழிநாடுடையவரே எனது குருவும் சுற்றமும் ஆளுடைய நாயகருமாவர் என்று கண்டேன்; எனது பெண்ணையும் நிதியையும் என்னையும் அவ ருக்கே கொடுத்தனன்" என்று சுற்றமும் கிளையும் கேட்ப மொழிந்தனர். மொழிந்த பொருள் யாவரும் அறிய விளம்பப்பட்டதோடு அவர்களும் அறிவுறுத்தப்பட்டனர் என்க. என்னையும் (அடிமையாகக்) கொடுத்தனன் - என்பதாம்.

முற்றும் என்னையும் - "அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமும், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ?" (திருவா) என்ற நிலை காண்க. எனது உயிர் உடல் பொருள் இவையும் இனிக் காழிநாடுடையவரது உரிமையாயினமையின் இனி இவற்றைப்பற்றியும் உடற் சுற்றமாகிய உங்களுக்கு ஒரு பற்றில்லை என்று சுற்றத்தார்க்குச் சொல்லியவாறு.

கற்ற மாந்தர் வாழ் காழி நாடு - "பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டணிந்து பரிசினாலே, காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து நின்றேத்துங் கழு மலமே" (பிள் - மேகரா - 9); "கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள்" (ஷை 11) முதலாக வரும் பிள்ளையாரது திருவாக்குக்கள் காண்க. கற்ற - சிவனையும் சிவ னடியாரையும் வழிபடுதலே பிறவிப் பயனாகிய உறுதிப்பொருள் என்று கற்றுத் தெளிந்து அவ்வழி ஒழுகக் கற்ற. "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன், நற்றா டொழா அ ரெனின்" (குறள்).

காழி நாடு - காழிப்பதி; இவ்வாறு பெரியோர் வாழும் பதியை நாடென்று கூறு தல் மரபு. 1053

2952. எல்லை யில்பெருங் களிப்பினா லிப்பரி சியம்பி,
முல்லை வெண்ணகை முகிழ்முலை யாருடன் முடியா
மல்கு செல்வத்தின் வளமையு மறையவர் புகலிச்
செல்வ ரேயுடை யாரெனுஞ் சிந்தையான் மகிழ்ந்தார். கஓருச

(இ - ள்) எல்லையில்...இயம்பி - அளவுகடந்த களிப்பினாலே இவ்வாறு சொல்லி; முல்லை...வளமையும் - முல்லையரும்பு போன்ற கூரிய வெள்ளிய பல் வரிசையினையும்

முகிழ்க்கும் முலையினையும் உடைய திருமகளாருடன் எல்லையில்லாது நிரம்பிய செல்வத்தின் வளங்களையும்; மறையவர்...மகிழ்ந்தார் - வேதியர்களது சீகாழிப் பதியில் அவதரித்த செல்வராகிய பிள்ளையாரே உடையவர் என்று துணிந்துகொண்ட சிந்தையினாலே மகிழ்ச்சியடைந்தனர்.

(வி - ரை) எல்லையில்......இயம்பி - இப்பரிசு - முன் பாட்டிற் கூறியவாறு. பெருங் களிப்பினால் இப்பரிசு - இயம்பி - பெருங் களிப்பினாற் கவரப்பெற்றாலன்றி இவ்வாறியம்புதல் கூடாது என்பது; என்னை? "உவப்பதன்கண் குற்றமுந் தோன்றாக்கெடும்" என்றபடி மீக்கூர்ந்த மகிழ்ச்சியும் மீக்கூர்ந்த சினம்போலவே உள்ளத்தின் நிறையினைக் கவர்ந்து மேலெழுந்து இது தக்கது-இது தகாதது - இஃதியல்வது-இஃதியலாதது என்று நிறுத்தெண்ணுந் திறனை அழிக்கும்; ஈண்டுச் சிவநேசர் தமது மரபும்-தரமும்-பக்குவமும்-நியதியும், பிறவும் ஆகிய நிலைகள்பற்றிப் பிள்ளையார் இதனை ஏற்றருளுதற்கொண்ணுமோ என்பனவற்றை ஆய்ந்து சீர்தூக்கி நிறுத்து முடித்தாரல்லர் என்பது பின்னர் வரலாற்று விளைவிற் கண்டுகொள்க. அதனியல்பு கூறியவாறு. மேல் "அன்ப ரின்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற்...புகலிகா வலர்க்கிது புணரா, தென்பதுட் கொண்ட பான்மை" (2954) என்று இங்கியதியினை விளக்குதல் காண்க.

முல்லை......முலையார் - பூம்பாவையார்; முல்லை - முல்லையரும்பு குறித்தது; ஆகுபெயர்; நகை - ஆகுபெயராய்ப் பல்(வரிசையைக்)லைக் குறித்தது. முகிழ் முலை - முகிழ்த்தல் - தோன்றுதல்; கோங்கரும்புகளை உவமித்தல் மரபாதலின் அதுபற்றி முகிழ் - என்றார். முலைமுகிழ்த்தல் ஈண்டுப் பாவையாரது பருவங் குறித்தது; பற்களைக் குறித்ததும் அப்பருவங் குறிக்குமென்பர் மருத்துவ நூலோர்.

முலையாருடன் - வளமையும் - உடையார் - என்று முடிக்க. உடையார்-தமதாக் கொள்ளும் உரிமையாளர்.

சிந்தையால் மகிழ்ந்தார் - சிந்தை-சிந்திக்கப்பெற்ற நிலை. அவ்வெண்ணத்தையே பின்னர்ப் பலமுறையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார். மொழிந்தமையே யன்றி எண்ணங்களே மகிழ்ச்சியை விளைவித்தன. ஒரோவழித் தோன்றி மறையும் மனநிலைகள் போலாது, நிலைத்த இம்மனநிலையின் தொடர்ச்சி குறித்தது. இதனால் இவை எண்ணிய பாங்கே யமைந்தனவன்றிப் பின்னர் நிகழ்ச்சியின் முற்றிப் பொருந்துமாறு கண்டு மகிழும் பேறுபெறவாரலர் என்று குறித்தமையும் காண்க. (சிந்தையால் - எண்ணிய அளவினால்.)

வண்மையும்—என்பதும் பாடம். 1054

2953. ஆற்று நாள்களி லணங்கனார் கன்னிமா டத்தின்
பாற்ற டம்பொழின் மருங்கினிற் பனிமலர் கொய்வான்
போற்று வார்குழற் சேடிய ருடன்புறம் போந்து
கோற்றொ டித்தளிர்க் கையினால் முகைமலர் கொய்ய, கOரு௫

2954. "அன்ப ரின்புறு மார்வத்தி னளித்தபாங் கல்லாற்
பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது புணரா"
தென்ப துட்கொண்ட பான்மையோ ரெயிற்றிளம் பணியாய்
முன்ப ணைந்தது போலவோர் முள்ளெயிற் றரவம், கOரு௬

2955. மேளவன் மாதவிப் பந்தரின் மறைந்துவந் தெய்திச்
செவ்வி நாண்முகை கவர்பொழு தினின்மலர்ச் செங்கை

நவ்வி வாள்விழி நறுநுதற் செறிநெறி கூந்தற்
கொவ்வை வாயவண் முகிழ்விரல் கவர்ந்தது குறித்து; ௧௦௫௭

2956. நாலு தந்தமு மேன்புறக் கவர்ந்துநஞ் சுகுத்து
மேலெ ழும்பணம் விரித்துநின் றாடிவே றடங்க
நீல வல்விடந் தொடர்ந்தெழ, நேரிழை மென்பூ
மாலை தீயிடைப் பட்டது போன்றுள மயங்கி, ௧௦௫௮

2957. தரையில் வீழ்தரச் சேடியர் வெருக்கொடு தாங்கி
வரைசெய் மாடத்தி னுட்கொடு புகுந்திட வணிகர்
உரையு முள்ளமு நிலையழிந் துறுதுயர் பெருகக்
கரையில் சுற்றமுந் தாமுமுன் கலங்கினர்; கலுழ்ந்தார். ௧௦௫௯

2953. (இ - ள்) ஆற்று...நாள்களில் - முன் கூறியவாறு சிவநேசர் செயலாற்றிவரும் நாட்களிலே; அணங்கனார்...மலர் கொய்வான் - தெய்வப் பெண் போன்ற பூம்பாவையார் கன்னிமாடத்தினில் பால் போன்ற தூயநீர் நிறைந்த தடத்தினருகில் பூச்சோலையின் பக்கத்தில் குளிர்ந்த பூக்கொய்யும் பொருட்டு; போற்று......புறம் போந்து - தம்மைப் போற்றும் நீண்ட கூந்தலையுடைய சேடிமார்களுடனே புறத்திற் போய்; கோற்றொடி...கொய்ய - திரண்ட வளையணிந்த தளிர் போன்ற கையினால் முகைக்கும் பருவத்து மலர்களைக் கொய்யவே, ௧௦௫௫

2954. (இ - ள்) அன்பர்...அல்லால் - அன்பராகிய சிவநேசர் இன்பம் பொருந்தும் விருப்பத்தினாலே அளித்த அளவுமட்டிலல்லாமல்; பொன்...என்பது - பொன் விளங்கும் சீரினையுடைய சீகாழிப் பிள்ளையாருக்கு இது புணர்வுறாது என்பதனை; உட்கொண்ட பான்மை - உட்கொண்டுள்ள ஊழானதுவே; ஓர்...போல - ஒரு நச்சுப் பற்களையுடைய இளம் பாம்பாகி முன்பு வந்ததுபோல; ஓர்...அரவம் - முள் போன்ற பற்களையுடையதோர் பாம்பு; ௧௦௫௬

2955. (இ - ள்) மௌவல்...எய்தி - மல்லிகை முல்லைக் கொடிகள் படர்ந்த பந்தரிலே மறைந்து வந்து சேர்ந்து; செவ்வி...பொழுதினில் - பருவத்துப் புதிய முகைகளை(ப் பூம்பாவையார்) கொய்யும் பொழுதில்; நவ்வி...வாயவள் - மான் போன்ற கூரிய கண்களையும், நறிய நுதலினையும், செறிவும் நெறிவுமுடைய கூந்தலினையும், கோவைக்கனி போன்ற வாயினையும் உடைய பூம்பாவையாரது; மலர்ச் செங்கை - மலர் போன்ற கையில்; முகிழ் விரல் கவர்ந்தது குறித்து - பூக்கொய்யக் கூட்டிக் கூப்பிய விரலினைக்குறித்துக் கடித்ததாகி; ௧௦௫௭

2956. (இ - ள்) நாலு...வேறு அடங்க - நச்சுப் பற்கள் நான்கும் எலும்பளவும் அழுந்தக் கடித்து நஞ்சினை உகுத்து மேலே எழும் படத்தினை விரித்துநின்று ஆடி வேறு இடத்தில் மறைந்து ஒடுங்கவே; நீல...தொடர்ந்து எழ - கரிய வெவ்விய விடம் அதனைத் தொடர்ந்து மேலே எழுந்ததனால்; மென்பூ...போன்று - மெல்லிதாகிய மலர்மாலையிடையில் தீப் பட்டதுபோல; நேரிழை - நேரிய இழைகளையணிந்த பூம்பாவையார்; உளம் மயங்கி - மனமயங்கி; ௧௦௫௮

2957. (இ - ள்) தரையில் வீழ்தர - நிலத்தில் வீழ; சேடியர்...புகுந்திட - தாதியர்கள் திடுக்கிட்டு அஞ்சித் தாங்கிச் சென்று அவருக்கென்று அமைவு செய்யப்பட்ட கன்னிமாடத்தினுள்ளே கொண்டு புகுந்திட; வணிகர்...கலுழ்ந்தார் - சிவ

நேசர் மொழியும் மனமும் நிலையழிந்து உறு துன்பம் மேலிட அளவற்ற சுற்றத்தாரும் தாமும் முன் கலங்கி அழுதனர். ௪0௫௩

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன. முன் மூன்றும் ஒருமுடிபாகவும் பின்னிரண்டும் வேறுமுடிபாகவும் உரைக்கினு மிழுக்கில்லை. பொருட் செயற் றொடர்ச்சியும் விரைவும்பற்றி இவ்வா றுரைக்கப்பட்டது.

2953. (வி - ரை) ஆற்று நாள்களில் - முன்கூறியபடி சிவநேசர் செயலாற்றி மகிழ்ந்திருந்த நாள்களிலே.

அணங்கனார் - பூம்பாவையார் ; அணங்கு - தெய்வப்பெண்.

கன்னிமாடம் - கன்னிகள் தோழியர்களுடன் இருப்பதற்காக அமைக்கப்படும் காவல்பெற்ற தனியிடங்கள் இவ்வாறு வழங்கப்படும்.

பாற்றடம் பொழில் மருங்கினில் - பாற்றடம் - பால்போன்ற தூய வெண்மை யான நீரினையுடைய தடம். மாடத்தின் - பால் என்று கூட்டிப், பால் - ஏழனுரு பாகக் கொண் டுரைப்பினுமமையும் ; இப்பொருளில் தடம் பொழில் - பெரிய சோலை என்க. பொழில் மருங்கு - பொழில் - இங்குப் பூச்சோலை குறித்தது.

மலர் கொய்வான் - கொய்யும்பொருட்டு ; வானீற்று வினையெச்சம் புறம் போந்து என்ற வினையெச்சத்துடன் முடிந்தது.

போற்று சேடியர் - என்க ; போற்றுதல் - பேணுதல் ; காத்தல்.

முகைமலர் - விரியும் பருவமுடையதாய் முகையாகிய மலர். "முகைக்கு மல ரின் வாசம்போல்" (1218) ; செவ்வி நாண்முகை - என மேற்கூறுதல் காண்க (2954).

அரவம் (2954), எய்தி - விரல் - குறித்துக் - கவர்ந்தது (வாகி) (2955)-கவர்ந்து-உகுத்து அடங்க - விடம் அடர்ந்தெழ - நேரிழை - மயங்கி (2956) - வீழ்தரச் - சேடியர் - தாங்கிப் - புகுந்திட - வணிகர் - நிலையழிந்து - கலங்கினர் - கலுழ்ந்தார் (2957) என்று இவ்வைந்து பாட்டுக்களையும் தொடர்ந்து முடிபு படுத்திக்கொள்க. 1055

2954. (வி - ரை) அன்பர்...என்பது - அன்பராகிய சிவநேசர் மகிழ்ந்த விருப் பினால் மகளாரைக் கொடுத்தனர் என்ற அளவில் அமைவதன்றிப் பிள்ளையார்பால் இவ்வடைவு சென்று பொருந்தாது என்ற உண்மையினை. என்பது - என்பதனை ; என்ற உண்மையினை.

உட்கொண்ட பான்மை - குறியாக்கொண்ட ஊழ் என்னும் நியதி. பான்மை - தெய்வம் - ஊழ் - நியதி என்பன ஒருபொருள் கொள்வன.

பான்மை...போல - அந்நியதியே ஓர் உருக்கொண்டு ஓர் இளம்பாம்பாக முன் வந்து சேர்ந்ததுபோல. போல - உருபு, வினைவினால் அதுவேயாம் தன்மைக் குறிப் புடன் நின்றது; தற்குறிப்பேற்ற அணியை விளக்குவது; "இளைப் பஞ்சினன் போல" (2090) ; "பாசப் பழிமுதல் பறிப்பார்போல்" (460) என்புழிப்போல் ஆங் குரைத்தவை பார்க்க. ஓர் - பணியாய் - என்று கூட்டுக ; எயிற்று - நச்சுத் தன்மை எயிற்றினிடைக் கொள்ளுதலால் அத்தன்மைபற்றிக் கூறினர் ; இளம்பணி-மாதவிப் பூம் பந்தரிடை முல்லை மெல்லரும்பு கொய்யும் மெல்லியலாரின் முகிழ் மெல்விரல் கவரும் தகுதியின் இளம்பணி என்றார். இஃதாசிரியரின் அகங்குழைந்த கருணைப் பெருக்குக் குறித்தது.

முள் எயிற்று அரவம் - முள் எயிறு முள்போன்று கூரியனவாகிய பற்கள் ; எயிறு - பல்.

அளித்த பாங்கல்லால் - இது - புகலி காவலர்க்குப் - புணராது - என்க. புணர்தல் - பொருந்துதல். பாங்கு - அளவு- திருநாட்டியத்தான்குடியில் கோட்புலி யார், வனப்பகை - சிங்கடி - என்ற தமது இரு மகளிரையும் திருவாரூர் நம்பிகளுக்கு அளித்து அவர்களை ஏற்க வேண்டுவதும், நம்பிகள் அவ்வளவே அவர்களைத் தமது மக்க ளெனக்கொண் டேற்பதும் ஆகிய வரலாறுகள் ஈண்டு வைத்துக் கருதத் தக்கன. இன்புறும் ஆர்வத்தின் அளித்த பாங்கல்லால் - அளித்தற்கு ஆர்வமிகுதியே காரண மன்றி வேறொரு தொடர்புமின்றென்ற குறிப்பும், இது புணராதேனும் பான்மை என்ற குறிப்பும் கருதுக. முதல் வருணத்தோர் ஏனை மூன்று வருணங்களினும் மணஞ் செய்தல் கூடும் என்ற அறநூற்புறனடை விதியும் இவ்வெண்ணங்கள் முகிழ்க்க இடந்தந்த தென்றலுமாம். 1056

2955. (வி - ரை) மௌவல் மாதவிப் பந்தர் - மௌவல் - மல்லிகை; மாதவி - முல்லை; மல்லிகையும் முல்லையும் இணைந்த மணமுடையவையாதலின் ஒரு சேரப் பந்தர்களில் ஏற்றிவைப்பது வழக்கு.

பந்தரின் மறைந்து வந்து எய்தி - அங்கு இருத்தற்கு வேறு பற்றுக்கோடும் இயையுமின்றி மறைந்துவந்து புகுந்து.

செவ்வி நாண்முகை கவர் பொழுதினில் - பூம்பாவையார் என்ற எழுவாய் முன் 2954-ல் நின்றும் வருவிக்க. செவ்வி - அலரும் பருவம்; நாண் முகை - புதிய அரும்பு. செவ்வித்தாகிய காள் என்க. கவர்தல் - பறித்தல்.

மலர்ச்செங்கை - முகிழ்விரல் - என்று கூட்டுக. கையின்கண் என்று ஏழனுருபு விரிக்க. முகையினைச் செங்கைவிரல் கவர்பொழுது அம் மலர்ச்செங்கை குறித்து அரவம் கவர்ந்தது என்ற கவிநலமும் காண்க. செங்கை விரல் என்பன அரவம் கவர்ந்த இடங்குறித்துக் காட்டியபடி. "வாளராவொன்று...அங்கையில் தீண்டிற் றன்றே" (1806) என்றது காண்க. குறித்து என்றதும் காண்க.

மௌவன் மாதவிப் பந்தரின் மறைந்துவந் தெய்தி - முகை கவர்பொழுது - விரல் குறித்துக் கவர்ந்தது - மணமலர்களுடைய செடிகொடிகளுள்ளும் கீழும் அவற் றின் மணங் கருதிப் பாம்புகள் வருவனவாதலின், அவற்றை மக்கள்வாழிடங்களின் மிக அருகில் வைக்கலாகாதென்றும், எச்சரிக்கையின்றி அவற்றினிடைச் சேரலாகா தென்றும் வழங்கும் வழக்கும் காண்க.

பொருந்தாது எனும் பான்மை ஓர் எயிற்றிளம் பணியாய் முன்பணைந்தது போலும் ஓர் முள் எயிற்றரவம் கவர்ந்தது - என முன்பாட்டுடன் கூட்டுக; இங்குத் திருவிளையாடற் புராணத்துட் பழியஞ்சிய படல வரலாற்று விளைவு நினைவுகூர்ந்து ஒப்பிட்டுக் கருதற்பாலது; "ஆற்றலே றுண்டகணை யருகொதுங்கும் பார்ப்பனியைக், காற்றுல்வீழ்த் தெவ்வாறு கவர்ந்தேமப் படியிந்தச், சாற்றுரு வாரத்திற் றும்பறுத்துப் புறநின்ற, வீற்றுவை வெருளவிடுத் திவனுயிர் கவர்கென்றான்" (ஷை 37).

மலர்ச் செங்கை - முன் கூறியவாறன்றி என்பதனையும் ஏனையவைபோல அடை யாக்கியுரைப்பினு மிழுக்காகாது.

நவ்வி...வாயவள் - ஈண்டு, விழி - நுதல் - கூந்தல் - வாய் என்ற இவற்றினைத் சிறப்பித்து எடுத்துக் கூறியது, "கொம்பனாள் தகைமை, இந்த வையகத் தின்மை" (2948) என்று முன்கூறிய நலங்க ளெல்லாவற்றின் திரட்சியினையும் ஒருங்கு காட்டி அத்தகையாரைப்பற்றிச் சிவநேசர் கொள்ளநின்ற துயரப்பெருக்கின் அளவினைக் காட்டு தற்கு; இதனை "முகதரிசனம்" என்பது உலக வழக்கு. அன்றியும், இதுவரை கூறிவந்தது பாவையாரின் சகலநிலையாகிய மாயைப் படைப்பின் நலங்கள்; இனிச்,

டையவர் கருணை காண்வரப் பிள்ளையாரது அருளால் வரும் சுத்தநிலைப் படைப் பாகிய புனித அணிகலங்களை மேற்கூறுவார் (2991—3007); அதுகுறிக்க ஈண்டு இங்கு முடித்துக் காட்டியவாறுமாம். "தகைமை இந்த வையகத் தின்மை" (2948) என்றதும், பின்னர் "ஞாலமும் விசும்பு மெல்லாம், அற்புத மெய்தித் தோன்ற வழ கினுக் கணியாய் நின்றாள்" (3007) என்பதும் குறிக்க.

நவ்வி - பெண்மான்; நவ்வியின் விழிக்கு வந்தது; ஆகுபெயர். வாள்-கூர்மை. ஒளி என்றலுமாம். நறுநுதல் - நறுமணமுடைமை உத்தம இலக்கணப் பெண்களின் அங்க இயல் என்பர். செறிநெறி கூந்தல் - அவ்வாறே கூந்தல் செறிந்து நெறிப் புடைத்தா யிருத்தலும் நல்லிலக்கணம் என்ப. நெறி - நெறிப்பு; அலைபோலச் சிறு வளைவுகளுடைமை. கோவ்வை வாய் - கோவ்வை - கோவை என்பது எதுகை நோக்கிக் கோவ்வை என வந்தது. கோவ்வை - ஈண்டுக் கனியைக் குறித்தது; ஆகு பெயர்.

முகிழ் விரல் - முகிழ்த்தது - பூப்பறிக்கும்படி கூட்டிக் குவித்தது.

கவர்ந்தது - கடித்தது; அரவம் தீண்டிற்று; கவர்ந்தது என்பது மரபு வழக்கு.

குறித்தே—என்பதும் பாடம். 1057

2956. (வி - ரை) தந்தம் நாலும் - என்க. நாலு தந்தமாவன நச்சுப் பையைத் தலையிற் கொண்டுள்ள குழாய்போல உட்டுளையுடைய நான்கு கூரியபற்கள். "கடுவோ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று" (முருகு); நாலு தந்தமாவன: காளி-காளாத் திரி-யமன்-யமதூதன் என்பன.

என்பு உறக் கவர்ந்து - தசைநார்கள் - நரம்புகள் முதலிய மேலுள்ள தாதுக்கள் எல்லாந் தாண்டி உள்ளே எலும்பு வரையும் பொருந்த ஆழமாகக் கடித்து; விரல் எலும்புக்கு அடுத்து சுத்தரத்தக் குழாய்களிருத்தலின் விடம் அவற்றுள் உகுக்கப்பட் டமையால் இரத்த வேகத்துடன் சடுதியில் இரத்தாசயத் தாமரைக்குட் பாய்ந்து உடல் முழுதும் விடம் பரவும்படி போதிய ஆழத்திற் கடித்தது.

நஞ்சு உகுத்து - பற்களின் குழாய்போன்று உள்ள உட்டுளையின்மூலம் அவற்றி னடியில் உள்ள நச்சுப் பையினின்றும் நஞ்சினைக் கக்கி - இரத்தக் குழாயினுள் வீழ்த் தச் - செலுத்தி. To Inject என்பது நவீனர் கூற்று.

மேலெழும் பணம் விரித்துநின் றாடி - இவை பாம்புகளின் சினக்குறி என்ப. பணம் - பாம்பின் படம். விரித்து - எனைக் காலமெல்லாம் சுருங்கியிருத்தலும் சிறிது சினம் மூளுமாயின் உடனே தலைநிமிர்ந்து படம் விரித்தாடுவதுமாகு மியல்பினையும் உடையது பாம்பு; ஆதலின் விரித்தாடி என்றார். படம் விரித்து ஆடுதல் பாம்புகளி னியல்பு.

வேறு அடங்க - வேறிடத்தில் மறைந்துகொள்ள; ஒடுங்க.

நீல வல்விடம் - நீலம் - கருமை. தொடர்ந்து எழ - எலும்பு உறக் கவர்ந்தமை யால் உடனே சுத்த ரத்தத்துடன் கலந்து அதனுடன் தொடர்ந்து மேற்பரவ.

மென்பூ...போல - தொழிலும் பண்பும்பற்றி வந்த உவமம்; மெல்லிய பூமாலை யினைத் தீயினிற் புகவிட்டால் உடனே கருகி வாடுதல்போலத் துவண்டு.

நேரிழை உளம் மயங்கி - என்க. மயங்குதல் - உணர்வறுதலினால் ஒன்றுந் தோற்றாது கலங்கிச் சோர்தல்.

1058

2957. (வி - ரை) வெருக்கொடு - சடுதியில் நிகழ்ந்த பேரச்சத்தால் திடுகிட்டு. தாங்கி - நிலத்தில் வீழாமல் கைகொடு தாங்கி.

**வரைசெய் மாடம்** - இவர்க ளிருத்தற்கென்று வரைவு செய்துவைத்த கன்னி மாடம். வரை செய் - வரை - மலை என்று கொண்டு மலை போன்ற என்பாருமுண்டு.

**வணிகர்** - சிவநேசர்; **கரை** - அளவு-எல்லை. **கரையில் சுற்றமும்** - "சுற்ற நீடிய கிளையெலாம்" (2952); முன் சிவநேசர் கூறிய(2952)வாற்றாற் சிதைவுறாது வாழ்வினும் தாழ்வினும் வரைவுபடாது சுற்றிச் சூழ்வோர் என்பது குறிப்பு.

**நிலையழிந்து** - நிலை தடுமாறி உரை குழறி உள்ளம் மயங்கி என்க. **கலுழ்தல்** - அழுதல். 1059

2958. விடந்தோ லைத்திடும் விஞ்சையிற் பெரியார் மேலோர்
அடர்ந்த தீவிட மகற்றுதற் கணைந்துளா ரனேகர்
திடங்கொண் மந்திரந் தியானபா வகநிலை முட்டி
தொடர்ந்த செய்வினைத் தனித்தனித் தொழிலராய்ச் சூழ்வார்,

2959. மருந்து மெண்ணில மாறில செய்யவும் வலிந்து
பொருந்து வல்விட மேழுவே கமுமுறை பொங்கிப்
பெருந்த டங்கண்மென் கொடியனாள் தலைமிசைப் பிறங்கித்
திருந்து செய்வினை யாவையுங் கடந்துதீர்ந் திலதால். ௧௦௬௧

2960. ஆவி தங்குபல் குறிகளு மடைவில வாக
மேவு காருட விஞ்சைவித் தக"ரிது விதி"யென்
றோவும் வேலையி லுறுபெருஞ் சுற்றமு மலறிப்
பாவை மேல்விழுந் தழுதனர் படரொலிக் கடல்போல். ௧௦௬௨

2958. (இ - ள்) விடம்...அனேகர் - விடத்தைத் தீர்த்திடும் வித்தையிற் கைவந்த பெரியோர்களாகிய மேலவர்கள் அனேகர்கள் பற்றிய கொடிய விடத்தினைப் போக்குதற்காகச் சேர்ந்தார்களாகி; திடங்கொள்...சூழ்வார் - வலிமையுடைய மந்திரமும் தியானமும் பாவனையும் முட்டி நிலையுமாய்த் தொடர்ந்த தீர்வுச் செயல்களைத் தனித்தனி செய்வாராய்ச் சூழ்ந்து, ௧௦௬௦

2959. (இ - ள்) மருந்தும்...செய்யவும் - (முன் கூறிய நான்கனோடும்) அளவில்லாத இணையில்லாத மருந்துகளையும் செய்யவும்; வலிந்து...பொங்கி - வலிமையாய்ப் பற்றிக்கொண்டு கொடிய விடம் ஏழு வேகமும் முறையாக மேலேறி; பெருந்தடங்கண்...பிறங்கி - பெரிய விசாலமாகிய கண்களையுடைய மெல்லிய கொடிபோன்ற பூம்பாவையாரது தலையினை மேற்கொண்டு விளங்க; திருந்து...தீர்ந்திலதால் - திருந்தும்படி செய்த தீர்வினைகள் எல்லாவற்றையும் கடந்து தீர்ந்திலதாகவே; ௧௦௬௧

2960. (இ - ள்) ஆவி...இலவாக - உயிர் உடம்பினுள் தங்குதற்குரிய பல குறிகளும் பொருந்துதல் இல்லையாக; மேவு...வேலையில் - வந்து பொருந்திய காருட வித்தை வல்லவர்களும் "இது விதி" என்று கைவிட்டொழியும் வேலையில்; உறுபெரும்...கடல்போல் - உற்ற பல சுற்றத்தார்களும் கடல்போல் அலறிப் பாவை மேல் விழுந்தழுதனர். ௧௦௬௨

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

2958. (வி - ரை) விடந் தொலைத்திடும் விஞ்சை - விடத்தைத் தீர்க்கும் காருட வித்தை (2961); கருட மந்திரங் கைவருதலால் பாம்பின் விடத்தைத் தீர்க்கும் ஒரு வித்தை. பெரியர் - அனுபவம் வல்லோர்; மேலோர் - அவருள் தலைவர்.

திடங்கோள் மந்திரம் - தியானம் - பாவனை - நிலைமுட்டி - திடமாவது - உறுதியாய்ப் பயனளிக்கும் தன்மை. மந்திரம் - கருட மந்திரம்; தியானம் - மந்திரத்தினிற் குறிக்கப்பட்ட - மந்திரத்துக்கு அதிதெய்வமாகிய - மூர்த்தியை அழுந்தியறிதல்; "உருவெண" (தேவா); பாவனை - மாந்திரிகன் அம்மந்திரமூர்த்தியாக தன் ஆன்மாவைப் பாவித்தல்; முட்டிநிலை - விடவேகந் தலைக்கொண்டபோது அதனைத் தணித்தற் பொருட்டு மாந்திரிகன் தனது கைவிரல்களிற் பெருவிரலை விடுத்து ஏனை நான்கு விரல்களையும் முட்டியாக மடித்துக்கொண்டு உச்சிமுதல் கடிவா யிறுதியாக விடந் தீண்டப்பட்டோருடலைத் தடவுதல். முட்டி நிலை-என்க. இவை நான்கும் தொடர்ந்து ஒன்றாய் வருதலால் தொடர்ந்த செய்வினை என்றார்.

சூழ்வார் - செய்யவும் (2959) என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டிமுடிக்க.

தனித்தனித் தொழிலராய் - அவ்வவரும் தாந்தாம் கற்ற எல்லை அளவும் செய்வார்களாகி.

பாவகம் - பாவனை. உயிர் தன்னைச் சிவமாகப் பாவிக்கச், சிவமாகும் நிலை சிவோகம்பாவனை எனப்படும்; அதற்கு எடுத்துக்காட்டாகத் தேற்றமாய்க் கூறப்படுவது இக் கருடபாவனையாம்; கருடோகம்பாவனை என்பர். கருட பாவனையாவது: "ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆதியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. ஈண்டு ஆதி-அதி-இடத்தில்; அவற்றுள் உலகத்துக் காணப்படுங் கருடன் ஆதிபௌதிக கருடன். அதற்கு அதிதெய்வமாக மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல்வைத்துக் கணிக்கப்படும் மந்திரம் ஆதிதைவிக கருடன்; அம் மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய சிவசத்தி ஆதியான்மிக கருடன் எனப்படும்; அவற்றுள், ஈண்டுக் "காருட விஞ்சை" எனறதிற் கருடன் என்றது கருடனுக் கதிதெய்வமாய் மாந்திரிகனுளத்திற் காணபபடும் மந்திர ரூபமாகிய அதிதைவிக கருடனை. அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்றுவந்த பயிற்சி விசேடத்தான் அம்மந்திர ரூபமே தானாக அநந்நிய பாவனை செய்து தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல். அங்ஙனம் நின்று அம்மந்திரக் கண்கொண்டு பார்ப்பவே அஃது அவ் விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின், அப்பாவனை ஈண்டைக்கு உவமையாயிற்று. இதனானே, கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை அசத்தியமென்பார் மதம் போலியென்பதூஉந் தெற்றென உணர்ந்துகொள்க. புள்ளு, விலங்கு, மரம் முதலிய சராசரங்களுக்கெல்லாம் அதிதெய்வ மந்திரம் உளவென்பதூஉம், படிகம்போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம்மந்திர சொரூபியாவா னென்பதூஉஞ், சர்வஞ் ஞானோத்தர முதலியவற்றுட் காண்க" (சிவஞான மாபாடியம் - 9-சூ. 2-அதி).

சூழ்வார் - செய்யவும் (2959) - தீர்ந்திலதா(க) - வித்தகர் (2960) - இது விதி என்று ஓவும் வேலையில் - சுற்றமும் - விழுந்து - அழுதனர் - என இம்மூன்று பாட்டுக்களை முடித்துக்கொள்க. தீர்ந்திலதால் (2959) என்றதனை முற்றாக வைத்து முடித்துக் கொண்டு மேல்வரும் பாட்டை வேறு முடிபாக்கினு மிழுக்கில்லை.

செழுவினை - தீர் தொழில். மேல் "திருந்து செய்வினை" (2961) என்பார்.

தனித்தனித் தொழிலாரய் - அவ்வவர் தத்தம் திறம் முழுதும் செலுத்திக் காண்பாராய்.

சூழ்வார் - சூழ்தல் - ஆழ எண்ணுதல். உடலைச் சுற்றி என்பதுமாம். 1060

2959. (வி - ரை) மருந்தும் - மந்திரம் பாவனைபற்றிய செய்வினைகளையன்றி மருந்தும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

மாறில - பயன்றருதலில் தவறுமையின் இணையற்ற. திடங்கொண் மந்திரம் போலவே மருந்தும் மாறில என்றதாம். வலிந்து - கடந்து ; வலிமை பெற்று.

பொருந்து - வந்து பொருந்திய ; "பான்மை" (2954) போலப் பொருந்திய என்பதும் குறிப்பு.

ஏழ வேகமும் - உம்மை முற்றும்மை. "தலைக்கொண்ட வேழாம் வேகம்" (1809) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

முறை பொங்கி - தலைமிசைப் பிறங்கி - முறை - ஒன்றன்மேல் ஒன்றாக ; தலை மிசை - விடந் தலைக்கேறி மூளையைப் பற்றிப் பரவினால் தீர்வின்றென்பர்.

திருந்து செய்வினை - திருந்தும்படி செய்யும் தீர்தொழில் - மாற்று ; திருத்தமாகச் செய்யும் என்றலுமாம்.

கடந்து - மேற்சென்று தன் வலிமையே மிக்கு.

தீர்ந்திலது - தீராதாகி ; முற்றெச்சம். தீர்ந்திலதாய்க் குறிகளு மடைவிலவாக என வரும்பாட்டுடன் றொடர்ந்து முடிக்க. முற்றாகக்கொள்ளினு மிழுக்கில்லை. 1061

2960. (வி - ரை) ஆவி தங்கு பல் குறிகள் - இவை உயிர்ப்பு - வெப்பம் - அசைவு - முதலாயின ; அடைவு - இருத்தல் - தங்குதல் ; ஆக - ஆதலின்.

இது விதி - இது விதியின் விளைவு ; ஊழான் வந்தது - மனித முயற்சியாற் பய னின்று - எனக் கைவிடும் நிலை.

வித்தகர் - கைவந்த புலவர் ; முன் "பெரியராம் மேலோர்" (2959) என்றமை காண்க. Experts என்பர் நவீனர்.

ஓவும் வேலை - ஓவுதல் - நீங்குதல் - ஒழிதல் ; உயிர் போய்விட்டது என்று கைவிட்ட நேரம் ; "ஓவு நாளுணர் வழியு நாளுயிர் போகு நாளுயர் பாடைமேல்" (தேவா-நம்பி) ; "போவார்க ளிதுநம்மாற் போக்கரிதா மெனப்புகன்று" (1319) ; "குண்டர்களுங் கைவிட்டார்" (1320).

பாவைமேல் விழுந்தழுதனர் - இறந்தா ருடலின்மேல் விழுந்தழுதல் நெருங்கிய அன்புடையாரின் துயர மிகுதியின் செயலாகிய மெய்ப்பாடு. "மைந்தன் மீமிசை வீழ்ந்து மயங்கினாள்" (கந்தபு . பானு. வதை - 194).

படர் ஒலிக்கடல்போல் - பரப்பும், பேரொலியுடைமையும் உவமத்தின் பொதுத் தன்மைகள் ; வினையும் மெய்யும்பற்றி வந்த உவமம்.

விழுந்தழுதது—என்பதும் பாடம். 1062

2961. சிந்தை வெந்துய ருறுசிவ நேசருந் தெளிந்து
வந்த செய்வினை யின்மையில் "வையகத் துள்ளோர்
இந்த வெவ்விட மொழிப்பவர்க் கீகுவன் கண்ட
அந்த மின்னிதிக் குவை"யெனப் பறையறை வித்தார். ௧௦௬௩

(இ - ள்) சிந்தை...தெளிந்து - மனத்தினில் கொடிய துன்பம் பொருந்தப்பெற்ற சிவநேசரும் பின்னர்த் தெளிவுகொண்டு ; வந்த...இன்மையில் - செய்யகின்ற தீர்

தொழில்கள் வேறு எவையுமில்லாமையால்; "வையகத்துள்ளோர்...குவை" என - " உலகத்தில் உள்ளோர்களில் யாவராயினும் இந்தக் கொடிய விடத்தினை ஒழிப்பா ராயின் அவருக்கு இங்குக் கண்ட (காணப்பட்ட) எல்லையில்லாத செல்வத் திரள் எல் லாம் கொடுப்பேன்" என்று; பறை அறைவித்தார் - எங்கும் யாவரும் அறியும்படி பறைசாற்றி அறிவித்தனர்.

(வி - ரை) வெந்துயர் உறு - " முன்னர் உரையு முள்ளமு நிலையழிந் தறு துயர் பெருக" (2957) என்றது பாவையாரை விடந்தீண்டி யலமந்தமை தெரிந்த உடன் நிகழ்ந்த நிலை. இங்குக் கூறியது விஞ்சை வித்தகரும் "இது விதி" என்று கைவிட் டொழிந்து ஆவியுந் தீர்ந்ததெனக் கண்டபோது நிகழ்ந்த நிலை.

தெளிந்து - துயரினுற் கவரப்பட்டு ஒன்றுந் தோன்றாதிருந்த நிலையினின்று தெளிந்து; மேற்செய்யலாவதனை ஆய்ந்து துணியும் நிலை பெற்று.

வந்த செய்வினை - கைவந்த தீர்தொழில்; வந்த - மேற்கொள்ளத் தக்கதாய் வரப்பெற்ற; செய்வினை - 2958 - 2959).

இன்மையில் - பறையறைவித்தார் - தாம் தெரிந்து அழைத்து வந்தோரும் தாமாக அறிந்து வந்தோரும் ஆகி முன் வந்த விஞ்சை வித்தகரொழிய, இனி யாரேனு முளராயின் வருக என்று ஊரவருக்கு அறிவித்தபடி.

*தருவன் அந்தமில் நிதிக்குவை - " இவள் மணம்பெறுவான், அந்த மில்லென தருநிதிக் குரியன்" என்றறைந்தார் (2947) எனவும், " பிறங்கிய நிதியும் முற்று மென்னையும் கொடுத்தனன்" என மொழிந்தார் (2951) எனவும், முன்னர்க் கூறிய சிவநேசர், அவ்வாறு தாம் பிள்ளையாருக்காக்கிய நிதிக்குவை இங்கு "வெவ்விட மொழிப் பவர்க் கீகுவன்" என்றது பொருந்துமா றென்னையோ? எனின், பொருந்தும்; என்னை? தாம் அன்பினால் அளித்த பாங்கினால் பிள்ளையாரது உடைமையாயின பூம்பாவையாரைக் காத்து அவர்பால் சேமமுறச் சேர்ப்பிக்கும் பொருட்டாதலின் அமையுமென்க.

*அவனென்னுடைய—என்பதும் பாடம். 1063

2962. முரசி யம்பிய மூன்றுநா ளகவையின் முற்ற
அரசர் பாங்குளோ ருட்பட வவனிமே லுள்ள
கரையில் கல்வியோர் யாவரு மணைந்துதங் காட்சிப்
புரையில் செய்கையிற் றீர்ந்திடா தொழிந்திடப் போனார். ௧௦௬௪

(இ - ள்) முரசு...அகவையின் - முன் கூறியவாறு பறைசாற்றிய பின் மூன்று நாள் எல்லையளவில்; முற்ற...அணைந்து - அரச சபையிலுள்ளோர்கள் உட்பட உலகத் தில் உள்ள எல்லையில்லாத கல்வியுடையோர் யாவர்களும் முற்ற வந்தணைந்து; தம் காட்சி...போனார் - தாந்தாம் உறுதியாய்க் கைகண்ட குற்றமற்ற தீர்தொழில்கள் எவற் றாலும் தீராதொழிந்தமையாற் போயினர்.

(வி - ரை) மூன்றுநா ளகவையில் - பறை சாற்றிய எல்லையின் அளவாகிய மூன்றுநாள் அளவின்கண். அகவை - எழனுருபு. " ஆடித்திங்க ளகவையின்" (சிலப் - உரைபெறுகட் - 3). மூன்றுநாளளவும் உடலின் தாதுக்கள் சிதைவுபடாது நிறுத்தவல்லதொரு அமைதி அக்காலத்தும் உள்ளதுபோலும்.

முற்ற - யாவரும் - என்று கூட்டுக; ஒருவருமொழியாமே எல்லாரும்.

**அரசர் பாங்குளோர்** - அரச சமுகப் புலவர். கலைத்துறைகள் எவற்றினும் வல்லோர்களை அரசர் கூவித் தேர்ந்து தக்கோரைத் தமது சமுகத்தில் வைத்து ஆதரித்து நாட்டுக்கு நலஞ் செய்வித்தல் முன்னைநாள் வழக்கு ; இறையனாரகப்பொருள் வரலாறு, சங்க வரலாறு, திருவாதவூரடிகள் வரலாறு, திருத்தொண்டர் புராண வரலாறு முதலியவையும், முன்னைநாள் தமிழரசர் காலத்து நாட்டு நடப்புச் சரிதங்களும், கல்வெட்டுக்கள் முதலியவையும் காண்க. இங்குக் கூறிய அரசர் கச்சிமாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பல்லவர் மரபில் வந்த சிம்மவிட்டுணுவும் அவன் மகன் மகேந்திர வர்மனும் ஆவார்கள் என்பது கருதப்படும்.

**அவனிமேலுள்ள கலையில் கல்வியோர்** - அரசர் பாங்கு பெறாத உலகில் விளங்கிய பெருங் கலைவாணரும் பலருண்டாதலின் அவர்களும்.

**காட்சிப் புரையில் செய்கை**-காட்சியாவது ஈண்டுக் கைகண்ட பயனைத்தருவது என்ற பொருளில் வந்தது. காட்சிச் - செய்கை - பண்புத் தொகை. புரையில் செய்கை - குறைபாடில்லாத தீர்தொழில். காட்சியும் செய்கையும் என்று உம்மைத் தொகையாக்கி உரைப்பினுமமையும் ; இப்பொருளில் காட்சியாவது பார்வையால் விடத்தைத் தீர்க்கும் கலையின் முறை ; " பார்த்த பார்வையா விரும்புண்ட நீரெனப் பருகும் தீர்த்தன் " (திருவிளை. புரா) என்று கூறப்படும் தீக்கைமுறை இதற்கு மொக்கும்.

முரசியம்பலும்—என்பதும் பாடம். 1064

2963. சீரின் மன்னிய சிவநேசர் கண்டுளம் மயங்கிக்
காரின் மல்கிய சோலைசூழ் கழுமலத் தலைவர்
சாரு மவ்வள வும்முட றழலிடை யடக்கிச்
சேர வென்பொடு சாம்பல்சே மிப்பது தெளிவார், கOசுரு

2964. "உடைய பிள்ளையார்க் கேனவிவ ளையுரைத் ததனால்
அடைவு துன்புறு வதற்கிலை யாநமக்'' கென்றே
யிடரொ ழிந்தபின், னடக்கிய வென்பொடு சாம்பல்
புடைபெ ருத்தகும் பத்தினிற் புகப்பெய்து வைப்பார், கOசுசு

2965. கன்னி மாடத்தின் முன்புபோற் காப்புற வமைத்துப்
பொன்னு முத்துமே லணிகலன் பூந்துகில் சூழ்ந்து
பன்னு தூவியின் பஞ்சணை விரைப்பள்ளி யதன்மேன்
மன்னு பொன்னரி மாலைக ளணிந்துவைத் தனரால். கOசுஎ

2966. மாலை சாந்தொடு மஞ்சன நாடொறும் வழாமைப்
பாலி னேர்தரு போனகம் பகல்விளக் கினைய
சாலு நன்மையிற் றருவன நாடொறுஞ் சமைத்தே
ஏலு மாசெய யாவரும் வியப்பெய்து நாளில், கOசுஅ

2967. சண்பை மன்னவர் திருவொற்றி யூர்நகர் சார்ந்து
பண்பு பெற்றநற் றொண்டர்க ளுடன்பணிந் திருந்த
நண்பு மிக்கநல் வார்த்தையந் நற்பதி யுள்ளோர்
வண்பு கழ்ப்பெரு வணிகர்க்கு வந்துரை செய்தார். கOசுகூ

2963. (இ - ள்) சீரின்...மயங்கி - சிறப்பின் நிலை பெற்ற சிவநேசர் அதனைக் கண்டு மயங்கி; காரின்...அவ்வளவும் - மேகங்கள் தவழ்தற்கிடமாகிய சோலைகள் சூழும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் சாரும் அந்நாள் அளவுவரையிலும்; உடல்... ...தெளிவார் - பாவையாரின் உடம்பினைத் தீயினிலிட்டு அடங்கச்செய்து அதனிற் சேரும் எலும்போடு சாம்பலைச் சேமித்து வைப்பது என்று தெளிவாராகி, ௧௦௬௫

2964. (இ - ள்) உடைய...என்றே - ஆளுடைய பிள்ளையார்க்கு இவளை அளித்தேன் என்று சொல்லிவிட்டபடியால் இந்நிகழ்ச்சிபற்றி நமக்குத் துன்பமுறுவதற்கில்லையாம் என்று துணிந்தே; இடர் ஒழிந்தபின் - துன்ப நீங்கியபின்; அடக்கிய... ...வைப்பார் - தீயினில் எரித்த எலும்பினையும் சாம்பலையும் பக்க இடமகன்ற கும்பத்தினில் புக இட்டு வைப்பாராய், ௧௦௬௬

2965. (இ - ள்) கன்னிமாடத்தில்...அமைத்து - கன்னிமாடத்திலே முன் பாவை உயிருடனிருக்குநாளிற் போலவே காவல் பொருந்த (அக்குடத்தை) அமைய வைத்து; பொன்னும்...சூழ்ந்து - பொன்னும் முத்தும் மேல் அணிகலன்களும் அழகிய மெல்லிய துகிலும் சுற்றிப் புனைந்து; பன்னு...அணிந்து வைத்தனரால் - எடுத்துச் சொல்லப்பட்ட அன்னதின் தூவியினை அடைத்த பஞ்சணையாகிய வாசனை பெய்த பள்ளியின் வைத்து அதன்மேல் நிலைபெற்ற பொன்னரியாகிய கழுத்தணி வகைகளையும் அணிபெறக் கோலஞ்செய்து வைத்தாராகி, ௧௦௬௭

2966. (இ - ள்) மாலை...சமைத்தே - மாலையும் சந்தனத்துடனே திருமஞ்சனமும் நாள்தோறும் விடாமல் பாற்சோறும் பகல்விளக்கும் என்றிவையும் இவைபோல்வனவற்றையும் பொருந்திய நன்மையினாலே தகுவனவாக நாள்கள்தோறும் அமைத்தே; ஏலுமா...நாளில் - பொருந்தும்வகை காட்டிச் செய்ய எல்லாரும் அதுகண்டு வியப்படையும் நாட்களிலே; ௧௦௬௮

2967. (இ - ள்) சண்பை மன்னவர்...நல்வார்த்தை - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் திருவொற்றியூர் நகரிலே வந்து சார்ந்து பண்புபெற்ற நல்ல தொண்டர்களோடும் இறைவரைப் பணிந்து அங்கே எழுந்தருளியிருந்தார் என்ற நண்பு சிறந்த நல்வார்த்தையினை; அந்நற்பதி யுள்ளோர்...உரை செய்தார் - அந்த நற்பதியில் உள்ள அடியார்கள் வண்மையும் புகழும் உடைய பெருவணிகர் தோன்றலாராகிய சிவநேசரிடம் வந்து சொன்னார்கள். ௧௦௬௯

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கின்றன.

2963. (வி - ரை) உளம் மயங்கி - தமது மகளார் விடந்தீண்டி யிறந்துபட்டமை பற்றி யன்றி, ஈண்டு மயங்கியமை பிள்ளையாருக்குக் கொடுக்கப்பட்டமையால் அவர் வருமளவும் அவரது உடைமையாகத் தம்மிடம் வைக்கப்பட்ட பொருளைப் பாதுகாக்க வியலாமற்போயினமைபற்றி, இனி இன்னது செய்வதென்று தோன்றாது மயங்கினர் என்க. அஃது அன்னதாதல் மேல் தெளிவார் என்றதனாற் காணப்படும்.

காரின் மல்கிய - மேகங்களால் நிறைந்த; மேகமண்டலமளவும் உயர்ந்த என்றலுமாம். இந்திரன் சீகாழியில் வைத்துயர்ந்த நந்தனவனத்தின் குறிப்புமாம்.

கழுமலம் - சீகாழியின் பன்னிரண்டாவது திருப்பெயர்.

கழுமலத் தலைவர் சாரும் அவ்வளவும் - சேமிப்பது - அவரது உடைமைப் பொருளாய்த் தமபால் வைததிருந்த பாவையாரின் உடலை அவ்வண்ணமே ஒப்புவித்தற் கியலாமையின் எந்த அளவில் அதனைச் சேமிக்க இயலுமோ அவ்வளவில் சேமித்து வைத்திருந்து அவர்பால் அவர் வரும்போது ஒப்புவித்தல் வேண்டும் என்பது சிவநேசர் கொண்டகருத்து. அது தகுதியாமோ? எனின், அன்புமீதூர்ந்த நிலையிற் செய்யப்படுவன

வெல்லாம் தகுதியே என்க. "ஆறுத வானந்தத் தடியார் செய்த வநாசாரம் பொறுத் தருளி யவர்மே லென்றுஞ், சீறுத பெருமானை" (தாண் - மாற்பேறு - 5); பின்னர்ச் சரித விளைவின்பொருட்டு இங்கினைவினை இறைவர் உடனிருந்து சிவநேச ருள்ளத்தில் நினைப்பித்தனர் என்றலுமாம். "நானேது மறியாமே யென்னுள் வந்து நல்லனவும் தீயனவுங் காட்டா நின்றாய்" (தேவா) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க. "பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ?" என்றபடி இதன்மேல் இவற்றை ஆராய்ச்சி செய்தல் அமையாதாம். "கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா" (தேவா-பாசுரம்) என்பது மறைமொழி ஆணை. கழுமலம் - பாவையாரைச் சிவஞ்சாரச் செய்வது குறிப்பு.

**உடல் தழலிடை அடக்கி - என்பொடு - சாம்பல் - சேமிப்பது** - ஐம்பூதச் சேர்க்கையாலாகிய உடல் தழலிடை எரிக்கப்பட்டபோது, அவை வெவ்வேறு பிரிந்து அவ்வப்பூத மூலங்களுள் சேர, எஞ்சிய எலும்புஞ் சாம்பலுமாகிய உருவத்தினுள் அடங்கி நிற்கும் என்பது குறிக்க உடல் - அடக்கி என்றார். "முடிவிலொரு பிடி சாம்பராய் வெந்து" (பட்டினத்தார்). உடலைத் தைலம் - ஏனை மருத்து நீர் - முதலியவற்றுள் இட்டுச் சேமிக்கும் முறைகளும் உண்டு; அவை நவீனர்களாலும் கையாளப் படுவன. தசரதனது உடம்பைத் தைலம் ஆட்டிச் சேமித்தமையும், தேள் - பாம்பு - முதலிய சில பிராணிகளின் உடலைத் திராவகத்துள் இட்டுச் சேமிக்கும் முறைகளும் காண்க. உடலினை உள்ளும் புறமும் மருந்துப் பண்டங்களாற் பொதிந்து நீண்ட காலம் சேமிப்பது முற்காலம் இஜிப்தியர்கள் கையாண்டதொரு முறை (Egyptian Mummies). ஆனால் அவையெல்லாம் சிலகாலம் நிற்பனவும், உடல் உருவ நிற்பினும் விடத்தன்மை கொண்டு கேடுறவனவும் பிறவுமா யொழிதலன்றித் தூய்மைக்குப் பொருந்துவனவல்ல; தூலஉடல் முடிவில் எலும்பும் சாம்பலுமாய் நிற்பதும், பல்லாற்றாலும் எளிதாய் அவ்வாறு சேமித்தற்குரியதாவதும், தொன்றுதொட்டு நம் நாட்டின் முந்தையோர் கண்டு கையாண்டுவந்த முறைகளாம்; அன்றியும் ஊழிக் காலத்தில் தீயினாற் சங்கரிக்கப்பட்ட உலகம் சாம்பராகி ஒழிந்து ஒடுங்கி மீளவும் ஆண்டுநின்றும் தோன்றுகின்றது என்றது சைவ சித்தாந்த உண்மையாதலின் அதனைத் தமதுள்ளத்துள் வைத்துச் சிவநேசர் இவ்வாறு தெளிந்தனர் என்ற குறிப்பும் அடக்கிச் - சாம்பல் - சேமிப்பது தெளிவார் - எனறமையாற் பெறப்படுதல் காண்க. சிவநேசர் என்ற பெயரால் இதுகுக் கூறியமையும் இக்குறிப்பு. சேர - முழுமையும்கூட; உடலின் எல்லாப் பகுதிகளின் எஞ்சியவை எல்லாம் ஒன்றுசேர.

**சாரும் அவ்வளவும்** - தலைவர் அங்குச் சாருநாள் எப்போது கூடுமென்பது அறிய வாராமையின் எந்நாளாயினும் அந்நாள் வரையும் என்பதாம். ஆதலின் எதுநாளாயினும் அதுவரை எல்லையின்றிச் சேமமாயுள்ளது சாம்பர் உருவமே என்பதும் தெளிந்தனர் என்க. மருத்துநூலவரும் குறித்த சிலகால எல்லை அளவே சத்திகொள்ளும் நெய், இலேகியம், சூரணம், எண்ணெய் முதலியவை போலாது, நீடித்து இருக்கவேண்டுவன வற்றைப் பசுமம் = நீறு = சுண்ணம் ஆக்கிவைத்தல் கருதுக.

**தழலிடை அடக்கி** - உடலை மண் - நீர் - முதலியவற்றுள் அடக்காமல் நெருப்பினுள் இட்டு அதனுள் ஒடுங்கும்படி அடக்கி. அப்பெரிய உடலுருவமே இச்சிறிய சாம்பரிடை நிற்கச் செய்தல் தீயின் செயலாதலின் **தழலிடை அடக்கி** என்றார். **அடக்கம் செய்தல்** என்பது இறந்த உடலைச் சேமித்தற்கு வரும் மரபு வழக்கு.

தெளிவார் - **புகப்பெய்து** - வைப்பார் - வைத்தனர் (ஆகி) - செய - என மேல் வரும் பாட்டுக்களுடன் முடிக்க.

2964. (வி - ரை) உடைய பிள்ளையார்க்கு.. என்றே - சிவநேசர் கொண்ட (2964) மயக்கம் நீங்கியது இன்ன வகை என்று கூறியபடி. பிள்ளையார்க்கேன உரைத்ததனால் - இவளைப் பிள்ளையாருக்குக் கொடுத்தேன் என்று சொல்லிவிட்டமையால் இவள் அவரது உடைமைப் பொருளாயினமையாலே; மணச் சடங்கில் பெற்றோர் கன்னிகையைக் கொடுத்தோம் என்று கூறும் சடங்கும், அதனால் அக்கன்னிகை மணமகனுக்கு உரிய உடைமைப் பொருளாய்விடுகின்ற நிலையும், அதன் பின்னர் அவளது இன்பத் துன்ப முதலிய நிகழ்ச்சிகள் யாவும் மணமகனுடையவையே யாகின்ற நிலையும் ஈண்டு வைத்துக் கருதத் தக்கன; உரைத்ததனால் துன்புறுதல் நமக்கில்லை என்று காரணக் குறிப்புப்படக் கூறியதும் காண்க. பெற்றோரது இசைவே மணமாம் என்ற துணிபு திலகவதியம்மையார் வரலாற்றுட் காண்க.

அடைவு - சேர்ந்த செயல்; அடைந்த நிகழ்ச்சி; அடைவின் பொருட்டு. அடைவு - முறைமை என்று கொண்டு துன்புறுதற்குரிய முறைமை நமக்கில்லை என்றுரைத்தலுமாம்.

நமக்கு - தமது மனைவியாரையும் சுற்றத்தாரையும் உளப்படுத்திக் கூறிய பன்மை. என்றே - என்று துணிந்தே; ஏகாரம் தேற்றம்.

உரைத்ததனால்...இலையாம் நமக்கு - என்றது தம்மைப் பிள்ளையாரின் வேறாய் எண்ணிய நிலையன்று. "இன்றோ ரிடையூ றெனக்குண்டோ?"; "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" (திருவா) என்ற கருத்தினை இங்கு வைத்துக் காண்க. அவரதுடைமையினை இனி ஏற்றபெற்றி காவல் செய்து அவர்பால் ஒப்புவிப்பேன்; அதுவே எனது கடமை என்றபடி.

இடர் ஒழிந்தபின் - இங்கு இடர் என்றது இதுவரை பாவையாரைத் தமது மகளாராகக் கொண்ட நிலையில் தாம் அடைந்த "உறுதுயர்" (2958); "வெந்துயர்" (2962) முதலியவை.

அடக்கிய - தழலிடை அடக்கியதனாற் பெற்ற; அடக்குதல் - தீயினில் எரித்தலால் சேமித்தல்; இதன் கருத்து மேல் உரைக்கப்பட்டது.

புடை பெருத்த கும்பம் - வாய் சிறுத்துப் பக்கம் பெருத்த மட்குடம்.

புகப்பெய்து - எலும்பினையும் சாம்பலையும் குடத்தினுள் புகும்படி மென்மையாய் வைத்து. பெய்து - வைத்த மென்மை குறித்தது.

வைத்தார்—என்பதும் பாடம். 1066

2965. (வி - ரை) இப்பாட்டினும் மேல்வரும் பாட்டினும் பாவையாரின் எலும்பையும் சாம்பலையும் பெய்துவைத்த குடத்தினை அப் பாவையாராகவே கொண்டு அணிந்து வைத்துச் சிவநேசர் புரிந்துவந்த உபசாரங்கள் கூறப்படுவன. என்னை? பாவையாரின் உடல் தீயிடை யடக்கிப்பெற்ற அந்நிலை அவரது சுருங்கிய உடலேயாம். உயிரோ தீயினாலும் வேறெதனாலும் அழிவுபெறாத அறிவுப் பொருள். அஃது அங்கு உள்ளதாகப் பாவிக்கப்பட வருவதொன்றென்பது உண்மை. "நன்மையாந் தன்மை, அந்த வென்பொடு தொடர்ச்சியாம்" (2985) எனப் பிள்ளையார் பின்னர்க் காட்ட யாவராலும் அறியப்படுவதாம். ஆதலின் அவ்வாறு உடலையும் உயிரையும் ஒன்றுபடுத்திச் சிவநேசர் பாவித்தனர் என்க; அன்றியும் பிள்ளையாரது உடைமையாக எண்ணினாராதலின் அவர் பொருளைப் போற்றும் முறையாலும் உபசரித்து வந்தனர் என்பதுமாம்.

முன்புபோல் - முன்பு பூம்பாவையார் உயிருடன் இருந்தகாளிற் போலவே. காவல் செய்தமைத்தற்குக் காரணம் கூறியபடி.

**பொன்னும்...சூழ்ந்து** - இஃது அக்குடத்தினை அப் பாவையாரெனவே அலங்கரித்தல்; **சூழ்தல்** - சுற்றியணிதல் ; எண்ணிச் செய்தல் என்றலுமாம்.

**பன்னு தூவியின் பஞ்சணை** - **தூவி** - அன்னத்தின் மெல்லிய சிறு இறகு ; தூவி போன்ற நுண்ணிய பஞ்சடைத்த அணை; தூவியாலாகிய பஞ்சணை என்றலுமாம் **பன்னுதல்** - குற்றங் களைதல் என்ற குறிப்புமாம். **விரைப் பள்ளி** - வாசனைப் பண்டங்களால் மணமூட்டிய பள்ளி.

**பள்ளி அதன்மேல்** - குடத்தை வைத்த ஆதனம் கூறியபடி.

**பொன்னரி மாலைகள்** - கழுத்தணி வகைகள். இவை அவ்வாதனத்தின் மேலே கட்டிலின் மேற்கட்டி, விதானங்கள் முதலியவை அமைந்த அணிவகை. 1067

2966. (வி - ரை) **மாலை சாந்தோடு மஞ்சனம்** - இவை நாளும் புதிதாகச் செய்யப்படும் உபசாரம். **மஞ்சனம்** - சிவபூசையிற் பாவனாபிடேகம் என்ற முறையின் படி அமைவதுபோலும். **சாலு நன்மையிற் றுதவன** - என்ற குறிப்புமிது.

**பாலினேர்தரு போனகம்** - பாலினாற் சமைக்கப்பட்ட சோறு ; பாற்சோறு. "பாற்சோ றுக்கி" (தேவா) ; பாயசம் என்பது வழக்கு. **நேர்தரு** - அடப்பட்ட.

**பகல் விளக்கு** - இரவேயன்றிப் பகலிலும் இடும் விளக்கு. இது உபசார வகைகளுள் ஒன்று. விளக்கு வேண்டப்படாதபடி பகலவன் ஒளிவீசும் பகலிலும் எரிக்கப் படுதலால் உபசாரமெனப்படும். இது தெய்வ முன்னிலையிலும் பெரியோர் முன்பும் இயற்றப்படும் வழக்குண்மை காண்க.

**சாலு நன்மையில் தருவன** - என்றதனால் புகை (தூபம்) முதலாயினவுமாம்.

**சமைத்தே** - அமைவித்தே ; **செய** - உபசரிக்க ; **சமைத்தல்** இப்பண்டங்களை வழாது படுத்தலும், **செய்தல்** அவற்றினால் உபசரித்தலும் குறித்தன.

**நாடோறும் வழாமை** என்றது இவற்றை அவ்வந் நாட்கள்தோறும் புதிதின் அமைத்தலையும், **நாடோறும் - செய** என்றது நாடோறும் உபசரித்தலையும் குறித்தமையால் கூறியது கூறலன்மையுணர்க.

**யாவரும் வியப்பெய்த** - இதன் உள்ளுறையறியாத உலகர் வியந்து பாராட்டிய மட்டில் அமைய என்க.

**பல்விளக்கு**—என்பதும் பாடம். 1068

2967. (வி - ரை) **சண்பை மன்னவர்** - பிள்ளையார். **சண்பை** - சீகாழியின் ஒன்பதாவது திருப்பெயர்.

**பண்பு பெற்ற** - பண்பாவது பிள்ளையாருடனிருத்தற்குரிய நற்பண்பு - சிவத் தன்மை ; நல்லூழ் என்றலுமாம்.

**நண்புமிக்க நல்வார்த்தை** - **நண்பு** - சிவநேசர்பாற் கொண்ட நண்பு ; சிவ நேசர்மேற் கொண்ட உரிமை என்றலுமாம் ; **நல்வார்த்தை** - சுபசெய்தி. "பிள்ளை யார் திருவார்த்தை" (1442) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

**நற்பதி** - திருவொற்றியூர் ; இறைவர் தேற்றமாய்ப் படம்பக்கம் இடம்கொண்டு எழுந்தருளியுள்ள சிறப்பு நன்மை எனப்பட்டது.

**பதியுள்ளோர் வந்து வணிகர்க்கு உரைசெய்தார்** - சிவநேசரது திறங்களை அடியார்கள் நன்கறிந்தாராதலின் அங்குநின்றும் திருமயிலையில் வந்து அவர்க்கு அறிவித்தனர்.

**பெருவணிகர்** - வணிகர் மரபின் உட்பிரிவாகிய குடி ; முன்னரும் "பெருவணிகர்" (2931 = 2940) என்றமை காண்க.

பணிந்திருந்த நல்வார்த்தை - "ஒற்றிநகர் காதலித்தங் கினிதுறைந்தார்" (2930) என்று முன் கூறிவிடுத்த செய்தி. இதனைச் சரித வரலாற்றுத் தொடர்ச்சிபெற எடுத்துக்காட்டிய கவிநயமும் கண்டுகொள்க. 1069

2968. சொன்ன வர்க்கெலாந் தூசொடு காசுபொன் னளித்தே
யின்ன தன்மைய ரெனவொணு மகிழ்சிறந் தெய்தச்
சென்னி வாழ்மதி யார்திரு வொற்றியூ ரளவுந்
துன்னு நீணடைக் காவணந் துகில்விதா னித்து, ௧0௭0

2969. மகர தோரணம் வண்குலைக் கமுகொடு கதலி
நிகரில் பல்கொடித் தாமங்க ளணிபெற நிரைத்து
நகர நீண்மறு கியாவையு நலம்புனை யணியாற்
புகரில் பொன்னுல கிழிந்ததா மெனப்பொலி வித்தார்; ௧0௭௧

2970. இன்ன வாறணி செய்துபல் குறைவறுப் பேவி
"முன்ன மொற்றியூர் நகரிடை முத்தமிழ் விரகர்
பொன்ன டித்தலந் தலைமிசைப் புனைவ"னென் றெழுவார்
அந்ந கர்ப்பெருந் தொண்டரு முடன்செல வணைந்தார். ௧0௭௨

2968. (இ - ள்) சொன்னவர்க்கெலாம்...அளித்தே - முன்கூறிய நல்வார்த்தையினை வந்து சொன்னவர்களுக்கெல்லாம் சிவநேசர் தூசும் காசும் பொன்னும் அன்போடு கொடுத்தே; இன்ன...எய்த - இன்ன தன்மைதான் பெற்றார் என்று சொல்லமுடியாத மகிழ்ச்சி மேலோங்க; சென்னி...விதானித்து - தலையினில் வாழ்வுபெறும் மதியினைத் தாங்கிய சிவபெருமான் எழுந்தருளிய திருவொற்றியூர் அளவும் நெருங்கும் நீண்ட நடைக்காவணமிட்டுத் துகிலால் விதானமும் கட்டி, ௧0௭0

2969. (இ - ள்) மகர தோரணம்...நிரைத்து - மகர தோரணங்களும், வளப்பமிக்க குலைக் கமுகுகளும், வாழைகளும், ஒப்பற்ற பல கொடிகளும் மாலைகளும் என்றிவற்றை அழகு பொருந்த வரிசையாக அமைத்து; நகர நீண்மறுகு...பொலிவித்தார் - நகர முழுமையும் உள்ள நீண்ட தெருவுகள் எல்லாவற்றையும் நலம்பொருந்தச் செய்த அலங்காரங்களினால் குற்றமில்லாத தேவலோகமே கீழிறங்கியதாம் என்று சொல்லும்படி அழகு செய்தனராய், ௧0௭௧

2970. (இ - ள்) இன்னவாறு...ஏவி - இவ்வாறெல்லாம் அலங்காரங்களைச் செய்து பலவகையாலும் குறைகளில்லாமற் செய்யும் ஏவலாட்களை ஏவி; முன்னம்...எழுவார் - முன்னர்ச் சென்று திருவொற்றியூர் நகரிலே முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரது பொன்னார்ந்த திருவடிகளை வணங்கித் தலைமேற் சூட்டிக்கொள்வேன் என்று எழுவாராகி; அந்நகர்...அணைந்தார் - அத் திருமயிலாபுரியில் வாழும் பெருந்தொண்டர்களும் தம்முடன் செல்லத் திருவொற்றியூரினை நோக்கிச் சென்றனர். ௧0௭௨

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2968. (வி - ரை) சொன்னவர்க்கெலாம்...அளித்தே - முன்னர்ச் "சொன்னவர்க்கெலா மிருநிதி தூசுட னளித்து" (2951) என்றுரைத்தவை பார்க்க.

இன்ன......மகிழ் - இன்னபடி யென்று அளவுபடாத தன்மையிற் பெருகிய மகிழ்ச்சி. "இன்னபரி சானுனென் றறிந்திலன் வேந்தனும்" (132).

திருவொற்றியூரளவும் - திருமயிலாபுரியினின்றும் திருவொற்றியூர் வரையும்; இது பத்து நாழிகையளவு கொண்ட தூரம்; இவரது அன்பு நீண்டுசெல்லும் தன்மை குறித்தது.

நடைக்காவணம் - துகில் விதானித்து - நடைப்பந்தலமைத்து அதனில் மேற் றுகில் விதானமும் கட்டி; விதானம் - மேற்கட்டி; இஃது அணிவகை யாவதன்றிப் பந்தரின் கீழ் வெயில் - காற்று - பனி முதலியவை தாக்காது நிழலாற்றும் பயனு முடையது; பத்து நாழிகையளவும் நடைக் காவணமும் துகில் விதானமும் செய்த லும், அவ்வளவும் தோரணம் கமுகு கதலி நாட்டி அணிசெய்தலும் சிவநேசர் பிள்ளை யார்பாற் கொண்ட அழுந்திய அன்பின் றிறத்தினை விளக்குவன. இந்நாள் மக்கள் செய்யும் உபசார வகைகளுடன் இதனை ஒப்பிட்டுப் பார்க்க உண்மை விளங்கும். துணிக்கும் சோற்றுக்கும் உயிர்ப்பிச்சை வாங்கும் இந்நாளில் இதன் ஏற்றம் நன்கறியக் கிடக்கும்.

வாழ் மதிச் சென்னியார் - என்க; வாழ் - வந்தடைந்து வாழ்வுபெற்ற.

மகிழ்ச்சி வந்தேய்த—என்பதும் பாடம். 1070

2969. (வி - ரை) மகர தோரணம் - அணியில் மகரம் முதலியவையும் பூங் கொடிகளும் தீட்டித் தொங்கல்களையும் வைத்த தோரண வகை. வண்குலைக் கமுகு - எண்ணற்றனவாய்க் காய்களைக் கொண்ட குலைகளையுடைய; வண்குலை என்பதனைக் கதலியுடனும் கூட்டுக. ஒடு உருபும் இப்பொருட்டு.

தாமங்கள் - தோரணங்களினிடையே தொங்கவைப்பனவும் வேறு அங்கங்கும் கட்டுவனவும்.

கோடித் தாமங்கள் - கொடிகளும் மாலைகளும்; கொடிகள் படர்ந்தனபோல அணிந்த மாலைகள் என்றலுமாம்.

புகரில் பொன்னுலகு இழிந்ததாம் என - புகர் - குற்றம்; பொன்னுலகு தேவருலகம். இழிந்ததாம் - வந்திறங்கியதாம்; இழிவுபட்டதாம் என்றதும் குறிப்பு.

நீண்மறுகு - நீண்ட பெரிய தெருவுகள்; தெருவுகள் வளைதலின்றி யகன்று நீண்டு இருத்தல் நகர அமைப்பின் சிறப்பு என்பர். "மலிவிழா வீதி" என்று இச்சிறப்பினைப் பிள்ளையார் அருளுதல் காண்க. இவ்வாறு சிவநேசர் நடைக்காவணம் அமைத்து அணி செய்த நிலை திருமயிலாபுரியினின்றும் திருவொற்றியூர் வரை தொடர்ந்து செல்லும் கடற்கரையோரப் பெருவழியேபோலும் என்பது கருதப்படும். "விடுங்கலங்க ணெடுங் கடலு ணின்று தோன்றும்" (தாண்டகம்) என்றும், "ஒல்லைதான் றிரையேறி யோத மீளும்" என்றும், "வடிவுடைய மங்கையுந் தாமுமெல்லாம் வருவாரை யெதிர்கண்டோ மயிலாப்புள்ளே, செடிபடு வெண்டலையொன் றேந்திவந்து திரு வொற்றி யூர்புக்கார்" என்றும், "ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலை" (பிள். தேவா) என்றும், "துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றும் சோதித் தொன் மயிலை" (நம்பி) என்றும், "அருங்கலம் பலவும் பொருகடற் செலப்போக்கி" (2932) என்றும் வருவனவற்றாலும் பிறவாற்றாலும் திருமயிலையும் திருவொற்றியூரும் அந் நாளில் கலங்கள் போக்கும் துறைமுகங்களாக விளங்கியமையும், இவையிரண்டும் கட லோரம் அலை வீதிவழியில் மக்கள் செல்லும் தொடர்புடையவை என்றும் கருத இட முண்டு. திருமயிலைக் கோயிலும் அந்நாளிற் கடற்கரையின் நின்ற தென்பது சரிதம்.

செய்வித்தார் - செய்வித்தாராகி - முற்றெச்சம். 1071

2970. (வி - ரை) **பல் துறைவறுப்பு ஏவி** - **துறைவறுப்பு** - குறைவுகள் நேராதபடி முன்னரே நாடி வேண்டுவனவற்றைச் செய்தல்; **துறைவு - அறுத்தல்** - குறைகளைவையும் இல்லையாகச் செய்தல்; "பாண்டிமா தேவியார் மெய்க்குலச் சிறையார் குறைவறுத்துப் போற்றிச் செல்ல" (2788); "அத்தனிமுதற் றொண்டர் தாமே யாவையுங் குறைவறுத்திட" (2421).

**முன்னம்** - பிள்ளையார் இங்கெழுந்தருளு முன்னரே; செய்தி கேட்டதும் முதல் வேலையாக.

**அடித்தலம் தலைமிசைப் புனைவன்** - திருஅடிகளில் முடி பொருந்த வணங்குவேன்; அவ்வாற்றால் அடிகளை முடிமிசைச் சூடிக்கொள்வேன்; **புனைதல்** - அணியாகக் கொள்ளுதல்.

**எழுவார்** - எழுவாராகி; **எழுதல்** - மேற்செல்லுதல்.

**பெருந் தொண்டர்** - அன்பின் மிகுந்த திருத்தொண்டர்கள். 1072

2971. ஆய வேலையி லருமறைப் புகலியர் பிரானும்
மேய வொற்றியூர் பணிபவர் வியனக ரகன்று
காயல் சூழ்கரைக் கடன்மயி லாபுரி நோக்கித்
தூய தொண்டர்தங் குழாத்தொடு மெதிர்வந்து தோன்ற, ௧௦௭௩

2972. மாறில் வண்பெரு வணிகருந் தொண்டரு மலர்ந்த
நீறு சேர்தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே
"ஆறு சூடினார் திருமக னாரணைந் தா"ரென்
றீறி லாததோர் மகிழ்ச்சியி னால்விழுந் திறைஞ்ச, ௧௦௭௪

2973. காழி நாடருங் கதிர்மணிச் சிவிகைநின் றிழிந்து
சூழி ரும்பெருந் தொண்டர்முன் றொழுதெழுந் தருளி
வாழி மாதவர் வணிகர்செய் திறஞ்சொலக் கேட்டே
ஆழி சூழ்மயி லாபுரித் திருநக ரணைந்தார். ௧௦௭௫

2971. (இ - ள்) **ஆய வேலையில்** - அவ்வாறாகிய வேளையில்; **அருமறை... ...அகன்று** - அரிய மறைகளின் தலைவராகிய பிள்ளையாரும் பொருந்தி யிருந்த திருவொற்றியூரினைப் பணிபவராய் அப் பெருநகரினை நீங்கி; **காயல்...தோன்ற** - உப்பளங்கள் சூழ்ந்த கரைக்கடலின் றுறையினையுடைய திருமயிலாபுரியை நோக்கித் தூய்மையுள்ள திருத்தொண்டர்களின் திருக் கூட்டத்தோடும் எதிரிலே வந்து தோன்ற, ௧௦௭௩

2972. (இ - ள்) **மாறில்...தொண்டரும்** - ஒப்பற்ற வண்மையுடைய பெருவணிகராகிய சிவநேசரும் அவருடன் வந்த பெருந் தொண்டர்களும்; **மலர்ந்த... ...கண்டே** - ஒளி விளங்கிய திருநீறு புனைந்த தவத்தையுடைய அடியார்களின் திருக் கூட்டத்தினை நெடுந்தூரத்திற் கண்டே; **ஆறு...என்று** - கங்கையைச் சூடிய சிவபெருமானது திருமகனாராகிய பிள்ளையார் வந்தணைந்தனர் என்றே கொண்ட; **ஈறிலாததோர்...இறைஞ்ச** - எல்லையில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சியினாலே நிலத்தில் விழுந்து வணங்க, ௧௦௭௪

2973. (இ - ள்) **காழி நாடரும்...இழிந்து** சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் ஒளி பொருந்திய முத்துச் சிவிகையினின்றும் இறங்கி; **சூழ்...எழுந்தருளி** - சூழ்ந்த

எண்ணிறைந்த பெருக் தொண்டர்களின் முன்னே தொழுது எழுந்தருளி ; வாழி... ...கேட்டே - வாழ்வுடைய மாதவர்களாகிய அடியார்கள் சிவநேசரது அடிமைத் திறத் தினைச் சொல்லக் கேட்டே ; ஆழிசூழ்...அணைந்தார் - கடற்கரை சூழ்ந்த திருமயிலைத் திருநகரினை அணைந்தருளினர். கOஎரு

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2971. (வி - ரை) ஆய வேலை - சிவநேசர் தொண்டர்களுடனே திருவொற்றி யூர் சென்று பிள்ளையாரைப் பணிவதற்கு எழுந்து அணைந்த வேலை.

அருமறைப் - பிரான் - மறைவல்ல பிரான் ; "வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்" (1445) ; மறைப் புகலி என்று கொண்டு மறை வளர்க்கும் இடமாகிய சீகாழி என்றலுமாம்.

ஒற்றியூர் பணிபவர் - ஊரினைப் புறத்தே போந்து விடைகொள்ளும்முகத்தாற் பணிபவராகி ; புறத்துப் போந்து பதியினை வணங்கி விடைகொள்ளும் முறைபற்றித் திருவாரூர் - திருக்காளத்தி முதலிய பதிகளிற் பிள்ளையார் விடைபெற்ற வரலாறுகள் காண்க (2416 = 2926).

வியனகர் - அந்தப் பெரிய நகராகிய திருவொற்றியூரினை ; சுட்டு விரிக்க.

காயல் - உப்பளம். கடற்கரையாதலின் உப்பு அளங்களின் நிறைவு காணப் படும். உப்பு, வாணிகத்துக்குரிய பண்டமாகிக் கலங்கள் நிறையும் துறையிற் காணப்படு வதும் இயல்பு. "மன்றல் கமழும் பூம்புன்னை மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின், முன்றி றேறுஞ் சிறுமடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காடு" என முன் கூறியதை இங்கு நினைவுகூர்க. கடற்கரையுள்ளோர் அக் கடல்படு பொருள்களுலொன்றாகிய உப்பினை விலைப்பண்டமாக்கிப் பண்டமாற்றாக வாணிபஞ் செய்தல்பற்றி முன் ஆசிரியர் "ஆய பேரளத் தளவர்க ளளப்பன வுப்பு" (1111) என இத் தொண்டை நாட்டு நெய்தல்வளங் கூறியதும் கருதுக ; காயல் - கடற்கழி என்றலுமாம்.

தூய தொண்டர் - சிவத்தொடர்பின லுள்ளும்புறம்பும் தூய்மையுடைய அடியவர் கள் ; "மாசி லாத மணிதிகழ் மேனிமேற் பூசு நீறுபோ லுள்ளும் புனிதர்கள்" (141); இத் திருவெண்ணீற்றின் விரிந்த சோதியினையே நெடுந்தூரத்தில் சிவநேசரும் உடன் வந்த தொண்டர்களும் கண்டனர் என மேற்பாட்டிற் கூறுவது காண்க.

எதிர் வந்து தோன்ற - இவ்வாறு எதிர்ப்பட்ட இடம் திருமயிலை நகரின் வடக் குப் புறத்திலே அணிமையில் உள்ளதாமென்பது கருதப்படும்.

ஏய தொண்டர்—என்பதும் பாடம். 1073

2972. (வி - ரை) பெருவணிகர் - குடிப்பெயர். முன் உரைத்தவை பார்க்க.

மலர்ந்த - ஒளி வீசிய ; "வெண்ணீற்றின் விரிந்த சோதி மாதிரந் தூய்மை செய்ய" (2757) ; "இரண்டு நிலவின் கடல்கள்" (1498).

மாறு - ஒப்பு - மாறிலாத வண்மையாவது ஒப்பற்ற வள்ளன்மை ; கைம்மாறு செய்ய இயலாத வண்மை என்றலுமாம் ; "செய்யாமற் செய்த உதவி" (குறள்).

தவக் குழாத்தினை நீளிடைக் கண்டே - இவ்வாறே குலச்சிறையார் ஓசைகேட்டுப் பணிந்த காட்சியினை இங்கு நினைவுகூர்க (2553) ; நீளிடை - நீண்ட தூரத்தே ; வழிமேல் விழிவைத்துச் சென்றணைகின்றார்க ளாதலின் நீளிடைக் காணவல்லவ ராயினர்.

ஆறு சூடினர் திருமகனர் அணைந்தார் என்று - இறைவரது திருமகனர்தாமே என்று தேற்றேகாரம் விரிக்க. திருமகனர் - பாலூட்டி மகன்மைகொண் டளித்தருளிய

வகையால் மகனாராயினவர். " யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தா, ராவ தனு லாளுடைய பிள்ளையாராய் " (1967). இவ்வாறன்றி மகனார் - முருகப் பெருமான் என்றுரைகொள்வா ருரைகள் பொருந்தாமை முன் பலவிடத்தும் காட்டப் பட்டது.

இறைஞ்ச - திருமகனா ரணைந்தார் என்று கொண்டு உரியவாறு வழிபாடு செய்யும் பொருட்டுக் கண்ட இடத்தே நிலமுற வீழ்ந்து வணங்கினார் என்பது. இறைவர் - குரு - பெரியோர் இவர்களைக் காட்சிப்படக் கண்ட தூரத்தேயும் வீழ்ந்து வணங்குதல் வேண்டுமென்பது விதி. இவர்கள் இங்குப் பிள்ளையாரைக் காணாவிடினும் அவருடன் வரும் திருத்தொண்டர் கூட்டத்தினைக் கண்டாராதலின் அவருள்ளே அவருமிருப்ப தைக் கருதலளவையாற் கண்டு வணங்கினர் என்க.

அணைந்தார் - இறந்தகாலம் விரைவுப்பொருள் குறித்து நின்றது. 1074

2973. (வி - ரை) காழிநாடர் - பிள்ளையார். மணிச் சிவிகை - மணி - மணி களுட் சிறந்த முத்தினைக் குறித்தது; இதுபற்றி முன் உரைத்தவற்றை நினைவுகூர்க. கதிர்மணி - இயல்பாக நீற்றினொளியினை வீசுகின்ற. " வெண்ணீற் றொளிபோற்றி " (21.5).

சூழ் இரும் பெருந்தொண்டர் - சூழ் - இறைஞ்சி எழுந்து வந்து சூழ்ந்த; இரும் - அளவில்லாத. பெருந் தொண்டர் - பெருமை - தொண்டினீர்மையின் பெருமை குறித்தது.

தொழுது எழுந்தருளி - தொழுதுகொண்டு அதன்பின் எழுந்தருளி - நடந்தருளி. இதனால் நகரணிமை கருதப்படும்.

வணிகர் செய்திறம் வாழி மாதவர் சொலக் கேட்டே - என்க; வாழி - அசை; திறம் - முன்னின்ற சிவநேசரது அடிமைத் திறத்தினையும் முன் நிகழ்ந்த பூம்பாவையா ரது வரலாறுகளையும்; இவற்றை அடியவர்கள் சொல்லியது அவர்களது கருணைத் திறத்தினை விளக்குவதாம். என்னை ? சிவநேசரைப் பிள்ளையார் திருமுன்பு அறிமுகப் படுத்தும் வகையால் அவரது உள்ளக்கிடையினை நிறைவேற்றியருளுதல் வேண்டும் என்று குறிப்பால் விண்ணப்பித்தபடியாம் என்க. அவ்வாறே அதனைப் பிள்ளையார் திருவுள்ளத் தமைத்து, அவர் செயல் வாய்ப்பப் பெருங்கருணை நோக்கால் மகிழ்ந் தருளியமை (2975) மேலுரைக்கப்படுதல் காண்க. இவ்வாறு அடியார்கள் பிள்ளையார் திருமுன்பு அடைந்தாரை வழிப்படுத்தி நலஞ்செய்தல் முன் திருமறைக்காட்டின் நிகழ்ச் சியாலும் (2513), பிறவாற்றானுமறிக; ஆண்டுரைத்தவையும் பார்க்க.

செய்திறம் - பாவையார்பாற் செய்தனவும் செய்வனவுமாகியவை.

வணிகர் தந்திறம்—என்பதும் பாடம். 1075

2974. அத்தி றத்துமுன் நிகழ்ந்தது திருவுள்ளத் தமைத்துச்
சித்த மின்புறு சிவநேசர் தஞ்செயல் வாய்ப்பப்
பொய்த்த வச்சமண் சாக்கியர் புறத்துறை யழிய
வைத்த வப்பெருங் கருணைநோக் கான்மகிழ்ந் தருளி, ௧௦எ௬

2975. கங்கை வார்சடை யார்கபா லீச்சரத் தணைந்து
துங்க நீள்சுடர்க் கோபுரந் தொழுதுபுக் கருளி
மங்கை பங்கர்தங் கோயிலை வலங்கொண்டு வணங்கிச்
செங்கை சென்னிமேற் குவிந்திடத் திருமுன்பு சேர்ந்தார்; ௧௦எஎ

2976. தேவ் தேவனைத், திருக்கபா லீச்சரத் தமுதைப்,
பாவை பாகனைப், பரிவுறு பண்பினாற் பரவி,
மேவு காதலின் விரும்பிய விரைவினால் விழுந்து
நாவின் வாய்மையாற் போற்றினார் ஞானசம் பந்தர். கO௭அ

2974. (இ - ள்) அத்திறத்து...அமைத்து - வணிகரது அத்திறத்தினில் முன்னே நிகழ்ந்த நிகழ்ச்சியினைத் தமது திருவுள்ளத்தே (பிள்ளையார்) அமைத்துக்கொண்டருளி; சித்தம்...வாய்ப்ப - மனத்தில் இன்புறும் திருத்தொண்டராகிய சிவநேசரது செயல் வாய்த்திட; பொய்த்த வச்சமண்...அழிய - பொய்யாகிய தவத்தை மேல்கொண்டுழலும் சமணர் சாக்கியர்களுடைய புறத்துறைகள் அழிய; வைத்த...மகிழ்ந்தருளி - திருவுளங்கொண்ட அந்தப் பெரிய திருஅருள் நோக்கத்தினால் மகிழ்ந்தருளி, கO௭௬

2975. (இ - ள்) கங்கை...அணைந்து - கங்கையைத் தரித்த நீண்ட சடையினையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கபாலீச்சரமென்னும் திருக்கோயிலினை அணைந்து; தங்க...புக்கருளி - பெரிய நீண்ட ஒளிபொருந்திய திருக்கோபுரத்தைத் தொழுது உள்ளே புகுந்தருளி; மங்கை...வணங்கி - அம்மையைப் பங்கில் வைத்த இறைவரது திருக்கோயிலினை வலம் வந்து வணங்கி; செங்கை...சேர்ந்தார் - சிவந்த திருக்கைகள் தலையின் மேலேறிக் குவிய இறைவரது திருமுன்பு சேர்ந்தனராகி; கO௭௭

2976. (இ - ள்) தேவ தேவனை - தேவதேவராயுள்ளவரை; திருக்கபாலீச்சரத்து அமுதை - திருக்கபாலீச்சரத்தில் எழுந்தருளிய அமுதம்போல்பவரை; பாவை பாகனை - அம்மையொருபாகரை; பரிவுறு...பரவி - அன்புபொருந்திய பண்பினாலே துதித்து; மேவு...விழுந்து - பொருந்திய காதலினாலே விரும்பிய விரைவினாலே நிலமுற விழுந்து பணிந்து; நாவின்...ஞானசம்பந்தர் - திருநாவிற் பொருந்திய உண்மைத் திருவாக்கினாலே திருஞானசம்பந்தர் போற்றியருளினார். கO௭அ

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கின்றன; முன்னிரண்டு பாட்டுக்களை மட்டும் ஒருமுடிபுபடுத்தி உரைப்பினு மிழுக்காகாது; பொருட்டொடர்பும் செயற்றொடர்ச்சியும் நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது.

2974. (வி - ரை) அத்திறத்து முன் நிகழ்ந்தது - முன் பாட்டிற் கூறியபடி அடியவர்கள் சொல்லிய "வணிகர் செய்திறம்" (2973).

திருவுள்ளத்து அமைத்து - தமது திருவுள்ளத்துட்கிடையாகக் கொண்டு; மனங்கொண்டு.

சித்தம் இன்புறு சிவநேசர் தம் செயல் வாய்ப்ப-இன்புறும் - "அடைவு துன்புறுவதற் கில்லையா நமக்கென்றே, யிடரொழிந்த பின்" (2964) என்றபடி மகளார் போயினமைபற்றி இடரொழிந்தமையே யன்றிப் பிள்ளையாருக்கு ஆம்பரிசு எண்ணி மனத்தினுள் இன்பமும் கொண்டு விளங்கிய; செயல் வாய்த்தலாவது அவர் பாவையாரது உயிர் அங்கு இருப்பதாகவே பாவித்துச் செய்த செயல் உண்மையாகியே நிகழ. **செயல் வாய்த்தல்** - செயல் நிகழ்தல்; பாவையார் உயிர் பெற்றெழுந்து வருதல் என்பது.

போய்......அழிய - நடுநாடு - சோழநாடு - பாண்டிநாடுகளில் அந்நாளில் எங்கும் பரவி இன்னல் விளைத்தமைபோலவே தொண்டை நாட்டிலும் அந்நாளில் இவ்வகையார்கள் பரவி நின்றனர் என்பதாம். புறத்துறை அழிய - சமண சாக்கியர்களழிய என்னாது அவர்களது கட்டுப்பாடாகிய புறச்சமயத் தீமை ஒழிய என்றமை காண்க.

அவற்றால் சைவத் திறத்துக்கு நேரும் தீமைமட்டில் ஒழிப்பது கருத்து என்று முன் அங்கங்கும் உரைத்தமை காண்க. "அமண் - இருஞ் சாக்கியர்க ளெடுத்துரைப்ப" என்றது பதிகம். இதற்கு ஆசிரியர் "தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய் யேற்ற தன்றென வெடுத்துரைப்பா ரென்றபோது" (2988) என்று பொருள் விரித் தமையும் காண்க. அவர்களது பொய்மை அழிந்துபோதலும் (2992) பின் உரைக்கப் படும். சமண் சாக்கியர்கள் அந்நாளில் (6-7-8 நூற்றாண்டுகளில்) தமிழ்நாடு முழுமை யும் பரவிச் சைவத்துக்குக் கேடு சூழ்ந்தமை நாட்டு நடப்புச் சரிதத்தாலும், அரசுகள் புராணம், தண்டியடிகள் புராணம், நமிநந்தியார் புராணம் முதலிய வரலாறுகளாலும், தேவாரத் திருவாக்குக்களாலும், பழைய கல்வெட்டுக்கள் முதலியவற்றாலும் அறியக் கிடக்கின்றது பொய்த்த அச்சமண் - என்று பிரித்து உரைத்தலுமாம்.

**வைத்த அப் பெருங்கருணை நோக்கால்** - மேற்கொண்ட அந்தப் பேரருள் திரு நோக்கத்தால்.

**முன் நிகழ்ந்தது...வைத்த அப் பெருங்கருணை நோக்கால்** - வணிகர் செய்திறஞ் சொலக் கேட்டே திருநகரினை அணைந்து திருக்கபாலீச்சரத்தினை அணைகின்ற பிள்ளை யார் வணிகரது அன்பின் திறத்தினுக்கு மகிழ்ந்து கருணைநோக்கம் கொண்டு அத்தகைய அன்பரது பேரன்பின் கருத்தை முற்றுவித்து அன்ப ரன்பின்றிறம் வெளிப்படுக்க நினைந்தருளினர்; **செயல் வாய்ப்ப** என்றது இக்குறிப்பு. இனி, அவ்வாறு மகிழ் விக்கும் ஒரு செயல்கொண்டே அன்பின் செய்கைக்கு மாறு விளைத்துநிற்கும் புறத் துறைகள் அழியவும் திருவுளங்கொண்டருளினர். அச்செயலாவது விடத்தினால் வீந்த பின்னும் அவராகவே கொண்டு சிவநேசர் வழிபட்டுவரும் பூம்பாவையாரது எலும்பும் சாம்பரும் முன்போலப் பெண்ணுரு உயிருடன் வரச் செய்தலாம் என்பதும் பிள்ளையார் திருவுளங்கொண்டருளினர். இது பிள்ளையார் இறைவரைக் கருதி வழிபட்ட (2976) தன்மையினாலும் அதனைத் தொடர்ந்து நிகழும் பின்நிகழ்ச்சியினாலும் அறியப்படும்; இவ்வாறு நினைந்தருளியமை தமது புகழும் பெருமையும் கருதியோ? அன்றிப், பாவை யாரை அவர்தாத் தாம்பெறும் தன்மை கருதியோ? அன்றிப், பெருவணிகரின் மகிழ்ச்சி காணக் கருதியோ? அன்றி, வேறுய உலக நலங்கள் கருதியோ? அன்று என்பது வெளிப்படை; அன்பின்றிறமும் சிவனருளும் வெளிப்பாடுற்று உலகத்தை உய்விக்க வந்த பெருங்கருணைத்திற மொன்றே காரணமென்க. ஆளுடைய அரசுகள் அப்பூதி யார் திருமகனாரை விடத்தினின்றும் நீக்கி யுய்வித்தநிலையின் காரணம் "அன்றவர்கள் மறைத்ததனுக் களவிறந்த கருணையரா"யினமை (1473) என்றும், நம்பிகள் முதலை வாயினின்றும் பிள்ளையை அழைப்பிக்கும் காரணம் "மைந்தன் றன்னை யிழந்ததுயர் மறந்து நான்வந் தணைந்ததற்கே சிந்தை மகிழ்ந்தார்" (வெள். சருக் - 9) என்ற நிலையா மென்றும் ஆசிரியர் காட்டியருளும் திறம் ஈண்டு நினைவுகூர்தற்பாலன. முன் (1473) உரைத்தவை பார்க்க (III-பக். ௬௨௩ - ௬௨௪).

**புறத்துறை அழிய** - பரசமய நிராகரிக்கவும் நீறு ஆக்கவுமே பிள்ளையாரை இறை வர் அளித்தருளினா ராதலின் தொண்டை நாட்டிற் செய்யநின்று எஞ்சிய அப்பணியை நிறைவாக்க என்பது கருத்து. நடுநாட்டில் அரசுகளது வருகையாலும், பாண்டிநாட்டி லும் சோழ நாட்டிலும் பிள்ளையார் செய்கையாலும், புத்தர்வாத நிகழ்ந்த வகையா லும், மேலும் சோழ நாட்டில் நமிநந்தியார் தண்டியடிகள் நிகழ்ச்சிகளாலும் புறத் துறைகள் உண்மைச் சைவத்துக்கு இடையூறு விளைத்தநிலைகள் யழிந்தனவாதலின், எஞ்சி நின்றது தொண்டை நாட்டின் பணியேயாதலின் அதனைத் திருவுளங் கொண் டருளினர்.

ஈண்டுச் சமணர்கள் சைவத் திறங்களையும் திருத்தொண்டி னீர்மைகளையும் பலவாறு இழித்துரைத்து அடியவர்களுக்குத் துன்பம் விளைத்தனர் என்பது முன்னர்த் திருவோத்தூர் வரலாற்றில் "அமணர், 'இங்கு நீரிட்டாக்குவன காய்த்தற் கடையுண்டோ?' வென்று, பொங்கு நகைசெய் திழித்துரைத்தார்; அருளவேண்டு"மெனப் புகன்று (2876) அழுது வணங்கி விண்ணப்பித்த திருத்தொண்டர் செயலா லறிவிக்கப்பட்டமையின் ஆசிரியர் இங்குக் கூறிற்றிலர்; இங்குச் சிவநேசரது திருத்தொண்டின் றிறங்களையும் அவரது உலகியலிறந்த அன்பின் செயல்களையும் சமணர் முதலிய புறத்துறையாளர்கள் பலவாறும் இழித்துரைத்துத் துன்புறுத்தினர் என்பது கருதக் கிடக்கின்றது.

பின்னர்ப் பிள்ளையார் பாவையாரின் எலும்பு நிறைந்த குடத்தைக் கோயிலின் முன் கொணரச் செய்தபோது "நன்றியில் சமயத்தி லுள்ளோர், மாடு சூழ்ந்துகாண்பதற்குவந் தெய்தியே மலிந்து" (2982) இழித்துரைக்க நிற்பதும், பாவையார் உயிர்பெற் றெழுந்தது கண்டபோது, "பங்கமுற் றூரே போன்றார் பாசம யத்தி னுள்ளோர், எங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி தென்று, சங்கையா முணர்வு கொள்ளும் சமணர்தள் ளாடி வீழ்ந்தார்" (2992) என்பதும் காண்க. "உரிஞ்சாய வாழ்க்கையமணுடையைப் போர்க்கு, மிருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப" (தேவா) என்ற பிள்ளையாரது திருவாக்கு இதற்கு வலிய அகச்சான்றாகும். புறத்துறையாளர்களின் இழிப்புரையினை இது குறிப்பா லுணர்த்திநிற்றல் காண்க. "தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கை, யேற்ற தன்றென வெடுத்துரைப்பா" ரென்றபோது (2988) என்று ஆசிரியர் இதனைப் பொருள் காட்டுதலும் காண்க. எனவே இங்குப் பிள்ளையார் **புறத்துறை யழியக் கருணைநோக்கம்** கொண்டது, வலுக்கொண்டபோது ஏனையோர் செய்தல்போல மீச்சென்று புறமதங்களை அழித்தல் கருதியதன்று என்பதும், சைவர்கள் தற்காப்பின் பொருட்டு மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமைபற்றியே என்பதும் தெற்றென விளங்கும்.

**பொய்த் தவம்** - பொய்யினையே தவமென மேற்கொள்ளுதல். "கொல்லாமை மறைந்துறையும்" (1302) முதலியவை காண்க.

இத்திருவுள்ளக் குறிப்புடன் திருக்கோயிலை அணைந்தனர் பிள்ளையார் என்பதாம். வினைமுடிபுகளும் காண்க.

**திருவுள்ளத்தடைத்து—தம்பணி—வெஞ்சமண்—**என்பனவும் பாடங்கள். 1076

2975. (வி - ரை) **கபாலீச்சரத்து அணைந்து** - திருநகரினை யணைந்தமை முன் (2973) கூறினார். நகரினுட் சென்று திருக்கோயிலை அணைந்தமை இதனாற் கூறப்பட்டது. **கபாலீச்சரம்** - திருக்கோயிலின் பெயர்; கபாலீசர் எழுந்தருளிய கோயில் என்பது பொருள்; பட்டீச்சுரம் என்பதுபோல.

**கங்கைவார் சடையார்** - பகீரதனுடைய இறந்துபோன மூதாதைகளின்பொருட்டுக் கங்கையைத் தாங்கி உலகில் விடுத்ததற்கேற்ப இங்குப் பூம்பாவையாரது எலும்பினை நன்னெறிப்படுத்த நின்ற குறிப்புப்பட இவ்வாற்றாற் கூறினார்.

**மங்கை பங்கர்தம்** - இதுவும் முன்கூறிய குறிப்புப்பட நின்றது. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

**வணங்கி** - வீழ்ந்து வணங்கி. இவ்வாறு வணங்குதற்குரிய இடம் திருக்கோயிற் புறமுன்றிலில் கொடித்தம்பத்தின் முன் என்பது விதி.

**கோயில்** - இத்திருக்கோயில் அந்நாளில் கடற்கரையின் பாங்கு அமைந்திருந்தது என்றும், பின்னாளில் அழிவுபட்டோ அழிவுபடுத்தப்பட்டோ சிதைந்தமையில் நகரினுள்

இப்போதுள்ள இடத்தில் அமைக்கப்பட்டதென்றும் சரிதவரலாறு கேட்கப்படுகின்றது. இஃது ஆராயத்தக்கது. சரித ஆராய்ச்சிக் குறிப்புகள் பார்க்க.

**செங்கை சென்னிமேற் குவிந்திட** - கைகள் முயற்சியின்றித் தாமே தலைமேல் ஏறிக் குவிய. **திருமுன்பு** - இறைவரது சந்நிதியின் முன் உள்ளே.

இப்பாட்டினால் பிள்ளையார் திருக்கோயிலை யணைந்து வழிபட்ட முறை கூறப் பட்டது.

**மங்கை பாகர்**—என்பதும் பாடம். 1077

2976. (வி - ரை) இப்பாட்டினாற் பிள்ளையார் கபாலீசரை வழிபட்டுப் போற்றிய முறையும் **உட்குறிப்பும்** கூறப்பட்டது.

**தேவதேவனை** - கடலிற் பொங்கித் தேவர்களை அழிக்கவந்த ஆலாலமாகிய பெரு விடத்தை உண்டு கூட்டமாகிய தேவர்களை இறவாமற் காத்து, விடத்தை உண்டமை யால் தாம் இறவாமல் தமது முழுமுதற்றன்மை அறிய நின்றவர். இவர் இச்சிறு விடத்தினின்றும் ஒருசிறு பாவையைக் காத்தல் அரிதன்று என்பது குறிப்பு.

**திருக்கபாலீச்சரத் தமுதை** - அமுதசொரூபியாதலின் இறந்த உடலில் அமுதருளி வைத்து உயிர்ப்பிக்க வல்லவர் என்பது குறிப்பு. "அமுதம் அன்ன" (2986);

**பாவைபாகனை** - அருட்பாவையாகிய அம்மையை ஒருபாகமுடைமையின் பாவை யாகிய இப்பெண்ணுக்கு அருளுமியல்புடையவர் என்பது குறிப்பு. "வந்தெழுந்து பிடித்தணி வளைத்தழும்பர் மலர்ச்செங்கை" (1202) என்றதும், "மங்கை தழுவக் குழைந்தார் மறைந்த விடக்கண் கொடுத்தார்" (3441 = ஏயர்-புரா-287) என்பதும், அவைபோன்ற பிறவும் பார்க்க.

**தேவதேவனை** - **அமுதை** - **பாவைபாகனை** - இவ்வாறு வரும் உட்குறிப்புக்க ளுடைய திருவுள்ளத்துடன் பிள்ளையார் கபாலீச்சுரரைப் பாவித்து இறைஞ்சி யருளினர்.

**பரிவுறு பண்பினாற் பரவி** - என்றது மிக்கருத்து. பரிவுறு பண்பாவது பாவை யார் மேலும், சிவநேசரது அன்பின்றிறத்திலும் கொண்ட அருட்பண்பு.

**பரவி நாவின் வாய்மையாற் போற்றினார்** - **நாவின் வாய்மை** - "மெய்த் திருவாக்கு" (2986); "என்னும் வாய்மை" (2878) என்பன முதலியவை. சத்திய வாக்கு என்பர். "நிறைமொழி மாந்தர்" (குறள்) என்றவிடத்து "நிறைமொழி" என்பது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயந்தேவிடும் மொழி என்று பரிமேலழகர் உரைத்த கருத்தும் இங்குவைத்துக் காணத்தக்கது.

**பரவிப் போற்றினார்** - இப்பதிகம் கிடைத்திலது! இவ்வாறு உட்குறிப்புடன் இறைவரைப் போற்றுந் தன்மைபற்றித் திருமருகல் வரலாற்றில் வணிகப்பெண் திரு வருளைச் சிந்தித்தேங்கிய நிலையில் முன் உரைக்கப்பட்டவை காண்க. 2374 - 2375 பார்க்க.

**விரைவினால் விழுந்து போற்றினார்** - **விரைவு** - தாழாது செய்யும் அருளின் பெருக்கினால் நிகழ்வது; **விழுந்து** - திருமேனி நிலத்தில் ஐந்தங்கமும் எட்டங்கமும் பொருந்த விழுந்து வணங்கி.

**ஞானசம்பந்தர்** - சிவஞானம் - சிவசத்தி - எல்லாம் வல்லது. அத்தகைய சிவ ஞானசம்பந்தராதலின் அத்துணைகொண்டு உரியவாறு செயலாற்ற அருட்டிறம் பெறு பரிவுடன் (2976) போற்றினார் என்பது குறிக்க இப்பெயராற் கூறினார்; பின்னர் அருளும் திருப்பதிகத்துத் திருக்கடைக்காப்பில் "ஞானசம் பந்த னலம்புகழ்ந்த" என்ற குறிப்பும் காண்க. "நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர்" (2705)

நாவின் வாய்மையில் - என்பதும் பாடம். 1078

2977. போற்றி மெய்யருட் டிறம்பெறு புரிவுடன் வணங்கி
நீற்றின் மேனியி னிறைமயிர்ப் புளகங்க ணெருங்கக்
கூற்ற டர்த்தவர் கோயிலின் புறம்புபோந் தருளி
யாற்று மின்னருள் வணிகர்மேற் செலவருள் செய்வார், ௧0எ௯

2978. "ஒருமை யுய்த்தநல் லுணர்வினீ ! ருலகவ ரறிய
அருமை யாற்பெறு மகளென்பு நிறைத்தவக் குடத்தைப்
பெரும யானத்து நடம்புரி வார்பெருங் கோயில்
திரும திற்புற வாய்தலிற் கொணர்"கென்று செப்ப, ௧0அ0

2979. அந்த மில்பெரு மகிழ்ச்சியா லவனிமேற் பணிந்து,
வந்து தந்திரு மனையினின் மேவி,யம் மருங்கு
கந்த வார்பொழிற் கன்னிமா டத்தினிற் புக்கு
வெந்த சாம்பலோ டென்புசேர் குடத்தைவே றெடுத்து, ௧0அ௧

2980. மூடு பன்மணிச் சிவிகையுட் பெய்துமுன் போத,
மாடு சேடிய ரினம்புடை சூழ்ந்துவந் தணைய,
ஆடன் மேவினார் திருக்கபா லீச்சர மணைந்து
நீடு கோபுரத் தேதிர்மணிச் சிவிகையை நீக்கி, ௧0அ௨

2981. அங்க ணாளர்த மபிமுகத் தினிலடி யுறைப்பான்
மங்கை யென்புசேர் குடத்தினை வைத்துமுன் வணங்கப்,
பொங்கு நீள்புனற் புகலிகா வலர்புவ னத்துத்
தங்கி வாழ்பவர்க் குறுதியா நிலைமைசா திப்பார், ௧0அ௩

2982. மாட மோங்கிய மயிலைமா நகருளார், மற்றும்
நாடு வாழ்பவர், நன்றியில் சமயத்தி னுள்ளோர்
மாடு சூழ்ந்துகாண் பதற்குவந் தேய்தியே மலிய,
நீடு தேவர்க ளேனையோர் விசும்பிடை நெருங்க, ௧0அ௪

2983. தொண்டர் தம்பெருங் குழாம்புடை சூழ்தரத் தொல்லை
அண்டர் நாயகர் கோபுர வாயினே ரணைந்து
வண்டு வார்குழ லாளென்பு நிறைந்தமட் குடத்தைக்
கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதி, ௧0அ௫

2984. "இந்த மாநிலத் திறந்துளோ ரென்பினைப் பின்னும்
நந்து நன்னெறிப் படுத்திட நன்மையாந் தன்மை
அந்த வென்பொடு தொடர்ச்சியா" மெனவரு ளேக்காற்
சிந்து மங்கமங் குடையபூம் பாவைபேர் செப்பி, ௧0அ௬

2985. "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுதுசெய் வித்தல்

கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி லுலகர்முன் வரு"கென வுரைப்பார், ௧௦௮௭

2986. மன்னு வார்சடை யாரைமுன் னெழுது "மட் டிட்ட"
என்னு நற்பதி கத்தினிற் "போதியோ" வென்னும்
அன்ன மெய்த்திரு வாக்கென மமுதமவ் வங்கந்
துன்ன வந்துவந் துருவமாய்த் தோக்கதக் குடத்துள். ௧௦௮௮

2977. (இ - ள்) போற்றி...வணங்கி - முன் கூறியவாறு துதித்து மெய்யருளின் றிறத்தினைப் பெறுகின்ற இடைவிடாத நினைப்புடனே வணங்கி; நீற்று......நெருங்க - திருநீறு நிறைந்த திருமேனி முழுதும் நிறைவாக மயிர்ப்புளகம் செறிய; கூற்றடர்த்தவர்...போந்தருளி - இயமனை உதைத்தருட்டிய இறைவரது திருக்கோயிலின் புறத்திலே சென்றருளி; ஆற்றும்...அருள் செய்வார் - செய்கின்ற இனிய அருளானது வணிகரின்மேல் செல்வதாக அருளிச்செய்வாராய்; ௧௦௭௧

2978. (இ - ள்) ஒருமையுய்த்த நல் உணர்வினீர்! - சிவனடிமைத் திறத்திலே ஒன்றித்து வைத்துச் செலுத்திய உணர்வினையுடையவரே!; உலகவாறிய - உலகத்தவர் எல்லாம் அறியும்படி; "அருமையாற் பெறும்...கொணர்க" என்று செப்ப - "அரிய தவத்தின் பயனாகப் பெறும் மகளுடைய எலும்பு நிறைத்த அந்தக் குடத்தினைப் பெரிய மயானத்திலே ஆடல் புரிவாராகிய இறைவரது இப் பெருங்கோயிலின் திருமதிற்புறத்துத் திருவாயிலின் முன் கொண்டு வருக" என்று சொல்லியருள, ௧௦௮௦

2979. (இ - ள்) அந்தமில்...பணிந்து - எல்லையில்லாத பெரிய மகிழ்ச்சியினாலே நிலமேல் விழுந்து வணங்கி; வந்து...மேவி - கோயிலினின்றும் வந்து தமது திருமனையினுள் சேர்ந்து; அம்மருங்கு...புக்கு - அப்பக்கத்தில் மணம்பொருந்திய நீண்ட சோலையினகத்துக் கன்னிமாடத்தினிற் புகுந்து; வெந்த...எடுத்து - மகளுடல் வெந்த சாம்பலோடு எலும்பு பெய்துவைத்த குடத்தினைப் பஞ்சணை முதலியவற்றினின்றும் வேறாக எடுத்து; ௧௦௮௧

2980. (இ - ள்) மூடு...போத - பல மணிகளிழைத்த மூடு சிவிகையினுள்ளே அக்குடத்தை இனிதாக அமைத்து வைத்து அதனை முன் போகவிட்டு; மாடு......அணைய - பக்கத்தில் சேடியர்களின் கூட்டம் புடைசூழ்ந்து வர; ஆடல்......அணைந்து - திருநடம் புரியும் இறைவரது திருக்கபாலீச்சரத்தினை அணைந்து; நீடு...நீக்கி - நீண்ட திருக்கோபுரத்தின் புறத்தெதிரிலே மணிச்சிவிகையின் திரையினை நீக்கி, ௧௦௮௨

2981. (இ - ள்) அங்கணர்தம்...வணங்க - அங்கணரது சந்நிதியின் எதிரிலே அவரது திருவடியிற் பதிந்த அன்பின் உறைப்பினாலே பெண்ணினது எலும்பு கொண்ட அக்குடத்தினை எடுத்துவைத்துத் திருமுன்பு சிவநேசர் வணங்க; பொங்கு......சாதிப்பார் - பொங்கிவரும் பெருநீர்ச்சிறப்புடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார் இவ்வுலகத்தில் தங்கி வாழும் மக்களுக்கு உறுதிப்பொருளாம் நிலைமை யிதுவே என்று நேரே காட்டியருளுவாராய், ௧௦௮௫

2982. (இ - ள்) மாடம்...நகருளார் - மாடங்கள் ஓங்கி விளங்கிய மயிலைமாநகரத்தில் வாழ்வார்களும்; மற்றும் நாடு வாழ்பவர் - மற்றும் அந்நாட்டிலுள்ள மக்களும்; நன்றியில் சமயத்தின் உள்ளோர் - நன்றியில்லாத பரசமயத்தில் உள்ளவர்களும்;

மாடு...மலிய - எப்பக்கங்களினின்றும் சூழ்ந்து இதன் விளைவைக் காண்பதற்கு வந்து கூடியே பெருகவும் ; நீடு...நெருங்க - நீடிய தேவர்களும் ஏனையோர்களும் ஆகாயத்தில் நெருங்கவும் ; கOஅச

2983. (இ - ள்) தொண்டர்...சூழ்தர - திருத்தொண்டர் கூட்டம் தம் பக்கத்திற் சூழ்ந்து வரவும் ; தொல்லை...அணைந்து - பழைமையாகிய தேவதேவாது கோபுர வாயிலின் நேரில்வந்தணைந்து ; வண்டு...கண்டு - வண்டுகள் வாழும் நீண்ட கூந்தலையுடையாளாகிய பாவையாரின் எலும்பு நிறைந்த அந்த மட்குடத்தினை அருட்பார்வை செய்து ; தம் பிரான்...கருதி - தமது பெருமானாகிய இறைவாது கருணையின் பெருமையினையே திருவுள்ளத்துட் பாவனை செய்து கருதி ; கOஅடு

2984. (இ - ள்) "இந்த...தொடர்ச்சியாம்" என - இந்த உலகத்தில் இறந்துள்ளவர்களுடைய எலும்பை மேலும் பெரிதுநன்னெறியில் பொருந்தியிட நன்மை ஆகின்ற தன்மையானது அந்த எலும்பினொடு கூடிய தொடர்ச்சியினாலாவதாம் என்று உட்கொண்ட ; அருள் நோக்கால் - அருள் நோக்கத்தினாலே ; சிந்தும்...செப்பி - சிந்திய அங்கங்களாகிய அவ்வெலும்பினை முன்னுடைய உடம்பில் வாழ்ந்த பூம்பாவை என்ற பெயரினால் விளித்துக் கூறியருளி, கOஅசு

2985. (இ - ள்) மண்ணினில்...பயன் - இந்த மண்ணுலகத்திலே வினைக்கீடாக வந்து பிறந்த உயிர்கள்பெறும் பிறவிப்பயனாகிய உறுதிப்பொருளாவன ; மதிசூடும்... ...அமுது செய்வித்தல் - பிறைசூடும் பெருமானடியார்தமைத் திருவமுது செய்வித்தலும் ; கண்ணினால்...ஆர்தல் - கண்களினாலே அவ்விறைவரது திருவிழாக்களின் பெரும் பொலிவினைக் கண்டு மகிழ்தலும் ; உண்மை யாமெனில் - ஆகிய இவையிரண்டுமே உறுதிப் பொருளாவன என்பது உண்மையானால் ; உலகர்முன் வருக - ஏ! பூம்பாவையே, நீ உலகத்தவர் முன்னே உடலும் உயிரும் பொருந்த வரக்கடவாயாக! ; என உரைப்பார் - என்று சூளுறவு செய்து எடுத்து உரைப்பாராகி, கOஅஎ

2986. (இ - ள்) மன்னு...பதிகத்தினில் - நிலைபெற்ற நீண்ட சடையினையுடைய சிவபெருமானைத் தொழுது "மட்டிட்ட" என்று தொடங்கும் அத்திருப்பதிகத்தினிலே ; போதியோ...அமுதம் - போதியோ என்று கூறும் அந்த மெய்த்திருவாக்கு என்னும் அமுதமானது ; அக்குடத்துள் - அந்தக் குடத்தினுள்ளே ; அவ்வங்கம் துன்ன...தொக்கது - அந்த எலும்பினுடம்பினுள்ளே பொருந்த வந்து வந்து உருவமாய்க் கூடியது. கOஅஅ

இப்பத்துப் பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கின்றன.

2977. (வி - ரை) மெய்யருட்டிறம் பேறு புரிவுடன் - மெய்யருள் - பொய்யாத அருள் ; அருட்டிறம் பேறுதல் - சிவநேசர் செயல்வாய்ப்பச் செய்தருளும் பொருட்டாம். அது சிவனது மெய்யருட்டிறத்தினா லன்றி இயலாது என்பது. புரிவு - இடைவிடாத நினைவு.

கூற்றடர்த்தவர் - பாவையாரை மீள உற்பவிப்பித்தலின்பொருட்டு மரணத்தைத் தவிர்த்தல்வேண்டிக் கூற்றடர்த்த குறிப்புப்பெறக் கூறினார்.

ஆற்றும் இன்னருள் வணிகர் மேற்செல - ஆற்றும் - இறைவர் தம்பாலினாற்றியதாம் இனி ஆற்றும் - என இருவழியும் உரைக்ககின்றது.

அருள் செய்வார் - அருள் செய்தல் - சொல்லுதல் ; முற்றெச்சம், அருள் செய்வாராகி. அருள் செய்வார் - செப்ப என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

அருள் செய்வார் (2977) - செப்பப் (2978) - பணிந்து - மேவிப் - புக்கு - எடுத்து (2979) - அணைந்து - நீக்கி (2980) - வணங்கக் - காவலர் - சாதிப்பார்

(2981) - மலிய - நெருக்கச் (2982) - சூழ்தர-அணைந்து - கண்டு - கருதி (2983) - என அருளுக்கால் - செப்பி (2984) - என உரைப்பார் (2985) - என்னும் பதிகத்தினில் - எனும் அமுதம்-அக்குடத்துள் தொக்கது - (2986) என்று இப்பத்துப் பாட்டுக் கவியும் தொடர்ந்து வினைமுடிபு கொள்க.

பரிவுடன்—என்பதும் பாடம். 1079

2978. (வி - ரை) ஒருமை உய்ந்தலாவது - சிவனுக்காளா மதுவொன்றே நினைந்து ஒழுகுதல்; "இரண்டுற மனம் வையேல்", "பொது நீக்கி", "ஒன்றியிருந்து நினைமின்கள்", "ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தொழிந்தேன், ஒன்றேயென் னுள்ளத்தி னுள்ளடைத்தேன்...ஆளா மது" என்பன முதலிய திருவாக்குக்கள் காண்க. ஈண்டுச் சிவநேசர் உணர்வினை ஒருமையில் உய்த்த நிலைமையாவது எது வரினும் தமது குறியினின்றும் பிறழாது ஒழுகிய நிலை; "மலையே வந்து விழினு மனிதர்காள், நிலையி னின்றுநீர் கலங்கப் பெறுதிரேற், றலைவ னாகிய வீசன் றமர்களைக், கொலைகை யானைதான் கொன்றிட கிற்குமே" (குறுந்) என்ற மெய்யருட் டிருவாக்கின்படி வல்விடம் இவர்பால் ஒன்றும் இடர்செய்யா தகலவுள்ள திறம் குறித்தார்.

உலகவர் அறிய - உலகத்தார் அன்பின் பெருமையை அறிந்து உண்மையுணர்ந்துய்யும் பொருட்டு; நீவிர் பற்றகன்றீ ராதலின் இப்பாவை இறந்தபோதும் இடர் ஒழிந்தீர், இனி அவள் வரும்போதும் இன்பப்படீர்; ஆதலின் இனிச் செய்கின்ற செயல் உம்பொருட்டன்று; யாம், வரும் பாவையாரை ஏற்றுக்கொள்ளும் நிலையில்லையாதலின் அஃது எம்பொருட்டுமன்று. பின் என்னையோ? எனின், உலகவரறிந்துய்ய என்பது குறிப்பா லருளியவாறும்.

உலகவ ரறிய - என்பு நிறைத்த என்றும், உலகவாறியக் கோணர்க என்றும் கூட்டி உரைக்க நின்றது.

பெரு மயானத்திடை நடம் புரிவார் - மயானம் - சங்காரத்தையும், நடம் - (புனருற்பவத்தையும்) மீள உளதாக்குதலையும் குறிக்கும். "வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (திருவிருத்) ; இங்கு இறந்த பாவையாரை மீளவுற்பவிப்பிக்கும் அருளுடையார் என்பது குறிப்பு.

பெருங் கோயில் - அந்நாளில் இக்கோயில் மிகப்பெருங் கோயிலாகக் கடற்கரையோரம் அமைந்திருந்தது என்பது வரலாறு.

திருமதிற்புற வாய்தலிற் கோணர்க - திருமதிலுக் குட்புறம் வெந்த எலும்பும் சாம்பருங் கொணர்தல் விதிவிலக்காகிய அநுசிதம் என்பது கருதி, மதிற்புற வாய்தலிற் கொணரச் செய்தனர். திருக்காளத்தியில் இறைவரது "திருமுன்பு, வெந்தவிறைச்சியுமெலும்புங் கண்டகல மிதித்தோடி, யிந்தவநு சிதங்கெட்டே னியார்செய்தா ரென்றழிவா"ராய்(785)ச் சிவகோசரியார் "பழுதுபுகுந் ததுதீரப் பவித்திரமாஞ் செயல் புரிந்த" (788) நிலை இங்கு நினைவுகூர்தற்பாலது. 1080

2979. (வி - ரை) பணிந்து - பிள்ளையாரைப் பணிந்து என்க. சிவநேசர் என்ற எழுவாய் தொக்குநின்றது.

வந்து - திருநகர்ப் புறத்தினின்று திருமனையின்கண் வாராது பிள்ளையாருடன் திருத்தொண்டர் கூட்டத்துடனே நேரே திருக்கோயிலுக்குச் சென்றுவிட்டமையின் இவருத் திருமனைக்கு வந்து என்றார். இத்திருமனை அவ்வழியில் இருந்ததென்பது கருதவரும்.

அம்மருங்கு - பொழிற் கன்னிமாடம் - பூம்பாவையார் வாழ்ந்திருந்த கன்னிமாடம், மனையிலன்றித் தனியாய் அதனை அடுத்த பொழிலிடை யமைந்தது. "கன்னிமாடத் தின், பாற்ற டம்பொழில் மருங்கினில்" (2953) என்றது பார்க்க. பாவையாரிருந்த அக் கன்னிமாடத்திற்றானே அவரது எலும்புஞ் சாம்பலுநிறைத்த குடத்தினை அமைத்து உபசரித்து வந்தனர் என்பது முன் (2965) "கன்னிமா டத்தின் முன்புபோற் காப்புற வமைத்து" என்றதனு லறியப்பட்டது.

வேறு எடுத்து - அதனைப் பெய்து அமைத்திருந்த பஞ்சணை மேற்கட்டி முதலி யனவாய்ச் சூழ்ந்த அமைப்புக்களினின்றும் வேருக எடுத்து. 1081

2980. (வி - ரை) மூடு-சிவிகை என்று கூட்டுக; அந்நாளில் அரச மரபின ருள்ளும், வணிகர் முதலிய உயர்குலத்தாருள்ளும் பெண்கள் மூடுபல்லக்கில் வெளிவரு தல்வழக்கென்பது "மாமணிச் சிவிகை தன்னின் மடநடை மயிலன் னுரைத், தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன வேற்றிக், காமரு கழனி வீழ்த்துக் காதல் செய் சுற்றத் தாருந், தேமொழி யவருங் கூட" (1758) எனவரும் அம்மையார் வர லாற்றினுலறிக; ஆண்டுரைத்தவை பார்க்க; அவரும் வணிகர் குலத்தவராதலும் கருதுக.

இங்குச் சிவநேசர் பாவையாரது எலும்புஞ் சாம்பரு நிறைத்த அக்குடத்தினை அவராகவே கொண்டு உபசரித்து வந்தமையால் அவர் உயிருடனிருப்பிற் கொண்டு செல்லுமாறு போலவே மூடுசிவிகையுட் கொண்டு சேடியர்சூழக் கொண்டணைந்தனர்.

சேடியர் இனம் மாடு புடை சூழ்ந்து - என்க. மாடு - பக்கம். புடை-சுற்றி லும்; சேடியர் சூழ்தல் குடமாக நின்ற பாவையாரின் உபசரிப்பின்பொருட்டு எனக. உயிர்பெற் றெழுந்தபின் உடன்கொண்டணைதற் பொருட்டாகிய குறிப்புமாம்.

ஆடல் மேவினுர் - முன் நடம் புரிவார் (2978) என்ற கருத்தைத் தொடர்ந்து கூறியபடி; முன் கூறியது பிள்ளையார் கொண்டுகொட்டிய குறிப்பு. இங்குக் கூறியது அதனை அவ்வாறே உள்ளத்திற் கொண்டு உய்த்த சிவநேசரது உட்குறிப்பு. முன்னர் நடம் புரிவார் என்றதும், இங்கு ஆடல் மேவினுர் என்றதுமாகிய வினைமுடிபுகளும் காண்க. ஆடலினருள் விரைவிற் கூடும் குறிப்புமாம்; ஆடல் - திருவிளையாடலுமாம்.

நீடு கோபுரம் - "பெருங்கோயில்" (2978) என்றதற்கேற்ப உயர்ந்த கோபுரம்.

எதிர் - புறவாய்தலில் முன்பு; நீக்கி - சிவிகையினின்றும் எடுத்து. 1082

2981. (வி - ரை) அபிமுகம் - திருமுன்புக்கு நேராக.

அடியுறைப்பால் - திருவடிச் சார்பிலே கொண்ட உறைப்பினுலே. உறைப் பாவது அழுந்திய - ஒருவாற்றுலும் அசைவில்லாத - அன்பு. "திருத்தொண்டி னுறைப்பாலே வென்றவர்தந் திருப்பெயரோ வேறொருபேர்" (1795); அடி - திரு வடி; இங்கு இவ்வாறன்றிப் பாதகாணிக்கைபோல என்றும், அடிப்பாகம் நன்ருகப் பொருந்த என்றும் உரைப்பாருமுண்டு.

பொங்கு நீள்புனற் புகலி - காவிரி நாட்டின்கண்ணுள்ள சீகாழிப் பதி; புகலி- சீகாழிப் பதியின் பெயர்கள் பன்னிரண்டனுள் மூன்ருவது திருப்பெயர்; சிவநேசரது ஒருமையுய்த்த நல்லுணர்விற்கொண்ட செயல்வாய்ப்பப் புகல் தந்து அருளிய குறிப்புப் பெற இங்குப் புகலி காவலர் என்ருர்.

புவனத்துத் தங்கி வாழ்பவர்க்கு - உலகவர்க்கு; தங்கி - என்றமையால் வினைத் தீர்வின்பொருட்டும், சிவதருமங்கள் செய்து வீடுபெறுதற்பொருட்டும், இப்புவனியில் வந்து தங்கி வாழும் விண்ணவர் நாகர் முதலியோர்களையும் அடக்கிக் கூறியபடி; "நீடு தேவர்க ளனையோர்" (2982) என்பதும் இக்குறிப்பு. "புவனியிற் போய்ப்பிற

வாமையி னுஞ்ம் போக்குகின் றோமவ மேயிந்தப் பூமி, சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்......திருமாலா, மவன்விருப் பெய்தவு மலரவ னுசைப் படவும்" என்ற திருவாசகம் (திருப்பள்ளி - 10) காண்க. "பூவார் திசைமுக னிந்திரன் பூமிசை, மாவா ழகலத்து மான்முதன் வானவர், ஓவா தெவரு நிறைந்துறைந் துள்ளது" (137) என்று தேவாசிரியனின் முன்னே வானவர் தங்கி வாழும் தன்மை கூறப்பட்டதும் காண்க. புவனத்து என்றமையால் இறைவரால் உயிர்கள் உய்யத்தந்த உடல் முதலியவற்றின் பயன் பெற உள்ள என்பது குறிப்பு.

உறுதியாம் நிலைமையாவது பிறவிப் பயன் பெறச்செய்யும் உறுதிப் பொருளின் தன்மை. "பிறந்தார் பெறும் பயன்" (2985),

சாதிப்பார் - சாதித்தலாவது எவரும் மாறுகூற இயலாதவாறு உறுதியாகச் சூளுறவுகொண்டு எடுத்துக்கூறி முடித்தல்; சாதிப்பாராகி - முற்றெச்சம். சாதிப்பார்-கண்டு - கருதிச் (2983) - செப்பி (2884) - வருகென உரைப்பார் (2985) - என்னும் பதிகத்தினில் - என்னும் (2986) என்று கூட்டிமுடித்துச் சாதித்தநிலை கண்டுகொள்க. சாதித்தல் ஈண்டு சொல்லால்மட்டு மன்றிச் செயலாலும் முடித்துக்காட்டுதல் குறித்து நின்றது. 1083

2982. (வி - ரை) நகருளார் - நாடு வாழ்பவர் - நகரத்திலும், மற்றும் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்பவர்; இவர்கள் தொண்டர்களின் வேறாய் உலக நிலையினர்கள். இவர்கள் சிவனடிமைத்திறத்திற் பற்றுக்கொண்டவர்களாய் அருள்வெளிப்பாட்டினைக் கண்டுவழிபட வந்தவர்கள். இவர்களின் வேறாகத் தொண்டர்கள் பின்னர்க் கூறப்படுவோர்.

நன்றியில் சமயத்தினுள்ளோர் - அகப்புறம், புறம், புறப்புறம் என்று மூவகைச் சமயத்தவர்கள். இவர்கள் ஒருசார்புமின்றிக் காட்சி காணுமளவில் வந்தோரும், ஐயப்பட்டு வந்தோரும், இஃதியலாது என்று துணிவுகொண்டு இயலாதாக முடிந்த பின் அலர்தூற்றி இழித்துரைக்க நினைந்து வந்தோரும் என்று பலதிறத்தோருமாவர்; சிவன் உயிர்தோறும் நின்று இடைவிடாது செய்துவரும் உபகாரத்தையும் அவரது முழுமுதற் றன்மையினையும், உயிர்கள் அவனுக்கு மீளா ஆளாந் தன்மையினையும் மறந்து பலபடியாக உண்மையின் மாறுகொண்டு பிதற்றித் திரிதலால் அவ்வவர் வேறு வேறு தம்முள் மாறுபடினும் சிவனை மறத்தலில் ஒன்றுபட்டாராதலின் அவ்வொற்றுமை கருதி இவரனைவரையும் ஒன்றுகூட்டிச் சேர்த்து "நன்றியில் சமயத்திலுள்ளோர்" என்றருளிய நயம் காண்க. நன்றி - நன்மை என்று கொண்டு நன்றியில் - நன்மை நெறியினில்லாத என்றுரைப்பினுமமையும். சமண புத்தராதியோர் முன்னின்றமை மேற்காண்க. பதிகம் 10-வது பாட்டும், 2981—2181 பாட்டுக்களும் பார்க்க.

காண்பதற்கு - பற்றுடையோர் அருள்வெளிப்பாட்டையும், அஃதில்லவர் நிகழ்ச்சியினையும் காண்பதற்கு.

நீடு தேவர்கள் - திருமால் முதலிய பெருந் தேவர்கள்; ஆயுள், அறிவு, தவம் முதலியவற்றால் நீடிய தேவர்கள் என்றலுமாம். ஏனையோர் - மண்ணவரும் தேவருமல்லாத பிறர்; நாகர், அசுரர் முதலியோர். அற்புதம் காணத் தேவர் வருவர்.

விசும்பிடை நெருங்க - விசும்பு இடமகன்றதாயினும், தேவர்கள் நம்முடல்போலப் பூதபரிணாம தூலவுடலின்றி நுண்ணிய ஒளியுடல் பெற்றவராயினும் அவரும் அங்கு இடையின்றி நெருங்கும்படி அநேகராய்க் குழும என்றதாம். விசும்பில் இடையின்றி நெருங்க என்க. இடை - எழுனுருபு என்றலுமாம். 1084

2983. (வி - ரை) தொண்டர்தம் பெருந்குழாம் - பிள்ளையாருடன் வந்தோரும், திருவொற்றியூரினின்றும் உடன் வந்த தொண்டைநாட்டினரும், சிவநேசருடன் நின்ற திருமயிலைப் பெருந்தொண்டரும் (2969) கூடிப் பெருகியமையால் பெருங் குழாம் என்றார்; இப் பெருங்குழாம் வழிவழியாக இந்நாளிலும் பூம்பாவையார் திருவிழாத் தினத்தன்று திருமயிலையிற் கூடும் காட்சி அருமையாய்க் கண்டு உய்யத்தக்கது. "மயிலாப்பூர் அறுபத்துமூவர்' என்று தேற்றமாய்த் தொண்டைநன்னாட்டில் வழங்கும் வழக்கும் காண்க.

தொல்லை அண்டர் நாயகர் - தொல்லை - மிக்க பழமை; அண்டர் நாயகர்-முன் "தேவதேவனை" (2976) என்ற கருத்து.

அணைந்து - புகலி காவலர் எழுவாய்; முன் (2981) பாட்டிலிருந்து வருவிக்க.

வண்டுவார் குழலாள்......கண்டு - கண்டு - மனத்துட் சிருட்டித்துக் கண்டு; காண்பதாகிய தீக்கை செய்து. குடம் வனையப்புகுமுன் குயவன் மண்ணினுள்ளே குடத்தைக் காண்பதுபோல இங்குப் பிள்ளையார் வெளியிற்கண்ட குடத்தினுள்ளே எலும்புஞ் சாம்பலும், அவற்றினுள்ளே பாவையாரது முழு வளர்ச்சியுடைய உடம்பும், அதனுள் வண்டுவார் குழலாளாகிய பாவையாரையும் கண்டனர் என்பதாம். இவ்வெலும்பு இஃதாகுக என்பது நிர்மாணமாகிய சிருட்டி. கியூடன் என்ற மேனாட்டுக் கலைஞன் காட்டிற் கண்டதொரு கற்பெருவிரலெலும்பினில்-அதன் உடம்புமுழுதும் கண்டான் என்பது கலைஞானப் புலமையின் நுட்பமாகக் கேட்கப்படுமாயின், எண்ணரிய மேலாகிய சிவஞான நிறைவினிலே இந்த எலும்புக் குவியலின் வைத்து உடல்முழுதும் - அவ்வுடலில் உயிரும்கூடிக் காண்பதரிதாகுமோ? எளியதேயாமென்க.

வண்டுவார் குழலாள் என்றதனால் அவர் கண்டது உடல் உயிருடன் பூம்பாவையாராகவே அணிந்துநிற்கக் கண்டதென்க.

தம்பிரான் கருணையின் பெருமையே கருதி - முன் கூறியவாறு கண்டது நான் கண்டேன் என்று தம்மைக் காணாது தமது பெருமானாகிய சிவனது கருணையின் பெருமையினையே கண்டு அதனுள் தாம் ஒடுங்கி நின்று; சிவஞான நிறைவினையே கண்டுகொண்டு. 1085

2984. (வி - ரை) பிள்ளையார் குடத்தினைக் கண்டருளினர்; அதனை நோக்கிப் "பூம்பாவாய்!" என்ற பெயர் செப்பி அழைத்தருளிப் "போதியோ?" என்று ஆணையிட்டருளுகின்றார். அதன் காரணத்தை விளக்குகின்றது இத்திருப்பாட்டு. அவ்வாறு அழைத்தருளி ஆணையிட்டருளிய பதிகக் கருத்தாகிய திருவுள்ளக்கிடையினை மேல் வரும் பாட்டாலும், அதன் செயனிகழ்ச்சியால் சிவநேசர்தஞ் செயல்வாய்ப்பச் செய்தருளிய நிலையை அதன்மேல் மூன்று பாட்டுக்களாலும் கூறுகின்றார்.

அங்கம் அங்குடைய பூம்பாவை பேர் செப்பி - குடத்தினுள் எலும்பினையும் அதனால் அதனையுடைய முழுஉடலினையும் அதனால் அவ்வுடல் பெற்றிருந்த பூம்பாவையாரையும் தொடர்புபடுத்திக் கண்டு பூம்பாவாய் என்ற பெயர் செப்பி விளித்தனர்.

"இந்த மாநிலத்திறந்துளோர்...தொடர்ச்சியாம்" என - பிள்ளையார் பாவையாரின் எலும்பினை நோக்கிப் பூம்பாவை பேர் செப்பியதன் கருத்தினையும் அவரது திருவுள்ளக்கிடையினையும் குறித்தது; இறந்துளோரது எலும்பினை நன்னெறிப்படுத்திட அந்த எலும்பொடு தொடர்ச்சியாம் தன்மை ஆம் என்பது. எலும்பினை வைத்துச் செய்யும் நன்னெறி அவ்வெலும்பின் றொடர்ச்சியினாலே உடலுக்கு ஆகி, அவ்வுடலுள்நின்ற உயிருக்கு ஆதல் இந்த நிலத்திற் காண்போமாதலின், எலும்பினை நோக்கிப் பாவையே என்று விளித்தருளினர் என்பதாம்.

**இறந்துளோர்** - இறந்த பின்னும் உள்ளவர்; சூக்கும உடலுள் (நுண்ணுடல்) உள்ளவர். **நந்தும்** - தழைக்கும். **நன்னெறிப்படுத்தல்** - இறந்தாரது எலும்பினை வைத்துச் சுட்டிச் செய்யும் சடங்குகளின் பொருளும் காண்க. எலும்புகளைத் தூய நீரினுள் இடுதல் முதலிய செயல்களும் ஆம். இவற்றால் ஆகும் நன்மை அவ்வெலும்பின் தொடர்ச்சியினாலே அவ்விறந்தோருக்காவதுபோல ஈண்டுப் பிள்ளையார் எலும்பினை விளித்து அருள்நோக்கஞ் செய்யும் செயல் பாவையாருக்காயினவாறும் காண்க. அன்றியும் "தூலமா முருவினுக்குச் சூக்கும முதல்" என்பவாகலின், தூலவுடலினின்றும் உயிர் நீங்குங்கால் அவ்வுடற்குக் காரணமாய் முத்தி பெறுங்காறுமுளதாய சூக்கும வுடலோடுங்கூடியே துறக்க நிரயங்களில் செல்லும். அச் சூக்குமவுடற்கும் அதன் காரியமாய தூலவுடற்கும் காரியத் தொடர்ச்சியுளது; அத்தொடர்ச்சியானே தூலவுடலின் அவயவமாகிய என்பிற் செய்யும் நற்செயல் சூக்குமவுடலினிற்கும் உயிர்க்குச் சென்று பயனளித்தல் சாலும்.

**சிந்தும் அங்கம்** - உடலழிந்த எலும்பும் சாம்பலும்.

**அந்த உடைய** - முன்னர் உடலின் பகுதிகளாகக் கொண்டிருந்த.

**அருள் நோக்கால்** - பூம்பாவையாரை விளித்து அருளும் நிலை அவள்பாலும் சிவநேசர்பாலும் உலகர்பாலும் வைத்த அருள்நோக்கத்தாலாகியது என்பதாம். 1086

2985. (வி - ரை) இப்பதிகக் கருத்தினை வடித்தெடுத்துக் கூறுவது இத்திருப்பாட்டு. மேலும் இப்புராண முழுமைக்கும் உள்ளுறையாகிய உண்மையை வடித்துக் கூறும் பெருமையும் உடையது; அதுமட்டுமன்றி, உலகுயிர்கள் அனைத்தும் பிறவிப் பயன் தெரிந்துய்யும் உறுதியாகிய வழிகாட்டும் பெருமையும் உடையது; மேலும், "வேத வுள்ளுறை யாவன" (1832) என்று எல்லா வேதங்களின் சாரமாகிய உண்மையினைத் திருநீலநக்க நாயனார் புராணத்துள்ளே வடித்தெடுத்துக் காட்டியருளியவாறு, இறைவரது திருவாக்குக்களாம் வேத சிவாகமங்களாகிய இரண்டனுள் எஞ்சிநின்ற சிவாகமங்களின் சாரமாகிய உள்ளுறையை அவ்வாறே வடித்தெடுதத்துக் காட்டும் பெருமையுமுடையது. இனி, "எனதுரை தனதுரையாக" (தேவா) என்றதனால் இஃது பிள்ளையாரது திருவாக்கின் நின்று இறைவர் வெளிப்படுத்திய திருவாக்கேயாம் என்ற மேன்மையும் உடையது. இதிற் கூறும் உண்மைகளிரண்டினையும் மக்கள் சிந்தித்துத் தத்தம் வாழ்க்கையின் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுதல் உய்தி தருவதாம்.

**மண்ணினிற் பிறந்தார்** - வினைக்கீடாகிய பிறவிகொண்டு நிலவுலகில் பிறக்கும் உயிர்கள்; ஏனை மேல்-கீழ் உலகங்கள், நல்வினை தீவினைப் பயன்களைத் துய்த்து மீள இங்கு வந்து பிறத்தற்கே ஏதுவாவனவன்றி இம்மண்ணுலகுபோலக் கன்மக் கழிவுக்கேதுவாயும் சிவபுண்ணியங்களைச் செய்தலால் முடிவில் பிறவி ஒழித்து வீடுபெறுதற்கேதுவாயும் உள்ளனவல்ல; ஆதலின் **மண்ணினிற் பிறந்தார்** என்றார். **பிறந்தார்** - என்றதனால் வினைக்கீடாக வரும் உடல்கொண்டு அவ்வினையை அனுபவித்துக் கழித்து வீடுபெறும் நிலையினால் வந்தோர் என்பது குறிக்கப்பட்டது. "மண்ணிலே வந்த பிறவியே" (253); "மானிடப் பிறவிதானும் வகுத்தது" (சித்தியார்) முதலிய திருவாக்குக்களின் கருத்துக்கள் இங்கு நினைவுகூர்தற்பாலன.

**பிறந்தார் பெறும் பயன்** - பிறவியில் வந்தோர் அப்பிறவியிற் செய்வனவற்றால் "மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே" (திருவா) செல்லும் வழி தேடிக் கொள்ளுதல் பிறந்தார் பெறும் பயனாவது. அது வீடுபெறும் சாதனமாகிய செயல். **பயன்** - பயனைப் பெறுவதற்குரிய செயல் - கடைப்பிடிக்கும் உறுதி - என்ற பொருளில் வந்தது.

**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்** - இதனை மாகேச்சுவர பூசை என்பர். பத்தராது திருவேடத்தைப் பரமேசுரனெனவே கண்டு வழிபடுக என்பது ஞானநூல் முடிபாகிய விதியாம். அவ்வாறு காண்டலாவது ஐயுறவின்றித் தெளிதல்; இவ்வழிபாடுகளுட் சிறந்த அங்கமாவது திருவமுதூட்டலாதலின் அதனை எடுத்துக் கூறினர். கூறினரேனும் இனம்பற்றி ஏனை உடை கொடுத்தல், பொன் மணி முதலாக வேண்டுவன கொடுத்தல் முதலிய வகைகள் எல்லாம் கொள்க; இளையான்குடி மாற நாயனர், சிறுத்தொண்ட நாயனர் முதலாகப் பத்தொன்பது பேர் இப்புராணத்துள் அடியார் வழிபாட்டினல் பிறவிப்பயன் பெற்று முத்தியடைந்தவர்களாய் வகுக்கப்பட்ட சரிதங்களின் நுட்பங்களெல்லாம் இங்குவைத்துக் காண்க.

**அண்ணலா ரடியார்தமை - அமுது செய்வித்தல்** - அடியவர்களுக் குண்ணின்று அமுது செய்து பயன் தருபவர் அண்ணலாராகிய சிவனேயாம் என்பது உண்மை. திருமூல நாயனர் "நடமாடுங் கோயில்" என்று அடியார்களைக் கூறுதலும், "நடமாடுங் கோயி னம்பர்க்கொன் றீயில்" என்று அடியார்க்கு ஈதல் அவருள் விளங்கும் நம்பராகிய சிவனுக்கீந்தமையேயாம் என்று கூறுதலும், "படமாடுங் கோயிற் பரமர்க்க தாமே" என்று அடியார்க்கீந்தது பரமர்க்கு ஆகும் என்று கூறுதலும் காண்க.

**அமுது செய்வித்தல்** - அமுது அளித்தல். **அண்ணலார்தமை - அடியார்தமை** - என்று பிரித்துக் கூட்டி இரண்டு பயனும் அடியார்க் கமுதளித்தலால் வரும் என்று உரைக்கநின்ற குறிப்பும் காண்க. **செய்வித்தல்** - என்றதனல் தம்மாலியலாத போது பிறரைக்கொண்டேனும் செய்வித்தலும் அடக்கிக்கொள்க.

**அமுது செய்வித்தல்** - பிறவிப்பயனுகிய உறுதிகளிரண்டனுள் சிறந்ததும் முந்தியதுமாம் என்பது குறிக்கப் பதிகத்துட்போலவே முதற்கண்வைத்துக் காட்டியருளினர். இவ்வுண்மை பதிகத்தின் முதற் றிருப்பாட்டினுற் போந்தமை காண்க.

**கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்** - இஃது பிறவிப் பயனுகிய உறுதிப்பொருள்களிரண்டனுள் எஞ்சிய மற்றென்றும். இது பதிகத்துள் இரண்டாவது முதல் பத்தாவது வரை உள்ள ஒன்பது திருப்பாட்டுக்களினுற் பெறப்படும் உண்மையாதல் கண்டுகொள்க; உறுதிபயக்கும் உண்மைகள் இரண்டனுள் ஒன்பது பாட்டுக்களுட் கூறப்பட்டது ஒரு பாட்டிற் கூறப்பட்டதற்கு ஒத்ததாகலின் அவ்வாற்றுலும் பின்னையதன் சிறப்புக் காட்டப்பட்டது. ஆசிரியரும் பதிகத்துக் கூறிய குறிப்புப்பெற இதனை "அடியார்தமை அமுது செய்வித்தல்" என்று மூன்று சீர்கொண்ட அடிப் பகுதியினும், முன்னையதனைக் "கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்" என ஐந்துசீர்கொண்ட ஓரடியினும் கூறியருளிய திறமும் கவிநயமும் காண்க.

**கண்ணினுல் - கண்டு** - கண்டு என்றலேயமையும்; கண்ணினுல் என்பது மிகையோ எனின், மிகையன்று; உடம்பு பெற்ற பயன் முழுவதையும் கண்ணிந்திரியம் ஒன்றே தருதல்பற்றி ஏனையவற்றினும் சிறப்புத் தோன்றக் கண்ணினுல் என்றூர். தம்பால் வந்த புலன்களையறியும் ஏனை யிந்திரியங்கள்போலன்றிக், கண்ணிந்திரியம் வாயிற் காட்சியிற் பொருளிற் சென்றியைந்தறியுமாதலின் அவற்றை வேறுபிரித்துக் கண்ணின் காட்சிக்குரிய தனிச் சிறப்பு உணர்த்தக் கூறியதுமாம். **அவர்** - அண்ணலார்; இறைவர். முன் கூறிய அண்ணலார் என முன்னறிசுட்டு. அவர் என்றதற்கு அடியார் என்று கூறுவாருமுண்டு. ஈண்டுப் பதிகத்துக் கூறப்படுவனவெல்லாம் இறைவரது விழாக்களேயாதலின் அது பொருந்தாதென்க. **ஆர்தல்** - காட்சியின் நிறைவு பெற்று மகிழ்தல்; "கண்ணுரக் கண்டுமென் கையாரக் கூப்பியும், எண்ணுர வெண்ணத்தா லெண்ணியும்" (அற். அந் - 85); "கண்ணுரக் காண்பார்க்கோர்

காட்சியான்" (தேவா). நல்விழா - விழா எனப்படும் ஏனையவெல்லாம் ஆரவார நீர்மையவா யொழிவனவும் பல்லாற்றானும் தீமைபயப்பனவுமாம்; சிவபெருமானது விழா ஒன்றே என்ஞான்றும் பெருநலமாகிய வீடு பேற்றுக்கு உதவுவது என்பார் நல்விழா என்றார்.

விழாப் பொலிவுகண் டார்தல் - இதுபற்றிப் பிள்ளையார் கேட்ப ஆளுடைய அரசுகள் அருளிச்செய்த திருவாரூர்த் திருவாதிரை விழாப்பற்றிய "முத்துவிதானம்" என்னும் திருப்பதிகமும், அதன் வரலாறும் இங்கு நினைவுகூர்தற்பாலன.

உலகர் முன் - எம்முன் என்னாது உலகர்முன் என்றது இச்செயலின் பயன் உலகவரை யறிவுறுத்தி யுய்வித்தலாதலின் என்க. "உலகவரறிய" (2979).

"வருக" என உரைப்பார் - பதிகத்தினுள் "போதியோ?" என்றருளிய வினாவுக்கு "வருக" என ஆணையிடுதலே பொருளாம் என்று ஆசிரியர் விளக்கிக் காட்டிய வாறும்; "பாவாய்! நீ, இவையிவை யெல்லாம் காணாது போதியோ? என்றதனால் மற்றிவற்றைக் காண்பதற்கு வருக என்பதே பொருள் என்றவாறு; எனவே உலகில் வருதற்குப் பயன் இவையிவையேயாம் என்ற முடிபும் உடன் போந்தவாறு காண்க. உரைப்பார் - உரைப்பாராகி; முற்றெச்சம். உரைப்பார்-என்னும் மெய்த்திருவாக்கு என வரும்பாட்டுடன் கூட்டி முடிக்க. 1087

2986. (வி - ரை) "வருக!" என உரைப்பாராகிய பிள்ளையாரது கருத்தினை ஆணையின் வைத்துச் செயற்படுத்தியது அப்பதிகத்தினுள் போதியோ? என்ற மூவெழுத்தோர் சொல்லாகிய சிவஞான வினாவாம் சிவ சிற்சத்தியேயாம் என்று காட்டி, அதன் செயலை விளக்கியது இத்திருப்பாட்டு. "சடையாரை முன்றொழுது" என்றதும் இக்குறிப்புத் தருவதாம்.

மன்னுவார் சடையாரை முன் தொழுது - மன்னு - கங்கையும் பிறையும் நிலை பொருந்திய. முன் தொழுது - பதிகம் தொடங்கும் முன் சடையாரைத் தொழுது அவரருளின் வழிப்பட்டு அவ் வருணிறைவினுள் தாம் அடங்கிநின்று பாடியருளினார் என்க. "கருணையின் பெருமையே கருதி" (2983).

"மட்டிட்ட" என்னும் - மட்டிட்ட என்று தொடங்கும்.

போதியோ...அமுதம் - அமுதம் - மிருத் - மரணம். அமிர்தம் - மரணத்தைப் போக்குவது என்பது சொற்பொருள். ஈண்டுப் பாவையார் மரணமாயின நிலைமையினைப் போக்கி உயிரினைப் புகுத்தி உடலை உருவாக்கியது "போதியோ" என்ற அம் மந்திரம் என்பது. மெய்த் திருவாக்கு எனும் - மெய் - என்றும் அழிவில்லாத நித்தப் பொருள் - சிவம்; வாக்கு - சிவ சிற்சத்தி; இருதலை மாணிக்கம் என்னும் நிலையில் இருதலையும் ஓங்காரத்தைப் பெற்றுப் பிரணவ சொரூபமாய் நின்ற மூன்றெழுத்து மகா மந்திரமாய் நின்றது பதிகத்துட் "போதியோ" என்ற சொல் என்க. என்னை? அதுவே வருக என்ற ஆணையாகிய சிவ சிற்சத்தியை உள்ளிட்டு அருளப்பட்டமையால் என்க. அன்ன - அத்தகைய என்ற குறிப்பும் காண்க. மெய்த் திருவாக்கு - பிள்ளையாரது திருவுருவம் முழுதும் சிவஞான மயமேயாய்ச் சிவநிறைவுள்ளதாதலின் அவரது வாக்கு இறைவர் திருவாக்கேயாயிற்று; "திருக்கடைக் காப்பதனில் விமல ரருளாலே, குரும்பையாண் பனையீனு மென்னும் வாய்மை குலவுதலால்" (2878); "எங்கள் சண்பை யாண்டகையார் கும்பிடவந் தணைகின் றார்தாம், மெய்த்தன்மை விளங்குதிருச் செவியிற் சார மேவுதலும்" (2376) என்பன முதலியவை காண்க.

துன்ன வந்து வந்து - துன்னுதல் - பிள்ளையார் திருவாக்கினின்றும் அவரது சத்பாவனையினால் அருளிய பதிகத்தின் ஒவ்வொரு பாட்டிலும் "போதியோ" என்று

சொல்லுந்தோறும் முறையாக வந்து வந்து; "வள்ளல் வரவர வந்தொழிந்தானென் மனத்தே, யுள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாந், தெள்ளுங் கழல்" (திருவா-கோத்-19); இவ்வாறு படிப்படியாய் அமுதம் நிறைந்த விளைவின் முறையை வரும் மூன்று பாட்டுக்களில் வைத்து "அடைவே" என்ற குறிப்புங்காட்டிக் கூறுவார்.

உருவமாய்த் தொக்கது - தொக்கது - படிப்படியாக வளர்ச்சி முறையிற் கூடிற்று; கருப்பத்துறிக் குழவிகள் வளரும் முறையை உடற்கூற்று நூலார் கூறுதல் காண்க; உருவமாய் - அந்த வளர்ச்சி முறையில் அங்கங்கள் உருவமெடுத்து; "கருவாகிக் குழம்பிருந்து கலித்து மூளை கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன் றாகி, உருவாகி" (தேவா - தாண் - ஆரூர் - 6); "என்போ டியைந்த வழக்கு" (குறள்) என்புழிப்போல், ஈண்டுப் பாவையாருக்கு இம் மறுபிறப்பின் வரும் உடம்பு முன் உடலின் எஞ்சிநின்ற எலும்பினைப்பற்றி உளதாயிற்று என்க. எலும்பே மக்களுடலுக்குத் தாரகமாய்த் தாங்கி நிற்றற் சிறப்பு நோக்கி அதனையே உடம்பென்பதும் வழக்காயிற்று. "என்பு முரியர் பிறர்க்கு" (குறள் என்றதும் காண்க.

அக்குடத்துள் - எலும்பும் சாம்பலும் நிறைத்ததும், பிள்ளையார் தம்பிரான் கருணையின் பெருமையே கருதி (2983) அருளுக்காற் (2984) கண்டதுமாகிய அந்த என அகரம் முன்னறிசுட்டு. அக்குடமே மறுபிறப்புக்குரிய கருப்பைக் குடமாக ஆயது என்பது மேல் "அக்குடத் தடங்கி" (2987) என்றும், "குடமுடைந்து" (2988) என்றும் தொடர்ந்து கூறும் குறிப்பினாலும் காண்க. உருவப் பகுதிகள் முறையே நிரம்பிக் கூடுதற்குப் புறக்காவலாக அமையுங் கருப்பை, முட்டையோடு, முதலியவை போல நின்றது அக்குடம் என்பது.

"இதனாற் பதிக முதலுமீறுங் கபாலீசர் திருநாமமும் போந்தவாறு காண்க" என்பர் ஆறுமுகத் தம்பிரானார். 1088

2987. ஆன தன்மையி னத்திருப் பாட்டினி லடைவே
போன வாயுவும் வடிவமும் பொலிவொடு நிரம்பி
ஏனை யக்குடத் தடங்கிமுன் னிருந்தெழு வதன்முன்
ஞான போனகர் பின்சமண் பாட்டினை நவில்வார்; ௧0அ௬

2988. "தேற்ற மில்சமண் சாக்கியத் திண்ணரிச் செய்கை
ஏற்ற தன்றென வெடுத்துரைப் பா"ரென்ற போது
கோற்றொ டிச்செங்கை தோற்றிடக் குடமுடைந் தெழுவாள்
போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள் போன்றாள்; ௧0௯0

2987. (இ - ள்) ஆன தன்மையில் - முன் நான்கு பாட்டுக்களிற் கூறிய அவ்வாறாயின தன்மையினாலே; அத்திருப்பாட்டினில் அடைவே - மட்டிட்ட என்று தொடங்கிய அத்திருப்பாட்டினைத் தொடர்ந்து முறையே பாட்டுத்தோறும்; போன... ...நிரம்பி - போயின பிராணவாயுவும் உருவம் பெறும் அங்கப் பகுதிகளும் அழகும் முறையாக நிரம்பி; ஏனை...எழுவதன் முன் - வேறாகிய அந்தக் குடத்தின்கண்ணே முன்னர்த் தொக்குக் கூடியிருந்து உரியவாறு வெளிப்பட்டு எழுவதன் முன்பு; ஞானபோனகர்...நவில்வார் - ஞானவமுதுண்டவராகிய பிள்ளையார் பின் முறையாக அருளும் சமண் பாட்டாகிய பத்தாவது திருப்பாட்டினை அருளிச் செய்வாராய்; ௧0அ௬

2988. (இ - ள்) தேற்றமில்...என்றபோது - தெளிவாகிய அறிவில்லாத சமண சாக்கியர்களாகிய தீயவர்கள் இந்தச் செய்கை ஏற்றதன்று என்று எடுத்துச் சொல்வார்

கள் என்று அத்திருப்பாட்டினைப் பாடியருளியபோது ; கோற்றொடிச் செங்கை தோற்றிட - முன்னர் வளையலணிந்த செங்கை வெளிப்பட்டுத் தோன்றியிட ; குடம் உடைந்தெழுவாள் - அந்தக் குடம் உடைந்து மேல் எழுவாராகிய பூம்பாவையார் ; போற்று...போன்றாள் - போற்றும் தாமரை முகை இதழ் அவிழ்ந்து அதனின்றும் எழுகின்ற திருமகளைப் போன்றிருந்தார். ௧௦௯௦

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2987. (வி - ரை) ஆன தன்மையின் - முன் (2983) நான்கு திருப்பாட்டுக்களிற் கூறியபடி நிகழ்ச்சிகள் ஆயின தன்மையினால் ; தன்மை காரணமாக.

அத்திருப் பாட்டினில் - அந்த - முன் பாட்டிற் கூறிய - மட்டிட்ட என்று தொடங்கும் திருப்பாட்டினில். அடைவே - முறையாக ; ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து.

போன வாயு - முன்னர் விடத்தினால் வீந்து, ஆவி தங்குபல் குறிகளு மடைவில வாகிய (2960) நிலையிற் பிரிந்துபோன பிராணவாயு ; உயிரிருத்தற்குச் சிறந்த குறியாதலின் அதுவே யான்மா என்பாருமுண்டு ; போதம் 3-ம் சூத்திரம் பார்க்க. "என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்கு" (தேவா).

வடிவம் - உருவப் பகுதிகள் ; பொலிவு - முன்னைய உருவ நலனிலும் சிறந்த அமைப்பின் அழகு.

ஏனை அக்குடத்து அடங்கி - எலும்பும் சாம்பலும் நிறைத்துக் காணப்பட்ட மட் குடமே பற்றுக்கோடாகப், பிள்ளையார் பாவையாரின் மறுபிறப்புக்குரிய உடம்பு தங்கி உருவாகிப் புறப்படும் கருக்குடமாக அருளாற் கண்ட அக்குடத்தினுள் நிறைவுற்று அடங்கி.

முன் இருந்து எழுவதன் முன் - முன்னர் அடங்கி நிரம்பியிருந்து பின் உரியவாறு வெளிப்படுவதன் முன்; குழவிகள் பத்துமாத வளர்ச்சியினைத் தாயின் கருக்குடத்தில் நிறைவாகப் பெற்று அதனுள் அடங்கிப் பின் வெளிப்படுமாறுபோல. உரிய வளர்ச்சி முழுதும் நிரம்பிய பின்னரே குழவி கருக்குடத்தினின்றும் வெளிவரவேண்டுமென்ற உடல்நூல் விதிக் குறிப்புப் பெற நிரம்பி - முன் - இருந்து என்றார்.

எழுவதன் முன் - நவில்வார் என்க - பதுப் பாட்டும் நிரம்ப உருவமும் பொலி வும் நிரமபி வெளிப்படும் நிலையாதலின் எழுவதன்முன் அவ்வாறு நிரம்பும் பத்தாவது பாட்டினை நவில்வாராகி ; சமண் பாட்டு - பிள்ளையார் பதிகங்க ளொவ்வொன்றினும் பரசமய நிராகரணம்பற்றிச் சமண புத்தர்களைக் கூறும் பத்தாவது பாட்டு ; இதற்கு இக்காரணம்பற்றிச் சமண் பாட்டு என்று பெயரிட்டருளினர் ஆசிரியர். இதன் குறிப் டாகிய கருத்தை "நாதர்நெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும், போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கு, மேதமே யெனமொழிந்தார்" (1977) என்று தொடக்கத்திற் காட்டியருளியமை காண்க. நவில்வார் - நவில்வாராகி ; முற்றெச்சம். நவில்வார்-என்றபோது என வரும்பாட்டுடன் முடிக்க, நவிலும் திறம் வரும் பாட்டில் காண்க.

போன வாயுளும் என்ற பாடம் பிழை ; அதனை மேல் (2989) கூறுதல் காண்க.

1089

2988. (வி - ரை) தேற்றமில்...எடுத்துரைப்பார் என்றபோது-இஃது "உரிஞ் சாய வாழ்க்கை" என்ற (10) பதிகப் பாட்டின் கருத்துரைத்தது.

தேற்றமில் - உண்மை தெளியாத - உண்மை யின்னதென்று தெளிதலில்லாத.

தீண்ணர் - குண்டர் ; கீழ்மக்கள் ; பொய்யினில் விடாப்பிடியுடையோர்.

**இச்செய்கை ஏற்றதன்றேன** - நிகழ்ச்சியின் முன், இது செய்யவியலாததொன்று எனவும், அது கண்டபின், எமது சமய மேன்மைகளின் புராட்டுகளுக்குப் பொருந்தாது எனவும் உரைக்கின்றது. எடுத்துரைப்ப என்ற பதிகப் பகுதிக்கு ஏற்றதன்றென எடுத்துரைப்பார் எனப் பொருளுரைத்துக் காட்டியவாறு.

**என்றபோது** - என்ற பாட்டினை முடித்தருள்கின்றபோது.

**செங்கை தோன்றிடக் குடம் உடைந்து எழுவாள்** - குழவிகள் பிறக்கும்போது தலை - கை - கால் என்ற ஏதேனும் ஒரு அவயவம் முதலில் வெளிப்படப் பின்னர் உடல் முழுதும் தோன்றுதல் உடல்நூல் உண்மை. அன்றியும், குழவியின் தோற்றத்துக்கு முன் அதன் உடலை முழுதும் தன்னுள் ஊறிய நீரினுள்ளே கொண்ட பனிக்குடமுடைந்து, பின் குழவி பிறக்குந்நிலை வரும் என்பதும் உடல்நூல் உண்மை. இவையிரண்டன் குறிப்புப்பட இங்குக் கை தோன்றிட என்றும், குடமுடைந்து எழுவாள் என்றும் கூறியருளிய கவிநயம் காண்க. இங்குச் சமண் பாட்டுடன் பதிகப் பாட்டான பத்தும் பாடவிரம்பிய பின் குடத்தினின்றும் பாவையாரின் அணியுடைய செங்கை முன் வெளிப்பட்டுத் தோன்றியது. அதன்பின் அக் குடமுழுது முடைந்து அவாது உருவமுற்றும் முறையே எழுந்து தோன்றிற்று என்க.

**போற்று** - யாவரும் போற்றும்; துதிக்கும். அதுவரை தன்னகத்துள் வைத்துக் காத்துவந்த என்ற குறிப்புமாம்; இப்பொருளில் **போற்றுதல்** - காத்தல் என உரைக்க.

**தாமரைப் போதவிழ்ந்து எழுந்தனள் போன்றுள்** - தாமரை குடத்துக்கும், திரு பாவையாருக்கும் மெய்பற்றியும், திரு தாமரையிதழ் அவிழ்ந்தெழுதல் பாவையார் குடமுடைந் தெழுதலுக்கு வினைபற்றியும் வந்த உவமங்கள்; இங்குப் பாவையார் முன் உதித்த நிலையினை "மனைவியார் வயிறெனுங் கமலத், தரிய பூமக ளெனவொரு பெண்கொடி யுதித்தாள்" (2938) என்ற கருத்தினையே தொடர்ந்து இம் மறுபிறப்பினும் கூறியதுடன் அதனினும் இதன் உயர்வு புலப்படக் கூறிய நிலையும் கண்டுகொள்க; குடமுடைந்த செயல் சிதைவு காட்டாது போதவிழ்தலைப் போன்றது என்ற மென்மை தோன்று நயமும் காண்க. தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள்-திருமகள்; இங்குச் சிவத்திருவினைப் பெறுகின்ற மகள் என்பது குறிப்பு. "தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினுள்" (3015) என்பது காண்க. **தாமரைப் போதவிழ்ந்து எழுந்தனள்** - "இதழ்க் கதவந் திறந்தோ ?" (திருக்கோவை). **எழுந்தனள்** - தாமரையில் முன் எழுந்தனளாகிய திருமகள்; **போற்று தாமரை** - என்றதனுல் அன்பானினைந்து போற்றுமவர்களது உள்ளத்தாமரை தோறும் எழுந்து அருளும் சிவசத்தி என்ற குறிப்பும் காண்க. **அவிழ்ந்து** - அவிழ; அவிழ்ந்த பின்.

எழுந்தனளை என இரண்டனுருபு விரிக்க. எழுந்தனள் - பெயர். 1090

2989. எடுத்த பாட்டினில் வடிவுபெற், றிருநான்கு திருப்பாட்
டடுத்த வம்முறை பன்னிரண் டாண்டள வணைந்து,
தொடுத்த வெஞ்சமண் பாட்டினிற் றேன்றிடக் கண்டு
விடுத்த வேட்கையர் திருக்கடைக் காப்புமேல் விரித்தார். ௩0௯௯

(இ - ள்) எடுத்த...பெற்று - மட்டிட்ட என்று தொடங்கிய முதற் பாட்டினில் பாவையார் உருவத்தைப் பெற்று; இருநான்கு...அணைந்து - அதன்மேல் அருளிய எட்டுத் திருப்பாட்டுக்களின் உருவெடுத்த நிலையினையடுத்த அம்முறையே பன்னிரண்டு ஆண்டுகளுக்குள்ள வளர்ச்சியினைப் பொருந்தி; தொடுத்த...தோன்றிட - தொடுத்த

கொடிய சமணர் பாட்டினை அருளிய அளவினில் குடமுடைந்து வெளிப்பட்டுத் தோன்றியிட ; கண்டு - பார்த்து ; விடுத்த...விரிப்பார் - எவ்வித விருப்பும் இல்லாதவராகிய பிள்ளையார் அதன்பின் திருக்கடைக்காப்பினை விரித்துக் கூறியருளினார்.

(வி - ரை) இப்பாட்டினால் குடத்தினை நோக்கிப் பாவையாரை விளித்துப் பதிக முழுமையும் அருளிய முறையில் குடத்தினுள் நிகழ்ந்த விளைவுகளை அம்முறை தொகுத்துக் காட்டியருளியவாறு.

**எடுத்த பாட்டு** - தொடங்கிய "மட்டிட்ட" என்ற முதற்பாட்டு.

**வடிவு பெற்று** - உடல் தீயிடையிட் டெரிக்கப்பட்டதனால் வடிவமழிந்து எலும் புஞ் சாம்பலுமாகிய உருவுடன் நின்றது. அதனை மீள உற்பவிக்கும் அருணோக்கினாற் பிள்ளையார் காணவே உயிரற்ற அவ்வெலும்புருவமும் தன்மாத்திரைகள் முதலியவற்றாலாகிய நுண்ணுடலுள் ஒடுங்கிப், பின்னர் உயிர் தரிக்கத்தக்க கருவுருவாகிய வடிவம் பெற்று என்க. "உள்ளதே தோற்ற உளமனுவாய்ச் சென்றமனந், தள்ள விழுங்கரு விற்றான்" (போதம் - 2-கு) என்றபடி, எலும்புஞ் சாம்பலுங் கருவடிவாகியதும், அதனுள் உயிரினைப் புகுத்தியதும் "போதியோ" என்னும் மெய்த்திருவாக்கெனு மமுதமென்பது முன்னுரைக்கப்பட்டமை (2986)யால், இங்கு "வடிவு பெற்று" என்றமட்டிற் கூறியமைந்தார். இங்கு வடிவு என்றது புனருற்பவத்தில் வரும் உடலின் முளையாகி உயிருடன் கூடிய வடிவத்தை.

**இருநான்கு...அணைந்து** - இருநான்கு திருப்பாட்டு - பதிகத்துள் இரண்டாவது பாட்டு முதல் ஒன்பதாவது பாட்டு வரை உள்ள எட்டுப் பாட்டுக்கள் ; அடுத்த அம்முறை-பாட்டுக்களின் உட்குறிப்பாகிய பொருள்களால் வந்து பொருந்திய அம்முறைப் பட்ட வளர்ச்சி பெற்று.

**பன்னிரண்டு ஆண்டு அளவு அணைந்து** - அம்முறை வளர்ச்சியானது கருவடிவாகியது தொடங்கி அன்று முதலாகப் பன்னிரண்டு ஆண்டுகள் முறையாக வளர்ச்சி பெற்று ; எனவே, பாவையாருக்கு விடந்தீண்டிய இறப்பு எழியாண்டளவில் நிகழ்ந்ததென்று (2944) முன் அறியப்பட்டமையின், அது நிகழ்ந்து அப்போது ஐந்து ஆண்டுகள் கழிந்தன என்பதும், இந்த ஐந்து ஆண்டுகளளவும் சிவநேசர் பாவையாரின் எலும்பு நிறைத்த குடத்தினையே அவராகக் கொண்டு உபசரித்து நிகழ்ந்தாரென்பதும் கருதப்படும். அன்றியும் பாவையாருக்கு எழியாண்டெய்தச் சிவநேசர் மகிழ்ந்த செய்தியாய நாள்களிற் பிள்ளையார் ஆலவாயிற் சமணரை வெற்றிகொண்ட செயல் நிகழ்ந்தகாலை அவர் பத்து வயதுப் பிராயத்தினர்போலும் என்பதும் கருதப்படும். "புண்ணியப் பதினுறாண்டு பேர்பெறும் புகலி வேந்தர்" (3007) என்று இங்குக் கூறுதலினால் இவ்வாறு கருதப்பட்டது. "பானல் வாயொரு பாலனீங்கிவன்" (தேவா) என்று பிள்ளையார் தம்மைப்பற்றி அங்கு அறிவித்தருளுதலும் குறிக்க.

**பன்னிரண்டாண் டளவு அணைந்து** - பாவையார் விடத்தினின் வீந்தபின் இதுவரை உள்ள ஐந்தாண்டுகளின் வளர்ச்சியினையும்பெற்றுப் பன்னிரண்டு ஆண்டு மங்கைப் பருவத்திற் றேன்றினர் என்க. என்னை? இக்கால முழுதும் சிவநேசர் பாவையார் உள்ளாரெனவே கருதி உபசரித்து வந்தமையால் அவர் கருதியதற்கேற்ப அவ்வளர்ச்சி பெறுதல் தகுதியாமென்க. அன்றியும், பிள்ளையாரை மணத்தல் கருதிச் சிவநேசர் "காழிநா டுடையவர்க் கடியேன், பெற்றெடுத்தபூம் பாவையும்...கொடுத்தனன்யான்" (2952) என்று உறுதிகூறி மொழிந்தமையாலும், அவள் விடத்தால் வீந்தபின்னரும் "கழுமலத் தலைவர் சாரும்அவ் வளவும் உடல்தழ விடையடக்கிச் சேர வெண்பொடு சாம்பல் சேமிப் பதுதெளிந்து" (2963) அக்குடத்தை அவராகவே கொண்டு கன்னி

மாடத்து வைத்து உபசரித்து வந்து, அவர் வந்து சாரும்போது அக்குடத்தைப் பாவை யாராகவே அவர்வசம் கொடுத்தல் கருதியமையாலும், பெண்களின் மணப்பருவமாகத் தமிழ் இலக்கணம் வகுக்கும் நிலையிற் பன்னிரண்டாண்டு அளவு சார்கின்றமையாலும் சடையாரின் கருணையின் பெருமையினாலே அவ்வுடலிலே மீளப் புனருற்பவம் நிகழ் இன்றமையாலும், பிறவாற்றானும் இடைப்பட்ட ஆண்டுகளின் வளர்ச்சியினளவும் பெற் றுப் பன்னிரண்டாண்டளவு அணைந்தனர் என்பதாம்.

**தொடுத்த வெஞ்சமண் பாட்டினில் தோன்றிட** - தொடுத்த - பதிகங்களிற் பத் தாவது பாட்டிற் பரசமய நிராகரிப்புக் கூறும் நிலை தொடுத்த என்க. தொடுத்தல் - மேற்கொள்ளுதல். தொடுத்த - பாட்டு - என்று கூட்டுக. தொடுத்த வெஞ்சமண் என்று கூட்டி சைவத் திறத்தை இழித்தல் செய்வதனைத் தொழிலாகக் கொண்ட பகைமை தொட்ட கொடிய சமண் என்றுரைத்தலுமாம். சமண் பாட்டு - முன்பாட்டி லுரைத்தவை பார்க்க.

**சமண் பாட்டினிற் றோன்றிட** - சமண் பாட்டாகிய பத்தாவது பாட்டு அருளிய வுடன் குடத்தினின்றும் வெளிப்பட. பாட்டுக்கள் தோறும் வரிசைப்பட ஐப்பசி முத லாக அவ்வம்மாதங்களையும் அவற்றில் நிகழும் நல்விழாப் பொலிவுகளையும் கூறியருளினா ராதலின் அம்முறையிற் பத்துப் பாட்டுக்களுக்குப் பத்துமாதங்கள் சென்று முறைபட் டன. பத்துமாதங்க ணிறைவுற்றகாலைக் குழவிகள் குடமுடைந்து தோன்றுமியல்பு போலவே ஈண்டுப் பத்து மாதங்களைக் குறித்த பத்துப் பாட்டுக்களும் நிறைவாயின போது குடமுடைந்து பாவையாரும் எழுந்து தோன்றினார் என்ற உள்ளுறையாகிய, தகுதியும் கண்டுகொள்க.

**கண்டு** - முன்னர் (2983) என்பு நிறைந்த மட்குடத்தைக் கண்டு தம்பிரான் கருணையின் பெருமையே கருதிப் பதிகமருளிய பிள்ளையார், அதனிறுதியில் இப்போது தோன்றிடக் கண்டு என்க. பின்னர்க் கண்ணுதல் கருணைவெள்ள மாயிர முகத்தாற் கண்டார் (3007) என்பதும் காண்க.

**விடுத்த வேட்கையர்** - வேட்கை - விருப்பு; வேட்கை விட்டவர் என்க. "வென்றவைம் புலனான் மிக்கீர்" (401) என்புழிப்போலக் காண்க. பிள்ளையார் இவ் வருட்செயலை எவ்வாறாயின வேட்கையும்பற்றிச் செய்தாரல்லர் என்பது குறிப்பு. பின் நிகழ்ச்சியும் காண்க. வேட்கை விட்டார் என்னவே வெறுப்புமிலர் என்பதும் பெறப்படும். "வேண்டுதல் வேண்டாமை யில்லா னடிசேர்ந்தார்" (குறள்) என்ற கருத்தும் குறிக்க. "வேட்கைவிட் டார்நெஞ்சின், மூடத்து ளேநின்று முத்தி தந் தானே"—(திரு மந். 8 - 493); "ஆராவியற்கை யவாநீப்பி னந்நிலையே, பேரா வியற்கை தரும்" (குறள்)

**திருக்கடைக்காப்பு மேல் விரித்தார்** - பதிகப் பயன் கூறிப் "பூம்பாவைப் பாட் டாகச் செந்தமிழால் - நலம் புகழ்ந்த பத்து" என்று பதிகம் நிறைவாக்கியருளினார். விரித்தல் - நிறைவாக அருளுதல்.

விதித்தார்—என்பதும் பாடம். 1091

திருமயிலை "தேனமர் பூம்பாவைப் பாட்டு"

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்! (1)

மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய் ! (2)

வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகிற்
றுளக்கில்கபா லீச்சரத்தான் றொல்கார்த் திகைநாட்
டளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் ! (3)

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய் ! (4)

மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடுந்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய் ! (5)

மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நட்மாடல் காணாதே போதியோ பூம்பாவாய் ! (6)

மலிவிழா வீதி மடநல்லார் மாமயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய் ! (7)

தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய் ! (8)

நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
முற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்ந்தான்
பொற்றப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்! (9)

உரிஞ்சாய வாழ்க்கை யமணுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய் ! (10)

கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழால்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும்வல்லார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

**பதிகக் குறிப்பு :—**இத்திருப்பதிகக் கருத்தும் உட்கிடையும் பொருளும் ஆசிரியர் தேற்றமாக எடுத்துக்காட்டி முன் (2985) உரைத்தருளியவாற்றாற் கண்டுகொள்க.

குறிப்பு: இப்பதிகம் சைவத்திறத்தின் அடிப்படையும் உயிர்நாடியுமாகிய பெரும் பொருளை உலகறிய எடுத்து உபதேசிக்கும் பெருமை வாய்ந்தது ; இதனை யாவரும் நன்கு பயின்று அது காட்டுங் குறிக்கோளின்வழி ஒழுகி வருதல் மனிதப் பிறவியின் உறுதியாகிய பயனையடைந் துய்வதற்கு வழியாகும். மக்கள் உணர்ந்து ஒழுகி உய் வார்களாக.

**பதிகப் பாட்டுக் குறிப்பு :—**(1) **மட்டு** - மணம். **மட்டிட்ட புன்னை** - மண மிகுந்த புன்னைமலர். "மன்றல் விரவும் புன்னை மணம் (1529) ; புன்னை நெய்தற் கருப்பொருள். **கானல்** - மணற்கழிக் கானல் ; காடுபோன்ற சோலை. **மடமயிலை** - **மடம்** - அழகு. **கட்டு இட்டம் கொண்டான்** - **கட்டு** - கோயில் ; மயிலைக்கட்டு - மயிலாகிய அம்மையின் பிணைப்புக்கு என்பர் வ. சு. செ. இட்டம் கொள்ளுதல் - விரும்பி வீற்றிருத்தல். **அமர்ந்தான்** - என்றது மக்கருத்து. **ஒட்டிட்ட பண்பு** - சித்துப் பொருளிரண்டு பிரிக்கலாகா வகையிற் கூடிய அத்துவிதக் கலப்பு. "மெய்ஞ்ஞானத் தாணுவினோ டத்துவிதம்", "ஒட்டி" (போதம் - 2-1) ; தாவரங்களுள் ஒட்டு என வழங்கும் வழக்கும் காண்க. "உணரப் படுவாரோ டொட்டி வாழ்தி" (தேவா) ; **உருத்திர பல்கணத்தார்** - மாகேசுரர்களாகிய அடியவர்கள். "மதிசூடு மண்ண லாரடி யார்" (2985) என ஆசிரியர் இதற்குப் பொருள் காட்டியருளினர். **அட்டு இட்டல்** - திருஅமுது அமைத்தூட்டுதல் ; இடல் என்பது எதுகையோசை கருதி இட்டல் என நின்றது ;—(2) **மடநல்லார்** - ஈண்டு மடமை - பெண்மைக்குண நான்கனுள் ஒன்று. கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை என்றும், அறிந்தும் அறியாள்போன் றிருத்தல் என்றும் உரைப்பர் ; **கைப்பயந்த (நீறு)** - கைவந்த ; தவறாது பயன் தந்த. திருநீற்றுப் பதிகக் கருத்தும் வரலாறும் கருதுக. பின்னர்க் கைப்பூசு நீற்றன் என் றதும் காண்க. **ஐப்பசி ஓணவிழா** - இது முன்னை நாளில் இங்கு ஐப்பசி மாதம் திருவோண நாளிற் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் கொண்ட விழா என்பது தலவரலாறு; இராமர் பூசித்து ஐப்பசி ஓண நாளில் விழா இயற்றினர் என்பது தல புராணம். ஓணம் திருமாலுக்குரிய நாளாதலும் காண்க (ஓணப்பிரான் - விட்டுணு). **அருந்தவர்கள் துய்ப்பனவும்** - அடியார்கள் அமுது செய்தல். இஃது இவ்விழாவிற் கின்றியமையாத சிறந்த பகுதிபோலும் என்பது ஓண விழாவும்-துய்ப்பனவும் என்று இணைத்துக் கூறியவாற்றாற் கருதப்படும். இவ்விழாவினைப்பற்றிக் கல்வெட்டு, காட்டு நடப்புச் சரித வரலாறு முதலிய சான்றுகளாலும், ஆகம விதிகளாலும் இன்னவா றென்று கண்டு மீளக் கொண்டாடுதல் சிறந்த சிவபுண்ணியமாம் ;—(3) **வண்மறுகு** - வளமிக்க வீதிகள். முன் ஆவண வீதிகளைப்பற்றி (94)க் கூறியதும், அதிபத்த நாய னார் புராணத்துட் கூறும் (3 - 4) நகர வளங்களும் இங்கு நினைவுகூர்தற் பாலன ; மயிலாபுரி அந்நாளிற் கடற்றுறைமுகப்பட்டினமாகிக் கலங்களின் வாணிபம் பெருக்கிய நிலையும் (2932) கருதுக. **தொல்கார்த்திகை நாள்** - விளக்கீடு என்க. **தொன்மை** யாவது சிவாகமங்களாலும் மாபுராணங்களாலும் விதிக்கப்படுதல் ; "வருதேண் மதி

யிற் கார்த்திகைநாண் மல்கும் விழைவிற் பூசித்துக், கருதார் புரங்க ணகைத்தெரித்த கடவுண் மகிழ விளக்கிடுவோர் " (பேரூர்ப் புராணம் - விசேடபூசைப் படலம் - 11). **விளக்கீடு** - விளக்குக்களை இட்டுக் கொண்டாடும் விழா. விளக்கிடு என்றது முதனீண்டு வந்த தொழிற்பெயர். ஆகுபெயராய் அத் தொழினிகழும் விழாவைக் குறித்தது ; " கார்த்திகை விளக்கிட் டன்ன " - (சிந்தாமணி 256) ;—(4) **ஊர் திரைவேலை உலாவும்** - வேலைத்திரை ஊர் உலாவும் என்க (கடல் அலைகள் ஊரினுக்குள் ஏறி உலாவுகின்ற) ; நகர் கடல்அலை விளிம்பினுக்கருகு அமைக்கப்பட்ட நிலை. **சூர்தரு... சேரி** - வேல் முதலிய படை பயின்று வல்ல இளைஞர்கள் வெற்றிகொள் சேரி ; திருவிழாக்களிற் சேரிப்போர் நடப்பது வழக்கம். " ஓணநன்னாள், மறங்கொள்சேரி மாறுபொருசெரு " (மதுரைக்கா - 591). **ஆதிரை நாள்** - இது மார்கழி மாதத்தில் நிகழ்வது. " அத்தன் ஆரூ ராதிரை நாளா லதுவண்ணம் " (அரசுகள்) ;—(5) **மைப்பூசும் ஒண்கண்** - மைதீட்டிய கண் ; **நெய்ப்பூசும் ஒண்புழுக்கல்** - நெய் விரவிய சோறு. இதனைப் படைத்து அடியார்க்கீந்து கொண்டாடும் சிறப்பு ; இது தைப்பூச விழாவின் சிறந்த பகுதி ; " உருக்குறு நறுநெய் யுள்ளூறப் பெய்த, புழுக்கல் " (பெரும் - க-சம - 280);—(6) **மடல்** - தென்னையின் நீண்ட மடல். **மாசிக் கடலாட்டு** - மாசி மாதத்தில் மகநாளில் கடற்கரையில் இறைவர் தீர்த்தமளிக்கும் விழா. **கடலாட்டு** - கடலிற் குளித்தல். **நடமாடல்** - பற்பலரும் வந்து குழுமி ஆடுதல் ; பாட்டும் ஆட்டும் விரவி வரும் கூத்துவகை. " வலம்வந்த மடவார்க ணடமாட " ; "காந்தார மிசையமைத்துக் காரிகையார் பண்பாடக் கவினார் வீதித், தேந்தாமென் றரங் கேறிச் சேயிழையார் நடம்பயிலும் " (தேவா - ஐயாறு) என்பனவற்றால் நடமாடல் விழாவின் பகுதியாமென்பது குறிக்கப்படுதல் காண்க. **அடிபரவி** - என்றதனாற் பாடல் குறிக்கப்பட்டது ;—(7) **மலிவிழா வீதி** - விழாக்கள் நிகழ்தல் நகர வீதிகளுக் குரிய மங்கலமாம் ; " வீதிகள் விழாவி னார்ப்பும் " (84), இவை உலகம்பற்றிய விழாக்களின் சிறப்பு. **கலிவிழா** - கலி கடியச்செய்யும் இறைவரது ஆடல் ; "பெரு மயானத்து நடம் புரிவார் " (2978) ; " ஆடல் மேவினர் " (2980) ; **பலி விழா** - உருத்திர பலி என்னும் திக்குப் பலியுடன் நிகழும் பெருவிழா ; **ஒலி விழா** - பல் லியங்களும் பிறவும் முழங்கும் திருவிழா ;—(8) **பதினெண் கணங்கள்** - சிவ கணங் கள். **அட்டமி நாள்** - வைகாசியில் கணங்களின் வழிபாடாக முன்பக்க அட்டமிநாளிற் செய்யும் விழா ; இதுவும், மேற்பாட்டில் வரும் பொற்றாப்பும், பெருஞ் சாந்தியும் இந் நாட் பலபதிகளில் வழங்காதொழிந்தன. அவற்றைக் கண்டு மீள நிகழ்வித்தல் சிவபுண் ணியமும் மக்களுய்யும் வழியுமாம்; **கண்ணாரக் காணாதே** - இதனைக் " கண்ணி னலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்" (2985) என்று ஆசிரியர் எடுத்துப் பொது இலக்கண மாகக் காட்டியருளியமை காண்க ;—(9) **முற்றங்கு உணர்கிலா** · அளவு காணாத ; **பொற்றப்பு** - **தாப்பு** - தாம்பு என்பது தாப்பு என நின்றது. **தாம்பு** - கயிறு. பொற் றப்பு-பொன்னூசல் என்பர். இது ஆனி, ஆடி மாதங்களிலும் மேல்வரும் பெருஞ்சாந்தி விழா ஆவணி மாதத்திலும் நிகழ்வன போலும் ;—(10) இதனைச் சமண் பாட்டென்று பெயரிட்டுக் கூறினர் ஆசிரியர் ; **உரிஞ்சாய வாழ்க்கை அமணும், உடையைப் போர்க்கும் இருஞ்சாக்கியரும்** என்க - **உரிஞ்சாய வாழ்க்கை**யாவது உடையொழிந்த நிலையைத் தவமென்னும் சமணர் கொள்கை ; **உடையைப் போர்க்கும்** - என்பது குறித்த உடை கொள்வதே தவமென்னும் புத்தர் கொள்கை. **உரிஞ்சல்** - அகற்றுதல்- நீக்குதல். **எடுத்துரைப்ப** - "இச்செய்கை ஏற்றதன்றென எடுத்துரைப்பார்" (2988) என இதன் பொருளை ஆசிரியர் விரித்தருளினர். இவ்வமணர் முதலியோர் இச்செயல் காண்பதற்கு வந்து கூடிய நன்றியில் சமயத்துள்ளவர்களும், அவர்களை யுள்ளிட்ட அவ

ரனையோரும். பெருஞ் சாந்தி - இதனைப் பவித்திரோற்சவம் என்பர் ; கும்பாபிடேகம் என்றுரைப்பாருமுண்டு ;—(11) பூம்பாவைப் பாட்டு - இப்பதிகத்துக்குப் பிள்ளையாரிட்ட பெயர். " பல்பெயர்ப் பத்தும் வல்லார் " - " வழிமொழிகள் " என்பன முதலிய இடங்களிற் பதிகப் பெயர் கூறுதல் காண்க. ஞானசம்பந்தன் - இங்குச் சிவஞான சத்தியின் செயலாக நிகழ்தலின் இப்பெயராற் கூறினார். இதனைப், போற்றினார் ஞான சம்பந்தர் (2976) - ஞானபோனகர் - நவில்வார் (2987) என்று எடுத்துக்காட்டியருளியது காண்க.

தலவிசேடம் :—திருமயிலாப்பூர் - தொண்டை நன்னாட்டில் 24-வது பதி ; திருமயிலாப்பு என்றும், திருமயிலை என்றும் வழங்கப்படும் ; " மயிலாப்புள்ளே " ; " மடமயிலை " (தேவா), கபாலீச்சரம் - இங்குத் திருக்கோயிலின் பெயர் ; உமையம்மையார் மயிலுருவெடுத்து இறைவரைப் பூசித்த பதியாதலின் திருமயிலை எனப் பெயர் பெற்றது ; இத்திருக்கோலம் கோயிலினுள் வெளிச்சுற்றில் புன்னைமரத்தடியில் (தலமரம்) தனிக் கோயிலாக அமைக்கப்பெற்று வழிபடப்பெறுகிறது. இராமர் பூசித்துப் பேறு பெற்ற ஐப்பசி ஓணத்தில் விழாச் சிறப்புச் செய்தனர் என்பது தலபுராணம். அதுவே பதிகம் 2-ம் பாட்டிற் குறிக்கப்பட்டதென்பர். பிரமன் முதலிய தேவர்களும் பூசித்த வரலாறுகளும் கேட்கப்படும். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் இத்தலத்தில் அவதரித்த வாயிலார் நாயனார் " மறவாமை யானமைத்த மனக்கோயிலினுள் " இறைவரை அமைத்து வழிபட்டுத் திருவடியடைந்த பெருமை மாபுராணத்துக் காண்க. " துறைக்கொண்ட செம்பவள மிருளகற்றுஞ் சோதித் தொன்மயிலை வாயிலா னடியார்க்கு மடியேன் " (திருத்தொண்டத் தொகை) என்பது தேவாரம். இவரது சந்நிதி கற்பகாம்பாள் சந்நிதிக்கு எதிரில் வடக்குப் பார்த்த தனியாலயமாக உள்ளது. ஆளுடைய பிள்ளையார் சிவநேசர் பொருட்டு எலும்பைப் பெண்ணாக்கிய வரலாறு முன்னர் இப்புராணத்துள் விரிக்கப்பட்டதும் காண்க. பூம்பாவையார் குடத்தினின்றும் தோன்றும் திருவுருவமும் பிள்ளையார் பதிகம் பாடும் திருவுருவமும் உடனாகத் தனிக் கோயிலாக வெளிச் சுற்றினுள் மேற்குக் கோபுரவாயிலை அடுத்து வடபுறம் அமைத்து வழிபடப்பட்டு வருவது தரிசிக்கத் தக்கது ; ஆளுடைய அரசுகளும் வந்து இங்கு வழிபட்டமை அறியப்படும். திருவள்ளுவர் இங்கு அவதரித்துத் திருக்குறள் பாடிய பெருமையும் உடைய பதி. திருவள்ளுவர் தனிக்கோயில் நகரின் வடகீழ்ப் பக்கம் கடற்கரையருகு உள்ளது.

சுவாமி - கபாலீசுவரர். சுவாமி மேற்குமுகமாகவும் அம்மை தெற்குமுகமாகவும் எழுந்தருளியுள்ளார்கள். அம்மை - கற்பகவல்லியம்மை ; தலமரம் - புன்னை (பதிகத்துள் "மட்டிட்ட புன்னை" என்று போற்றப்பட்ட பெருமை காண்க) ; தீர்த்தம் - கபாலி தீர்த்தம் ; பதிகம் 1.

இது சென்னை மாநகரின் (டவுன்) தெற்கில் 3 நாழிகையில் உள்ளது. சென்னைப் பட்டினத்தின் ஒரு பாகமாகிய தென்பகுதியாம்.

## திருமயிலையினைப் பற்றிய சரிதக் குறிப்புக்கள்

### I

(திரு. C. M. இராமச்சந்திர செட்டியார் B.A.B.L. அவர்கள் எழுதியவை)

பழமை :—தற்போது இருக்கும் கோயில் 300 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. பழைய கோயில் கடற்கரையில் இருந்ததாம். பரங்கியர்கள் அதனை இடித்துத் தமது பள்ளிகளைக் கட்டிச் சுற்றிலும் கோட்டையையும் எழுப்பிக்கொண்

டார்கள். ஒரு பள்ளியைப் பழுதுபார்ப்பதற்காக 40 ஆண்டுகளின் முன் நிலத்தைத் தோண்டிப் பார்த்ததில் பல உருவச் சிலைகளும் கற்களும் கிடைத்தன. அவைகளைக் கொண்டு அந்த இடத்தில் பழைய கோயில் இருந்ததாக ஊகிக்கலாம். இடித்த பழைய கோயிலின் கற்களைக்கொண்டு புதுக்கோயில் தற்போது இருக்கும் இடத்தில் கட்டப் பட்டது. அப்போது கல்வெட்டுக்களின் அருமையை அறியாது அவைகளைத் தாறு மாறாக இணைத்துவிட்டார்கள். அப்படிப்பட்ட கல்வெட்டுக்கள் அம்மன் கோயிலில் ஐம்பதுவரை இருக்கின்றன. சுவாமி கோயிலில் எதுவும் இல்லை. அலங்கார மண்ட பத்து முன்வாசல் தளத்தில் டச்சு எழுத்துக்கள் கொண்ட சில கற்கள் பாவப்பட்டிருக் கின்றன. பழுதுபார்த்தபோது எடுத்த கற்களில் சில கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகள் 1923-ம் ஆண்டு 215 முதல் 223 வரை எண்களாக அரசியலார் பிரதி எடுத் திருக்கிறார்கள். அவைகளில் தமிழ்க் கல்வெட்டுக்களில் ஒன்றில் கூத்தாடு தேவர் (நடராஜர்) சன்னிதியில் தீபம் வைப்பதற்குச் செய்த தானமும், மற்றொன்றில் முதல் இராஜராஜன் மெய்க்கீர்த்தியாகிய “ திருமகள்போல ” என்ற தொடக்கமும், மூன்றாவ தில் பூம்பாவை என்ற திருப்பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுக்கள் ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முந்தியவை என அறியலாம். மேலும், சிவநேசச் செல்வர் திருமனை கடற்கரையில் இருந்ததுமன்றி, கடலில் தோணியிலிருந்தே சரக்கு எடுக்கும் வண்ணமாக சரக்கறை கட்டியிருக்க வேண்டும் என்றும், அதற்குப் பின்புறம் அவர் குடியிருக்க வசதி இருந்திருக்க வேண்டும் என்றும் அறியக் கிடக்கின்றது. ஈழ நாட்டுத் திருக்கோணமலை, துளுவநாட்டுக் கோவை (Gova) முதலிய இடங்களில் பரங்கியர்கள் 400 ஆண்டுகளுக்கு முன் செய்த வண்ணமே இம் மயிலையிலும் பரங்கியர்கள் கோயிலையும் மனைகளையும் இடித்துப் பள்ளியும் கோட்டையும் கட்டியிருக்கக் கூடும். அதற்குச் சான்றுகள் மேல்கூறிய புதைந்த கல்வெட்டுகளே யன்றிக் கோட்டைத் தெரு என்ற வழக்குப் பெயரும் கொடிமரம் முதலிய சின்னங் களுமேயாம்.

**பிந்திய சரிதம்** :—H. D. Love என்பவர் எழுதிய சென்னைச் சரிதத்தில் 1516 முதல் போர்த்துக்கீயர் துருக்கரூர்கள், பிரெஞ்சுக்காரர், டச்சுக்காரர் முதலியவர்கள் அடிக்கடி மாறிமாறி இவ்வூரைப் பிடித்துத் தம் வசப்படுத்திக்கொண்டு இருந்தார்கள் என அறியலாம். அந்நூலின்படி (Volume I பக்கம் 321-322) பிரெஞ்சுக்காரருக்கும் துருக்கருக்கும் 1672-ல் ஒரு போர் நடந்தது. அப்போது பிரெஞ்சுச் சேனையின் ஒரு பகுதி கபாலீசுவரர் சன்னிதியில் ஒளிந்துகொண்டதாம். ஆகவே, தற்கால கபாலீசு வரம் 1672லேயே இருந்தது எனலாம். 1798-ல் எழுதப்பட்ட சென்னை நகரப் படத்தில் மயிலைத் திருக்குளம் காட்டப்பட்டிருக்கிறது. இத் திருக்குளத்தைப்பற்றி ஒரு கர்ணபரம்பரைக் கதையுண்டு. முகம்மதியர் வேண்டுகோளுக்கிணங்கி நவாப்பு கபாலீசுரர் ஆலயத்திற்கு மேற்கே ஒரு பள்ளிவாசலைக் கட்டிவிட்டானும். இந்துக்கள் அதனை எடுத்துவிடவேண்டும் என்று மன்றாடிக் கேட்க, நவாப்பின் இந்து மந்திரி நவாப்புக்குத் தெரிவிக்காமல் அவன் இல்லாதபோது ஒரே இரவில் பள்ளிவாசலை இடித்து அந்த இடத்தில் திருக்குளம் தோண்டிவிட்டதாகவும், நவாப்பு வந்தபிறகு வேறு எதுவும் செய்யமுடியாமல் முகரம் பண்டிகையின்போது முகம்மதியர்கள் தங்கள் தாஜிகளை அக்குளத்தில் கழுவிக்கொள்ளலாம் என்ற உரிமை தந்ததாகவும், அதுமுதல் அவ்வாறே நடப்பதாகவும் மக்கள் சொல்லிக்கொள்ளுகிறார்கள்.

**புராணம்** :—இத்தலத்தின் புராணம் திருமயிலைத் தலபுராணம் என்ற பெயரால் மயிலை நாதமுனி முதலியாரால் சமீபத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் கபாலீசுவரம்

மாத்திரமன்றிச் சுற்றிலும் உள்ள வெள்ளீசர், வாலீசர், முண்டகக்கண்ணியம்மை, மல்லீசர், காரணீசர், விருபாட்சீசர், தீர்த்தபாலீசர் முதலிய சன்னிதிகளும் கூறப்பட்டுள்ளன. மொத்தம் 806 செய்யுட்கள் கொண்டுள்ளது.

## II

(திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் B.A.B.L. அவர்கள் எழுதியவை)

**திருமயிலையின் பழைமை :—** "துறைக்கொண்ட செம்பவளம் இருள்அகற்றும் சோதித் தொல்மயிலை" என்றார் நம்பியாரூரர். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் டாலமி (Ptolemy) என்ற கிரேக்க ஆசிரியர் இயற்றிய பூகோளநூலில் Malliarpha எனப்படுவதே மயிலாப்பூர் என்று Vestiges of Old Madras Vol. I Chapter 23-ல் ஆசிரியர் H. D. Love கூறுகிறார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் வாழ்ந்தது மயிலையிலே. அவர் நண்பர் ஏலேல சிங்கர் கப்பல் வர்த்தகம் செய்ததும் இவ்விடத்தே. 11-வது நூற்றாண்டின் கல்வெட்டு ஒன்றில் (256/1912) மயிலார்ப்பில் பல நானாதேசிகள் கூடிச் சில தீர்மானங்கள் செய்தனர் என்று காணப்படுகின்றது. துறைமுகப் பட்டினமாகிய ஒரு வியாபாரத் தலத்தில்தான், பல தேசத்து மக்கள் ஒன்றுகூடுவர். எனவே, டாலமி காலம்முதல் கல்வெட்டுக் காலம் வரையில் மயிலாப்பூர் ஒரு துறைமுகமாக இருந்தது. போர்த்துக்கேசியர் காலத்திலும் இத்துறைமுகம் சிறந்து விளங்கியது. இத்துறைமுகத்திற்கும், ஆங்கிலேயர் துறைமுகமாகிய சென்னையின் வடபாதிக்கும் ஓயாமல் வியாபாரப் போட்டியும் கடும் போரும் இருந்துவந்த செய்தி Vestiges of Old Madras Vol. I என்ற நூலில் நன்கு விளங்கும். பல்லவ மன்னர்கள் காலத்தில் மயிலை சிறந்து விளங்கியபடியால் திருமங்கையாழ்வார் திருவல்லிக்கேணியைக் கூறுமிடத்துத் "தேனமர் சோலை மாட மாமயிலைத் திருவல்லிக்கேணி" என்கிறார். கங்க பல்லவன் கம்பவர்மன் காலத்திய கல்வெட்டொன்று (189/1912) மயிலாப்பூரில் அரச குடும்பத்தினர் வசித்ததைக் குறிக்கின்றது. மயிலை வாசிகளாயிருந்த பல வியாபாரிகள் வேறுபல தலங்களைத் தரிசித்த போது சந்தி விளக்கு நந்தா விளக்குகட்குத் தானம் செய்த வரலாறுகள், பல கல்வெட்டுக்களால் அறியப்படுவதிலிருந்து, அவர்கள் சென்ற சென்ற இடங்களிலெல்லாம் தானம் செய்யக்கூடிய செல்வமும் புண்ணியமும் பெற்றிருந்தனர் என்று ஊகிக்கலாம். அத்தகைய வியாபாரிகளுள் தலையாயவரே பூம்பாவையின் தந்தையாராகிய சிவநேசர்.

**மயிலாப்பு என்ற பெயர் :—** திருநாவுக்கரசர் தேவாரத்தில் மூன்றிடங்களில் மயிலாப்பு கூறப்பெறுகின்றது. திருஒற்றியூர்த் திருத்தாண்டகத்து ஆறுவது திருப்பாடலில் "வடிவுடைய மங்கையும் தாமும் எல்லாம் வருவாரை எதிர்கண்டோம் மயிலாப்புள்ளே" என்ற தொடர், சுவாமிகள் மயிலையிலிருந்தே ஒற்றியூர் சென்றார் என்று சேக்கிழார் கூறுவதற்கு அகச்சான்றாகின்றது. "மங்குல் மதிதவழும் மாடவீதி மயிலாப்பி லுள்ளார்" (6-2-1) என்று நாவரசர் மயிலையின் மாடவீதியழகைப் புகழ்கின்றார். "மயிலாப்பில் மன்னினார் மன்னி ஏத்து"ம் என்ற இடத்தில் (6-7-12) மயிலையைக் காப்புத் தலங்களுள் வைத்தார். இம் மூவிடத்திலும் நாவரசர் மயிலாப்பு என்றே கூறுகிறார். சில கல்வெட்டுக்களிலும் (261/1910, 189/1912) மயிலாப்பில் என்றே காணப்படுகிறது. வேறு சிலவற்றுள் மயிலார்ப்பில் என்று ரகர ஒற்றுடன் காணப்படுகிறது (256/1912). டாலமியும் மல்லி ஆர்பா என்பதில் ரகர ஒற்றுடன் கூறுகிறார். பூம்பாவைப் பதிகத்தில் "மடமயிலைக் கட்டுஇட்டம் கொண்டான்" என்பதில் மயிலைத்

கட்டு(=மயில்ஆர்ப்பு) என்பது இதற்கு ஆதாரவாகத் திகழ்தல் கூடும். பெரியபுராணத்தில் மயிலை, மயிலாப்பூர் என்றே காணப்படுகின்றன. மயிலார்ப்பு மருவி மயிலாப்பு என்றாகியிருக்கலாம்; பின் மயிலாப்பூர் என்றும், சுருக்கமாக மயிலை யென்றும் ஆகியதும் கொள்ளற்பாலதே.

**பழைய கோயிலும் புதிய கோயிலும்** :—பழைய ஆலயம் இப்போது Santhome Cathedral உள்ள இடத்திலிருந்தது. அருணகிரிநாதர் காலம் வரையில் (கி. பி. 1450) கடற்கரையிலிருந்தது, "கடலக் கரைதிரை யருகேசூழ் மயிலைப் பதிதனில் உறைவோனே" என்ற திருப்புகழ்ப் பகுதியால் துலங்கும். கி. பி. 1516-ல் மயிலாப்பூர் போர்த்துக்கேசியர் கையில் சிக்கியது. சில ஆண்டுகளுக்குள் அவர்கள் ஆலயத்தைத் தகர்த்துக், கோட்டையையும் தங்கள் தொழுகைக்கு இடமும் கட்டினார்கள். கி. பி. 1672-க்கு முன்பு இப்போதுள்ள இடத்தில் இப்போதுள்ள ஆலயம் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாண்டில் பிரெஞ்சுக்காரருக்கும் மூர் துருக்கருக்கும் நடந்த போரில் பிரெஞ்சு சேனையின் ஒரு பகுதி இப்போதுள்ள ஆலயத்தில் பதுங்கியிருந்த செய்தி, மேற்கூறிய Vestiges of Old Madras என்ற நூலில் Vol. I, Chap. 24, பக்கம் 321, 322-ல் காணப்படுகின்றது. Santhome Cathedral சுமார் 40 ஆண்டுகட்குமுன் பழுது பார்க்கப்பட்டது. நிலத்தை அகழ்ந்தபோது பழைய சிவாலயத்தின் கற்களும் கல்வெட்டுக்களும் கிடைத்தன. அவை அரசாங்கத்தினரால் 215 - 223/1923 என்று குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், "Found on stone excavated below the Cathedral at Santhome" என்பன போன்ற குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டில் (215) கூத்தாடு தேவர்க்கு விளக்கும், மற்றொன்றில் (216) முதல் ராஜராஜன் மெய்க்கீர்த்தியும், மற்றொன்றில் (217) பூம்பாவை பற்றிய குறிப்பும் உள்ளன. பழைய கோயிலின் கற்களையும் புதுக் கற்களையும் கொண்டு புது ஆலயம் கட்டப்பட்டது. பழைய கல்வெட்டுப் பகுதி சுமார் 50 கற்களில் அம்மன்கோயில் சுவர்களில், மேல்கீழ் முன்பின் முறைமாறியும் தொடர்ச்சியின்றியும் அடுக்கப்பட்டுள்ளன. புதிய ஆலயத்தில் சுவாமி அம்மன் கோயில்களிலும் பிரவற்றிலும் கருப்பக்கிருகச் சுவர்களில் ஒரு கல்வெட்டுகூடக் கிடையாது. பழைய கோயில் கற்கள் வரும்போது, சில கிறித்தவர்கள் கல்லறைக் கற்களும் தவறி வந்துவிட்டன. அவற்றுள் ஒன்று ஆறுமுக சுவாமி முகமண்டபத் தள வரிசையிலும், மற்றொன்று சனிபகவான் கோயிலுக்கெதிரில் தளவரிசையிலும் உள்ளன. ஒன்றில் கி. பி. 1646 என்ற குறிப்பும் உள்ளது. கி. பி. 1798-ல் தயாரிக்கப்பட்ட சென்னையின் படத்தில் (Map of Madras) திருக்குளம் இப்போதுள்ள இடத்தில் காணப்படுகிறது. ஆர்க்காட்டு நவாப்பிடமிருந்து நிலம் பெற்றுக் குளம் எடுக்கப்பட்டதென்றும், முஹரம் பண்டிகையில் தாஜிகளை இக்குளத்தில் விடும் உரிமை பெற்றார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஒவ்வோராண்டிலும் முகம்மதியர் தாஜிகளை இக்குளத்தி விடுகின்றனர்.

**தலபுராணம்** :—வடமொழியில் சைவ மஹா புராணத்து, கோடி ருத்ர ஸம்ஹிதையில், உத்க்ருஷ்ட சிவக்ஷேத்ர ப்ரகரணத்தில் 11 அத்யாயம் கொண்ட கபாலீச ஸ்தல மாஹாத்மயம் கலி 5022-ல் அச்சிடப்பட்டது. தமிழில் குன்றக்குடிமடம் என வழங்கும் திருவண்ணாமலை ஆதீனத்தின் மயிலைக் கிளைமடத்திலிருந்த ஸ்ரீமத் அமிர்தலிங்கத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய தலபுராணம் கலி 4995-ல், மகாவித்வான், காஞ்சிபுரம் சபாபதி முதலியார் உரையோடு அச்சிடப்பட்டது. சிலகாலத்துக்கு முன்பு (20 ஆண்டுகட்கு முன்) மயிலைவாசி - புராணிகர் - நாதமுனி முதலியார் இயற்றிய புராணம் ஒன்றும் உண்டு.

**பூம்பாவைப் பதிகத்தில் காணப்படும் விழாக்களும் விரதங்களும்** :—இப்பதிகத்தில் ஒன்பது பாசுரங்களில் இவை கூறப்பட்டுள்ளன. இவற்றுள் கார்த்திகை விளக்கீடு, ஆதிரைநாள், தைப்பூசம், மாசிக் கடலாட்டு, பங்குனி உத்திரம் ஆகிய ஐந்தும், தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறுவதால், மயிலையிலும் விசேடமா யிருந்தன ; இன்றும் விசேடமாகவே உள்ளன. ஐப்பசி ஓண விழா ஸ்ரீராமபிரானால் கொண்டாடப்பட்ட செய்தி வடமொழி புராணம் 9-வது அத்தியாயத்தில் 32, 33, 34-வது சுலோகங்களில் கூறப்படுகிறது. ஐப்பசி ஓணத்தில் கொடியேற்றிக் கிருத்திகையில் தீர்த்தம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தமிழ்ப் புராணத்தில் ஐப்பசி ஓணத்தைப் பத்தாவது நாள் தீர்த்தமாகக் கொண்டு விழா ஸ்ரீராமரால் நடத்தப்பட்ட செய்தி கூறப்படுகிறது. இது தவசிரேஷ்டர்கள் அனுபவிக்கக்கூடிய தூய்மையான முறையில் கொண்டாடப்பட்ட சிறப்பைப் புகலியர்கோன் "ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள் துய்ப்பனவுங் காணாதே" என்று புகழ்கின்றார். அட்டமி நாள் என்பது சிவ விரதங்கள் எட்டனுள் ஒன்று; வைகாசி மாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமியில் அநுஷ்டிக்கப்படுவது (முழு விவரம் உபதேச காண்டம், சிவவிரத மாண்மியச் சருக்கம் 307 - 315 பாடல்களிற் காண்க). இஃதன்றி ஒவ்வொரு மாதம் இரண்டு பக்ஷத்தில் இரண்டு அட்டமி, அமாவாசை, பூரணை, ஆதிரை ஆகிய ஐந்துமே, சிவாலயங்களில் பஞ்சபருவ உத்ஸவங்களா யிருந்தன என்பதற்கு (S. I. I. Vol. 7 - No. 541 = A-R 315/1901) என்ற எண்ணுள்ள கல்வெட்டு, பேராதரவு அளிக்கின்றது. இது இவ்வாறாயினும், வைகாசிமாதம் சுக்கிலபக்ஷம் அஷ்டமி நாளேயே, "பதினெண் கணங்கள்தம் அட்டமிநாள்" என்று சம்பந்தர் குறிப்பதாகக் கொள்வதே சிறப்பாகும்.

**பொற்றூப்பு** :—(பொன் தாம்பு = பொன் ஊசல்) வலித்தல் விகாரத்தால் பாம்பு, பாப்பு என்றாயினாற்போல, தாம்பு தாப்பாகி, பொன்தாப்பு பொற்றாப்பாயிற்று. மார்கழி மாதத்தில் பல சிவாலயங்களில் மூன்று, ஏழு, அல்லது பத்து நாட்கள் ஊஞ்சல் உத்ஸவம் (வடமொழியில் டோலோத்ஸவம் என்பர்.) நடப்பதுண்டு. பெருமானையும் பிராட்டியையும் ஊசலில் வைத்துப் பொன்னூசல் திருவெம்பாவை முதலியன ஓதுவதுண்டு. சியத்திற்குச் (Siam) சைவம் சென்றபோது, டோலோத்ஸவமும் திருவெம்பாவைப் பாராயணமும் உடன்சென்றன; இன்றும் சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றன. (விவரம் Quaritch Wales இயற்றிய Siamese State Ceremonies) என்ற நூலிற் காண்க.

**பெருஞ்சாந்தி** என்பது ஆவணி அவிட்டம் ஈறாக மூன்று, ஐந்து அல்லது ஏழு நாட்களில், சிவயாகம் முதலிய சிறப்புடன் நடக்கும் பவித்ரோத்ஸவமாகிய சம்வத்ஸர பிராயச்சித்தம். போதிய வருவாயுள்ள சிவாலயங்களிலெல்லாம் இது நடைபெறும்; மயிலையில் மூன்றுநாள் மிகச் சிறப்பாக நடக்கிறது. வருஷம் முழுமையும் நடைபெறும் நித்திய நைமித்திக பூஜைகளில் புத்திபூர்வகமாயும், அபுத்திபூர்வகமாயும் ஏற்படும் குற்றங் குறைகளைப் போக்கிப் பரிசுத்தம் காண்பதற்கு ஆகம விதிப்படி அவசியம் செய்ய வேண்டுவது இப் பெருஞ்சாந்தி. கும்பாபிஷேகம் அல்லது குடமுழுக்கு என்றும் சிலர் இதைக்கருதுவதுண்டு.

வேறு

2990. ஆங்கண மெழுந்து நின்ற வணங்கினை நோக்கு வார்கள்
"ஈங்கிது காணீ" ரென்னு வற்புத மெய்தும் வேலைப்

பாங்குசூழ் தொண்ட ராரு "அரகர!" வென்னப் பார்மேல்
ஓங்கிய வோசை யும்பர் நாட்டினை யுற்ற தன்றே. ௧0௯௨

(இ - ள்) ஆங்கனம்...வேலை - அவ்வாறு தோன்றி எழுந்து நின்ற தெய்வ நல முடைய பூம்பாவையாரை நோக்குவார்கள் எல்லாம்; "ஈங்கு இது காணீர்" என்று - "இங்கு இதனை யாவரும் நன்கு காண்பீர்களாக!" என்று எடுத்துக் கூறி; அற்புதமெய்தும் வேலை - அற்புதமடைந்தபோது; பாங்கு சூழ்...அன்றே - பக்கத்திற் சுற்றும் சூழ்ந்திருந்த திருத்தொண்ட ராளுர்கள் அரகர! என்று இவ்வுலகில் முழக்கிய பேரோசை தேவ லோகத்தினையும் சென்று பொருந்தியது அப்போதே.

(வி - ரை) பாவையார் மீள உற்பவித்தெழுந்த அளவுள்ள வரலாறு முழுமையும் ஐஞ்சீர்க்கலிநிலைத்துறை யாப்பினாற் கூறிவந்த ஆசிரியரது திருவுள்ளக்கிடையினையும், பாவையார், திருவருளால் மீள வெளிப்பட்ட பின்னுள்ள தெய்வ அருள்நலக் காட்சி முதலியனவாய்க் கண்ட கடவுட்டன்மை பற்றிய வரலாறுகளை அதனின் ஒருசீர் மிகுத்து அறுசீர்விருத்த யாப்பினாலருளும் அமைதியினையும் கண்டுகொள்க. பாவையாரின் முன்னுற்பவத்தினும் புனருற்பவமானது சீர்மிகுத்த பண்புடையதென்று யாப்பின் குறிப்பிற் காட்டிய கவிநலமும் கண்டுகொள்க.

அணங்கு - அருளின் தெய்வத்தன்மை வாய்ந்த பெண் என்பது குறிப்பு.

நோக்குவார்கள் - இவர்கள் அங்கு மலிந்து கூடியிருந்த நகரார்-நாட்டார்-நன்றியில் சமயத்துள்ளோர் முதலிய உலகியலார்கள்.

ஈங்கிது...அற்புத்மெய்தும் - கண்ணினாற் காட்சியிற் காண்பதும் அதனை இன்ன தென்றறியாது மயங்கி நிற்பதுமன்றி இவர்கள் வேறறியுமாற்றலிலர் என்பார் அற்புத மெய்தும் என்றார். "அற்புதம் அறியேனே" (திருவாசகம்).

தொண்டராளுேர்...ஓசை - ஆனால் உலகினர் அவ்வாறு நிற்பத், திருத்தொண்ட ராளுேர் இது சிவபெருமானது பெருங்கருணைத் திறமாகிய திருஅருளின் வெளிப்பாடு என்று கண்டு சிவநாம முழக்கிப் போற்றினர் என்பது.

உம்பர் நாட்டினை உற்றது - இந்நிகழ்ச்சியைக் காண விசும்பிடைத் தேவர்கள் நெருங்கினாராதலின் (2982) அரகர முழக்கம் அவர்பாலும் சென்று பொருந்திற் றென்க.

காணீர் என்ன—என்பதும் பாடம். 1092

2991. தேவரு முனிவர் தாமுந் திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொண் மாரி பொழிந்தன; ரொழிந்த மண்ணோர்;
யாவரு "மிருந்த வண்ண மெம்பிரான் கருணை" யென்றே
மேவிய கைக ளுச்சி மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார். ௧0௯௩

(இ - ள்) தேவரும்...பொழிந்தனர் - (விசும்பிடை நெருங்கிய) தேவர்களும் முனிவர்களும் முதலியோர்கள். சிவபெருமானது திருவருளின் சிறப்பினை நோக்கி மந்தாரம் முதலிய தெய்வ மரங்களின் பூக்களினாலாகிய மணமுடைய பூமழையினைப் பெய்தனர்; ஒழிந்த...வீழ்ந்தார் - முன் கூறியவர்களொழிந்த நிலவுலக மக்கள் எல்லாரும் இவ்வாறு விளைவு பொருந்தியிருந்த வண்ணமானது எமது நாயகராகிய சிவ பெருமானது கருணையின் விளைவேயாம்" என்று கூறிப் பொருந்திய கைகளை உச்சி மேற் கூப்பி வணங்கி நிலமுற வீழ்ந்து பணிந்தனர்.

(வி - ரை) இதனால் இது கண்ட விண்ணோர் மண்ணோர் செய்திகள் கூறப்பட்டது.

தேவரு முனிவர்தாமும் - இவர்கள் இந்நிகழ்ச்சி காண்பதற்கு விசும்பிடை வந்து நெருங்கியவர்கள் (2982).

திருவருட் சிறப்பு நோக்கி - குடத்தினின்று எழுந்த பாவையாரைத் திருவருட் சிறப்பாகவே நோக்கினார்கள் என்பது.

பூவரு விரைகொள் மாரி - பூவரும் - பூவினாலாக்கப்படும்; பூவினின்று வரும். பூ - மந்தாரம், கற்பகம் முதலிய தேவருலகப் பூக்கள்.

ஒழிந்த மண்ணோர் - தேவரும் முனிவரும் முன்பாட்டிற் கூறிய திறத்தவர்களும் ஒழிந்த ஏனைப் பண்புடைய உலகினர்கள்.

வீழ்ந்தார் - நிலமுற விழுந்து பணிந்தனர். 1093

2992. அங்கவ ளுருவங் காண்பா ரதிசய மிக்வு மெய்திப்
பங்கமுற் றாரே போன்றார் பரசம யத்தி லுள்ளோர்;
"எங்குள செய்கை தான்மற் றென்செய்த வாறி" தென்று
சங்கையா முணர்வு கொள்ளுஞ் சமணர்தள் ளாடி வீழ்ந்தார். ௧0௯௪

(இ - ள்) அங்கு அவளுருவம்...பரசமயத்தினுள்ளோர் - அவ்விடத்தில் அவளுடைய முன் கூறியவாறுள்ள உருவத்தைக் காண்போராகிய ஏனைப் பரசமயத்திலுள்ளோர்கள் மிக்க அதிசயமடைந்து இச்செய்தியினால் தத்தம் சமயங்களை நிராகரிக்கப் பெற்று அவ்வவரும் தோல்வியடைந்தவர்களேபோ லாயினர்; எங்குள...செய்கை தான்...தள்ளாடி வீழ்ந்தார் - மற்று இச்செய்கைதான் எங்குள்ளது? எவ்வாறு செய்யப்பட்டது? என்று அறிந்து துணியமாட்டாது ஐயங்கொண்ட அமணர்கள் தள்ளாட்டமடைந்து நிலத்திற் றடுமாறி வீழ்ந்தனர்.

(வி - ரை) பங்கம் - பழுது; கேடு. பங்கமுற்றரே போன்றார் - பங்கம் சேறு என்று கொண்டு தமது பரசமயச் சேற்றில் விழுந்தவர்கள் போலாகிய நிலையினை அறிந்தனர் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள். சேற்றில் விழுந்தோம் என்ற அறிவு பெற்றபோது அவர்கள் அதினின்றும் மேலேற முயற்சிப்பார்களாதலின் அது போல இவர்களும் உண்மைதெரிந்து ஈடேற முயற்சிப்பார்கள் என்று விசேட உரையும் கண்டார்கள்.

பரசமயத்திலுள்ளோர் - பங்கமுற்றரே போன்றார்; சமணர் தள்ளாடி வீழ்ந்தார் - என்க.

பரசமயத்தார் - என்றது சமணருள்ளிட்ட பரசமயத்தார்களை எல்லாம் பொதுவில் உணர்த்திற்று. முன் நன்றியில் சமயத்தினுள்ளோர் (2982) என்ற கருத்து; அவருள் சமணர் தமது சமயக் கொள்கையின் பிடிவாத முடையவர்களானமையாலும், அந்நாளில் அவர்களே மிகுந்து வலிமையும் பெற்றிருந்தமையாலும் தமது சமயத்துக்குப் பங்கம் வந்ததென்ற நிலை கண்டபோது மேலும் உணர்வழிந்து தள்ளாடி வீழ்ந்தனர் என்பார் அவர்களை வேறு பிரித்தும் கூறினார்.

மண்ணோர் (அறிவுடையார்) இறைஞ்சி வீழ்ந்தார்; சமணர் (உண்மை அறிவு பெறுமையின்) தள்ளாடி வீழ்ந்தார் - என்ற நயமும் காண்க.

**எங்குள......இதென்று** - இது அதிசயத்தால் சமணர் நெஞ்சிடங் கொள்ளாது உரைத்த அதிசயக் குறிப்பு மொழி. இச்செயல் வேறெங்கு நிகழும்; எவ்வாறு யார் தாம் இதனைச் செய்ய இயலும் என்றதிசயித்தபடி. இப்பாட்டின் கருத்து,

"இன்றிச் சமயத்தி னல்லதுமற் றேழையுடன்
ஒன்றுசொலி மன்றத்து நின்றவரா?—ரின்றிங்கே
அங்க முயிர்பெறவே பாடு மடியவரார்?
எங்குமிலை கண்டா யிது"

எனத் திருக்களிற்றுப்படியாரில் (65) எடுத்துப் போற்றப்பட்டது.

**சங்கை** - ஐயம்; அச்சம் என்றலுமாம்.

**தள்ளாடி வீழ்தல்** - தம்மைத்தாம் தாங்கி நிற்கமுடியாமல் மயங்கி நிலத்தில் வீழ்தல்; சமணரது சமயநிலை வீழ்ந்த குறிப்புமாம்; பிள்ளையாரால் பரசமய நிராகரிப்பு நிகழ்ந்தவாறு காட்டப்பட்டதுமாம்.

முன் பாட்டினாற் சைவத் திறத்து உள்ளோர்பால் நிகழ்ச்சியும் இப்பாட்டினாற் பரசமயத்துள்ளோர்பால் நிகழ்ச்சியும் கூறப்பட்டன. 1094

## பூம்பாவையாரின் தெய்வக் காட்சி நலம் :—

இனி, 2993 முதல் 3006 வரை பதினான்கு பாட்டுக்களால் பூம்பாவையாரின் தெய்விக மறுபிறப்பின் காட்சி நலங்களை ஒவ்வோர் அவயவங்களின் உயரிய இலக்கண அமைதிபற்றி ஆசிரியர் கண்டு காட்டியருளுகின்றார். "கண்ணுதல் கருணை வெள்ள" மாகவே (3007) பூம்பாவையாரின் றோற்றத்தைப் பிள்ளையார் "ஆயிர முகத்தாற் கண்டார்" (3007) என்று கூறும் ஆசிரியர், அவர் இவ்வாற்றாற் கண்டார் எனத் தாமும் கண்டு காட்டியருளுதல் வேண்டுவது அமைதியாயிற்று; வெறும் மாயா பிண்டங்களாகிய உடலைப்பற்றிப் பெண்களை வருணித்துக் காமச்சுவை பொலியக் கவி பாடுதல் ஏனைப் பசுநூல் கற்கும் புலவர்களிடை மிகுதியும் காணலாம்; பதி புண்ணியப் பெருவாழ்வுடையராய்ப் பதிநூல் ஒன்றுமே பாடிய ஆசிரியர் சேக்கிழார்பெருமானது இயல்பும் மரபும் அஃதன்று; சிறுமியரையும் பருவநிறைந்த மகளிரையும் கூறவரும் இடங்களிலெல்லாம் அவ்வச் சரிதநிலை யறிதற்கு வேண்டிய அளவுமட்டும் அணியியலைப் பொதுவகையால் உணர்த்திச் செல்வது மரபாதல் கண்டுகொள்க. மணம் பெறாத மங்கையர்களின் உடல்நல இயல்புகளை மட்டில்லாது வருணித்தல் காமச் சுவையை ஊட்டி மனத்தூய்மையினைக் கேடு செய்தலாகும்; மணம்பெற்ற மாதர்களை அவ்வாறு கூறுதல் "வேற்றோர் மனைவியர் தோற்றம் புகழ்ந்த"தாகித் தகாத செயலாகி முடியும்; "வரமலர் மங்கையிங்கு வந்தன ளென்ன" (279); "மானிளம் பிணையோ" (280); "நாடுமின் பொற்பு வாய்ப்பு நாளுநாள் வளர்ந்து பொங்க" (281); "அன்னுதற் கமைந்த பொற்பு" (282); "உறுகவின்மெய்ப் புறம்பொலிய ..நறுமுகைமென் கொடிமருங்கு னளிர்ச்சுருளுந் தளிர்ச்செங்கை, மறுவில்குலக் கொழுந்தினுக்கு மணப்பருவம் வந்தணைய" (879); "மடக்கொடிதன் மஞ்சுதழைத் தெனவலர்ந்த மலர்க்கூந்தற் புறநோக்கி" (894); "அணங்கனைய திலகவதியார்" (1289); "நல்லவென உறுப்புநூ லவருரைக்கு நலநிரம்பி, மல்குபெரு வனப்புமீக் கூறவருமாட்சியினால், இல்லிகவாப் பருவத்தில்" (1722); "செம்பொன்செய் வாசிச் சூட்டுத் திருமணிப் புனைபூண் டெய்வப், பைம்பொனின் மாலை வேய்ந்த பவளமென் கொடியொப் பாரை......யம்பொன்செய் தீப மென்ன வழகலங் கரித்து வைத்தார்" (3121 = புரா - 1223); "தேனார் கோதைச் சிங்கடியார்,.....மானார் கோதை வனப்

பகையார் " (3192) ; " கோவா முத்துஞ் சுரும்பேருக் கொழுமென் முகையு மனை யாரை " (3380 = ஏயர் - புரா - 227) முதலியனவாய் வருமிடங்களிற் கூறும் மரபும், நிலையும் பார்க்க. இனித், " தேனலர் கமலப் போதிற் றிருவினு முருவ மிக்கார் " (364) ; " திருவினும் பெரியாள் " (412) ; " மன்றலங் குழன்மென் சாயன் மா தேவி " (476) ; " திருமக ளென்ன நின்ற தேவியார் " (480) ; " பூங்குழலார் " (1730) ; " மணமலியு மலர்க்கூந்தல் மாதரார் " (1733) ; " மடநடை மயிலன் னுரைத் தாமரைத் தவிசின் வைகுந் தனித்திரு வென்ன " (1758) முதலியனவாய் வருமிடங்களின் மரபும், நிலையும் கருதுக.

இனி, ஈண்டுப் பாவையாரது முன்னுற்பவத்தில் " பாவை நல்லுறுப் பணிகளர் பண்பெலா நோக்கிப், பூவி னுளென வருதலிற் பூம்பாவை யென்றே " (2942) ; " தளரு மின்னின்ங் குரமென " (2944) ; " அழகின் முன்னிளம் பதமென வணி விளக்கென்ன " (2945) ; " அக் கொம்பனு டகைமை யிந்த வையகத் தின்மையால் " (2947) என்றவாற்றால் எடுத்துக் கூறிய இயலும் மரபும் முன்காட்டிய நிலைகள் போன்றே வந்தனவாம் ; இவை வேறு ; மேலால், இனி, இப்பதினொன்கு பாட்டுக்களி னும் எடுத்துக் கூறும் மரபும் நிலையும் வேறு ; முன்னர்க் கூறிய உடம்பின் நிலை சிவ சங்கற்பத்தின் வழிப் பிரமன் படைப்பினில் வந்தவை ; அவை பாச சம்பந்த மாகிய மாயை காரிய உருவத்தைப் பற்றியவை. இனிக் கூறுவன அவ்வாறன்றி சிவ சிருட்டியாகிச் சிவஞானத்தின் ஆணையாற் பாசம் பற்றாது புனருற்பவத்தில் வந்த புனித உருவத்தைப் பற்றுவன. இவை சிவபெருமானது கருணைச்செயலின் விளைவு களையே காண்வரக் காட்டி நிற்றலால் இவற்றை எத்துணை எடுத்துக் கூறினும் சிவ னது கருணையினை அத்துணையும் போற்றுதலேயாம். ஆதலின் பிரமன் தனது படைப் பின் எழிலைக் கண்டவாறன்றிக் கண்ணுதல் கருணை வெள்ளத்தினையே பிள்ளையார் ஆயிரமுகத்தாற் கண்டார் என்று கூறுதல் காண்க. இவ்வாறு முன்னெல்லாம் கூறும் நிலைகளுக்கும் இனி ஈண்டுக் கூறும் நிலைக்கும் உள்ள வேற்றுமையும் உட்கிடையும் உய்த்துணர்ந்துகொள்க. இதுபோல வேறெவ்விடத்தும் கூறுமையும் கருதிக்கொள்க. இப்பாட்டுக்களின் இலக்கியச் சுவையாகிய உவமைநல முதலிய நயங்கள் அவ்வந்நூல் களில் வல்ல பெரும் புலவோர்பாற் கேட்டுணரத் தக்கனவாதலின் ஈண்டுப் பொழிப் பாகக் கருத்துரையும், சிற்சில குறிப்புக்களும் மட்டுமே தரப்படுகின்றன. இத்துணையும் ஒரு பொருள் மேலனவாய்த் தொடர்புபற்றி வருதலின் ஒருசேரக் கண்டு உரைக்கப் பட்டன.

2993. கன்னிதன் வனப்புத் தன்னைக் கண்களான் முடியக் காணார்
முன்னுறக் கண்டார்க் கெல்லா மொய்கருங் குழலின் பாரம்
குழல் மன்னிய வதன செந்தா மரையினிற் கரிய வண்டு
துன்னிய வொழுங்கு துற்ற சூழல்போ லிருண்டு தோன்ற, ௧௦௯௫

2994. பாங்கணி சுரும்பு மொய்த்த பனிமல ரளகப் பந்தி
தேங்கம ழாரஞ் சேருந் திருநுதல் விளக்க நோக்கிற்
நுதல் பூங்கொடிக் கழகின் மாரி பொழிந்திடப் புயற்கீ ழிட்ட
வாங்கிய வான வில்லின் வளரொளி வனப்பு வாய்ப்ப, ௧௦௯௬

2995. புருவமென் கொடிகள் பண்டு புரமெரித் தவர்த நெற்றி
ஒருவிழி யெரியி னீறு யருள்பெற வுளனாங் காமன்
புருவங்கள் செருவெழுந் தனுவ தொன்றுஞ் சேமவில் லொன்று மாக
இருபெருஞ் சிலைகண் முன்கொண் டெழுந்தன போல வேர்ப்ப,

2996. மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி யாடன்
கண்ணிணை வனப்புக் காணிற் காமரு வதனத் திங்கள்
கண்கள் தண்ணளி விரிந்த சோதி வெள்ளத்திற் றகைவி னீள
ஒண்ணிறக் கரிய செய்ய கயலிரண் டொத்து லாவ; ௧௦௯௮

2997. பணிவள ரல்குற் பாவை நாசியும் பவள வாயும்
நணியபே ரொளியிற் றோன்று நலத்தினை நாடு வார்க்கு
நாசியும் மணிநிறக் கோபங் கண்டு, மற்றது வவ்வத் தாழும்
வாயும் அணிநிறக் காம ரூபி யணைவதா மழகு காட்ட ; ௧௦௯௯

2998. இளமயி லனைய சாய லேந்திழை குழைகோள் காது
வளமிகு வனப்பி னாலும் வடிந்ததா ளுடைமை யாலும்
காது கிளரொளி மகர வேறு கெழுமிய தன்மை யாலும்
அளவில்சீ ரனங்கன் வென்றிக் கொடியிரண் டனைய வாக; ௧௧௦௦

2999. விற்பொலி தரளக் கோவை விளங்கிய கழுத்து மீது
பொற்பமை வதன மாகும் பதுமநன் னிதியம் பூத்த
கழுத்து- நற்பெரும் பணில மென்னு நன்னிதி போன்று தோன்றி
முகம் அற்பொலி கண்டர் தந்த வருட்கடை யாளங் காட்ட ; ௧௧௦௧

3000. எரியவிழ் காந்தண் மென்பூத் தலைதொடுத் திசைய வைத்துத்
திரள்பெறச் சுருக்குஞ் செச்சை மாலையோ, தெரியின் வேறு
கைகள் கருநெடுங் கயற்கண் மங்கை கைகளாற் காந்தி வெள்ளம்
அருகிழிந் தனவோ வென்னு மதிசயம் வடிவிற் றோன்ற; ௧௧௦௨

3001. ஏர்கெழு மார்பிற் பொங்கு மேந்திளங் கொங்கை நாகக்
கார்கெழு விடத்தை நீக்குங் கவுணியர் கருணை நோக்கால்
கொங்கை ஆர்திரு வருளிற் பூரித் தடங்கிய வமுத கும்பச்
சீர்கெழு முகிழைக் காட்டுஞ் செவ்வியிற் றிகழ்ந்து தோன்ற;

3002. காமவே ளென்னும் வேட னுந்தியிற் கரந்து கொங்கை
உரோம நேமியம் புட்க டம்மை யகப்பட நேரி தாய
வல்லி தாமநீள் கண்ணி சேர்த்த சலாகைதூக் கியதே போலும்
வாமமே கலைசூழ் வல்லி மருங்கின்மே லுரோம வல்லி; ௧௧௦௪

3003. பிணியவிழ் மலர்மென் கூந்தற் பெண்ணமு தனையாள் செம்பொன்
அல்குல் அணிவள ரல்கு றங்க ளரவுசெய் பிழையா லஞ்சி
மணிகிளர் காஞ்சி சூழ்ந்து வனப்புடை யல்கு லாகிப்
பணியுல காளுஞ் சேடன் பணம்விரித் தடைதல் காட்ட; ௧௧௦௫

3004. வரிமயி லனைய சாயன் மங்கைபொற் குறங்கின் மாமை
துடை-முழந்தாள் கரியிளம் பிடிக்கை வென்று கதலிமேன் றண்டு காட்டத்
தெரிவுறு மவர்க்கு மென்மைச் செழுமுழந் தாளின் செவ்வி
புரிவுறு பொற்பந் தென்னப் பொலிந்தொளி விளங்கிப் பொங்க;

3005. பூவலர் நறுமென் கூந்தற் பொற்கொடி கணைக்கால் காமன்
கணைக் கால்-பாடு ஆவநா ழிகையே போலு மழகினின் மேன்மை யெய்த;
மேவிய செம்பொற் றட்டின் வனப்பினை மீதிட் டென்றும்
ஓவியர்க் கெழுத வொண்ணுப் பரட்டொளி யொளிர்வுற் றோங்க;

3006. கற்பக மீன்ற செவ்விக் காமரு பவளச் சோதிப்
பாதம் பொற்றிரள் வயிரப் பத்திப் பூந்துணர் மலர்ந்த போலும்
நற்பதம் பொலிவு காட்ட; ஞாலமும் விசும்பு மெல்லாம்
அற்புத மெய்தத் தோன்றி யழகினுக் கணியாய் நின்றாள். ௧௧0௮

2993. (இ - ள்) கன்னிதன்...காணார் - (குடமுடைந் தெழுவாள் போற்று தாமரைப் போதவிழ்ந் தெழுந்தனள்போன்றாளாய் நின்ற) கன்னியாகிய பூம்பாவை யாரது அழகு முழுமையினையும் கண்களால் முற்றக் காணாதார்களாகி; முன்னுறக் கண்டார்க்கெல்லாம் - தம் முன்பு கண்கொண்ட அளவே கண்டு அம் மட்டிலடங்கிக் கண்டு கொண்டவர்க்கெல்லாம் தோன்றிய நிலையாவது; மொய் கருங்குழலின் பாரம்-மொய்த்து வளர்ந்த கரிய கூந்தலாகிய சுமை; மன்னிய...தோன்ற - பொருந்திய முகமாகிய செந்தாமரையில் கரிய வண்டுக் கூட்டம் நெருங்கி மொய்த்து வரிசையாய்ச் சூழ்ந்திருந்தாற்போலக் கருநிறமடைந்து காணப்படவும்; ௧0௯௫

குழல்

(வி - ரை) கன்னிதன் - அப்போது மணம்பெறாத நிலை குறிக்கக் கன்னி என்றதுமன்றி, இனிப் பின்னரும் "பாவை தன்மண மேனையோர்க் கிசைகிலேன்" என்று சிவநேசர் அவரைக் கன்னிமாடத்து வைத்தபின் அவ்வாறே அவர் சிவத்தை மேவின குறிப்பும் காட்டியபடியாம். ஆயுள் முழுதும் கன்னியாக நிற்பவர் என்பார் இங்குத் தொடக்கத்திற் கன்னி என்றார்.

**வனப்புத்தன்னைக் கண்களால் முடியக் காணார்** - அழகு முழுமையும் கண்களால் முற்றவும் காண இயலாமையின் முற்படக் கண்ட அளவில்மட்டும் காட்சியின் அமைந்து நின்றனர். அவ்வாறு கண்ட அளவில் மேற்கூறப்படுவதாம் என்க. "முன்னுறக் கண்டார்க் கெல்லாம்" என்ற கருத்துமிது. இக்கருத்தையே விரித்து "தாள் கண்டார் தாளே கண்டார் - தோள் கண்டார் தோளே கண்டார்......" என்ற கம்பன் பாட்டுங் காண்க.

**குழலின் பாரம்** - விரிந்து செறிந்து நிறைந்து குவிதலின் பாரம் என்றார். **குழலின் பாரம் - தோன்ற** என்க.

**துன்னிய ஒழுங்குதுற்ற சூழல்** - ஒழுங்காக நிறைந்து சூழ்ந்த நிலை. பின்னி முடித்த தோற்றம் வண்டுக் கூட்டம் ஒழுக்குபடச் சுற்றிச் சூழ்ந்தமை.

**தாமரையினில் - சூழல்** - தாமரையில் தேன் உண்ண வண்டுகள் மொய்க்கு மியல்பு. **தாமரையின் மேல்** - என்பதும் பாடம்.

தாமரை - வதன செந்தாமரை உருவகம்; வண்டு ஒழுங்குச் சூழல் - தற்குறிப் பேற்ற அணியும் உள்ளுறுத்து விரவியது காண்க; மேல்வரும் பாட்டுக்களிலு மிவ்வாறே அணிநயம் கண்டுகொள்க.

கூந்தலானது கரிய வண்டுக்கூட்டம் தாமரையினை மொய்த்த ஒழுங்குபோலத் தோன்றிற்று என்பதாம். 1095

2994. (இ - ள்) பாங்கணி...அளகப் பந்தி - பக்கத்தில் அழகிய வண்டுகள் மொய்த்த குளிர்ந்த பூக்களைச் சூடிய கூந்தற் பந்தியோடு; தேங்கமழ்...நோக்கில் - மணங் கமழும் திலகமணிந்த அழகிய நெற்றியினது பொலிவைப் பார்க்கில்;
நுதல் பூங்கொடிக்கு...பொழிந்திட - பூம்பாவையாராகிய பூங்கொடிக்கு அழகின் மழை பொழியும் பொருட்டு; புயற்கீழ்...வனப்பு வாய்ப்ப - மேகத்தின் கீழே இட்ட வளைந்த வானவில்லினது மிக்க ஒளி பொருந்திய அழகு பொருந்த;

(வி - ரை) முன் பாட்டில் குழலின் பாரத்தின் அழகினை வதனத்துடன் சேர்த்து அணிந்து கூறினார். இப்பாட்டில் அவ்வதனத்தின் நுதலின் விளக்கத்தைக் கூந்தலுடன் கூட்டி அணிந்து கூறுகின்றார்.

பந்தியோடு கீழேசேர்ந்த நுதல் விளக்கம் - புயலின்கீழ் வானவில்லின் வனப்புப் போன்றது என உருவுவமம். ஆரம் - சந்தனம் - அதனாலாகிய திலகத்துக்கு வந்தது.

பூங்கொடிக்கு அழகின் மாரி பொழிந்திட - தற்குறிப்பேற்றம். அழகின் மாரி - அழகுப் பயன் விளைக்கும் மழை.

பூங்கொடிக்கு - பூக்கும் கொடி என்றும், பூங்கொடி போன்ற பாவை என்று இருபாலும் பொருந்தவுரைக்கநின்ற கவிநலம் காண்க. பூங்கொடி - உவமையாகு பெயர். கொடிக்கு - கொடி தழையும் பொருட்டு என்ற குறிப்புமாம்.

அளகப் பந்தி - அளகம் - கூந்தல்; பந்தி - ஒழுங்கு; ஆரம் - திலகம்.

புயற்கீழிட்ட வாங்கிய வானவில் - மேலே சூழ்ந்த மேகத்தின் கீழ் வானவில் இடுதல் மழைக்குறி என்பர். வாங்குதல் - வளைதல்.

வானவில்லின் வளரோளி வனப்பு - வானவில் நீல முதலாகச் சிவப்பீறாக ஏழு வண்ணங்களை ஒழுங்குபட்ட கீற்றுக்களாக உடையது. உவமேயத்தில் தேங்கமழ் ஆரம் சேரும் திருநுதல் என்றது பன்னிறமுடைய திலகம் அணிதல் குறித்ததும், ஈரிடத்தும் வளைந்த தன்மையும் உவமையின் பொதுத் தன்மைகளாம்; தற்குறிப்பேற்ற முள்ளுறுத்த உருவும் வினையும்பற்றி வந்த உவமம். 1096

2995. (இ - ள்) புருவ மென்கொடிகள் - புருவம் என்னும் மெல்லிய இரண்டு கொடிகள்; பண்டு...காமன் - முன்னாளில் திரிபுரமெரித்த சிவபெருமானது நெற்றித் தனிக் கண்ணின் வந்த தீயினாலே சாம்பராகிப் பின் அருளும் பெற உள்ளவனாகிய
புருவம் மன்மதனுடைய; செருவெழும்...ஒன்றுமாக - போரில் ஏந்திய வில் ஒன்றும், சேமமாக வைக்கப்படும் வில் ஒன்றுமாக; இருபெரும்... ...ஏர்ப்ப - இரண்டு பெரிய விற்களின் தன்மைகளை முன்னே கொண்டு தோன்றி எழுந்தாற்போல அழகு செய்ய;
௧௦௯௭

(வி - ரை) புருவங்களிரண்டும் காமனது செருவெழும் வில் - சேமவில் - என இரண்டின் தன்மைகள் கொண்டனபோன்று விளங்கின என்க.

பண்டு......உளனுங் காமன் - உளனும் காமன் - சிலை யிரண்டு - என்றதனால் இங்கு உவமிக்கப்பட்ட காமனது சிலைகள் அவன் சிவபெருமானால் எரிக்கப்படவும் பின் அருள்பெறவும் நின்ற நிலைக்கு முன்னிருந்த நிலையிற் கொண்டவை. அதற்குப்

பின் அவன் ஏந்தியவை அவனது ஆணை அவ்வாறு தோல்வியுற்றுப் பங்கப்பட்ட பின் வருதலால் ஈண்டு உவமைக்கு ஏற்ற உயர்வுள்ளனவல்ல என்பது குறிப்பு. அவன் பின் அருள்பெற நிற்பதனுல் ஒருவாறு ஈண்டுவமைக்குத் தகுதி பெற்றனன் என்பதும் குறிப்பு. இக்கருத்தையே பற்றி "உருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன்று" (1) என்ற திருக்கோவையாருக்கு "நுதல் விழிக்குத் தோற்று உரு விழப்பதன்முன் மடியா வாணையனுய் நின்றுயர்த்த கொடியை" என்று ஆசிரியர் பேராசிரியர் உரைத்தவாறும் காண்க. மேற்பாட்டில் "வென்றிக் கோடியிரண்டு" என்பதும் காண்க.

சேரு எழும் தனு - சேமவில் - போரிற் பிடிப்பதும் அதற்குத் துணைவேண்டும் போது சேமமாக வைப்பதும் ஆகிய இரண்டு.

சிலைகள் முன்கோண்டு - சிலைகளின் தன்மையை மேற்கொண்டு என்க. சிலைகள் அவற்றின் தன்மைகட்காகி வந்தது, சிலையாகப் புருவங்கள் பயன்படாமையின் தன்மையளவிற் கூறினார்.

சேரு எழும் - என்றது போரில் இறப்புவரையும் துன்பம் செய்தலையும், சேமம் - அவ்வாறன்றி இன்பஞ் செய்தலையும் ஆகிய இருவேறு தன்மைகளையும் குறிப்பாலுணர்த்தின. பிரிந்தார்க்குத் துன்பமும் இணைந்தார்க்கு இன்பமும் செய்தல் காமனது வில்லின் இருவேறு செயல்களாதலும் காண்க. "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து" (குறள்) என்று நோக்கிற்குச் சொல்லிய தன்மை அவற்றுடனிணைந்த புருவத்தின்மேலும் வைத்துக் காணநின்றதும் கருதுக.

இங்கு இவ்வாறன்றிக் கரும்புவில் ஒன்றும் அஃதிற்றபோது உதவப் புட்பவில் ஒன்றும் காமனுக்கு உண்டென் றுரைப்பாருமுளர்.

உளதாங் காமன்—ஒப்ப-ஏய்ப்ப - ஏற்க-ஏற்ப—என்பனவும் பாடங்கள். 1097

2996. (இ - ள்) மண்ணிய...காணில் - கடைந்தெடுத்த மாணிக்கத்தினும் மிக்க செம்மையாகிய வளர்கின்ற ஒளி பொருந்திய மேனியினையுடைய பாவையாரின் இரண்டு கண்களின் அழகைக் காணுமிடத்து; காமரு...வெள்ளத்தில் - அழகு மிகுந்த முகமாகிய சந்திரனுடைய குளிர்ந்த கதிர்கள் விரிந்த நிலவொளியாகிய வெள்ளத்திலே; தகைவில்...ஒத்துலாவ - தடுத்தலில்லாத நீளமுடைய ஒள்ளிய நிறமும் கருமையும் செம்மையும் விரவிய இரண்டு கயல்மீன்கள் போல உலாவ;

கண்கள்

கoகூஅ

(வி - ரை) மண்ணிய மணி - மண்ணுதல் - கடைதல்; கழுவுதல் என்றலுமாம்; மணி - மாணிக்கம்; செம்மணி.

மண்ணிய மணியின் செய்ய வளரொளி மேனி - பாவையாரின் முன்னுற்பவத்தில் "மணிகிளர் ஒளியின் அளவி லஞ்சுடர்க் கொழுந்தென" (2944) என்றார். ஈண்டு அம் மேனியானது சிவ சிருட்டியிலே கடைந்தெடுக்கப்பட்டுச் சிவ ஞானவொளியில் திகழ்வதனுல் "மண்ணிய மணியின் சோதி" என்றும், இவ்வொளி மேன்மேல் மங்குதலின்றி என்றும் வளரும் சிவஒளி என்பார் வளரொளி என்றும் கூறினார்.

திங்களின்-சோதி - திங்கள் காமன் படைகளுள் ஒன்றாயும், கயல் அவனது கொடியாகவும் உள்ள குறிப்புடன் முன்பாட்டில் காமன் இருபெருஞ் சிலைகளின் தன்மைபற்றிக் கூறியதற் கேற்பத் தொடர்ந்து கூறிய நயமும் காண்க.

**கரிய செய்ய கயலிரண்டு** - முன் செருவெழுந் தனுவும் சேமவில்லும்போல என்று இருவேறு தன்மைகள் குறித்ததற்கேற்ப ஈண்டுக் கண்களுக்கும் இருவேறு தன்மை கூறுவார் கரிய - செய்ய - கயலிரண்டு என்றார். இவ் விருதன்மைகளைப்பற்றி "தழல்வேன் மிளிர்ந்து, முத்தம் பயக்குங் கழுநீர் விருந்தொடென் னுதமுன்னங், கித் தக் கருங்குவ ளைச்செவ்வி யோடிக் கெழுமினவே" (388) என்ற திருக்கோவையாரும் காண்க.

**சோதி வெள்ளத்தில் - இரண்டு கயலோத்து உலாவ - ஒத்து** - கயல் உலாவுதலை ஒத்து; கயல் - நீரினுள் உலாவுத லியல்பாதலின் திங்கட்சோதியை வெள்ளம் என்றார். "இரண்டு நிலவின் கடல்கள்" என முன்னர்க் கூறியதும் காண்க. **இணைக் கண்கள்** பிறழ்தல் - முகமாகிய நிலாவின் ஒரு வெள்ளத்துள் இரண்டு கயல்கள் உலாவுதலை ஒத்தன என்பதாம். 1098

2997. (இ - ள்) பணிவளர்...நாடுவார்க்கு - பாம்பின் படம்போல வளரும் அல்குலையுடைய பாவையாரின் நாசியும் பவளம்போன்ற வாயும் அணுகநின்று பெரிய ஒளியுடன் தோன்றும் அழகினை நாடி அறியலுறுவார்க்கு; மணிநிறக் கோபம்...அழகு காட்ட - மாணிக்கம்போன்ற சிவந்த நிறமுடைய இந்திர கோபம் என்னும் தம்பலப்பூச்சியினைக் கண்டு அதனைக் கவரும்பொருட்டுத் தாழ்ந்து வரும் அழகிய நிறங்களைக்கொள்ளும் காமரூபி (பச்சோந்தி) சேர்வதாகிய அழகினைக் காட்ட;

நாசி-வாய்

க0கக

(வி - ரை) **நாசி** - மூக்கு; **கோபம்** - இந்திரகோபம் என்னும் தம்பலப்பூச்சி; **காமரூபி** - பச்சோந்தி (மாறிமாறி விரும்பிய நிறம் கொள்வது).

**பவளவாய்** - கோபம் (பூச்சி)போலவும், மூக்கு - காமரூபி போலவும், மூக்குப் பவளவாயை நணுகியநிலை கோபத்தை வவ்வ இறங்கிவரும் காமரூபி அணைவதுபோல வும் விளங்கின என்பதாம்; **பவளவாய்** - கோபம் எனவும், **நாசி** - காமரூபி எனவும் உருவுபற்றி வந்த உவமங்கள்; நணிய நலம் வவ்வத் தாழ்வதுபோல என்றது தற்குறிப் பேற்றத்தை உள்ளுறுத்து வினைபற்றி எழுந்த உவமை. **நாசியைக்** காமரூபி என்ற உவமம் உருவினாலன்றி மெய்யும்பற்றி வந்தது.

அனையதாம்—என்பதும் பாடம் 1099

2998. (இ - ள்) இளமயில்...காது - இளமையாகிய மயிலைப்போன்ற சாயலை யுடைய வந்திய இழையணிந்த பாவையாரது குழையணிந்த காதுகள்; வளமிகு... ...தன்மையாலும் - வளப்பமுடைய அழகினாலும் வடிந்த (காதுத்) தண்டையுடைமையினாலும் மிகுந்த ஒளியுடைய சுறவேறுனது பொருந் திய தன்மையினாலும்; அளவில் சீர்...அனையவாக - அளவில்லாத சிறப்பினையுடைய வெற்றிக்கொடி யிரண்டுபோல விளங்க;

காது

கக00

(வி - ரை) பாவையாரது குழைகளணிந்த காதுகள் மன்மதனுடைய வெற்றிக் கொடிகள் இரண்டுபோலத் தோன்றின.

**வளமிகு வனப்பு** - வளமுடைய தன்மை ஈரிடத்துக்கும் ஒக்கும்; காதுகள் மேலகன்று கீழே வடிந்து இயல்பாகிய அழகுடன் அணிகளையும் கொண்ட வடிவும், எரிபோன் மேனிப் பிரான்றிறம் எப்போதும் கேட்கும் தன்மையும் கொண்ட நிலை அவற்றின் வளமிகு வனப்பு. **காமன் கொடி** - மீனக்கொடிகள். இவை, மேலகன்று மீனங்களின் ஒளியுருவம் வானில் துவள நிற்பதனால் விண்மீன்கள்போல விளங்குதல் இவற்றின் வளமிகு வனப்பு.

**வடிந்த தாள்** - காதுகள்பற்றிக் கூறும்போது வடிந்து தொங்கும் காதுத் தண்டு; இங்ஙிலை கொள்ளக் காதுகளை வளர்த்திக் குழை முதலிய அணிகளிடுதல் முன்னாளில் அழகென வழக்கில் நின்றது; இந்நாளில் அவ்வாறு காதுகளை வளர்த்தாது காதணிகளை மட்டில் வளர்த்தித் தொங்கவிடுதல் அணியெனக் கருதப்படுகின்றது; எவ்வாறாயினும் காதுகளோ, அணிகளோ காதுகளை ஒட்டி வடிந்த தாளுடைமை காணப்படுதல் இவ்வுவமையினை இன்றும் உண்மையில் விளக்குவதாம். கொடிகள்பற்றிக் கூறும்போது வடிந்த தாள் - கீழ்த் தாழ்ந்த கொடிக் காம்புகள்.

**கிளரொளி மகரவேறு கெழுமிய தன்மை** - காதுகளில் மகரம் போன்ற வடிவுடைய குண்டலங்கள் அணியப்படுதல். காமன் கொடியில் மகரம் - மீன் - உருவம் தீட்டப்படுதல்; கெழுமுதல் - மேல் விளங்குதல்.

**வென்றிக் கொடி** - முன்பாட்டில் "அருள்பெற உளனுங் காமன்" என்றதன் கீழ் உரைத்தவை பார்க்க. "வென்றிக் கொடி" (திருக்கோவை - 1); அளவில் சீர் - என்றதும் அக்கருத்து. நீறுபட்டுப் பின் அருளும் பெற்றபின் காமனது சீர் அளவுபட்ட சீராயிற்றென்க. என்னை? முன்னர்க் காமனது சீர் அளவுபடாது யாரிடத்தும் செல்லும் ஆணை என்று பிரமன் - மால் முதலிய தேவரும் நினைக்க இடந்தந்தது; நீறுபட்ட பின்னர்ச் சிவபிரானிடத்தன்றி ஏனைப் பசுவருக்கத்தாரளவு மட்டும் செல்லவுள்ளதென்று யாவரும் அறியும்படி அமைந்தது. 1100

2999. (இ - ள்) விற்பொலி...கழுத்து - ஒளி விளங்கிய முத்துக் கோவைகள் விளங்கிய கழுத்து; மீது...பூத்த - அதன்மீது அழகமைந்த முகமாகும் பதும நன்னிதியத்தைத் தோற்றுவித்த; நற்பெரும்...போன்று - நல்ல பெரிய சங்கம் என்னும் நன்னிதியத்தினைப் போன்று தோன்றி; அற்பொலி... காட்ட - இருள்போலும் கரியவிடம் விளங்கிய கண்டத்தையுடைய திருநீலகண்டராகிய சிவபெருமான் தந்தருளிய பெருங்கருணைக்கு அடையாளத்தைக் காட்ட;

கழுத்து - முகம்

கக0க

(வி - ரை) கழுத்து - பணிலமென்னு நன்னிதி போன்று தோன்றி - அருட்கடையாளம் காட்ட என்று கூட்டுக.

**கழுத்து** - முத்துக் கோவைகளை அணிதலாலும் வடிவத்தாலும் வெள்ளிய குழையுடைய சங்குபோல்வதனால் சங்க நன்னிதி போன்றதென்பது.

**பதும நன்னியம் பூத்த** - சங்க நிதியாயின் வளம் எதனையேனும் தருமோ? எனின், ஆம் இங்குத் தன் மேலே முகம் என்னும் பதுமநன்னிதி ஒன்று பூத்து விளங்கநின்றது. கழுத்து - சங்கநிதி என்றும், **வதனம்** - பதுமநிதி என்றும் உருவகப்படுத்தப்பட்டன.

**பதும நன்னிதி - பணிலமென்னும் நன்னிதி** - என்று ஈரிடத்தும் **நன்னிதி** என்றார், சிவனருளால் தரப்பட்டவை யாதலின், காமியங்களை உதவி உயிர்களைப் பிறவியிற் செலுத்திவிடும் அசுத்தத் தன்மையுடைய அப்பெயர்கொண்ட ஏனைத் தேவநிதிகள்போலன்று என்று குறித்தற்கு. **நன்னிதி** - பிறிதினியைபு நீக்கிய விசேடணம். ஏனைய அத்தேவருலக நிதிகள் திருவருளால் தூயமேனி கொண்டு உற்பவித்த பாவையாரின் முகம் - கழுத்து இவைகட்கு உவமிக்கப்படும் தகுதியுள்ளவையல்ல என்பது குறிப்பு. முன்னர்க் **காமன் வென்றிக்கொடி-அருள்பெற உளனுங் காமன்** - என்ற குறிப்புக்களும் கருதுக.

**தரளக் கோவை விளங்கிய** - முத்துக் கோவைகளைக் கழுத்தில் வரிசை பெற அணிதல் முன்னாளில் பெருவழக்கு.

பூத்த - தந்த ; ஈன்ற ; பதுமம் பூவாதலின் பூத்த என்பது மேலும் பொருந்துமாறு காண்க. பணிலம் - சங்கம்.

அல்போலி கண்டர் - அல் - இருள் ; அந்நிறமுடைய விடத்துக்காகி வந்தது.

அருட்கு அடையாளம் - அருளினைக் காட்டும் அறிகுறி ; இறைவரது திருவருள் கண்ணுற் காண முடியாமையின் இவ்வடையாளம் பற்றிக் கருதலளவையான் அறிய நின்றது என்க ; இந் நன்னிதியங்கள் கண்டருடைய அருளானன்றி வேறு யாவராலும் தரவியலாமையின் என்பது.

பூப்ப—அற்பெருங்—என்பனவும் பாடங்கள். 1101

3000. (இ - ள்) கருநெடும்...கைகளால் - கரிய நீண்ட கயல்போலும் கண்களையுடைய மங்கையாகிய பாவையாரின் கைகள் காரணமாக(க் காணும்போது) ; எரி அவிழ்...மாலையோ - எரிபோல அலர்ந்த மெல்லிய செங்காந்தட் பூக்களைத் தலைத்தலை பொருந்தத் தொடுத்துப் பொருந்தும்படி வைத்து அதன் திரட்சி மேலால் சுருங்கி வரும்படி அமைத்த வெட்சிப்பூ மாலையோ? ; வேறு தெரியின் - (அதுவன்றாயின்) வேறுமோர் வகையால் ஆராயுங்கால் ; காந்திவெள்ளம்... ...வடிவிற்றோன்ற - உடம்பின்கண் உள்ள மேனியின் ஒளியினது மிகுதி இரு பக்கங்களிலும் மிக்கு வழிந்தனவோ? என்னும் அதிசயம் தோன்ற ; ௧௧௦௨

**கைகள்**

(வி - ரை) மங்கை - பருவங் குறித்தது.

கைகளால் - அதிசயம் தோன்ற - என்று கூட்டுக.

மாலையோ? - காந்தி வெள்ளம் அருகிழிந்தனவோ? - முன்னர்ச் செருவின் வில்லும் சேம வில்லுமாக - கரிய செய்ய கயலிரண்டுமாக - கொடியிரண்டாக - உவமித்தார் புருவங்களும் கண்களும் காதுகளும் இரண்டிரண்டிருத்தலால்; ஈண்டுக் கைகளும் இரண்டாதலின் இரண்டு பொருள்களை உவமித்தார்.

கைகளால் - தோன்ற - என்றது கைகளை நோக்குவதலால் இத்தோற்றம் உண்டாயிற்று. கைகள் தோளினின்றும் கிளைத்துத் திரட்சியிற் சுருங்கிவந்து இருபுறமும் தொங்கும் காட்சி, மேற்புறத்தில் பரிய செங்காந்தட் பூக்களை இசையக் கட்டிக் கீழ் தாழ வரவரச் சுருக்கிய வெட்சியின் மாலைபோன்றன ; தோளினிறமும் கைகளினிறமும் கீழே வரவர வேறுதலும் திரட்சியும் அவ்வாறுதலும்பற்றிப் பெரிய காந்தட் பூக்களை மேல் இசையவும், சிறிய வெட்சிப் பூக்களைக் கீழே இசையவும் அமைத்துக் கட்டிய மாலை என்றார். கைக்ளாய் - என்ற பாடமு முண்டு.

வேறு தெரியின் என்க ; வேறு தெரிதலாவது மற்றொரு வகையால் நோக்குதல்.

கைகள் - மேனியின் காந்தி வெள்ளம் பொங்கி இருபுறமும் வழிந்ததுபோன்றது என்பதாம் ; காந்தி - மேனியினின்றும் வீசப்படும் ஒளி ; வெள்ளம் - மிகுதி.

வடிவில் - வடிவினாலே ; மெய்பற்றி வந்த உவமம் என்பது. 1102

3001. (இ - ள்) ஏர்...கொங்கை - அழகு எழுகின்ற மார்பில் பணைத்து முகிழ்த்து எழுகின்ற தனங்கள் ; நாகக் கார்கெழு...நோக்கால் - பாம்பினது கரிய விடத்தினைப் போக்கும் கவுணியர் தலைவராகிய பிள்ளையாரது கருணைகொண்ட திருநோக்கினால் ; ஆர்...தோன்ற - பொருந்திய திருவருள் என்னும் அமுதத்தினால் நிறையப்பெற்று அமைந்த கும்பத்தினை மேன் மூடிய முகிழ்போன்ற தன்மையில் விளங்கித் தோன்ற ; ௧௧௦௫

**கொங்கை**

(வி - ரை) இளங் கொங்கைகள் ஏந்தி முகிழ்த்து விளங்குதல் பிள்ளையாரது கருணை நோக்கமாகிய அமுதம் பொதிந்த கும்பம் மூடியுடன் முகிழ்த்து விளங்குதல் போன்றது என்பது.

பொங்கும் - பணைத்து எழும். இளங் கொங்கை - பருவநிலை குறித்தது.

நாகக் கார்கெழு விடத்தை......பூரித்தடங்கிய அமுத கும்பம் - பாம்பின் விடம் போக்க அமுதம் வேண்டும்; அமுதம் பெறுதற்குரிய அமுத நிலயம் வேண்டும்; அமுதம் பொறுதற்குரிய இடமும் வேண்டும் என இவை மூன்றும் கூறியபடியாம்.

பூரித்து - நிறைத்து; பணைத்து என்றலுமாம்.

அடங்கிய அமுதகும்பச் சீர்கெழு முகிழ் - அமுதத்தைப் பொதிந்து அடக்கி முகிழ் பெற மூடிய நிலை.

செவ்வி - தன்மை; இயல்.

கொங்கை - தோன்ற - என்க. 1103

3002. (இ - ள்) வாம மேகலை...உரோமவல்லி - அழகிய மேகலையணிந்த கொடிபோன்ற பூம்பாவையாரின் இடையினையடுத்த உந்தியினின்றும் தொடங்கி மேலே செல்லும் ரோம ஒழுங்கானது; காமவேள்...கரந்து - மன்மதன் என்னும் வேடன் உந்தியினுள்ளே மறைந்து இருந்து; கொங்கை...அகப்பட - மேலே உள்ள கொங்கைகள் என்னும் அழகிய சக்கரவாகப் பறவைகளை அகப்படுத்தற்கு; நேரிதாய்...போலும் - நேரான கயிற்றில் நீண்ட கண்ணிகளைக் கோத்ததோர் சலாகையை உயர்த்தியதேபோன்றிருக்க;. கக0௪

உந்தி - உரோமவல்லி

(வி - ரை) உந்தியினின்றும் மேலே செல்லும் ரோம ரேகையானது காமன் உந்தியில் மறைந்து மேலே கொங்கை என்னும் நேமிப் புட்களை அகப்படுத்தத் தூக்கிய சலாகைபோலும் என்க.

காமன்......தூக்கியது - தற்குறிப்பேற்ற அணியினை உள்ளுறுத்து உருப்பற்றி எழுந்த உவமம்.

உந்தியிற் கரந்து - குழிப்பட இருத்தலின் மறைவிடமாகக் கூறப்பட்டது. கொங்கை-நேமியம் புட்கள் - உருவகம். நேமிப் புட்கள் - சக்கிரவாகப் பறவைகள்.

நேரிதாய தாமநீள் கண்ணி சேர்த்த சலாகை - நேரே மேலேசெல்லும் கயிறும் கண்ணியும் கூடிய அம்பு. கண்ணி - பறவைகளைப் பிடிக்கும் வலைபோலமைந்த அமைப்புடைய கயிற்றின் சுருக்கு. சலாகை - அம்பு.

உந்தியினின்றும் உரோம இரேகை மேனோக்கிக் கொங்கைகள் வரையும் செல்வதாம் என்பது. நேரிதாய - சலாகை என்க; சலாகை தூக்கியதே போலும் உரோம வல்லி என்று முடிக்க.

மருங்கு - இடை; இங்கு இடையின் இடையில் இருத்தலாலும் உரோமரேகை அதனின்று மேலெழுதலானும் உந்தி என்ற பொருள் கொள்ளப்பட்டது. உந்தியிற் கரந்து என்றதும் காண்க. 1104

3003. (இ - ள்) பிணி அவிழ்...அல்குல் - முறுக்கவிழ்ந்த மலர்களைச் சூடிய மெல்லிய கூந்தலையுடைய பெண்களுள் அமுதம் போன்ற பாவையாரது செம்பொன் அணிகளைப் பூண்ட அல்குலானது; பணி உலகு ஆளும் சேடன் - நாகலோகத்தை அரசாளும் ஆதிசேடன்; தங்கள்...அல்குலாகி - தங்கள் சுற்றமாகியதொரு பாம்பு பூம்பாவையைத் தீண்டிய பிழையின் பொருட்டுத் தான் அச்சமுற்றுச் செம்மணிகள் விளங்கும் காஞ்சி என்னும் எண்கோவை வடத்தினுற்

அல்குல்

சூழப்பெற்று அழகுடைய அல்குலாகி ; பணம் விரித்து அடைதல் காட்ட - படத்தை விரித்துச் சேரும் தோற்றத்தைக் காட்ட ; கக0டு

(வி - ரை) அல்குல் - (சேடன் பணம் விரித்தடைதல்) காட்ட என்று முடிக்க.

**தங்கள்...அடைதல்** - அல்குல் சேடனது படம் விரிந்த நிலை போன்றது என்பார் சேடன் படம் விரித்து இங்கு அடைதலுக்குத் தற்குறிப்பேற்றமாகத் தங்கள் அரவு செய் பிழையாலஞ்சி என ஓர் காரணமுங் கற்பித்துக் கூறினார்.

**சேடன் தங்களரவு செய் பிழையாலஞ்சி - அடைதல்** - தன் சுற்றத்தாருள் ஒருவன் ஒரு பிழை செய்தால் அப்பிழையினுக்குத் தீர்வு பெறும்பொருட்டு அவ் வினத்தின் தலைவன் புகலடைந்து இரந்து கேட்பதுபோல என்றதொரு நல்லொழுக்க நிலையினையும், பிழைக்கஞ்சுவது பெரியோர் இயல்பென்ற ஒழுக்க நிலையினையும் எடுத்துக் காட்டிய குறிப்பும் காண்க.

**பிழையால் - அஞ்சி - அடைதல்** - பிழைக்கஞ்சிப் புகலடைதல் என்ற குறிப்பும் பட நின்றது. **தங்கள் அரவு** - தங்கள் இனத்தாருள் ஓர் அரவு.

**காஞ்சி** - எண்கோவை மணிவடக் கோவை.

**செம்பொன் அணிவள ரல்குல்** - மறைவுத் தானமாகிய அவயவத்தைப் பொன் அணி வளர் என்று பொன் அணிந்து மறைத்துக் கூறிய நயம் காண்க.

**மணிகிளர் காஞ்சி** - ஆதிசேடன் ஆயிரம் பணாமுடியுடைய னாதலினாலும், ஒவ்வோர் படமும் மணிகளை யுடைமையினாலும் அவன் படம் அல்குலாகிப் பணம் விரித் தடைந்தால் அத்துணையும் ஆயிரம் மணிகள் கிளர்ந்து காஞ்சியாகச் சூழ்ந்து விளங்கும் என உவமேயத்திற் பொன்னணிந்து மறைத்ததுபோலவே உவமையிலும் மணிக்காஞ்சி யணிந்து மறைவுபடுத்திய கவிநயம் கண்டுகொள்க.

**அல்குல்** - பாம்பின் படம் போன்றதென்பது உவமை.

**பணியுலகு** - நாகங்களுக் கிருப்பிடமாகிக் கீழ் உலகுகளுள் ஒன்றாகக் கூறப்படும் நாகலோகம். 1105

3004. (இ - ள்) **வரிமயில்...மாமை** - வரிகளையுடைய மயில்போன்ற சாயலை யுடைய மங்கையாகிய பாவையாரின் பொன்போன்ற துடைகளின் அழகானது ; **கரி இளம்பிடிக் கை...காட்ட** - இளம் பெண்யானையினது துதிக்கையின் அழகினை வெற்றிகொண்டு வாழையின் மெல்லிய தண்டின் அழகினையும் எடுத்துக் காட்ட ; **தெரிவுறும்...செவ்வி** - நோக்குவோர்க்கு மென்மையினை உடைய செழிய முழந்தாள்களின் அழகானது ; **புரிவுறு......பொங்க** - கைத்திறமமைந்த பொன்னாலாகிய பந்துபோல விளங்கி ஒளி பொருந்திப் பொங்க ; கக0சு

**துடை - முழந்தாள்**

(வி - ரை) இப்பாட்டினால் துடைகள் - முழந்தாள்கள் என்ற இரண்டன் பொலிவும் கூறப்பட்டன.

**துடையின் அழகு** இளம்பெண்யானையின் துதிக்கையினையும், வாழைத் தண்டினையும் போன்று விளங்கியது.

**முழந்தாளின் அழகு** பொற்பந்து போன்று விளங்கியது.

**குறங்கு** - துடை ; **மாமை** - அழகு ; நிறம் என்பாருமுண்டு. இங்கு யானைத் துதிக்கையும் வாழைத் தண்டும் நிறத்தாலன்றி வண்ணத்தாலும் மென்மையாலும் உவமிக்கப்படுதலால் மாமை - நிறம் என்றுரைத்தல் சாலாதென்க. "மணியிடை பொன்னின் மாமை சாய" (நற் - 304) என்றதில் மாமை-அழகு என வருதல் காண்க.

**பிடிக்கை - கதலித் தண்டு** - *தடையின் வடிவம் மேலே பெருத்து வரவரக் கீழே சிறுத்துவரும் நிலே குறிக்க இவ்வாறு கூறினர்.*

**காட்டுதல்** - *போன்றிருத்தல் ; உவமவுருபு.* **பிடிக்கை - தண்டு** - *இவைகள் இவற்றின் தன்மை குறித்து நின்றன.*

**தெரிவுறுமவர்** - *பார்ப்பவர் ; நோக்குவோர்.* **புரிவு** - *கைப்பாடாகிய வேலே - திறம் ; விருப்பம் என்றலுமாம்.*

*வ்நுமயில்—என்பதும் பாடம்.* 1106

3005. (இ - ள்) பூவலர்...*கணைக்கால் - பூக்கள் அலர்தற்கிடமாகிய மணமுடைய மெல்லிய கூந்தலேயுடைய பொற்கொடி போன்ற பாவையாரின் கணைக்கால் ; காமன்......எய்த - மன்மதனது அம்பறுத் தூணியே போலும் அழகினலே மேன்மை பொருந்த ; மேவிய...மீதிட்டு - பொருந்திய செம்பொன்னலாகிய தராசுத் தட்டின் அழகை வென்று ; என்றும்...ஓங்கி - எக்காலத்தும் சித்திரம் தீட்டுவோர்களுக்கும் எழுத இயலாத பாடுகளின் ஒளி விளங்கி ஓங்க ;* கக0எ

**கணைக்கால் - பாடு**

(வி - ரை) பொற்கொடி - *பொன்னின் கொடிபோன்ற பாவையார்.*

**கணைக்கால்** - *காமனது ஆவநாழிகை போலவும்,* **பாடு** - *செம்பொற்றகடு போலவும் விளங்கின என்பதாம்.*

**காமன் ஆவ நாழிகை** - *அருள்பெற உளனுங் காமன்* (2995) ; " *அனங்கன் வென்றிக் கொடி* " (2998) *என்ற கருத்துக்களே ஈண்டுங் கூட்டுக.* **ஆவ நாழிகை** - *அம்பறுத்தூணி; அம்புப் புட்டில்.*

**பொற்றட்டு** - *பொன் தராசுத் தட்டு.* **பாடு** - *குதிக்கால். ஆவநாழிகையும் தகடும் உருவுபற்றிய உவமை.*

**மீதிடுதல்** - *ஓங்குதல் ; வென்றி கொள்ளுதல்.*

**ஓவியர்க் கெழுதவொண்ணு** - **ஓவியர்** - *சித்திரம் எழுதுவோர் ;* **ஓவியர்க்கும்** *எனச் சிறப்பும்மை விரிக்க ; அவயவ மிவையெழுத வரிதென்ற அகத்துறை (திருக்கோவை - 79) வழக்கும் காண்க ; மக்களின் ஒப்புமை பெற ஓவியம் எழுதும் கலேயும் சிற்பம் செதுக்குதலும் பண்டைக் காலந்தொட்டுத் தமிழ் மக்கள் சிறந்து கைதேர்ந்து ஆண்டுவந்த கலேஞானங்களாம். " ஓவியர்க் கெழுத வொண்ணு உருவத்தாய் " என இத்தொடரின் சுவை கருதி இவ்வாறே எடுத்துப் பெய்துகொண்ட கம்பன் பாட்டு இச்சொற்றொடரின் சொன்னயமும் பொருணயமும் காட்டி நிற்கின்றது.* **ஒளிர்வுறுதல்** - *விளங்குதல் ; ஒளிர்தல்.*

*கருமேன்—ஔிவிட்டோங்க—என்பனவும் பாடங்கள்.* 1107

3006. (இ - ள்) *கற்பகம்...போலும் - கற்பகமரம் தந்த சிவந்த அழகிய பவளத்தின் ஒளி வீசுகின்ற பொன்திரளுடன் வயிர வரிசைகளேயுடைய பூங்கொத்துக்கள் மலர்ந்தன போலும் ; பொலிவு - அழகினே ; நற்பதம் காட்ட - நல்ல பாதம் காட்ட ; ஞாலமெல்லாம்...தோன்றி - இந் நிலஉலகமும் விண்ணுலகமும் ஏனைய எல்லா உலகங்களும் அற்புதம் பொருந்தத் தோன்றி ; அழகினுக்கு அணியாய் நின்றாள் - அழகுக் கழகுசெய்யும் பொருளாய் நின்றாள் ;* கக0அ

**பாதம்**

**(வி - ரை) பதம், (*கற்பகமீன்ற - பூந்துணர் - போலும் பொலிவு*) காட்ட** *என்று கூட்டுக.*

கற்பகம்......மலர்ந்த போலும் - கற்பக மரத்தின் பூங்கொத்துக்கள். அவை பவளவொளியும் வயிரப் பத்தி ஒளியும் பொருந்தியன ; பாவையாரின் பாதங்கள் அத்தகைய பூந்துணர் போன்றன என்பதாம் ; மெய்பற்றி வந்த உவமம்.

பவளம் (சோதி) - பொன் (திரள்) - வயிரம் (பத்தி) - கால்கள் சிவப்பும் பொன்மையும் நகங்களின் வெள்ளிய ஒழுங்கும் உடைமையின் இவ்வாறு கூறினர்.

ஞாலமும் விசும்பும் எல்லாம் - நடு - மேல் - கீழ் உலகிலுள்ளோர் எல்லாரும் ; ஞாலம் - உலகிலுள்ளோர். எல்லாம் - ஞாலமும் விசும்புமொழிந்த கீழுலகம் ; பாதல உலகு. அவற்றைப் பெயராற்றானும் கூறலாகாத மரபுபற்றி ஏனை யிரண்டினைமட்டுங் கூறி இதனை ஒழிபினாற் கூறினர். "மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனி வெல்ல" (1922) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. "ஞாலமே விண்ணே பிறவே", "வானே நிலனே பிறவே" (திருவா) ; பாவையார்பாற் பிழைத்த நாக லோகத்தின் பெயரைச் சொல்லாத குறிப்பும் காண்க.

தோன்றி - முன் (2993) "கன்னிதன்" என்ற பாட்டுமுதல் இதுவரை பதின் மூன்று பாட்டுக்களினும் தோன்ற - வாய்ப்ப - ஏர்ப்ப - முதலாக முடிபு கூறிவந்த வினையெச்சங்களை யெல்லாம் தோன்றி என்னும் இவ் வினையெச்சத்துடன் கூட்டி நின்றாள் என்ற வினைமுற்றுடன் முடித்துக்கொள்க.

அழகினுக் கணியாய் - ஏனை எப்பொருள்களையும் அழகுபடுத்தும் அழகு என்ற தொரு குணமானது தான் அழகு பெறும்படியாக.

நின்றாள் - குடமுடைந்து எழுவாள் - எழுந்தனள் போன்றாள் (2988) - அணி யாய் நின்றாள் என்று இத்துணையும் ஒன்றுபடுத்தி யுரைத்துக்கொள்க. 1108

இவற்றின் பிண்டப் பொழிப்பு:—பிள்ளையார் பதிக நிறைவாக்கினபோது எலும்புஞ் சாம்பலு நிறைந்த குடத்தினின்றும் குடமுடைந்து தாமரைமலரினின்றும் எழுவாளைப் போன்று பூம்பாவையார் பன்னிரண்டாண்டளவு வளர்ச்சியுடன் எழுந்த னர். அவ்வாறு எழுந்தபோது, அவரது அழகுமுழுமையும் கண்களால் முற்ற ஒருங்கே காண இயலாமை முன்னுறக் கண்ட கண்ட அளவே அமைவதாயிற்று. குழலின் பாரம் முகத்தாமரையிற் சூழும் வண்டின் ஒழுங்குபோலத் தோன்றவும், குழலின்கீழ் நுதல் அழகின்மாரி பொழிந்திட முகிலின்கீழ் இட்ட வானவில்போலத் தோன்றவும் ; புருவக் கோடிகள் சிவபெருமானது நெற்றிக்கண்ணால் எரிந்து பின் அருள்பெற நிற்கும் காம னது செருஎழும் வில்லும் சேமவில்லும்போலத் தோன்றவும் ; கண்கள் முகமதியின் வெண்ணிலா வெள்ளத்தில் நீண்ட கரிய செய்ய கயலிரண்டு உலாவுதல் போலத் தோன்றவும்; நாசியும் பவளவாயும் காமரூபி இந்திர கோபப்பூச்சியை வவ்வத் தாழும் நிலை போன்று தோன்றவும் ; மகரக்குழை வடிந்த காதுகள் காமனது வென்றிக் கொடி கள்போலத் தோன்றவும் ; முத்துவடம் சூழ்ந்த கழுத்தின்மீது முகத்தாமரை சிவனரு ளின் அடையாளமாகிப் பதுமநன்னிதி பூத்த சங்க நன்னிதிபோலத் தோன்றவும் ; கை கள் மீது செங்காந்தள் தொடுத்த வெட்சிமாலையோ ? அன்றி மேனியின் காந்தி வெள் ளம் இருபுறமும் வழிந்ததோ ? என்று வடிவில் தோன்றவும் ; கொங்கைகள் விடத்தை நீக்கப் பிள்ளையாரது திருநோக்கினால் அமுதம் நிறைத்து மூடிய அமுதகும்பங்கள் முகிழ்த்தனபோலத் தோன்றவும் ; உந்தியினின்று மேற்செல்லும் உரோமரேகை காம னாகிய வேடன், உந்தியில் மறைந்து நின்று, கொங்கைகளாகிய நேமிப்புட்களை அகப் படுத்த நேரிதாய் நீண்ட கண்ணிகொண்ட சலாகை தூக்கியதுபோலத் தோன்றவும் ; செம்பொன் அணிவளர் அல்குல் சேடன் படம் அல்குலாகி உருக்கொண்டு மணிகிளர் காஞ்சிசூழப் பணம் விரித்தடைதல்போலத் தோன்றவும் ; துடைகள் இளம்பிடியின்

கையும் வாழையின் தண்டும்போலவும், முழந்தாள் பொற்பந்துபோலவும் தோன்றவும்; கணைக்கால் காமனது அம்புப் புட்டில்போலவும், பாடு பொற்றராசுத் தட்டுப்போலவும் தோன்றவும்; பாதங்கள் கற்பகத் தருவின் செவ்விய பொன்றிரண்ட வயிரகிளை பூத்த பூந்துணர்போல அழகுகாட்டவும் மூவுலகமும் அதிசயம் பொருந்த அழகுக்கழகாக எழுந்து நின்றாள் என்பதாம்.

*3007. எண்ணிலாண் டெய்தும் வேதாப் படைத்தவ ளெழிலின் வண்ணம்
நண்ணுநான் முகத்தாற் கண்டா; னவளினு நல்லா டன்பாற்
புண்ணியப் பதினு ருண்டு பேர்பெறும் புகலி வேந்தர்
கண்ணுதல் கருணை வெள்ள மாயிர முகத்தாற் கண்டார். கக0சு

(இ - ள்) எண்ணில் ஆண்டு...கண்டான் - அளவில்லாத ஆண்டுகளைத் தன் ஆயுளாகவுடைய பிரமதேவன் தான் படைத்த திலோத்தமை என்னும் பெண்ணினது அழகின் வண்ணங்களைத் தனக்குள்ள நான்கு முகங்களாற் கண்டு மகிழ்ந்தான்; அவளினும் நல்லாள் தன்பால் - அவளின் மேலாகிய நன்மைத்தன்மைகள் நன்கு நிரம்பிய பூம்பாவையாரிடமாக; புண்ணியப் பதினாறுண்டு...வேந்தர் - சிவபுண்ணிய விளைவாகிய பதினாறுண்டு அளவுபட்ட பெயரினைப் பெறும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; கண்ணுதல்...கண்டார் - நெற்றிக்கண்ணை யுடையவராகிய சிவபெருமானது கருணைப் பெருக்கினையே ஆயிரமுகங்களாற் காண்பாராயினர்.

(வி - ரை) எண்ணில் ஆண்டு எய்தும் வேதா - பிரமதேவனுடைய ஆயுள் எல்லை மனிதவருட அளவால் கணக்கிட்டால் அளவுகடந்த வருடங்களாகும் என்பது; பின்னர்ப் பிள்ளையாரது உலக நிலையின் ஆண்டெல்லையினை மனித வருடத்தால் கணக்கிட்டுக் கூறுதலின், கால அளவுகோல்நோக்கி ஒப்பிடும் பொருளிரண்டனிலும் ஒன்றாக இருத்தல்வேண்டிப் பிரமன் ஆயுள் எல்லையினை மனிதவருடத்தால் அளந்தார். பிரமன் ஆயுளாவது:—மானிடவருடம் ஒன்று தேவர்களுக்கு இரவும் பகலும் கொண்டதொரு நாளாகும்; அந்நாள் முந்நூற்றறுபது கொண்டது தேவ வருடம். எனவே மனித வருடம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்க்கொருவருடமாம். அவ்வாறு தேவ வருடம் 12000 கொண்டது தேவயுகம்; தேவயுகம் இரண்டாயிரம் பிரமனுக் கொருநாளாகும்; இவ்வகை நாட்கணக்கிட்டுச் செல்லும் 100 ஆண்டுகளைத் தன் ஆயுள் எல்லையாகவுடையது பிரமனது ஆயுட்காலம்; இதுபற்றி இவ்வாண்டுகளை மனிதவருடத்தா லளத்தல் எண்ணிறந்த நிலையாதலின் எண்ணிலாண் டெய்தும் வேதா என்றார்; இவ்வாறாகிய ஆயுட்காலம் நிறைவின்போது பிரமன் இறந்துபடும்; "பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போ, யிருங்கடன் மூடி யிறக்கும்" (தேவா - அரசு).

புண்ணியப் பதினறண்டு பேர்பெறும் - பிரமனைக் கூறியதுபோல ஆண்டு எய்தும் என்னாது ஆண்டு பேர்பெறும் - என்றார். இறத்தலும் பிறத்தலும் இயல்பாயொழியும் வினைவயத்துளாராகிய பசுவர்க்கத் துட்பட்ட பிரமன் முதலியோர்போலன்றிப், பிள்ளையார் வினைவயத்த ரல்லராகித் திருவடிமறவாப் பான்மையோராய், உலகத்தில் தொண்டினிலை தர வந்தவராய்த், தம்பொருட்டன்றிப் பரசமய நிராகரித்தும் திருநீற்றினை ஆக்கியும் உலகத்தவரை உய்யக்கொள்ள அவதரித்தவராய் நின்ற சீவன் முத்த நிலையினராதலின் இறத்தல் பிறத்தல்களி னுட்படுவாரல்லர். அவர் திறத்துப் பதினறண்டு என்பது உலகவர் காணக் காட்டும் ஓர் கால அளவாதலன்றி ஆயுளை நாணும் மூப்புச் செய்த "நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும் வாள

துணைப் பெறின்" (குறள்) என்ற தன்மைகொண்ட காலக் கூறுபாடன்று. காலம் நியதி முதலிய தத்துவங்களை யெல்லாங் கடந்த சிவானந்தப் பெருவாழ்வுடைய பெம்மான் எமது பிள்ளையாராதலின், **பதினாறாண்டு** என்பது பிரமன்பால் எண்ணி லாண்டு எய்தும் என்றாற்போல் அவரது ஆயுளை அளக்குநிலை பெற்ற அளவன்று ; சுடர், உதயமுமீறு மடையும் அளவே நாள் எனப்படும். ஆயின் பிள்ளையார் கண்டு கொண்டிருக்கும் சிவ பரஞ்சுடருக்கு உதயமு மீறுமில்லை ; ஆதலின் அந்த எல்லை அளவேபடும் ஆயுளும் ; அது வளர்வதும் தேய்வதும் இல்லையாம். "மூப்பது மில்லை பிறப்பது மில்லை யிறப்பதில்லை" (நம்பிகள்) என்ற தன்மையே இவர் தன்மை. பதினா றாண்டு என்பது பெயர் மாத்திரையி னமைவதாம்; உண்மையினன்று என்பது ஆண்டு பேர்பெறும் என்ற குறிப்பு ; திருமூலர் வரலாறு முதலியவையும் கருதுக.

**புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் - புண்ணியம்** - ஈண்டுச் சிவபுண்ணிய விளைவாகிய சிவஞானானந்த வாழ்வு குறித்தது ; பேர் பெறும் என்றது இனித் திருமண நிறைவுவரை உள்ள எல்லையும் அடங்க நிற்பதால் எதிர்காலத்தாற் கூறினார்.

**புண்ணியம்** - இப்பொருளில் வந்ததென்பது, இதுபோலவே பதினாறாண்டு பேர் பெறும் தலைவராகிய திருக்கண்ணப்ப தேவர் திறத்தில் "கலைவளர் திங்களே போல், எண்ணிரண் டாண்டின் செவ்வி யெய்தினா ரெல்லை யில்லாப், புண்ணியந் திரண்டு மேன்மேல் வளர்வதன் பொலிவு போல்வார்" (691) என்ற கருத்தினாலும் அறியப் படும். "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" (1953) என்று பிள்ளையார் திறத்துக் கூறியதுபோலவே ஆண்டும் "முன்புசெய் தவத்தி னீட்ட முடிவிலா இன்ப மான, அன்பினை யெடுத்துக் காட்ட" (751) என்றருளியதும், இவ்விரு பெருமக்க ளுக்குமன்றி நாயன்மாருக்குப் புண்ணிய ஆண்டெல்லை கூறாமையும் கருதத்தக்கன.

**புகலி வேந்தர் - புகலி** - சீகாழியின் மூன்றாவது திருப்பெயர் ; "புகலி காவ லர்" (2981) என்று இவ்வரலாற்றில் தொடங்கிய நிலையினையே தொடர்ந்து முடித்துக் காட்டியவாறு கண்டுகொள்க ; ஆண்டுரைத்தவை பார்க்க.

**கண்ணுதல் கருணைவெள்ளம் ஆயிரமுகத்தாற் கண்டார்**-பிள்ளையார் பன்னிரண் டாண்டளவு வளர்ச்சி பெற்றெழுந்த பூம்பாவையாரையேனும் அவரது அணிநலங்களை யேனும் கண்டாரிலர் ; கண்ணுதலின் உருவு காணவியலாத கருணைவெள்ளத்தையே உருவாகக்கண்டனர். தமது ஒருமுகத்தானன்றி, அதன் இருகண்களானன்றி, ஆயிரமுகத் தாற் கண்டார் ; "பரமே பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார்" என்ற தன்மையின ராதலின். "நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே" என்ற கந்தரலங் காரமும் காண்க. **முகம்** - ஈண்டு "நான்முகத்தால்" என்றதனுடன் சொல்லொற் றுமை பெறினும் வாயில் என்ற பொருளில் வந்தது. **ஆயிரம்** - நான்முகன் என்புழிப் போல, எண்ணும் பொருளிலன்றி அளவிறந்த என்ற பொருளில் வந்தது. "ஆயிர ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானும், ஆயிரம் பொன்வரை போலு மாயிரந் தோளுடை யானும், ஆயிரந் தாமரை போலு மாயிரஞ் சேவடி யானும், ஆயிரம் பேருடை யானு மாரூ ரமர்ந்தவம் மானே" (அரசுகள்) ; "அடியா யிரந்தொழி லாயின வாயிர மாயிரம்பேர், முடியா யிரங்கண் கண்மூவா யிரமுற்று நீறணிந்த, தொடியா யிரங் கொண்ட தோளிரண் டாயிர மென்றுநெஞ்சே, படியா யிராப்பகற் றென்மரு தாளி யைப் பற்றிக் கொண்டே" (திருவிடை - மும். கோவை - 27) என்பனவாதி திரு வாக்குக்களிற் போலக் காண்க. **வெள்ளம்** என்றதும் இக்குறிப்புத் தருவது.

**ஆண்டு - நான்கு** - (ஆயிரம்) - **முகம்** - என்பன மூன்றும் வேதாவின்பால் வேறு பொருளிலும், பிள்ளையார்பால் வேறுபொருளிலும் நின்றமை உய்த்துணர்ந்துகொள்க ;

பிரமன்பால் ஆண்டு - மனித வருடம்; நான்கு - எண்; முகம் - முகம். பிள்ளையார்பால் ஆண்டு - என்ற பெயர்மட்டில் அமைவது; ஆயிரம் - எண்ணிறந்தது; முகம் - வாயில்.

**எழிலின் வெள்ளம் - கண்ணுதல் கருணைவெள்ளம்** - ஈரிடத்திலும் வெள்ளம் - பெருக்கு - என்று வரினும் முன்னர்ப் பிரமன் கண்ட ஒரு பெண்ணினது அழிவுறும் மாயாவிலாச அழகினையும், பின்னர்ப் பிள்ளையார் கண்ட பெண்ணின் அணிநலத்தின் மேல் வைத்து அதனையன்றி இறைவனது அழிவில்லாத, மாயைக்கு அதீதமாகிய, கருணைப் பெருக்கினையும் குறித்தது.

**கண்ணுதல்......கண்டார்** - நியதி தத்துவத்துள் நின்று பாவையாரை முன்னர் மறக்கருணை செய்து அழித்தெரித்த அங்கிலேயே, ஈண்டு அறக்கருணை செய்து முன்னர் நின்ற வளர்ச்சியுடன் மீள உற்பவிப்பித்தலால் ஈண்டுக் கண்ணுதல் என்ற பெயரால் கூறினார். நுதற்கண் காமனை எரித்தஆறே மீள உயிர்ப்பித்தருளியமை குறிப்பு. நெற்றிக் கண்ணின் கருணைத்திறம் பற்றி "நெற்றியிற் கண்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" (அரசுகள்); "வல்லிருளா யெல்லா, வுலகுடன்றுன் மூடவிருளோடும்வகை நெற்றி யொற்றைக்கண் படைத்துகந்த உத்தமனூர்" (நம்பி - கலயநல்லூர் - 4); "நெற்றியிற் நிகழ்ந்த வொற்றை நாட்டமும்...ஒள்ளிதின் விளங்க நாடக மாடுதி நம்ப" (கோயினுன் - 12) முதலிய திருவாக்குக்கள் காண்க.

கருணைவெள்ளங் கொண்ட நுதற்கண்ணினால் இறைவர் கண்டமையால் பிள்ளையார் கண்டார் என்பதும் குறிப்பு. "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" (போதம் - 11).

**வேதாப் படைத்தவள் எழிலின்வண்ணம் நான்முகத்தாற் கண்டான்** - பிரமன் ஒருகால் மிக்க அழகுடன் ஒரு பெண்ணைப் படைக்க எண்ணி அவ்வாறே திலோத்தமையைப் படைத்தான்; படைத்த பின் அவளழகினில் ஈடுபட்டுக் காமத்தின் மூழ்கி அவளைக் கண்டு தொடர, அவள் ஓடி மறைய, நான்கு முகத்தாலும் நான்கு திக்கினும் பார்த்தனன் என்பது பண்டைப் புராண வரலாறு; பெண் என்பது மாயை உருவம் என்றும் பாராது, தன்னாற் படைக்கப்பெற்றவள் தன் மகளாதலின் காமமூழ்கிப் பார்வை செய்தல் கூடாவொழுக்கமாம் என்றும் பாராது கண்டனன் எண்ணிலாண்டுற்ற தேவனாகிய பிரமன்; ஈண்டுப் பிள்ளையார் அவ்வாறன்றிப் பதினாறாண்டு பேர் பெறுபவர் கண்ணுதல் கருணைவெள்ளத்தையே கண்டார்; பிரமன் நான்முகத்தாற் கண்டான்; பிள்ளையார் ஆயிரமுகத்தாற் கண்டார் என்றிவ்வாறெல்லாம் பிள்ளையாரது பெருமையினைப் பலவாறும் உய்த்துணரவைத்த கவிநயம் காண்க; இறைவரது கருணைத் திறம் எத்தனை வகையானும் கண்டனுபவிக்கத்தக்க தென்பதுமாம்; இக்கருத்தையே பற்றிப் பின்னர் "மேவியஞா னத்தலைவர் விரிஞ்சன்முத லெவ்வுயிர்க்குங், காவலனார் பெருங்கருணை கைதந்த படியென்று" (3016) பன்முறையும் பணிந்தனர் என்றார்.

**அவளினும் நல்லாள்** - பூம்பாவையாரின் அணிநலங்கள் பிரமன் படைத்த திலோத்தமையின் நலங்களைவிட மேன்மையும் நன்மையும் கொண்டன என்பதாம். என்னை? இது சிவஞானச் சிருட்டியாதலான். நன்மை - சிவனருள் விளைவு. 1109

வேறு

3008. இன்னணம் விளங்கிய வேர்கொள் சாயலாள்
தன்னைமுன் கண்ணுறக் கண்ட தாதையார்

பொன்னணி மாளிகைப் புகலி வேந்தர்தாள்
சென்னியிற் பொருந்தமுன் சென்று வீழ்ந்தனர். ௧௧௧௦

(இ - ள்) இன்னணம்...தாதையார் - முன் கூறிய இவ்வாற்றால் விளங்கிய அழகினைக் கொண்ட சாயலையுடைய பூம்பாவையாரைத் தன்முன்னே வெளிப்படக் கண்ணாரக் கண்ட தாதையாராகிய சிவநேசர்; பொன்னணி...வீழ்ந்தனர் - பொன்னாலணியப்பட்ட மாளிகைகளையுடைய சீகாழித் தலைவரது திருவடிகள் தமது சிரத்திற் பொருந்தும்படி முன்சென்று வீழ்ந்து வணங்கினர்.

(வி - ரை) இன்னணம் - முன் 14 பாட்டுக்களில் விரித்தோதியவாறு.

ஏர்கொள் சாயலாள் - பூம்பாவையார். ஏர் - அருளின் அழகமைப்பு; சாயல் - மென்மை. ஐம்பொறிகட்கும் விடயமாம் புலன்களைந்தன் மென்மையும் கொள்ளப்படும் (சிந் - உரை).

தாதையார் - சிவநேசர்; முன் ஈன்றெடுத்த அம்மரபுபற்றிக் கூறியது. முன் - தாதையார் என்று கூட்டியுரைக்க நின்றதும் குறிப்பாம். இப் புனருற்பவத்தில் உற்பவிப்பித்த தாதையார் பிள்ளையாராவர் என்பது பின்னர் (3012) வரும் வரலாறு.

புகலி வேந்தர் - முன்பாட்டிற் கூறிய குறிப்புக்கள் காண்க.

தாள் சென்னியிற் பொருந்த - தாடலைபோலத் திருஅடியில் முடி ஒன்றுபட்டுப் பொருந்தும்படி.

வீழ்ந்தனர் - அடியற்ற மரம்போலத் தன்முயற்சியின்றி வீழ்ந்தனர் 1110

3009. அணங்கினு மேம்படு மன்ன மன்னவள்
பணம்புரி யரவரைப் பரமர் முன்பணிந்
திணங்கிய முகின்மதிற் சண்பை யேந்தலை
வணங்கியே நின்றனள் மண்ணு ளோர்தொழ. ௧௧௧௧

(இ - ள்) அணங்கினும்...அன்னவள் - திருமகளினும் மேம்பாடுடையவராய் அன்னம் போன்றவருமாகிய பூம்பாவையார்; பணம்...பணிந்து - படத்தைப் பொருந்திய ஐந்தலைப் பாம்பினை அரையிற் சாத்திய கபாலீசரது முன்னிலையிற் பணிந்து; மண்ணுளோர் தொழ - அதனைக் கண்ட உலகத்தவர் தொழும்படியாக; இணங்கிய...நின்றனள் - முகில் பொருந்திய மதிலையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை வணங்கியே நின்றனர்.

(வி - ரை) அணங்கு - திருமகள்; இலக்குமி. மேம்பாடாவது சிவஞானச் சிருட்டியி னுட்பட்டுச் சிவத்தைச் சாருந்தன்மை பெறுவதனால் அழியாநிலை பெற நிற்றல்.

அன்னம் அன்னவள் - அன்னம் - ஈண்டு அதன் நடையினைக் குறித்துநின்றது. அன்னநடை போன்ற நடையினை உடையவர்.

பணம்...பணிந்து - பரமரது கருணை வெள்ளத்தான் மீண்டு வருதலின் அவரை முன்னர்ப் பணிந்தனர்; அன்றியும் இறைவரை முன் வணங்கிப் பின் குருவை வணங்கும் ஓர் முறைபற்றி முன் வணங்கியதுமாம். திருக்கோயில் வாயிலின்முன்.

பணம்புரி அரவு அரைப் பரமர் - அரவின் விடம் நீங்க அருளிய குறிப்புத் தோன்ற அரவினை இடையிற் கட்டிவைக்கும் இத்திறம்பற்றிக் கூறினர். முன் உற்பவத்தில் எப்போதும் வணங்கப்பெற்ற கபாலீசரை எலும்புருவாய்க் கிடந்த ஐந்தாண்டு

களும் பணிதலின்றிக் கழிந்தமையால் அவ்வாறு வழிபாடின்றிக் கழிந்தகாலத்திற் கிரங்கிய ஆராமையால் முன்னர்க் கபாலீசரைப் பணிந்தனர். முன் பணிந்து - திருமதிற் புற வாய்தலில் (2978) இறைவரது அபிமுகத்தினில் வைக்கப்பட்ட குடத்தினின்றும் எழுந்து நின்றமையால் அங்குப் பரமர் முன்பு நின்றவாறே (கோயிலினுட் புகாமல்) பணிந்தனர் என்க.

சண்பை - சீகாழிப் பதியின் ஒன்பதாவது திருநாமம்; ஏந்தல் - பெருமை - மேம்பாடுடையவர்.

சண்பை ஏந்தலை வணங்கியே நின்றனள் - பிள்ளையாரது கருணை மெய்த் திருவாக்கினாலே விடநீங்கி யுய்ந்தமை தெரிந்தவர் பாவையார் ஆதலின் அவரை வணங்கினர். அன்றியும் பிள்ளையாரிடத்துத் தம் தந்தையார் கொண்ட ஆர்வமும் வழிபாடும் அறிந்தவராவர். இனித், தம்மைப் பிள்ளையாருக்கு உரியவராகத் தமது தந்தையார் கொடுத்த (2951) செய்தியறிந்தவராதலின் அவருக்குத் தாம் உரியவர் என்ற நிலையினையும் புந்தியுட் கொண்டவர்; ஆதலின் அவரை வணங்கி நின்றனர். ஆளுடைய அரசுகளால் "தீவிட நீங்க வுய்ந்த திருமறை யவர்தம் சேயும்" (அப்பூதியாரது மூத்த திருமகனார்) விடநீங்கி எழுந்தவுடன் இவ்வாறே அவரது "செய்ய பூவடி வணங்கி"ய நிலை (1818) ஈண்டு நினைவு கூர்தற்பாலது. இங்குப் பாவையார்போல் முன் கூறியவாறு பற்றிய முன்தொடர்புகள் இல்லாமையால், பிள்ளையாரருளால் முயலகனோய் நீங்கப் பெற்ற கொல்லிமழவன் மகள் நோய் நீங்கி எழுந்தவுடன் தனது தாதை புடையடைந்து நின்று பின்னரே தாதையும் தானும் கூட வணங்கினர். "கன்னி யுறுபிணி விட்டு நீங்கக் கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து......பொருவலித் தாதை புடையணைந் தாள்" (2217).

மண்ணுளோர் தொழ - இவ் வருள்நிகழ்ச்சியினைக் கண்ட உலகர் யாவரும் தொழும்படி. தொழ - நின்றனள் என்க. பின்னே வரும் உலகோர்களும் விழாக் கொண்டாடித் தொழுது உய்யும்படி என்ற குறிப்பும், இன்றும் ஈண்டு இவ்விழா மிகப் பெருஞ் சிறப்பாய்க் கொண்டாடி வழிபடப்பெறுதலும் காண்க. 1111

3010. சீர்கெழு சிவநேசர் தம்மை முன்னமே
கார்கெழு சோலைசூழ் காழி மன்னவர்
"ஏர்கெழு சிறப்பினும் மகளைக் கொண்டினிப்
பார்கெழு மனையினிற் படர்மி" னென்றலும், ககக௨

3011. பெருகிய வருள்பெறும் வணிகர் பிள்ளையார்
மருவுதா மரையடி வணங்கிப் போற்றிநின்
"றருமையா லடியனேன் பெற்ற பாவையைத்
திருமணம் புணர்ந்தருள் செய்யு" மென்றலும், ககக௩

3012. மற்றவர் தமக்குவண் புகலி வாணர் "நீர்
பெற்றபெண் விடத்தினால் வீந்த பின்னையான்
கற்றைவார் சடையவர் கருணை காண்வர
உற்பவிப் பித்தலா லுரைத கா" தென, ககக௪

3013. வணிகருஞ் சுற்றமு மயங்கிப் பிள்ளையார்
அணிமல ரடியில்வீழ்ந் தரற்ற வாங்கவூர்

தணிவினீள் பெருந்துயர் தணிய வேதநூற்
றுணிவினை யருள்செய்தார் தூய வாய்மையார். கககரு

3010. (இ - ள்) (பொழிப்பு) சிறப்பு மிகுந்த சிவநேசரை நோக்கி முன்னமே, மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையார், "இனி, அழகினால் மிகுந்த சிறப்புடைய உமது மகளை உலகில் ஓங்கி விளங்கும் மனையிற் கொண்டு சென்று சேர்வீர்" என் றருளிச்செய்யவும், கககஉ

3011. (இ - ள்) (பொழிப்பு) பெருக்கமுற்ற திருவருளைப் பெறும் வணிகராகிய சிவநேசர் பிள்ளையாரது பொருந்திய தாமரைபோன்ற திருவடிகளில் வணங்கி எழுந்து துதித்து நின்று "அடியேன் அருமையினால் பெற்றெடுத்த இந்தப் பூம்பாவையைத் தேவரீர் திருமணம் புணர்ந் தருளிச்செய்ய வேண்டும்" என்று வேண்டலும், கககங

3012. (இ - ள்) (பொழிப்பு) மற்று அவ்வாறுரைத்த வணிகரை நோக்கி வண்மை பொருந்திய சீகாழி வாழ்வுடையாராகிய பிள்ளையார் "நீர் பெற்ற பெண் விடத்தினால் இறந்துவிட்ட பின்னே, கற்றையாகிய நீண்ட சடையினையுடைய கபாலீசரது கருணை விளங்க மீள உற்பவிக்கச் செய்தமையினாலே நீர் சொல்லும் இவ்வுரை பொருந்தாது" என்று சொல்லியருள, கககச

3013. (இ - ள்) (பொழிப்பு) வணிகராகிய சிவநேசரும் சுற்றத்தாரும் அது கேட்டு மயங்கிப் பிள்ளையாரது அழகிய மலரடிகளில் வீழ்ந்து பலவும் சொல்லிக் குறையிரந்து அழுதரற்றக் கண்டு, அப்போது அவர்களுடைய ஆற்றொணாத நீண்ட பெருந் துன்பம் தணியும்படி வேதநூல்களின் விதியாகிய துணிபுகளை எடுத்து உரைத்துப் (பிள்ளையார்) அவர்களைத் தேற்றி யருளிச்செய்தனர், தூய்மையுடைய வாய்மையே உருவமாகி விளங்குபவராதலின். கககரு

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

3010. (வி - ரை) சீர்கெழு சிவநேசர் - சிறப்பு மிகுதலாவது - முன் கூறிய அவரது வாழ்க்கை வரலாறுகளும், இனிப் பிள்ளையாரை வேண்டி நிற்கஉள்ள நிலையும், ஒன்றன்மேலொன்றாகச் சிறந்து சிவவாழ்க்கைச் சிறப்பில் மேன்மேல் மிகும் நிலையும், இறைவரது திருவருளும் குருவருளும் உலகில் விளங்குதலால் உலகமுய்தற்கு நிலைக்களமாக நின்ற நிலையுமாம்.

முன்னமே - பாவையார் பரமரையும் தம்மையும் வணங்கி நிற்பதற்கு முன்னர்ச் சிவநேசர் தம்மை அடிவணங்கிய (3009) போதே.

ஏர்கெழு சிறப்பில் - ஏர் - உடற்கூற்றின் அழகும், சிறப்பு - சிவனருள் பெருக வந்து நின்ற உயிரின் சிறப்புமாம்.

நும் மகள்-உடல்பற்றிய அளவில் முன் உடலின் வளர்ச்சியும் தொடர்பும் கொள்ளுதலால் இவ்வாறு சிவநேசர்பால் உரிமைப்படுத்திக் கூறியருளினார். சிவநேசரது மனநிலைபற்றிக் கூறியருளியதுமாம்; இனிப், பின்னர் "நான் - உற்பவித்தலால்" (3012) என்று தம்மைப் பிதாவாக வைத்துக் கூறியது, "போதியோ என்னும், அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம், துன்ன வந்தவந் துருவமாய்த் தொக்கதக் குடத்துள்" (2986) என்றபடி தமது திரு அருள்நோக்கும் திருவாக்குமாகிய அமுதத்தைப் பெய்து உயிரினைப் புகுத்தியருளிய செயலால் உயிரினைப்பற்றிக் கூறியருளியதாம்; மேற்காண்க.

பார்கெழு மனையினிற் கொண்டு படர்மின் - எலும்புநிறை குடமாகக் கொண்டு வந்த நீர், மகளாக அழைத்துக்கொண்டு செல்லுமின். பார்கெழு - உலகில் விளங்கிய; முன் விளங்கிய விளக்கமன்றி, இனிப் பாவையார் உலகிலவும் சிவனருள் விளக்கமும் உலகிற் பெருகின்று மேல்விளங்க. "உலகவ ரறிய" (2978) என்று முன் அருளிய குறிப்பும் காண்க. இல் - ஏழனுருபு.

மன்னவர் - என்றலும் (3010) - வணிகர் - என்றலும் (3011) - வாணர் - உரை தகாதென (3012) - அவர் - வாய்மையார் - அருள் செய்தார் (3013) என்று இந் நான்கு பாட்டுக்களையும் சொல்லும் விடையுமாகத் தொடர்ந்து முடித்துக்கொள்க.

குறிப்பு :—இச்செய்யுள் சில பிரதிகளில் காணப்படவில்லை. 1112

3011. (வி - ரை) பெருகிய அருள் பெறும் - முன்னர் வடிவுதான் காணாராயும் சீகாழி வள்ளலார்பாற் கொண்ட அழுந்திய அன்பின் உறைப்பினாலே காணாத காலத்தேயும் அவரருளைப் பெற்று அவர் நேரே எழுந்தருளிவரக் கண்டு வணங்கும் அருள் பெற்றார்; கண்ட பின்னர்ப் பாவையாரை மீள உற்பவிக்கப்பெறும் பேறுகிய அவரருள் பெற்றனர்; தாம் முன்னர்த் தம் அளவிலே துணிந்தவாறு பாவையாரை ஏற்றபெற்றி அவர்பாற் சேர்க்கப்பெறும் அருளும், அவரை அவர் மகளாராகக் கொண்டு ஏற்கும் அருளும்பெற்றார்; கபாலீசப் பெருமானது பெருங்கருணை தம்பாலின் விளங்கும் அருளினையும் பெற்றார். இனி வேதநூற் றுணிபுகளைப் பிள்ளையார் எடுத்து உபதேசிக்க உள்ள அருளும், பாவையார் சிவத்தை மேவப்பெற நிற்கும் அருளும் பெற நின்றார்; இக்குறிப்புக்கள் எல்லாம் உட்கொண்டு பெருகிய அருள் பெறும் என்ற கவிநலம் காண்க.

அருமையால் - "அரிய நீர்மையி லருந்தவம் புரிந்தர னடியார்க், குரிய வர்ச்சனை யுலப்பில செய்தவந் நலத்தால்" (2938) என்ற அருமைப் பணிகளின் பயனாக.

அடியனேன் - முன் (2936 - 2951) கூறியவாறு தம்மைப் பிள்ளையாருக்கு அடிமையாகக் கொடுத்து நின்றொழுகிய நிலைபற்றிக் கூறியவாறு. இவ்வாறு அடிமைத் திறம்பற்றியே வைத்துத் தம்மைச் சிறியராகக் கொண்டு நினைத்தும் பேசியும் ஒழுகியும் வருதல் பெரியோர் செயல்; தம்மைத்தாமே பெரியராக்கொண்டு எழுதல் சிறியோர் செயலாம். "நாதனடி யார்தம்மை நயப்பாட்டு வழிபாட்டான், மேதகையா ரவர் முன்பு மிகச்சிறிய ராயடைந்தார், ஆதலினாற் சிறுத்தொண்ட ரெனநிகழ்ந்தா ரவனியின் மேல்" (3674 = 15) என்று பெரியார் தன்மையின் உண்மையினைக் காட்டுதலும்; "கற்றவர்க டன்னிற் கடந்துளா ரில்லையெனும், பெற்றிமையான் மாநிலத்து மிக்க பெருமிதம்வர், தற்றுலகிற் றன்னையே சால மதித்துள்ளான்" (613) (ஏனாதியார் புராணம் - 6) என்றும், "கேளிகழ்ந், திகழும் பரமு மில்லை யென்று, பயமின் றொழுகிப் பட்டிமை பயிற்றி, மின்னி னனையதன் செல்வத்தை விரும்பித், தன்னையு மோருவனாக வுன்னும், ஏனையோர் வாழும் வாழ்க்கை" (திருவிடை - மும்-7) என்றும் வரும் திருவாக்குக்கள் சிறியோர் தன்மையினைக் காட்டுதலும் காண்க; "பணியுமா மென்றும் பெருமை; சிறுமை, அணியுமாந் தன்னை வியந்து" (குறள்) என்பது பொய்யா மொழி. இந்நாளில் மக்கட் கூட்டம் அரசியல், சமூக இயல், சமய இயல், செல்வ இயல் என்ற பல துறைகளிலும் பட்டு அறிவு மயங்கிப் பலபல பெயர்களைத் தாமே புனைந்துகொண்டு மேற்கூறிய இரு தன்மைகளுள் முன்னையதை விட்டு, அகங்கரித் தெழுந்து பின்னையதில் வீழ்ந்து சாமாறே விரைகின்ற நிலை வருந்தத்தக்கது; உலகம் உண்மை கண்டு ஒழுகி உய்யத் திருவருள் துணை செய்வதாக.

பாவை - பூம்பாவை என்பது பாவை எனப்பட்டது ; பாவை போன்றாள் என்றுரைத்தலுமாம்.

மணம் புணர்தல் - என்பது மரபு வழக்கு ; மணம் செய்தல். மணம் புணர்ந்து - மணஞ்செய்து ஏற்று ; அருள் செய்தல் - கன்னியை ஏற்றுக்கொள்வதனால் தமது குடி ஈடேற அருளுதல் ; "எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்" (3067) என்பதும் பிறவும் காண்க. மணம்புணர்ந் தருள்செய்யும் எனச் சேர்த்து ஒரு சொன் னீர்மைத்தா யுரைத்தலுமாம். 1113

3012. (வி - ரை) புகலி வர்ணர் - முன் புகலி வேந்தர் (3008), புகலி வேந்தர் (3007), புகலிகாவலர் (2981) என்ற கருத்தைத் தொடர்ந்து கூறினர்.

நீர் பெற்ற விடத்தினால் வீந்த பின்னை - "அடியனேன் பெற்ற பாவை" (3011) என்று சிவநேசர் கூறியதனை மறுத்துப் பிள்ளையார், நீர் பெற்று வளர்த்த பூம்பாவை அரவின் விடத்தினால் வீந்து இறந்துபட்டனள் ; இங்குத் தோன்றி நிற்ப வள் வேறு என்று எடுத்துவிளக்கி உண்மை கூறியபடி.

யான்...உரை தகாது - உற்பவிப்பித்தல் - மீளத் தோன்றும்படி செய்வித்தல் ; பிறவினையாற் கூறியது, இது தமது செயலன்றி இறைவரது செயலேயாம் ; தாம் அவரது சிவஞான நிறைவுக்குள் ஒடுங்கிநின்று வேண்டிய அளவிலமைந்து துணையாவ தன்றித் தமது செயல் பிறிதின்று என்றறிவித்தபடியாம். "பரிவுறு பண்பினாற் பரவி" (2976) என்றது காண்க. கற்றைவார் சடையவர் கருணை காணவா என்றது இக்கருத்தைப் புலப்படுத்துவதாம். "தம்மை மறந்து நின்னை நினைப்பவர்" என்றபடி சிவஞான நிறைவே தமதறிவாகப் பெற்று நிற்பவர் பிள்ளையாராதலின் பாவையார் குடமுடைந்து எழுந்து அழகினுக்கணியாய் நின்றது கண்டு கண்ணுதல் கருணைவெள் ளத்தினையே கண்டாரன்றித் தமது செயலையாவது பாவையாரது நிறைவினையாவது கண்டாரிலர் ; ஆயின் ஈண்டு, "யான்...உற்பவிப்பித்தலால்" என்றது "திரு மணம்புணர்ந் தருள்செய்யு" மெனச் சிவநேசர் உலகியல்நிலை பற்றி வேண்டிய விருப் பத்திற்கு அவ்வாறே உலகியல்நிலைபற்றி உரைத்தவாறும். இவ்வாறே ஆளுடைய நம்பிகள் "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே" (தேவா - குறிஞ்சி - புக்கொளியூர் அவிநாசி - 4) என்று விண்ணப்பித்து முதலையுண்ட மகனை முதலை வாயினின்றும் அழைத்துப் பிதாவின்கையிற் கொடுத்த நிலையும், அதுபற்றி "ஆவதென் முன்னொ ளுவலர் பெருமான், பண்டொரு முதலை யுண்டமைந் தனைவா, வழைத்தன னென்றாய் ; பிழைப்பில தநாஉம், தந்திட வேண்டு மென்றன ரன்றே" (சங். நிரா - சிவசமவாதி நிராகரணம்) என்று உமாபதி சிவாசாரியார் அருளிய விளக்க மும் ஈண்டுச் சிந்திக்கற்பாலன ; "கதவந் திறப்பிம்மினே" என்ற அரசுகள் திரு வாக்கும் ஈண்டுக் கருதத்தக்கது.

உற்பவிப்பித்தலால் உரை தகாதேன - உரை - மணம் புணர்ந்தருளும் என்ற உரை ; தகாது - சொல்லத் தகாதது ; உற்பவிப்பித்தலால் - என்றது உரை தகா தது என்பதற்குரிய காரணம் ; உற்பவிப்பித்தலால் - பிறக்கச் செய்தலால் - பிதாவின் முறை ஆகவேண்டும். தான் பெற்ற மகளை மணம்புரிதல் தருமநூல் விரோதமாகிய கூடாவொழுக்கம் ; தூர்த்தர் செயலாம் ; ஆதலின் இவ்வுரை தகாதது என்பது.

சபிண்டர் - சகோத்திரர் இவர்களுக்குள் மணம் விலக்கும் வேத ஒழுக்க நூல் களின் கருத்துமிதுவே ; "வேதநூற் றுணிவினை" (3013) என்று மேல்வரும் பாட் டிற் கூறுவதும் காண்க. வேத நூல்களின் இக்கருத்தறியாத தூர்த்த மாக்கள் இக்

நாளில் இவ்வொழுக்கத்திற்கு மாறுக ஒழுகுவதன்றி விதி செய்தலும் துணிந்துள்ளார். என்னே! காலக் கொடுமை!

**உரை தகாதென்றலால்** எண்ணுதலும் தகாதென்பது பெறப்படும்; உற்பவிப் பித்தலால் உரை தகாதென்றமையால் மற்றக் காரணத்தால் இக்காரியம் எண்ணுதலும் தகாதென்றது குறிப்பாம். அக்காரணமாவன பிள்ளையார் திறத்தில் அவரை உலகநிலை பற்றி உழலும் ஏனை ஆன்மாக்களுள் ஒருவராகவைத் தெண்ணுதலும், மணஞ் செய்து வாழ்வு பெற உள்ள நிலையில் வீழ்தற்குரியார் என்று நினைத்தலும் முதலியன. பின்னர்ப் பிள்ளையாரது திருமணத்தின் வரலாற்றில் திருமணத்தைப் பிள்ளையார் இசையாது நிற்பதும், தாதையாரும் மறையோரும் வேண்டியவா றிசைந்து மணம் நிகழ்ந்தகாலையில் "இந்தவில் லொழுக்கம் வந்து சூழ்ந்ததே யிவடன் னோடும், அந்தமில் சிவன்றாள் சேர்வ னென்னுமா தரவு பொங்க" என்று மணப் பந்தலிலேயே எண்ணியாங்குச் சிவன்றாள் சேரும் நிலையும் உன்னுக.

**காணவருதல்** - விளக்கமாக விளங்குதல்; கைவருதல் என்றலுமாம்.

**உற்பவித்தீதலால்**—உற்பவித்திடுதலால்—என்பனவும் பாடங்கள். 1114

3013. (வி - ரை) **வணிகரும்...அரற்ற** - நெடுநாளாகப் பிள்ளையாருக்கென்று அளித்து வைத்திருந்த பாவையாரை அவர் ஏற்காது நின்றமையின் அவ ரருளப்பெரு மைக்கு ஏங்கி அரற்றினர்.

**துயர் துணிய வேதநூற் றுணிவினை அருள் செய்தார்** - நூல்விதி யுணர்ந்து உண்மை தெளிந்தோர் உலகிற் றுயர்ப்படமாட்டார் என்பது. இங்கு வேதநூற் றுணி பாவன முன் பாட்டில் உரைத்தனவும் பிறவுமாம். பிறவாவன மரபுக்கேலாமையும்; தமது சிவஞானவாழ்வாகிய பெருநிலையினுக் கேலாமையும்; பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்பொருட்டுத் தரப்பட்டுத் தாம் வந்தமையேயன்றி உலக வாழ்விற்பட் டுழலும் பொருட்டன்றென்ற நிலைக் கேலாமையும் முதலாயினவாம்; வேதியர் ஏனை வருணங் களிலும் மணங்கொள்ளலாமென்பது ஒரு சிறப்பு விதி; அதன் நிலை வேறு. அதனை அவ்வவர் நினைத்த நினைத்தபடியெல்லாம் அலைவதற்குப் பற்றுக்கோடாகக் கொள்ளுதல் சாலாது. பிள்ளையார்போலன்றி, இரண்டு மணங்கள் செய்யநின்ற ஆளுடைய நம்பி களும் திருநாட்டியத்தான்குடியில் கோட்புலியார், சிவநேசரைப்போலவே, தம் பெண் மக்க ளிருவரையும் ஈந்து ஏற்றுக்கொள்ள வேண்டியபோது அவ்வாறு ஏற்காமல் "இவர் எனக்குத் தூய மக்களாவார்" என்று சொல்லி ஏற்று அவ்வாறே ஒழுகும் வரலாறும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

**தூய வாய்மையா (ராதலின்)** - **அருள் செய்தார்** - என்று காரணப் பொருள் கொண்டு கூட்டுக.

**வாய்மையார்** - வாய்மையே தமது செவி - வாய்மையே தமது வாக்கு - அதுவே தமது நோக்கு என்றபடி வாய்மையே தமது முழுவடிவுமா யமைந்தவர் பிள்ளையார் என்பதாம். "மெய்த்தன்மை விளங்குதிருச் செவி"; "குரும்பையாண் பனையீனு மென்னும் வாய்மை"; "போதியோ வென்னும் அன்ன மெய்த்திரு வாக்கு". **தூய** - தூய்மைப்படுத்தும் என்றலுமாம்.

**வேத நூல்** - வேதங்களும், அவற்றின்வழி வரும் மிருதி முதலிய நீதி ஒழுக்க நூல்களும். அவற்றின் துணிபாவன சிவாகம சித்தாந்த உண்மை. 1115

3014. தேள்ளுநீ தியின்முறை கேட்ட சீர்க்கிளை
வெள்ளமும் வணிகரும் வேட்கை நீத்திடப்,

பள்ளநீர்ச் செலவெனப் பரமர் கோயிலின்
உள்ளெழுந் தருளினா ருடைய பிள்ளையார். ௧௧௧௬

(இ - ள்) தெள்ளு நீதியின்முறை...நீத்திட - தெளிந்த நீதிநூ லொழுக்கமுறைகளைக் கேட்ட சிறப்புடைய சுற்றத்தாராகிய பெருங் கூட்டமும் சிவநேசரும் தாம் விருப்பங்கொண்ட நிலையினை நீங்கிட ; பள்ளநீர்ச் செலவென - (மேட்டு இடத்தினின்றும்) பள்ளத்திற் பாயும் நீரின் வேகம்போன்ற விரைவுடன் ; பரமர்...பிள்ளையார் - கோபுரப் புறவாய்தலினின்றும் இறைவரது திருக்கோயிலினுள்ளே ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளினார்.

(வி - ரை) தெள்ளும் நீதியின் முறை - தெள்ளுதல் - தெளிதல் ; பிள்ளையார் தெளிவித்த என்றும், மயங்கின அறிவைத் தெளியச் செய்த என்றும் உரைக்க நின்றது.

சீர்க்கிளை வெள்ளம் - கிளை - சுற்றம் ; ஒரு மரத்தின் கிளைபோலப் பொருந்துபவர். வெள்ளம் - மிகுதியுணர்த்திற்று. "சுற்ற நீடிய கிளையெலாம்" (2951) ; "கரையில் சுற்றமும்" (2957) ; "உறுபெருஞ் சுற்றமும்" (2960) என்றவை காண்க. சீர்க்கிளை - கிளையின் சிறப்பாவது வாழ்வினும் தாழ்வினும் மனம் ஒன்றுபட்டு அமைந்தொழுகுதல் ; சிவநேசரது திறத்தில் அவர் மனக்கருத்தினையும் ஒழுக்கத்தினையும் தாம் கலந்து பிணக்கமின்றி ஒத்து ஒழுகினராதலின் ஈண்டுக் கிளை என்ற பெயரால் கூறினார் ; ஒரு மரத்தின் கிளைகள் அம்மரத்தின் மூலம் தாம் வாழ்வுபெற்று அது தழைக்கத் தழைந்து, வாடத் தாமும் வாடிநிற்கும் தன்மைபோல என்பது ; என்னை ? இங்குக் குறித்த பொருள் பெண்ணை மணம் புரிவிக்கும் நிலைபற்றியதாதலின் அது கிளைஞர்க்குரிய செயலாய் நிற்றலால் அதனில் தாம் வேறு ஒன்றும் எண்ணாது சிவநேசரது திறமே ஒன்றி நிகழ்ந்தனர் என்பதாம் ; வெள்ளம் - என்றார் அனேகராகிய அவருள் ஒருவரும் பிணக்கமின்றி நின்ற நிலை குறித்தற்கு.

வேட்கை - பிள்ளையார்பால் பூம்பாவையாரை மணத்தினாற் சேர்வித்தலாகிய விருப்பம்.

நீத்திட - விட்டு நீங்கினராக அதன்பின் ; அவர்களைத் தேற்றியருளிய பின்.

பள்ள நீர்ச் செலவென - மேட்டினின்றும் பள்ளத்திற் செல்லும், நீர் மிக்க வேகத்திற் செல்வதுபோல ; வினைபற்றி எழுந்த உவமம். "பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மே லாகப் பதைத்துருகு மவர்" (திருவா - சதகம் - 21). இதுவரை கோபுரப் புறவாய்தலின் நின்ற பிள்ளையார் செய்தவை கற்றைவார் சடையவர் கருணை காண்வரச் செய்தவையே யாயினும் அவை உலகம்பற்றிய நிலையினவாதலின் மேட்டு நிலத்தின் நீர்போல நின்றன. இனிப் பரமர் கோயிலுள் சென்றருளுதல் இறைவரும் தாமுமே யாக உள்ள நிலைபற்றியனவாதலின் அவை பள்ளத்திற் செல்லும் நீர்போல ஆயின என்க. இதனால் பிள்ளையார் இவ்வுலகில் வாழ்ந்த காலமெல்லாம் அவரது அருளிச் செயல்கள் உலகின்பாலும் இறைவர்பாலும் எவ்வெத் தன்மையில் நிகழ்ந்தன என்பது தெளியப்படும்.

உள்ளெழுந் தருளினார் - முன் வணங்கிப் போந்து இந்நிகழ்ச்சியின் பொருட்டு எலும்புக்குட மிருந்த புறவாய்தலின் வந்த பிள்ளையார் மீள உள்ளே சென்றருளினர் ; இஃது அருள்பெற்று அதன்வழியே இந்நிகழ்ச்சியுட் புகுந்த பிள்ளையார் அதன் நிறைவின் பின் இறைவரை வணங்கி அவர் அருளைப் போற்றி விடைகொள்ளும் நிலையாம் என்க. திருவாலவாய் வரலாற்றிலும் இவ்வாறே சமணர் வாத நிகழ்ச்சியினுள் திரு

மடத்தினின்றும் திருவாலவாயிறைவரை வணங்கி அருட்குறிப்பாகிய திருவுள்ள மறிந்து அருள் பெற்றுப் போந்து, இறுதியில் சமண வாத நிறைவாகிய பின், வைகைக் கரையினின்றும் நேரே திருவாலவாயினுட் சென்றருளிப் போற்றி விடைகொண்டு போந்தருளிய செய்தியும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது (2635 - 2739-ம் 2759 - 2764-ம் பார்க்க). அங்கு அம்மையார் அமைச்சனார் செயல்கள் வாய்ப்பவும் அமண் பிணி நீங்கவும் மேற்கொண்ட நிலைபோலவே, இங்குச், "சித்த மின்புற சிவநேசர் தஞ் செயல் வாய்ப்பவும், பொய்த்த வச்சமண் சாக்கியர் புறத்துறை யழியவும், வைத்த வப்பெருங் கருணை" நோக்காகிய நிலையினையே மேற்கொண்டமையும் காண்க. 1116

3015. பான்மையால் வணிகரும் "பாவை தன்மணம்
ஏனையோர்க் கிசைகிலே" னென்று கொண்டுபோய்
வானமர் கன்னிமா டத்து வைத்தனர்
தேனமர் கோதையுஞ் சிவத்தை மேவினாள். கககஎ

(இ - ள்) பான்மையால்...என்று - நியதியின் முறைமையினாலே சிவநேசரும் "பூம்பாவையாரை ஏனையோர் எவர்க்கும் மணம் புணர்வித்தற்கு நான் உடன்படமாட்டேன்" என்று துணிந்து; கொண்டுபோய்...வைத்தனர் - வானளவுயர்ந்த அவரது கன்னிமாடத்தில் வைத்து ஆங்கு வாழச்செய்தனர்; தேனமர்...மேவினாள் - வண்டு வாழும் மலர்மாலை யணிந்த பாவையாரும் சிவத்தினை அடைந்தனர்.

(வி - ரை) பான்மை - முன்னை ஊழ்வினையாகிய நியதியின் தன்மை; "அன்ப ரின்புற மார்வத்தி னளித்தபாங் கல்லாற், பொன்பி றங்குநீர்ப் புகலிகா வலர்க்கிது பொருந்தா, தென்ப தட்கொண்ட பான்மை" (2954) என்று முன் விளக்கிய பான்மை.

பாவை...இசைகிலேன் என்று - பாவையாரையும் தம்மையும் பிள்ளையாருக்குக் கொடுத்துவிட்டமையால் (2951) பாவையார் பிள்ளையாரது உடைமையாயினர்; அந் நிலையினில் ஒருவர்க்கு ஒப்புவித்த பொருளையே பின்னும் வேறு ஒருவர்க்கு ஆக்குதல் முறையன்று என்பது ஒன்று; சிவநேசர் கருத்துப் பிள்ளையாரையன்றிப் புறத்துச் செல்லாமை மற்றொன்றும். கொடுப்போர் - கொள்வோர் என்றிருபாலின் ஈண்டுக் கொள்வோராகிய பிள்ளையார்பால் இசைவு நிகழாமையின் சிவநேசர் சொல்லிய மகட் கொடை ஒருபா லிசைவாகவே நின்றது; உலகவியலின் இவ்விசைவு முற்றுப்பே றடையாதென்று அரசநீதி வகுக்கும்; ஆதலின் சிவநேசர் முன்னைநிலையை மாற்றி வேறு செய்யும் உரிமையுடையார் என்று உலகியனீதி கூறும்; அந்நிலையினின்று இங்குச் சிவநேசர் எண்ணி, "உலகவியல் இவ்வாறு வரினும் நான் எனது முன்னே கண்ட நிலையினின்றும் மாறுபடேன்" என்றனர்; "மானமிகு தருமத்தின் வழி நின்று வாய்மையினில், ஊனமில் சீர்ப் பெருவணிகர் குடி" (1717) என்ற இயல்பும் ஈண்டு நினைவு கூர்தற்பாலது.

இவ்வாறுயர்ந்த நிலை ஒழுக்கங்களின் மேம்பாடும்; இந்நாள் மணநிலைகள் பற்றி மாக்கள் கொண்டொழுகும் கீழ்மைநெறி ஒழுக்கங்களின் மிகத் தாழ்ந்த குறைபாடும் கண்டு, இவற்றின் உயர்வுதாழ்வுகள் உணர்ந்துகொள்ளத் தக்கன.

கொண்டுபோய்......வைத்தனர் - கொண்டு போதல் - அழைத்துக்கொண்டு செல்லுதல்; வைத்தல் - அமர்த்தியிருக்கச் செய்தல்; "மகளைக் கொண்டு... ...மனையிற் படர்மின்" (3010) என்றருளினர் பிள்ளையார்; ஆனால், உயிரைப் பிள்ளை யார்பால் ஒப்புவித்த நிலையினையே பின்னரும் மேற்கொண்டு ஏனையோர்க்குப் பாவை

மணம் இசைகிலா ராயினமையின், உயிரில்லாத பண்டம்போலக் கொண்டுபோய் - வைத்தனர் என்ற குறிப்பும் காண்க. ஆயின் அவ்வுயிர் என்ன நிலைமை பெற்றதென்னின் ? அதுபற்றியே மேல் இப்பாட்டிற் சிவத்தை மேவினுள் என்றருளுதல் காண்க ; மாதர்கள் கன்னிமாடத்திருந்து சிவத்தை எண்ணியே வாழும் நிலை முன்னளிற் சைவத்தில் வழக்கிலிருந்தது. இதுபற்றி நம்பிகள் சரிதத்தில் சங்கிலியார் வரலாறு கருதுக ; இந்நிலை இந்நாளில் கிறித்தவர் முதலிய புறச் சமயிகளிடம் வழங்குதலும் காண்க. உடல் பற்றிய குறித்த நாயகனிடம் சேராத போது அவ்வுயிர் ஆன்ம நாயகனிடம் சேர்தல் முறை என்ற குறிப்பும் காண்க. காரைக்காலம்மையார் உடலின் ஊனை உதறி இறைவரிடம் போந்த வரலாறும் ஈண்டுக் கருதத் தக்கது.

சிவத்தை மேவினுள் - சிவம் - நித்திய மங்கலமாம் பெருவாழ்வாகிய சிவத் தன்மை. இங்குப் பெற்றெடுத்த தந்தையா ரிசைந்தும் மற்றொருபா லிசையாமையின் மனவிசைவினுலும் மணம்பெற்ற நிலை நிகழாதொழிந்தது ; ஆதலின், மண நிகழா நிலைமையினும், "எந்தையுமெம் மனையுமவர்க் கெனைக்கொடுக்க விசைந்தார்கள், அந்தமுறை யாலவர்க்கே யுரியதுநா னுதலினுல், இந்தவுயி ரவருயிரோ டிசைவிப்பன்" (1297) என்று திலகவதியார் துணிந்து பின் ஒழுகிய நிலையின் தன்மை இங்குக் கூடாதாயிற்று ; இனி, அக்காரணம் பற்றியே, மண நிகழாமற் றடையுண்ட நிலையினும், "அயலோர்தவ முயல்வார்பிற ரன்றேமண மழியுஞ், செயலாணிகழ் புத்தூர்வரு சிவவேதியன் மகளும், உயர்நாவலர் தனிநாதனை யொழியாதுணர் வழியிற், பெயராது" (223) என்றபடி மணப்பந்தரில் ஆளுடைய நம்பிகளை மணமகளுகக் கொள்ளப்பெற்றும் மணம் நிகழாமற் றடுக்கப்பட்டும் நின்ற சடங்கவி சிவாசாரியாரின் மகளாரின் நிலையும் இங்கு ஒருபாலிசையாமையாகிய அக்காரணம் பற்றியே பூம்பாவையார்பாற் கூடாதாயிற்று. ஆதலின் பாவையார் பிள்ளையாரை நாயகராக உணரும் நிலையின்றி, எல்லாவுயிர்க்கும் எப்பிறவியினும் உயிர்க்குயிராய் நின்றருளும் ஆன்ம நாயகராகிய சிவத்தையே நினைந்திருந்து அவரையே மேவினுர் என்க ; மேல் "எவ்வுயிர்க்குங் காவலனுர்" (3016) என்னும் குறிப்பும் காண்க. சிவத்தை மேவுதலைப் புரிவிக்கும் குருநாதராகவே பிள்ளையாரைக் கொண்டு வழிபட்டு நின்றமை கருதிக்கொள்ளப்படும். 1117

வேறு

3016. தேவர்பிரா னமர்ந்தருளுந் திருக்கபா லீச்சரத்து
மேவியஞா னத்தலைவர் விரிஞ்சன்முத லெவ்வுயிர்க்குங்
காவலனுர் பெருங்கருணை கைதந்த படிபோற்றிப்
பாவலர்செந் தமிழ்பாடிப் பன்முறையும் பணிந்தெழுவார்; ககக அ

3017. தொழுதுபுறம் போந்தருளித் தொண்டர்குழாம் புடைசூழப்
பழுதில்புகழ்த் திருமயிலைப் பதியிலமர்ந் தருளுநாள்
முழுதலகுந் தருமிறைவர் முதற்றனம் பலவிறைஞ்ச
அழுதுலகை வாழ்வித்தா ரப்பதியின் மருங்ககல்வார்; ககககூ

3018. திருத்தொண்ட ரங்குள்ளார் விடைகொள்ளச் சிவநேசர்
வருத்தமகன் றிடமதுர மொழியருளி விடைகொடுத்து,
நிருத்தருறை பிறபதிகள் வணங்கிப்போய் நிறைகாதல்
அருத்தியொடுந் திருவான்மி யூர்பணிய வணைவுற்றுர். ககஉ0

3016. (இ - ள்) தேவர் பிரான்...ஞானத் தலைவர் - தேவதேவராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்தருளும் திருக்கபாலீச்சரத்தினுள் எழுந்தருளிய ஞானத் தலைவராகிய பிள்ளையார்; விரிஞ்சன்...போற்றி - பிரமதேவன் முதலிய எல்லா வுயிர்களுக்கும் காவலாளராகிய இறைவருடைய பெருங்கருணை கைகொடுத் தருளியபடியினைத் துதித்து; பாவலர்...பணிந்தெழுவார் - பாக்களாகிய மலர்ந்த செந்தமிழினைப் பாடிப் பல முறையும் பணிந்தெழுவாராய், ககக அ

3017. (இ - ள்) தொழுது...அமர்ந்தருளு நாள் - வணங்கிப் புறத்தே போந்து எழுந்தருளித் திருத்தொண்டர் கூட்டம் பக்கத்திற் சூழ்ந்து வரக் குற்றமில்லாத புகழினையுடைய அந்தத் திருமயிலாபுரியில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாளிலே; முழுதுலகும்...இறைஞ்ச - எல்லா வுலகங்களையும் தந்து புரந்தருளும் இறைவர் எழுந்தருளும் முதன்மையுடைய பதிகள் பலவற்றையும் சென்று வணங்கும் பொருட்டு; அழுதுலகை...அகல்வார் - அழுதமையினால் உலகை வாழ்வித்தாராகிய பிள்ளையார் அத் திருப்பதியின் பக்கத்தினின்றும் நீங்கிச் செல்வாராகி, ககககூ

3018. (இ - ள்) திருத்தொண்டர்...விடைகொள்ள - அங்குள்ளார்களாகிய திருத்தொண்டர்கள் விடைபெற்றுக்கொள்ள; சிவநேசர்...கொடுத்து - சிவநேசரது வருத்தம் நீங்கும்படி அவருக்கு இனிய மொழிகளைச் சொல்லி விடைகொடுத்தருளி; திருத்தர்...போய் - சிவபெருமான் எழுந்தருளிய பிற பதிகளையும் வணங்கிச் சென்று; நிறைகாதல்...அணைவுற்றார் - நிறைந்த காதலாகி விளைந்த அன்பினோடும் திருவான்மியூரினைப் பணிவதற்கு அணைவுற்றருளினர். கக௨௦

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

3016. (வி - ரை) தேவர்பிரான் - "தேவதேவனை" (2975) என்ற திருப்பாட்டின் உட்கிடையினைத் தொடர்ந்து வழிபாடு நிறைவேறும் நிலையினை ஈண்டுக் கூறியபடியாம். மேவிய - உள்ளெழுந்தருளி மேவிய (3015).

ஞானத் தலைவர் - "ஞானசம்பந்தர்" (2976) என்றும், "ஞானபோனகர்" (2987) என்றும் முன்கூறிய குறிப்புக்களைத் தொடர்ந்து ஈண்டு இப்பெயராற் றலைமைபற்றிக் கூறிய நிலையும் கண்டுகொள்க.

விரிஞ்சன் முதல்...காவலனார் - தோற்றம்-நிலை-இறுதி செய்யும் கடவுளர்க்கும் அந்த முத்தொழிலுட்படும் உயிர்களுக்கும் தாமே முதல்வராய்க் காவல்புரிபவர் என்றது, ஈண்டை வரலாற்றில், பூம்பாவையார் முன்னர்த் தோற்ற நிலை யழிவுட்பட்டும், பின்னரும் திருவருளாலே தோன்றுகின்ற தன்மைகட்கெல்லாம் தலைவராக நிற்கும் நிலையில் வைத்து இறைவரது முழுமுதற்றன்மை கண்டுகொள்வதன் பொருட்டாம்.

கைதந்தபடி - கைகொடுத்துத் தமது திருவுள்ளத்தை முற்றுவித்தபடியினை.

போற்றித் - தமிழ் பாடி - இப்பதிகம் கிடைத்திலது! முதலில் பாடிய பதிகமும் (2976) இறுதியிற் பாடிய இப்பதிகமும் ஒன்றுபோலவே மறைந்தமை இற்றைநாட் சைவவுலகின் தவக்குறைவாம்.

பன்முறையும் பணிந்தெழுவார் - வரலாற்றிற் புரிந்த பெருங் கருணையின் பொருட்டும், தலயாத்திரையிற் கலந்த தம் வழிபாட்டின் பொருட்டுமாகப் பன்முறையும் பணிந்தருளி.

பணிந்தெழுவார் (3016) - அமர்ந்தருளு நாள் - இறைஞ்ச - அகல்வார் (3017) - விடைகொடுத்து - வணங்கிப் போய் - அணைவுற்றார் (3018) என்று இம்மூன்று பாட்டுக்களையும் முடித்துக்கொள்க.

படியென்றும்—என்பதும் பாடம். 1118

3017. (வி - ரை) அமர்ந்தருளும் - விரும்பி வீற்றிருந்தருளும்.

உலகு முழுதும் தரும் - என்க. எல்லா வுலகும் படைத்தல் முதலிய எல்லா வகையாலும் புரக்கும்; தருதல் - புரத்தல் என்ற பொருளில் வந்தது; புரத்தலாவது படைத்தல் காத்தல் அழித்தல் என்ற மூவகையாலும் காத்து அருள்புரிதல்.

முதற்றளம் - முதன்மையுள்ள பதிகள். முதன்மையாவது முதல்வன் விளங்க வீற்றிருத்தல்.

உலகை அழுது வாழ்வித்தார் - தாம் அழுதமையால் உலகின் பொருட்டு ஞானம் பெற்று அதனால் உலகத்தை வாழ்வித்த பிள்ளையார் "வேதநெறி தழைத்தோங்க... ...அழுத" (1899) என்று தொடக்கத்துக் கூறிய கருத்து. "அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த" (திருப்புகழ்).

மருங்கு - மருங்குன்றும். ஐந்தனுருபு விரிக்க. 1119

3018. (வி - ரை) அங்குள்ளார் - திருமயிலையிற் சிவநேசருடன் வந்துகூடிய பெருந் தொண்டர்களும் (2970), திருவொற்றியூரினின்றும் பிள்ளையாருடன் தொடர்ந்து வந்தார்களும் ஆகிய அங்கே உள்ள திருக்கூட்டத்தினர்; அங்கு நீங்கிப் பிள்ளையார் எழுந்தருளும்போது இவர்கள் அங்குநின்ற வண்ணமே பிள்ளையார்பால் விடைகொண்டு தங்கிவிட்டவர்.

சிவநேசர்...விடைகொடுத்து - சிவநேசர் பிள்ளையாரைப் பிரிதலாற்றாது பின்றொடர அவரது வருத்தம் நீங்க இன்னுரை கூறி அவருக்குப் பிள்ளையார் தாமே விடை கொடுத்தருளி, நிற்கப் பணித்தருளினர் என்பது விடை கொடுத்து என்றதன் குறிப்பு; திருத்தொண்டர் விடைகொள்ள என்றதும் கருதுக. வருத்தம்-வடிவுதான் காணாராயும் பலகாலம் நினைந்து வழிபட்டுவந்த தியானப் பொருளாகிய பிள்ளையார் நேரே கைவரக் கிடைக்கப்பெற்றபின் அவரைப் பிரியலாற்றாத வருத்தம். மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் - நெடுமாறனார் இவர்கள் பிள்ளையாரது பிரிவாற்றாது தொடர்ந்தழுது அடிவீழ்ந் தரற்றிய நிலையும், அவர்க்கு இனியவை கூறி நிற்கப் பணித்துப் பிள்ளையார் ஆணைதந்து விடைகொடுத்த நிலையும் ஈண்டு நினைவு கூர்தற்பாலன (2792 - 2793).

நிருத்தர் - ஐந்தொழி லருட்கூத் தியற்றும் இறைவர்.

பிற பதிகள் - திருமயிலையினின்றும் திருவான்மியூர் செல்லும் வழியில் அருகில் உள்ள பதிகள். மயிலையிலிருந்து வான்மியூர் வழியில் அருகிலுள்ளவை - (1) புலியூர், (புலியூர்கோட்டத் தலைநகர்), கோடன்பாக்கம் வடபழநியாண்டவர் கோயிலருகில், பழைய சிவாலயம்; கல்வெட்டுக்களுண்டு; (2) வெளிச்சேரி; பழைய ஆலயம்; மூலவர் தூபி கருங்கல்லா லாயது; கல்வெட்டுக்கள் உள,(கிண்டி கவர்னர்வீட்டு வேலிக்கெதிரிலுள்ளது). (இக்குறிப்பு அன்பர் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் உதவியது.)

நிறைகாதல் அருத்தி-அருத்தி - அன்பு; அன்பு காதலாய் விளைந்து நிறைந்த நிலை.

## சரிதச் சுருக்கம்

இவ்வாறு பிள்ளையார் இருந்தருளத், திருமயிலாபுரியில் முன் நிகழ்ந்த செயலாவது:—

திருமயிலை எலும்பு பெண் ணுக்கியது

திருமயிலாபுரியில் சிவநேசர் என்ற வணிகர் மிக்க செல்வமும், சிவனடியார்களிடத்தில் மிகுந்த அன்பும், பரசமயங்களைப் பாற்றும் செற்ற மேவிய சீலமு முடையராய் வாழ்ந்தனர். அக்காலத்தில் சீகாழியில் பிள்ளையார் திருவவதாரம் செய்து திருஞான முண்டருளிப் பரசமயங்களை இழித்தழிக்கும் செய்கைகளைக் கேட்டு; அவரது திருவடிகளில் இடையறாத அன்புடையவராகி, அவரது அருட் செயல்களைக் கேட்பதில் மகிழ்வுற்றிருந்தனர்; பெருஞ் செல்வராயினும் அவருக்கு மகப்பேறின்மையினாலே மருண்டு, அரனடியார் உவப்புறும்படி அருச்சனை செய்த நலத்தினால் அரியதொரு பெண் மகவு பெற்றார்; அது பூவினுள் போன்றிருந்தமையால் பூம்பாவை என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தனர். அவர் எழியாண்டெய்த உரியபருவமடைந்து அதற்கேற்ப விளங்கினார். அது கண்டு சிவநேசர் "இவளை மணக்கும் நாயகனே எனது நிதி முழுதுக்கும் உரியவன்" என்று அறைந்தனர். அந்நாளில் பிள்ளையார் பாண்டி நாட்டினை அணைந்து பாண்டியன் சுரந்தீர்த்து, மேலும், தீயிலும் நீரிலுமாக அமணரை வாதிட்டு வெற்றிகொண்டு அழித்ததுவும், பாண்டியனுக்கு நீறு நல்கிப் பாண்டி நாட்டில் சைவம் பெருக்கியதுவும் ஆகிய அருட் செயல்களையெல்லாம் கேட்டு மகிழ்ந்து பிள்ளையாரைத் திசைநோக்கித் தொழுது நின்று, சுற்றத்தாரெல்லாரும் கேட்பப், "பூம்பாவையையும், எனது நிதிமுழுதையும், என்னையும் காழிநாடுடையவர்க்கு கொடுத்தனன்" என்று மொழிந்து மகிழ்ந்திருந்தனர். பூம்பாவை ஒருநாள் முல்லைமலர் கொய்தபொழுது விரலில் நான்குபற்களும் அழுந்தும்படி அரவந் தீண்டிற்று; விடந் தலைக்கேறக் கன்னிகை உணர்விழந்து வீழ்ந்தனள்; மருத்துநூலவரும், மந்திரசாதகரும், காருடவித்தை முதலிய விச்சை வல்லவர்களும் எல்லாத் தீர்வுகளும் நாடிச் செய்தும் தீராது கன்னிகையின் உயிர் நீங்கியது; சிவநேசரும் சுற்றமும் துன்புற்றனர். ஆயின், அவரைப் பிள்ளையாருக்கென்று உரைத்து விட்டதனால் தாம் துன்புறுதற்கில்லை என்று தேறி, அவளுடம்பை எரியிலிட்டுச் சாம்பரையும் எலும்பையும் ஒரு குடத்திற் சேமித்தனர். அக்குடத்தைக் கன்னிமாடத்தில் வேறு வைத்து, விளக்கு, மாலை, சாந்தம், போனகம் முதலிய உபசாரங்களைத் தோழிமாரால் நாடோறும் செய்வித்துப் போற்றி வந்தனர்.

இவ்வாறு நிகழுநாள்களில், பிள்ளையார் திருவொற்றி மாநகரில் எழுந்தருளிய நற்செய்தியைச் சிவநேசர் கேட்டு மிக மகிழ்ந்து அச் செய்தியினை வந்து சொன்னவர்க்கெல்லாம் பொன்னும் ஆடையும் கொடுத்தனர்; திருமயிலாபுரியினின்றும் திருவொற்றியூரளவும் நடைக்காவண மிட்டும், துகில் விதானித்தும், வாழை கமுகு நாற்றியும், தோரணம் மாலைகள் தூக்கியும், தேவலோகம் போல அலங்கரித்தனர். தொண்டர்களுடனே தாமும் சென்று பிள்ளையாரை வணங்குதற்குப் புறப்பட்டனர். அவ்வளவில் பிள்ளையாரும் திருவொற்றியூர் பணிந்து திருமயிலாபுரி நோக்கித் தொண்டர் கூட்டத்துடனே எதிர்வந்து தோன்றக் கண்ட சிவநேசர், மகிழ்ச்சியினால் நிலமுற விழுந்து இறைஞ்சினார். பிள்ளையார், சிவிகையினின்றும் இறங்கித் தொண்டர் கூட்டத்தின்முன் தொழுதெழுந்தருளி, அடியார்கள் வணிகரின் திறங்களைச் சொல்லக் கேட்டுத் திருமயிலாபுரியினை அணைந்தனர்; வணிகர் திறத்தின் முன் நிகழ்ச்சிகளைத் திருவுள்ளத்துக் கொண்டு அவர் செயல்வாய்ப்பவும், புறத்துறைகள் அழியவும் கருணை நோக்கங்கொண்டு, இறைவரது திருக்கபாலீச்

சாத்தினை வணங்கி, வலஞ்செய்து, திருமுன்பு சென்று, தேவதேவனைத் திருக்கபாலீச் சரத்தமுதைப் பாவை பாகனைப் பரிவுறும் பண்பினால் இறைஞ்சித், துதித்துத் திளைத்துப் புறம்பு போந்தருளி வணிகரை நோக்கி, "உலகவரறிய உமது மகளின் என்பு நிறைத்த மட்குடத்தைத் திருக்கோயிற் றிருமதிற் புறவாய்தலிற் கொணர்க" என்றருளினார்; அவ்வாறே அவரும் சென்று கன்னிமாடத்திருந்த அக்குடத்தினை வேறு எடுத்து, மூடுசிவிகையுள் வைத்துச், சேடியர்சூழத் திருக்கோயிற் புறவாய்தலினை அணைந்து சிவிகையினின்று குடத்தினை எடுத்து அபிமுகத்தினில் அடியுறைப்பினாலே முன்வைத்து வணங்கினார். அப்போது இதன் விளைவினைக் காண்பதற்கு மயிலைமா நகருள்ளார், நாடுவாழ்பவர், நன்றியில் சமயத்திலுள்ளோர் முதலிய பலரும் வந்து, கூடினர். பிள்ளையார், இறைவரது கருணையின் பெருமையினையே கருதி, இவ்வுலகத்தில் இறந்தவர்களது எலும்பினை வைத்தே அவ்வுயிரினை நன்னெறிப்படுத்தும் தன்மை அவ்வெலும்பின் றொடர்ச்சியால் வருவது என்று அருணோக்கம் செய்து, "பூம்பாவாய்!" என்று அப்பெண்ணின் பெயர் சொல்லி அழைத்து, "உலகிற் பிறந்தார் பெறும் உறுதிப் பயனாவது சிவபெருமானடியார்களை அமுது செய்வித்தலும், இறைவரது திருவிழாக்களைக் கண்ணாரக் காணுதலுமே யாம் என்பது உண்மையாயின் உலகர் முன்னே வா" என்று உரைப்பாராகி, இறைவரைத் தொழுது, "மட்டிட்ட" என்று தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்தனர். அப்பதிகத்தினுள் "**போதியோ**" என்ற மெய்த் திருவாக்கெனு மமுதம் அக்குடத்தினுள் எலும்பிற் பொருந்தவே வந்து வந்து உருவமாய்த் திரண்டது; அத்திருப் பாட்டினிடைவே போன வாயுவும் வடிவமும் வளர்ச்சியும் பொலிவொடு நிரம்பிக் குடத்தினுள் அடங்கிற்று; அது குடத்தினின்றும் எழுவதன்முன் பிள்ளையார் சமண் பாட்டினை (பத்தாவது பாட்டு) விரிப்பாராய்த் தெளிதலில்லாத சமண் சாக்கியர்கள் இச்செய்கை ஏற்றதன்றென எடுத்துரைப்பார் என்றபோது, வெளியே கை தோன்றிடக், குட முடைந்தெழும் பூம்பாவையார், தாமரைப்போது அவிழ்ந்தெழுந்தனள் போன்றாள். முதற்பாட்டினில் வடிவு பெற்று, மேல் எட்டுத்திருப்பாட்டின் அம்முறையே பன்னிரண்டாண்டளவு அணைந்து, சமண்பாட்டினிற் றோன்றிடக், கண்டு, பிள்ளையார் திருக்கடைக் காப்புச் சாத்திப் பதிக நிறைவாக்கி யருளினர். அது கண்டவர்கள் அற்புத மெய்தத் தொண்டர்கள் அரவொலி முழக்கினர்; விண்ணோர் மலர்மாரி பெய்தனர்; மண்ணோர் கைகுவித்து வீழ்ந்து வணங்கினர்; பரசமயத்தினுள்ளோர் "இஃது எங்குள செய்கை? மற்று என் செய்தவாறு?" என்று மனமும் மெய்யும் கலங்கித் தள்ளாடி வீழ்ந்தார். அவ்வாறெழுந்து நின்ற அணங்கின் முடிமுதல் அடிவரையும் ஒவ்வோர் அவயவமும் அதனதன் விதிப்படி உள்ள உத்தம விலக்கணமும் அழகும் பொருந்த விளங்கிற்று; அப்பூம்பாவையார் விண்ணும் மண்ணும் அற்புத மெய்தத் தோன்றி அழகினுக்கணியாய் நின்றாள். எண்ணில்லாத ஆண்டுகள் கொண்ட வயதளவுள்ள பிரமன், அழகு பொருந்தத் தான் படைத்த திலோத்தமையின் மாயை உருவாகிய பெண்ணலமாகிய அழகினைத் தனது நான்கு முகத்தாலும் கண்டு நல்லுணர்விழந்து காமத்துள் மாழ்கினன்; அவ்வாறன்றி, ஈண்டுப், புண்ணியப் பதினாறாண்டு பேர்பெறும் பிள்ளையார், அவளினும் மிக நல்லாளாகிய பாவையாரிடத்து இறைவரது கருணை வெள்ளத்தினையே ஆயிர முகங்களாற் கண்டருளினர். அது கண்ட சிவநேசர் பிள்ளையாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்; பூம்பாவையார் இறைவரைப் பணிந்து பிள்ளையாரை வணங்கி நின்றனள். பிள்ளையார் சிவநேசரை நோக்கி "நும் மகளை அழைத்துக்கொண்டு உமது மனையிற் செல்லுக" என்று கூற, அவர் பிள்ளையாரை வணங்கி "அடியேனது பாவையைத் திருமணம் புணர்ந் தருள்செய்ய வேண்டு" மென்று

வேண்டினர். அதனை மறுத்துப், பிள்ளையார், "நீர் பெற்ற பெண் விடத்தினால் வீந்த பின்னர் யான், இறைவரது கருணை காண்வர, மீள உற்பவிப்பித்தலால் நீர் சொல்வது தகாது" என்றருளவே, வருந்தி யரற்றிய வணிகரும் கிளைஞரும் தெளிய வேதநூற் றுணிபினை அருளி அவர்களைத் தேற்றியருளினர். அவர்களும் அவ்விருப்பத்தினை யொழிந்தனர். பிள்ளையார் திருக்கோயிலுட் சென்று கருணை செய்து கைதந்த இறைவரை வணங்கிப் போந்தருளினர். சிவநேசர் பாவையாரது மணத்தினை ஏனையோருக்கு இசைகிலேன் என்று அவரைக் கொண்டு, கன்னிமாடத்துட் சேர்த்தனர். பாவையாரும் சிவத்தை யடைந்தனர். பிள்ளையார் சில நாள் அப்பதியில் எழுந்தருளியிருந்து பதியவர்கள் விடைகொள்ளச், சிவநேசரது வருத்தந் தீர மதுர மொழியளித்து விடை கொடுத்துச் சென்று, திருவான்மியூர் சேர்ந்து, பிறவிமருந்தாகிய இறைவரை வணங்கி, வினாவுரையாகிய பதிகத்தினாற் றுதித்து, அங்குச் சிலநாள் இனிது அமர்ந்தருளினர்.

---

## கற்பனை

(1) செல்வப் பெருக்கமுடையார் தம்மை உள்ளபடி அறிந்தாராயின், அச் செல்வ முதலிய பாசப் பெருக்கங்களின் மயங்கி அவற்றுக்கே யடிமையா யொழியாது, சங்கரற் கடிமையே செய்து மெய்ப்பொரு ளுணர்ந் தொழுகுவர் (2933).

(2) சிவனடியார்களது கூட்டத்தில் மனமுருகுதலும், சைவ நெறியைப் புறம் பேசி இடையூறு விளைக்கும் பரசமயங்களில் வெறுப்பும் உடைமையும், சிவனடிமைத் திறத்தி னிற்போர் செயல்களாம் (2934).

(3) தமது செல்வங்களையும் உடைமைகளையும் சிவனடியார்க்கும் சிவஞானிகள்பாலும் ஆக்குதல் அன்பின் மேலீட்டினா லாவது (2936).

(4) நன்மகப்பே றில்லாத மனைவாழ்க்கை வருத்தந் தருவது (2939).

(5) சிவஞானிகளின் அருட்டிறங்களைத் தாம் பரவுதலும், பிறர் சொல்லக் கேட்பதில் விருப்புறுதலும் சிவன் அடிமைப் பண்புகளிற் சிறப்புடையவை (2937).

(6) சிவனை நோக்கிச் செய்யும் தவத்தாலும் அடியார் பூசையினாலும் நன்மகப் பேறுண்டாகும் (2939).

(7) உருவும் திருவும் முதலிய காரணங்களால் மகவுக்குப் பொருந்தும் பெயரிடுதல் மரபு (2943).

(8) ஆளுடைய பிள்ளையாரது அருட்பெருந் திறத்தினைக் கேட்டுத் திளைத்த வணிகராகிய சிவநேசர், தமது மகளையும் செல்வ முழுவதினையும் அவரே உடையவர் என்று உறுதி மொழிந்தார். இஃது அன்பின் பெருக்காலாகியது (2952 - 2953). இவ்வாறே திருநாட்டியத்தான்குடியில் வேளாளர் கோட்புலியார், தமது மக்களிருவரையும் ஆளுடைய நம்பிகளுக்கு அடிமையாக் கொள்ள அளித்ததுவும் அன்பின் செயல். இவ்வாறு வருவன உலகியலிறந்த அன்பு வயப்பட்ட சிறப்பியலாகிய செயல்களாவனவன்றிப் படியெடுத் தொழுகும், மறைவிதியில் வரும், உலகியலொழுக்கமாகா. ஆளுடைய நம்பிகள் வேளாளர் மகளாராகிய சங்கிலியாரை மணந்தது பண்டைவிதி கடைகூட்ட நிகழ்ந்த செயலாம். இவைபோல்வன கொண்டு மறைவிதி வரும் நமது முன்னையோரது சமூக நிலைகளைக் குலைக்கும் வழிதேடும் இந்நாட் சீர்திருத்தக்கார மாக்கள் செயல் பொருந்தா என்பது. இக்கருத்துப்பற்றியே பின்னர்ப் பிள்ளையார் வேதநூற் றுணிவினை அருள்செய்து சிவநேசரையும் கிளைஞர்களையும் தேற்றுவித்தருளினர்.

(9) விதிவயத்தாலும், பின்னர் அருள்வயத்தாற் றீரவுள்ள நிலையாலும் வரும் நோய்கள் மந்திர முயற்சிகளாற் றீர்வுபெறு (2961).

(10) தமது மகளாரைப் பிள்ளையாருக்கு அளிக்க உறுதிகொண்ட சிவநேசர் அஃதியலாதவாறு அவளிறந்துபட, அவளது உடலைத் தீயிலிட்டுச், சாம்பலையும் எலும்பையும் குடத்திலிட்டு, அதனை அவளாகவே ஐந்தாண்டுகள் போற்றிவந்து, பின்னர்ப் பிள்ளையார் வர நேர்ந்தபோது அக்குடத்தையே அவர்பால் ஒப்படைத்தனர் ; இஃது உலகிறந்த நிலையின் நிகழும் திண்ணிய அன்பின் றிறம்.

(11) உருவங் காணுமலே உறைத்த அன்பினுல் பெரியோரை வழிபட்டு வரின் அப் பெரியோர் ஒருநாள் தாமாகவே வந்து அருள்கொடுப்பர் என்பது திண்ணம். இஃது உறைத்த தியானத்தின் பயன். அப்பூதியார் அரசுகளை வழிபட்ட நிலையிலும் இவ்வுண்மை காண்க. ஞான நூல்களுட் கூறும் சிவத் தியானப் பயன் வருதலும் இவ்வாறேயாம்.

(12) இவ்வுலகத்துள் நின்று இறந்துசென்ற உயிரை நன்னெறிப்படுத்தற்கு அது வாழ்ந்த உடலின் எலும்பினை வைத்துச் சடங்கு செய்ய, அப்பயன், அவ்வுயிரைச் சாரும் என்ற உண்மையினை நிறுவிக்காட்டப், பிள்ளையார், குடத்துள் நின்ற எலும்பினை நோக்கி அவ் வெலும்புக்கூட்டினைக் கொண்ட உடலினுள் முன்வாழ்ந்த உயிராகிய பூம்பாவையாரின் பெயர் சொல்லி அழைத்துப் பாடியருளினர். இவ்வுண்மை உலகம் தெளிந் தறிதற்பாலது (2984).

(13) மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன், சிவனடியார்களை அமுது செய்வித்தலும் சிவனது நல்விழாப் பொலிவுகண் டார்தலுமேயாம் என்பது வேத சிவாகமங்களிற் றுணிந்த உண்மை (2985).

(14) முன் கூறிய அவ்வுண்மையினையே சூளுறவாகக் கூறி, இஃது உண்மையாயின் "உலகர்முன் வருக" எனப் பிள்ளையார் அழைக்கப், பூம்பாவை, கழிந்த ஆண்டுகளின் வளர்ச்சியுடன் வந்தனள். இஃது அவ்வுண்மைகளின் உறுதியைக் காட்டுவதாகும் (2985).

(15) சிவஞானிகளது அருட்டிருவாக்கே அமுதமாகிப் புகுந்து உயிரற்ற எலும்பினுள்ளும் உயிரை வருவிக்கும் (2986).

(16) இறைவர் அருளினுலே பிள்ளையார் திருவாக்கின்படி எழுந்த பூம்பாவை எல்லையில்லாப் பேரழகுடன் விளங்கினுள். இது பிரமன் படைப்பில் வாராத சிவனருட் படைப்பின் இயல்பு ; அப் பேரழகினுள்ளே சிவனது கருணை வெள்ளத்தினையே ஆயிர முகத்தானும் பிள்ளையார் காணலாயினர் (3007).

(17) பிரமன் படைப்பினுள் வரும் அழகுகள் எல்லாம் அழியும் தன்மையுடையன ; சிவன் அருட்படைப்பின் அழகு என்றும் மாறுத பெருவளத்தன (3007).